வரு.74 இல. 01 ★
www.vaaramanjari.lk
/ Thinakaranl.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2022 ஜனவரி 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
January 02 Sunday, 2022

32 பக்கங்கள் 40/-




இலவச இணைப்பு



03 திருக்கோவில் படுகொலையில் கசப்பான உண்மை


06 நாணய நிதியத்தை நாட வேண்டியதில்லை


09 மூங்கிலாறு சிறுமி மரணம்; வலைவிரிக்கும் பொலிஸார்


2021 விளையாட்டுத் துறையில் முக்கிய சம்பவங்கள் 24


யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# இந்திய மீனவர்களுடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு

## புதுவருடத் தினத்தன்று சிறைக்கு நேரடியாக சென்று கலந்துரையாடினார்

- இழுவை வலைத் தொழிலை கைவிட கோரிக்கை
- ஜனாதிபதி பிரதமருடன் பேசி விரைவாக விடுவிப்பதாக உறுதி
- படகுகளை அரசுடமையாக்கும் முடிவில் மாற்றமில்லை எனவும் தெரிவிப்பு



பருத்தித்துறை விசேட, யாழ்.விசேட நிருபர்கள்

இழுவைமடித் வலைத் தொழிலில் ஈடுபடுவதனால் கடல் வளங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களையும், இலங்கை கடற்றொழிலாளர் எதிர்கொள்கின்ற வாழ்வாதார அச்சுறுத்தல்களையும் தமிழக உறவுகள் புரிந்து கொள்ள வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சிறையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழக கடற்றொழிலாளர்களை புத்தாண்டு தினமான நேற்று சந்தித்து அத்தியாவசியப் பொருட்களை வழங்கியதுடன் அவர்களுடன் கலந்துரையாடிய போதே

04



புத்தாண்டுக்கான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, கதிர்காமத்துக்குச் சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அங்கு நடைபெற்ற விசேட பூஜையில் கலந்துகொண்ட போது...



## எதிர்காலத்தில் எத்தகைய சவால்கள் வந்தாலும் பசுமை விவசாய கொள்கையில் மாற்றத்திற்கு இடமில்லை

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு

04

## இந்திய பிரதமருக்கு ஆவணம் அனுப்பி வடக்கு கிழக்கை இணைக்க முடியாது

### முஸ்லிம் மக்கள் சம்மதம் தெரிவிக்கமாட்டார்கள் தினேஷ்



இந்தியப் பிரதமருக்கு ஆவணம் அனுப்புவதால் வடக்கு, கிழக்கை ஒருபோதும் இணைக்க முடியாதென்றும் இதற்கு முஸ்லிம் மக்கள் சம்மதம் தெரிவிக்கமாட்டார்களெனவும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தைச் சுட்டிக்காட்டி தமிழ்க் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு ஆவணம் ஒன்றை அனுப்ப திட்டமிட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகமோ அல்லது முஸ்லிம்களின்

04

## நுகர்வோருக்கு தரமான GAS; லிட்ரோ நிறுவனம் உறுதியளிப்பு

### நுகர்வோர் அதிகார சபையும் சம்மதம்



லிட்ரோ எரிவாயு நிறுவனமும் நுகர்வோர் விவகார அதிகாரசபையும் நுகர்வோருக்கு தரமான எரிவாயு சிலிண்டர்களை வழங்குவதற்கான உறுதிமொழியை தொடர்ந்து வழங்குவதாக நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளன.

அண்மைய எரிவாயு கசிவு, வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு கோரி சிவில் சமூக ஆர்வலர் நாகாநந்த கொடிதுவக்கு தாக்கல் செய்த ரிட் மனு நேற்று மீண்டும் பிரேரணை மூலம் அழைக்கப்பட்ட போதே லிட்ரோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாளாந்தம் குறைந்தது

04

## 41 'ஓமிக்ரோன்' தொற்றாளருடன் தொடர்பிலிருந்தோர் அடையாளம்

### பலரும் சிகிச்சையளிக்கப்பட்டபின் வீடு திரும்பினர்



நாட்டில் டிசம்பர் மாதம் வரை அடையாளம் காணப்பட்ட, 41 ஓமிக்ரொன் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

177 மாதிரிகளில் 41 பேருக்கு ஓமிக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் சிலர் சிகிச்சையளிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும் சிலருக்கு சிகிச்சை மையங்களில் சிகிச்சையளிக்கப்படுவதுடன் சிலர்

04

## ஒரு மாதத்திற்கு புதிய சுகாதார வழிகாட்டல்

### 50 வீத மாணவர்களுடன் பல்கலைக்கழகங்கள்

கொவிட்19 தொற்று பரவல் அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு நேற்று (01) முதல் இம்மாதம் 31 ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் புதிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய சுற்று நிரூபம் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய திருமண வைபங்களில் மண்டபத்தின் கொள்ளளவில் 50 சதவீதமானோருக்கு மாத்திரம் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் மூடிய பகுதிகளுக்குள் இன்றி வெளிப்புறங்களில் இவ்வாறான வைபங்களை நடத்துவது உசிதமானதாக இருக்குமென்று வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

04

அதிபர், ஆசிரியர்கள் சங்கம் காலக்கெடு;

## ஜன.20 இற்குள் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்

### இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கை



அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு எதிர்வரும் 20 ஆம் திகதிக்குள் சாத்தியமாகவில்லை எனின் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவோமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் தீலீசன் தெரிவித்தார். யாழ். ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்

04

## தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை காலத்தின் கட்டாயம்

### TNA தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



அரசியல் தீர்வை வென்றெடுக்கத் தமிழ்,முஸ்லிம் மக்களின் ஒற்றுமை காலத்தின் கட்டாயமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் திட்டமிட்ட வகையில் இனமுறுகலை ஏற்படுத்தி சிங்களக் கடும் போக்குவாதிகள் முன்னெடுத்த அரசியலை மறக்கக் கூடாதென்றும் சுட்டிக்காட்டினார்.

04

வனவாசலை புகையிரத கடவையில்

## புகையிரதத்துடன் மோதி தீ பற்றி எரிந்த வாகனம்

### ஒருவர் பலி



வனவாசலைப் பகுதியிலுள்ள ரயில் கடவையொன்றில் மோட்டார் வாகனம் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. நேற்றுப் பகல் (01) 12.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தை தொடர்ந்து மோட்டார் வாகனம் தீப்பிடித்து எரிந்ததுடன் அதிலிருந்த

04

## எங்கள் கருத்து...

### முஸ்லிம் கட்சித் தலைமைகளிடம் முஸ்தபா முன்வைத்த கோரிக்கை!

முன்னாள் அமைச்சரும் முன்னணி சட்டத்தரணிகளுள் ஒருவருமான பைசர் முஸ்தபா கடந்த வாரம் நாட்டிலுள்ள முஸ்லிம் கட்சிகளின் தலைமைகளுக்கு முன்வைத்த ஒரு கோரிக்கை, தமிழ் பேசும் அரசியல் கட்சிகள் மத்தியில் பரபரப்பான பேசுபொருளாகக் காணப்பட்டது.

அதாவது, முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் அமைச்சுப் பதவிகளை எதிர்பாராது, நாட்டினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டுமென்பதே பைசர் முஸ்தபா முன்வைத்த கோரிக்கை அழைப்பாக இருந்தது.

அதிலும் பைசர் முஸ்தபா, தனது கருத்தில் விசேடமாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பை முன்னுதாரணமாகக் கொண்டு முஸ்லிம் கட்சித் தலைமைகள் செயற்பட வேண்டுமென்றும் ஆலோசனையையும் முன்வைத்திருந்தார். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற ஒரு கட்சியல்ல.

அவர்கள் தமது மக்களது தேவைகளை நிறைவேற்றுவதிலும், யுத்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் தவறுகளை கண்டறிவதிலும் அன்றிலிருந்து இன்றுவரை ஒரேவிதமான கொள்கையை கடைப்பிடித்து வருவதையே பைசர் முஸ்தபா முன்னுதாரணமாக சுட்டிக் காட்டியிருப்பதாகத் தோன்றுகிறது.

உண்மையில் பைசர் முஸ்தபாவின் கருத்தை முஸ்லிம் கட்சித் தலைமைகள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டுமென்பதுதான் சமகால யதார்த்தம். இன்று எதிரணியில் இருக்கின்ற முக்கியமான முஸ்லிம் கட்சிகள் பலவும் கடந்த தேர்தலில் இன்றைய அரசாங்கத்துக்கு எதிராக நின்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை ஆட்சிக்கு கொண்டு வர

04

கூட்டு ஒப்பந்தம் பற்றிய தெளிவில்லாத சிலர்

## தொழிலாளர்களுக்கு ஆசைகாட்டி மோசம் செய்யும் முயற்சியில்

### இ.தொ.கா பொதுச் செயலாளர் ஜீவன் காட்டம்



கூட்டு ஒப்பந்தம் விடயத்தில் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களை மாற்று தொழிற்சங்கத்தினர் ஆசை காட்டி மோசம் செய்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். நோர்வூட், தியஶ்ரீகம பகுதியில் அம்பகமுவ உப பிரதேச செயலாளர் அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,...

04

## நயவஞ்சக அரசியல் செய்வதை மு.கா தலைவர் நிறுத்த வேண்டும்

### மக்கள் பிரச்சினைகளை தீர்க்க முன்வருமாறு அதாவுல்லா அழைப்பு



கல்முனையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பிரச்சினை என்றால் படம் காட்ட முடியாது. பேசித்தீர்க்க வேண்டும். தமிழர் விடுதலை கூட்டணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு போன்றோருடன் ரவூப் ஹக்கீம் நெருங்கிய நீண்டகால உறவை கொண்டுள்ளார். அந்த நல்ல உறவை கொண்டு கல்முனை பிரச்சினை, மூதூர், தோப்பூரின் பிரச்சினைகளை தீர்க்க முடியாதா? அவரது உறவினால் வாழைச்சேனை பிரச்சினைக்கு தீர்வை காணமுடியாதா? நாடகம் ஆடிக்கொண்டு வாக்குகளுக்காக இனவாதத்தை பேசிக்கொண்டு நயவஞ்சக அரசியலை அவர் செய்து கொண்டிருக்கிறாரென தேசிய காங்கிரசின் தலைவரும் முன்னாள்

04

## பொது இணக்க ஆவணம் ஒன்றை தயாரிக்க தமிழ் பேசும் கட்சிகள் இணக்கம்

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை ஒன்றுபட்டு பிரதிபலிக்கும் ஆவணம் ஒன்றைத் தயாரிப்பதற்கு தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்களால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற சந்திப்பில், இப் பொது ஆவணத்தை காலம் தாழ்த்தாது விரைந்து தயாரிப்பதென இணக்கம் காணப்பட்டது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன்

04

சென்னை கலைவாணர் அரங்கில்

## உலகத் தமிழர் திருநாளின் 08ஆவது ஆண்டு விழா






தினகரன், வாரமஞ்சரி ஊடக அனுசரணை

உலகத் தமிழர் திருநாள் விழாவின் எட்டாவது ஆண்டு நிறைவு விழா, உலகத் தமிழ் வம்சாவளி மக்களது ஒன்றுகூடலுடன் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு மற்றும்

04

## சீமெந்தின் விலை நேற்றுமுதல் 100 ரூபாவால் அதிகரிப்பு



சீமெந்து பொதியின் விலையை நேற்று (01) முதல் அதிகரிக்க உள்நாட்டு சீமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

50 கிலோ சீமெந்து பொதியொன்றின் விலையை 100 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சீமெந்து பொதியொன்றின் புதிய விலை 1,375 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும். தற்போது இறக்குமதி செய்யப்படும் சீமெந்து பொதியின் விலையானது, உள்ளூர் சீமெந்து பொதியின் விலையை

04

## விக்கல் வீராச்சாமி



எங்க போனாலும் படம் பிடிச்சு பேஸ்–புக்கில போடுறீங்களே சனத்துக்கு லைக் பண்ணி சலிச்சுப் போய் உங்கள ஏச மாட்டாங்களா....

அதெல்லாம் பாத்தா அரசியல் நடத்–தேலாது, அதோட இப்படி போட்டாதான் வாக்களிச்ச சனம் நம்மல கொஞ்சமாவது நினைவில வைச்சிருக்கும்...!!!

DTET SRI LANKA

# எதிர்காலத்தை கட்டியெழுப்பும் ஓர் இடம் தொழில்நுட்ப கல்லூரியுடன் இணையுங்கள்...

## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் - DTET

## 2022 கல்வி ஆண்டுக்காக அனைத்து முழு நேர மற்றும் பகுதி நேர கற்கைகளுக்காக புதிய மாணவர்கள் சேர்ப்பு



# இன்றே விண்ணப்பியுங்கள்

www.dtet.gov.lk / mis.dtet.gov.lk

Telephone: 011-234 88 93 / 011-234 88 97
Hot Line: 071 - 199 7111
Fax: 011 - 234 88 93

கற்கைகள் ஆரம்பம் 2022 ஜனவரி

N.V.Q LEVEL 3, 4 மற்றும் 5, 6


Department of Technical Education & Training

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மருதானை தொழில்நுட்ப கல்லூரி | 011 - 2324177 / 011 - 2423653 | பதுளை தொழில்நுட்ப கல்லூரி | 055 - 2222413 / 055 - 2225640 | அநுராதபுரம் தொழில்நுட்ப கல்லூரி | 025 - 2222666 / 025 - 2224710 |
| காலி தொழில்நுட்ப கல்லூரி | 091 - 2234051 / 091 - 2225985 | கண்டி தொழில்நுட்ப கல்லூரி | 081 - 2224063 / 081 - 2211810 | குருநாகல் தொழில்நுட்ப கல்லூரி | 037 - 2223264 / 037 - 2227611 |
| அம்பாறை தொழில்நுட்ப கல்லூரி | 063 - 2223485 / 063 - 2224236 | இரத்தினபுரி தொழில்நுட்ப கல்லூரி | 045 - 2232390 / 045 - 2224715 | யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரி | 021 - 2222358 / 021 - 2220028 |

| | | | |
|---|---|---|---|
| கேகாலை தொழில்நுட்ப கல்லூரி | 035 - 222 24 41 / 035 - 222 33 19 | இரத்மலானை தொழில்நுட்ப கல்லூரி | 011 - 263 27 78 / 011 - 262 69 55 |
| மாத்தறை தொழில்நுட்ப கல்லூரி | 041 - 222 25 65 / 041 - 222 99 98 | சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரி | 067 - 226 00 86 / 067 - 226 09 33 |
| களுத்துறை தொழில்நுட்ப கல்லூரி | 034 - 222 23 25 / 034 - 223 66 22 | வரக்காபொல தொழில்நுட்ப கல்லூரி | 035 - 226 76 51 / 035 - 226 83 02 |
| குளியாப்பிட்டி தொழில்நுட்ப கல்லூரி | 037 - 228 11 81 / 037 - 228 12 71 | பாத்ததும்பர தொழில்நுட்ப கல்லூரி | 081 - 249 97 82 / 081 - 250 04 41 |
| நுவரெலியா தொழில்நுட்ப கல்லூரி | 052 - 222 26 58 / 052 - 223 58 95 | ஹோமாகம தொழில்நுட்ப கல்லூரி | 011 - 285 53 15 / 011 - 285 71 33 |
| பெலியத்த தொழில்நுட்ப கல்லூரி | 047 - 224 32 29 / 047 - 225 12 55 | ஹசலக்க தொழில்நுட்ப கல்லூரி | 055 - 225 71 29 / 055 - 225 82 25 |
| தம்புள்ளை தொழில்நுட்ப கல்லூரி | 066 - 228 47 13 / 066 - 228 48 85 | பலப்பிட்டி தொழில்நுட்ப கல்லூரி | 091 - 225 80 96 / 091 - 225 52 48 |
| வாரியபொல தொழில்நுட்ப கல்லூரி | 037 - 226 72 56 / 037 - 226 83 80 | மட்டக்களப்பு தொழில்நுட்ப கல்லூரி | 065 - 224 65 57 / 065 - 365 94 55 |
| பண்டாரவளை தொழில்நுட்ப கல்லூரி | 057 - 222 27 54 / 057 - 223 37 53 | மொனராகலை தொழில்நுட்ப கல்லூரி | 055 - 227 61 67 / 055 - 227 74 48 |
| கம்பஹா தொழில்நுட்ப கல்லூரி | 033 - 222 21 32 / 033 - 223 32 53 | திருகோணமலை தொழில்நுட்ப கல்லூரி | 026 - 222 30 34 / 026 - 222 79 56 |
| தெஹியத்தகண்டிய தொழில்நுட்ப கல்லூரி | 027 - 223 01 17 / 027 - 225 02 62 | மாத்தளை தொழில்நுட்ப கல்லூரி | 066 - 222 41 96 / 066 - 222 48 47 |
| வீரவில தொழில்நுட்ப கல்லூரி | 047 - 223 70 64 / 047 - 223 70 32 | மெதகம தொழில்நுட்ப கல்லூரி | 055 - 226 61 13 / 055 - 226 61 12 |
| பொலன்னறுவை தொழில்நுட்ப கல்லூரி | 027 - 222 44 28 / 027 - 222 44 29 | அம்பிலிப்பிட்டிய தொழில்நுட்ப கல்லூரி | 047 - 226 10 37 / 047 - 226 16 08 |
| வவுனியா தொழில்நுட்ப கல்லூரி | 024 - 222 36 64 / 024 - 222 67 20 | அக்கரைப்பற்று தொழில்நுட்ப கல்லூரி | 067 - 227 93 26 / 067 - 227 96 02 |
| ஆனமடுவ தொழில்நுட்ப கல்லூரி | 031 - 226 32 88 / 032 226 31 63 | மன்னார் தொழில்நுட்ப கல்லூரி | 023 - 323 85 32 |

2022 ஜனவரி மூன்றாம் வாரத்தில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்

திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு



# திருக்கோவில் பொலிஸ் நிலைய கொலைகள்





# நடந்தது என்ன?

அம்பாறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருக்கோவில் பொலிஸ் நிலையமானது தற்போது 43 பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வரும் ஒரு பொலிஸ் நிலையமாகும். கடந்த 24ம் திகதி நத்தார் பண்டிகை உதயமாவதற்கு சுமார் இரண்டு மணி நேரம் இருந்த போது திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில், இந்நாட்டு பொலிஸ் வரலாற்றில் என்றுமே இடம்பெற்றிருக்காத ஒரு சோக நிகழ்வு இடம்பெற்றது. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவராலேயே நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட சோக நிகழ்வுதான் அது. சிலர் விடுமுறையில் சென்றிருந்ததால் அச்சமயம் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் சுமார் 35 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் குறைவானவர்களே பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுள் அனேகமானோர் அன்றைய தினம் இரவு நத்தார் ஆராதனை நிகழ்வில் கலந்து கொள்ளும் மக்களுக்கான பாதுகாப்புக்காக தேவாலயங்களுக்கு அருகில் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்தது 10 பேருக்கும் குறைவானவர்களே.

40685 இலக்க பொலிஸ் சார்ஜன் ரவீந்திர தினேஸ் குமாரவும் அச்சமயம் பொலிஸ் நிலையத்தினுள் இருந்துள்ளார். "ஒரு வித்தியாசமான நபரான" தினேஸ் கடந்த மார்ச் 21ம் திகதி வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையத்திலிருந்து திருக்கோவில் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுக் கொண்டு வந்தவராகும். அவர் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தின் வாகன போக்குவரத்து பிரிவில் ஆவணங்களுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட சார்ஜனாகும்.

கடந்த 24ம் திகதி இரவு 10.10 மணிளயவில் திருக்கோவில் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வாசலில் கடமையில் ஈடுபட்டிருந்த 44386 இலக்க பொலிஸ் சார்ஜன் வைரமுத்து கந்தசாமிக்கு அருகில் சென்ற தினேஸ், திடீரென அவரது கையிலிருந்த டி56 ரக துப்பாக்கியைப் பறித்தெடுத்துக் கொண்டு ஆங்கிலப் படங்களில் வரும் காட்சிகளைப் போன்று நாலாபுறமும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தவாறு மீண்டும் பொலிஸ் நிலையத்தை நோக்கி ஓடி வந்துள்ளார். வைரமுத்து கந்தசாமி எதிர்த்திசையில் ஓடிச் சென்று உயிரைக் காப்பாற்றிக் கொண்டாலும் அவரும் துப்பாக்கி சூட்டுக் காயங்களுக்கு உள்ளானார். துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டு பொலிஸ் நிலையத்தை நோக்கி வந்தார் தினேஸ். அந்நேரம் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் இரவு நேரக் கடமைக்குப் பொறுப்பாக இருந்த 44132 இலக்க பொலிஸ் சார்ஜன் அப்துல் காதர் மற்றும் உப சேவை பொறுப்பாளராக இருந்த 8861 இலக்க பொலிஸ் கான்ஸ்டபில் அழகரத்தினம் நவீனன் ஆகிய இருவர் மீதும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளார். இதில் நவீனன் அவ்விடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

நவீனனின் காற்சட்டைப் பையிலிருந்த பாதுகாப்பு பெட்டியின் திறப்பை எடுத்து பாதுகாப்பு பெட்டியிலிருந்து டி56 துப்பாக்கி மற்றும் 526 ரவைகளுடனான 19 மெகசின்களை தினேஷ்

## விடுமுறை தொடர்பான எந்தவிதமான பிரச்சினைகளும் இருந்திருக்கவில்லை

எடுத்ததோடு, பாதுகாப்பு பெட்டியின் சாவியையும் மறைத்து வைத்துக் கொண்டார். துப்பாக்கியால் சுட்டவாறே வெளியேறிய தினேஸ், பொலிஸ் நிலைய கேட்டினை நோக்கி ஓடத் தொடங்கினார். இதனிடையே சில பொலிஸ்



உத்தியோகத்தர்களுடன் கடமை நிமித்தம் வெளியே சென்றிருந்த திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அருண ஜகத் பண்டார தெஹிகம பயணித்த ஜீப் வண்டி பொலிஸ் நிலையத்திற்குள் பிரவேசித்துள்ளது.

அந்நேரம் எதனையும் பொருட்படுத்தாத தினேஸ், பொலிஸ் நிலையத்தினுள் பிரவேசித்த பொலிஸ் ஜீப்பின் மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளார். அந்நேரம் அந்த ஜீப்பில் இருந்தது சாரதியான ஹேமந்த புஷ்பகுமார மற்றும் பின்புற ஆசனத்தில் பொலிஸ் கான்ஸ்டபில் பிரபுத்த குணசேகர ஆகியோரேயாகும். அவர்கள் இருவரும் ஜீப் வண்டியினுள்ளேயே உயிரிழந்தனர்.

ஜீப் வண்டியில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் சில பொலிஸ் உத்தியோகத்தர்களும் சென்றிருந்தாலும் சார்ஜன் ரவீந்திர தினேஸ் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து "பேயாட்டம்" ஆடிக் கொண்டிருப்பதாக விசேட செயலணியின் திசாநாயக்கா என்ற உத்தியோகத்தரால் பொறுப்பதிகாரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொறுப்பதிகாரி, பிரியந்த குணவர்தன மற்றும் பொலிஸ் கான்ஸ்டபில் சாரதி சத்தியராஜ் குமார் ஆகியோருடன் ஜீப்பை விட்டு இறங்கி மோட்டார் சைக்கிள்களில் பொலிஸ் நிலையத்தை நோக்கிச் சென்றுள்ளார்.

ஜீப் வண்டியின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட கொலையாளி தினேஸ், பொலிஸ் நிலையத்திற்குள் மோட்டார் சைக்கிள்களில் வந்த மூவர் மீதும் துப்பாக்கியால் சுட்டுள்ளார். அந்த துப்பாக்கிப் பிரயோகம் பொறுப்பதிகாரி தெஹிகம மற்றும் பிரியந்த ஆகியோர் மீதும் பட்டுள்ளது. சத்தியராஜ் குமாரவும் கண்ணாடித் துண்டுகள் பட்டதால் காயங்களுக்கு உள்ளானார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பொறுப்பதிகாரி தெஹிகம, உடனடியாக பொலிஸ் நிலையத்த்தின் மின்சார இணைப்பைத் துண்டிக்குமாறு சத்தியராஜ் குமாரவுக்கு உத்தரவிட்டார். ரவீந்திர தினேஸ் தனது பேயாட்டத்தை நிறுத்தாமல் பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தேடியவாறு நாலாபுறமும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தார். அப்போது தான் பொலிஸ் நிலையத்தினுள் மூவர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி பரிதாபமாக உயிரிழந்திருந்தனர். அத்துடன் காயங்களுக்கு உள்ளான ஐவரும் அங்கிருந்தனர்.

பின்னர் சிறிய காயங்களுக்கு உள்ளான குமாரவும் கைத்துப்பாக்கி மற்றும் ரிவோல்வர்களுடன் கொலை

- திருக்கோவில் பொலிஸ் நிலையத்திற்கு வந்த நாளிலிருந்து 54 நாள் விடுமுறை பெற்றுள்ளார்
- கொலைகளுடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர் மனநோயால் பாதிக்கப்பட்டவர்

வெறியாடிய ரவீந்திர தினேஸ் மீது எதிர்த்தாக்குதல் மேற்கொள்ள ஆயத்தமானார். அதனைத் தொடர்ந்து ரவீந்திர தினேஸ், பொலிஸ் நிலையத்தினுள் நிறுத்தப்பட்டிருந்த தனது போல்ரோ வகை ஜீப் வண்டியில் ஏறி பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இக்கொலைகளின் பின்னர் 37 வயதுடைய ரவீந்திர தினேஸ் தப்பிச் சென்றது எத்திமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெமுனுபுர பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டுக்காகும். ரவீந்திர தினேஸ், மூத்த இரண்டு சகோதரர்கள் மற்றும் மூத்த சகோதரி ஆகிய நால்வரைக் கொண்ட குடும்பத்தின் இளையவராகும். அவரது தந்தையும் படுத்த படுக்கையாக உள்ளார். மூத்த சகோதரன் பானம பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

அவருக்கு ரவீந்திர தினேஸால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் நண்பர் ஒருவரால் தகவல் வழங்கப்பட்டது. "உங்கள் தம்பி பொலிஸ் நிலையத்தினுள் பேயாட்டம் ஆடி பெரிய அழிவுகளைச் செய்து கொண்டிருக்கிறார்...... முடியுமானால் தொலைபேசி அழைப்பை எடுத்து அவரை அமைதிப்படுத்தப் பாருங்கள்....."

இந்த அழைப்பையடுத்து ரவீந்திரவின் சகோதரனால் ரவீந்திரவைத் தொடர்பு கொள்ள முடியாமல் போனது. பின்னர் சகோதரர் உடனடியாக தனது தாயைத் தொடர்பு கொண்டு தாயிடம் விடயத்தைக் கூறியுள்ளார். தாய் விடயத்தை அறிந்து கொண்ட ஒரு மணி நேரத்தினுள் ரவீந்திர வீட்டுக்கு வந்துள்ளதோடு, தாயின் காலில் வீழ்ந்து வணங்கி விட்டு தான் செய்த குற்றச் செயல் பற்றி கூறியுள்ளார்.

வீட்டுக்கு வந்த ரவீந்திரவை அருகில் உள்ள எத்திமலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சரணடையுமாறு அவரது தாயார் கூறியுள்ளார். தாயின் சொல்லை என்றுமே மறுக்காத ரவீந்திர அன்றிரவு 12.30 மணியளவில் எத்திமலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சரணடைந்ததோடு, திருக்கோவில் பொலிஸ் நிலையத்திலிருந்து எடுத்து வந்த துப்பாக்கி மற்றும் பொலிஸ் நிலைய பாதுகாப்பு பெட்டியின் சாவி என்பவற்றையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

ரவீந்திர தினேஸ் சில காலங்களுக்கு முன்னர் திருமணம் செய்து கொள்வதற்கு ஆயத்தமான போதும் அதுவும் இடைநடுவில் தடைபட்டுப் போனது. 2006ம் ஆண்டில் பொலிஸ் கான்ஸ்டபிளாக பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட அவர், மொரட்டுவை, அத்துருகிரிய, சம்மாந்துறை, புளியங்குளம் மற்றும் ஓமந்தை போன்ற பொலிஸ் நிலையங்களில் பணியாற்றியவராகும். 2012ம் ஆண்டில் பொரலந்தையில் வாகனப் போக்குவரத்துப் பாடநெறியினைக் கற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவரது கால் ஒன்றில் அட்டை கடித்து அவ்விடத்தில் கிருமி உடம்பில் பரவியதால் அவரது காலில் சதை பழுதடைய ஆரம்பித்திருந்தது. பின்னர் வைத்திய ஆலோசனைக்கு அமைய ரவீந்திர தினேஸ் சிவில் உடையில் இலகுவான பணிகளிலேயே ஈடுபடுத்தப்பட்டார்.

அவர் 2020 ஜனவரி 01ம் திகதி சார்ஜன் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டார். ஓமந்தை பொலிஸ் நிலையத்திலிருந்து 2021ம் ஆண்டு மார்ச் 21ம் திகதி திருக்கோவில் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த அவர், திருக்கோவில் பொலிஸ் நிலையத்தின் வாகனப் போக்குவரத்துப் பிரிவில் ஆவணங்களுக்குப் பொறுப்பான பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். தினேஸ் ரவீந்திர களியாட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் ஒருவரல்ல.

(16 ஆம் பக்கம் பார்க்க)



அமில மலவிசூரிய
தமிழில்: எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# இருளிலிருந்து ஒளியை தேடிச் செல்லும் சமூகம்

எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து பெரும் விவாதம் எழுந்துள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மற்றும் நாட்டில் எண்ணெய் விற்பனையில் நிலவும் நட்டத்தை கருத்தில் எடுத்துக் கொண்டால் அரசாங்கத்துக்கு வேறு வழியில்லை. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி இந்நாட்டிற்கு கொண்டு வரப்படும் எரிபொருளில் நூற்றுக்கு அறுபது வீதமானவை மின்உற்பத்திக்கே பயன்படுத்தப்படுகின்றன. மசகு எண்ணெய் மற்றும் நிலக்கரி மூலம் மேற்கொள்ளப்படும் மின் உற்பத்தியை கைவிடவேண்டிய காலமிது. நாம் அனைவரும் பழைய நிலக்கரி யுகத்தை பாதுகாக்க பெரும் முயற்சி செய்து வருவதாகத் தெரிகிறது.

அண்மையில் மூன்று முறை நாடு பூராவும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. விடயங்களை ஆராய குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. அவற்றின் அறிக்கை பொறுப்பு வாய்ந்த பிரிவினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மின்சாரம் இல்லாத சந்தர்ப்பத்தில் பல மணித்தியாலங்கள் பொது மக்கள் இருளில் இருக்க நேரிட்டது. ஒன்றிரண்டு மணித்தியாலங்கள் இருளில் இருப்பது எவ்வளவு சிரமம் என்பதை தெளிவுப்படுத்த தேவையில்லை. மின்சாரம் துண்டிக்கப்பட்டால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும். தற்போது பிள்ளைகள் கற்பது தொழில் நுட்பத்தின் உதவியினாலாகும். மின்சாரம் இல்லாதபோது இணையதளத்தை பயன்படுத்த முடியாது. இங்கு ஒரு விடயத்தை ஞாபகப்படுத்த வேண்டும். தற்போதுள்ள மின்சார தடை சிறிய பிரச்சினையேயாகும். நாட்டுக்கு போதுமானளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால் இன்னும் சில வருடங்களில் இருள் சாதாரண விடயமாக மாறிவிடும். அதனால் ஏற்படும் பிரச்சினையும் மிகவும் சிக்கலானது.

நீர் மின்சார உற்பத்தி திறன் உயர் மட்டத்தில் உள்ளது. நாட்டின் மின்சார தேவையில் நூற்றுக்கு இருபது வீதமே பூர்த்தி செய்யப்படுகிறது. சூழலை பாதுகாக்கும், குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்படும் நீர் உற்பத்தி நிலையங்களைத் தவிர வேறு மூலங்களை கண்டுபிடிக்கும் பொறுப்பு எமக்குண்டு. காற்றின்மூலம் மின்னுற்பத்தி செய்யலாம். அரசோ தனியார் பிரிவோ நடவடிக்கை எடுத்தால் 5000 மெகாவோட் அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவை இலாபகரமானவை. மசகு எண்ணெய் மற்றும் நிலக்கரி மூலம் ஒரு அலகு மின்னை உற்பத்தி செய்ய பெருமளவு பணம் செலவாகிறது. தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. நாம் அதற்கு இசைந்து நடக்காவிட்டால் உற்பத்தி செயல்திறன் குன்றும். மின்சார சபை அறிக்கைகளுக்கு அமைய 2040 ம் ஆண்டளவில் நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தின் அளவொன்றுண்டு. அத் தேவையானது எமக்கல்ல. எமது பிள்ளைகளுக்கு. எதிர்கால பரம்பரைக்கு.

நாடொன்று முன்னேற்றம் அடையும் போது மின்சார பாவனையும் அதிகரிக்கிறது. எமது எதிர்காலத்துக்குத் தேவையான அளவிற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடிவு எடுக்காவிட்டால் அதன் பலன் மோசமாக இருக்கும். இலங்கையின் பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்துள்ளது. கடன் பெறக்கூடிய சந்தர்ப்பமும் குறைந்து வருகிறது. புதிதாக ஒன்றிரண்டு மின்னுற்பத்தி நிலையங்களை அமைக்கவும் வாய்ப்பில்லை. இவ்வாறான தீர்மானம்மிக்க சந்தர்ப்பத்தில் சிறந்தவற்றிற்காக, நடைமுறைபடுத்த சாத்தியமானவற்றை செயல்படுத்துவது எம் அனைவரினதும் பொறுப்பாகும்.

அண்மைக்காலத்தில் மின்சார துறையில் முதலீடு செய்வதற்காக முன்வந்த அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் திட்டங்கள் பற்றி இந்நாட்டு அரசியல்வாதிகளுக்கும் மற்றும் தொழிற் சங்கங்களுக்கும் ஏராளமான கேள்விகள் உள்ளன. அவை ஏற்கனவே இல்லாமலில்லை. மகாவலி திட்டத்தை விரைவு படுத்தியபோதும், நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் தொடர்பாகவும் எழுந்த விமர்சனங்களை மறக்கமுடியாது. மேல் கொத்மலை தொடர்பான போராட்டம் நினைவில் உள்ளதா? மிகவும் தாமதமாக, பெரும் நட்டத்துடன் இறுதியில் செயல்படுத்தப்பட்டது. அதன் பலனை இன்றும் எம்மால் காணக்கூடியதாகவுள்ளது.

அரசாங்கத்தினாலோ அல்லது தனியார் பிரிவினராலோ அல்லது வேறெந்த நாட்டின் உதவியுடனாவது மின்னுற்பத்தி திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். நாட்டுக்குப் பொருத்தமான அறிவியல் ஒழுங்குமுறை வழிமுறைகளைத் தவிர ஏனைய அரசியல் கூற்றுகள் முக்கியமில்லை. மின்சார பற்றாக்குறை ஏற்பட்டால் அதனால் குழப்பத்துக்குள்ளாவது மக்கள் வாழ்க்கையேயாகும். தொழிற்சாலைகள் மற்றும் வியாபரங்களுக்கு ஏறபடும் தடை பற்றி சிந்திக்க நாம் இன்று அனுபவிக்கும் சிறிது நேர மின்துண்டிப்பே போதுமானதாகும். சிறு பகுதியினர் பெரும் குரல் எழுப்புகிறார்கள். மின்சாரத்தை பாவிக்கும் நாம் நடுநிலையாக பிரச்சினையைப் பார்க்க வேண்டும். நெருப்பு ஆபத்தானது ஆனால் எமக்கு அது அவசியம். கத்தியும் கூர்மையானது. நெருப்பையும் கூர்மையையும் எவ்வாறு கையாள்வது என்ற புரிந்துணர்வு எமக்குண்டு. மின்சார பிரிவின் முதலீடு குறித்து சரியான நடைமுறைகள், ஒழுங்கு விதிகளை பின்பற்றினால் அதற்காக சமுதாயமாக அச்சப்படுவது நல்லதல்ல என்பதை குறிப்பிட வேண்டும்.

காப்புறுதி மற்றும் தொலைபேசி சேவைகளிலும் இவ்வாறான எதிர்ப்புகள் காணப்பட்டன. தொலைபேசி தொடர்பினை பெறுவதற்கு அரசியல் தலையீடு தேவை என்ற காலம் ஒன்றிருந்தது என்பது இன்று எமக்கு ஞாபகத்தில் இல்லை. தொலைபேசி இணைப்பு வழங்கல், மறுசீரமைக்கப்படாமல், அரசுக்கு மாத்திரம் சொந்தமான நிறுவனமாக இருந்திருந்தால் நாம் இன்று எவ்வாறான நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிட்டிருக்கும்? காப்புறுதியில் போட்டித்தன்மை இல்லாத காலத்தில் வாகன விபத்துகளின் போது அடைந்த சிரமங்களை ஒருபோதும் மறக்கமுடியாது. மின்சாரம் தொடர்பாகவும் அவ்வாறான தளர்வு கட்டமைப்பே அவசியமாகும். அதனை செயல்படுத்த முடிந்தால், அதன் பலன் பாவனையாளர்களான பொதுமக்களுக்கே கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கல்ல.

தமிழில்: வீ.ஆர். வயலட்

### எதிர்காலத்தில் எத்தகைய சவால்கள் வந்தாலும்

# பசுமை விவசாய கொள்கையில் மாற்றத்திற்கு இடமில்லை

### விவசாய அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு



எதிர்காலத்தில் எத்தகைய சவால்கள் வந்தாலும் பசுமை விவசாயக் கொள்கையை மாற்றமின்றி முன்னெடுக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சிற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள செயலாளர் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது அரசியல் பிம்பத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ள போதிலும், நாட்டின் நலனையும் மக்களையும் கருத்திற்கொண்டு குறித்த கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் உறுதியாகவுள்ள ஜனாதிபதிக்கு தான் துணை நிற்பதாக தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் பல அமைச்சுகளில் அமைச்சுப் பதவிகளை வகித்த போதிலும், அந்த அமைச்சுகளை விட விவசாய அமைச்சில் உரம், நெல் விடயத்தில் அதிக மாஃபியாக்கள் செயற்படுவதாக விவசாய அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### சென்னையிலுள்ள இலங்கை துணை தூதரகத்தில்

# தமிழகத்திலுள்ள இலங்கையருக்கென விஷேட கொன்சியூலர் முகாம் நிகழ்வு

சென்னையிலுள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட கொன்சியூலர் முகாம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகராலயத்தினால் கடந்த டிசம்பர் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் உயர்ஸ்தானிகராலயத்தின் சான்சரி வளாகத்தில் விசேட கொன்சியூலர் முகாமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. துணைத் தூதர் துரைசாமி வெங்கடேஷ்வரன் தலைமையில் இந்த முகாம் நடைபெற்றது.



இந்த விஷேட முகாமில் திருச்சி கோட்டப்பட்டு, திண்டுக்கல், தொட்டநூத்து, திருநெல்வேலி, போகநல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இலங்கையருக்கு 47 பிறப்புச் சான்றிதழ்களும், 20 குடியுரிமைச் சான்றிதழ்களும் துணைத்தூதர் துரைசாமி வெங்கடேஷ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன.

முன்னதாக, சென்னையிலுள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயத்தால் விஷேட கொன்சியூலர் முகாம்கள் வழக்கமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கோவிட்19 தொற்று காரணமாக, மார்ச் 2020 இல் இது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. ஆனால் தென்னிந்தியாவில் வாழும் புலம்பெயர் இலங்கையருக்கு இத்தகைய முகாம்களின் மூலம் வழங்கப்பட்ட மகத்தான சேவையைக் கருத்தில் கொண்டு, அனைத்து சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களையும் பேணி, தூதரகம் இந்த முகாம்களை மீண்டும் 2021 அக்டோபர் முதல் ஏற்பாடு செய்யத் தொடங்கியுள்ளது.

# கடந்த வருடம் மட்டும் ரூ.15 பில். போதை பொருள் கைபற்றல்

### 232 சுற்றிவளைப்புகளில் 268 பேர் கைது

2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது 15.86 பில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இதன் பெறுமதி 15 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தாகும்.

கடந்தாண்டு நடத்தப்பட்ட 74 சுற்றிவளைப்புக்களில் 1,268 கிலோவுக்குமதிகமான ஹெரோயினுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்கள் அடங்கலாக 141 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 151 சுற்றிவளைப்புக்களில் 700 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவுடன் 193 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

73 சுற்றிவளைப்புக்களில் 158 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளுடன் 98 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தாண்டு 16 சுற்றிவளைப்புக்களில் 69 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவுடன் 27 சந்தேக நபர்களும் 08 சுற்றிவளைப்புக்களில் 88 கிலோவுக்குமதிகமான ஹஷீஸ் போதைப்பொருளுடன் 09 பேரும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

# எங்கள் கருத்து...

## முஸ்லிம் கட்சித் தலைமைகளிடம் முஸ்தபா முன்வைத்த கோரிக்கை!

பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டமை வரலாறு. ஆனால் அந்த முஸ்லிம் கட்சிகளின் இலக்குகள் நிறைவேறாமல் போனதே உண்மை.

இந்நிலையில், எதிர்வரும் பதினைந்து, இருபது வருடங்களுக்கு இன்றைய ஆட்சியாளர்களின் ஆட்சியே தொடரும் எனும் மக்களது கருத்தை சரியாக அறிந்து கொண்டே பைசர் முஸ்தபா, இத்தகைய ஒரு கருத்தை தான் சார்ந்த சமூகத்தின் நலன் கருதி நிச்சயமாக முன்வைத்திருக்கக் கூடும்.

எனவே முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் இந்த விடயத்தில் தீவிரமாக சிந்தித்து செயற்பட வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஏனெனில் முஸ்லிம் கட்சிகளின் தலைமைகளைத் தவிர, அவற்றில் அங்கம் வகிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் முதல் அடிமட்டத் தொண்டர்கள் வரையில் இன்று அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படுகிறார்களென்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். அதில் ஒளிவுமறைவுக்கு எதுவுமில்லை.

இந்நிலையில், முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் தமது கடந்த காலத்தையும் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இன்று அரசாங்கத்தை வீம்புக்காக எதிர்த்து நிற்கும் முஸ்லிம் கட்சிகள் அனைத்தினதும் தலைவர்கள், இன்று ஆட்சியிலிருக்கும் தலைமைகளுடன் கடந்த காலங்களில் ஒன்றாக ஒரே அமைச்சரவையில் அமர்ந்திருந்து பணியாற்றியவர்களென்பது உலகறிந்த உண்மை. ஆனால் இன்று அதே தலைமைகளை காரணம் தெரியாது விதண்டாவாதமாக விமர்சிக்கும் ஒரு கைங்கரியத்தை அவர்கள் செய்து வருகிறார்கள். இன்றைய ஆட்சியாளர்களின் திறமைகளை அன்று இதே முஸ்லிம் கட்சித் தலைமைகள் பாராட்டிப் பேசிய, புகழ்ந்து தள்ளிய வரலாறுகளுக்கு ஊடகங்கள் இன்றும் சாட்சியாக உள்ளன.

அரசாங்கத்தை எதிர்ப்பதும், அதற்காக மக்களைத் தூண்டி விடுவதும், ஊடகங்களில் தம்மை காரணமின்றி விளம்பரப்படுத்துவதும் மட்டுமே இன்றைய எதிர்க்கட்சியின் செயல்பாடாக உள்ளது. 'அவ்வாறான எதிர்க்கட்சியில் இனியும் நீங்கள் அங்கம் வகித்து சமூகத்துக்கு எதனையுமே செய்யாது இருக்க வேண்டுமா?' என்ற வினாவே பைசர் முஸ்தபா முன்வைத்த கருத்தின் சாராம்சமாக உள்ளது.

இதனை ஏற்றுக் கொள்வது முஸ்லிம் கட்சி தலைமைகளின் பொறுப்பும் அவசியமுமாகும். அரசாங்கத்துடன் முஸ்லிம் கட்சித் தலைமைகள் இணைவது, இணைந்து செயற்படுவது என்பது அவர்களுக்கொன்றும் புதிதல்ல. ஏற்கனவே இருந்த இடத்துக்கு மீண்டும் வந்து சமூகத்துக்குச் சேவை செய்ய கிடைத்த ஒரு வாய்ப்பாக அதனைக் கருத வேண்டும். அந்தக் கட்சிக்கு ஆதரவு கொடுப்பதும், இந்தக் கட்சிக்கு தாவி ஆதரவு கொடுப்பதும் என்பதுமாக பெரும்பான்மைக் கட்சிகளை தராசில் போட்டு எடை பார்க்காமல், சமூகத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்பதே பைசர் முஸ்தபாவின் எண்ணமாக இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பற்றிய பைசர் முஸ்தபாவின் கருத்து முஸ்லிம் கட்சிகளின் தலைமைகளுக்கு ஒரு முன்னுதாரணமாக முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது தாம் சார்ந்த தமிழ் மக்களுக்காக எந்தவிதமான விட்டுக்கொடுப்புகளுமின்றிகொள்கைகளுக்காகஒரேநிலைப்பாட்டிலிருக்கும் அவர்களது மனநிலையை பைசர் முஸ்தபா பாராட்டி இருக்கலாம். அது உண்மையும் கூட.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மூலமாக அரசியலுக்கு வந்த பைசர் முஸ்தபா, மலையக மக்களுக்காக குரல் கொடுத்து வரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தான் சார்ந்த முஸ்லிம் மக்களை சரியாக பிரதிநிதித்துவப்படுத்தவில்லையெனக் கூறி அங்கிருந்து வெளியேறி தனது எதிர்ப்பைக் காட்டியவர்.

அதன் பின்னர் தேசியக் கட்சியில் இணைந்து தனது சமூகத்திற்காக பதவியிலிருக்கும் போதும், பதவி இல்லாத போதும் குரல் கொடுத்து வருகின்றார். எனவே அவரது அழைப்பை முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் அலட்சியப்படுத்தாது, கரிசனையுடன் கருத்தில் கொண்டு செயல்பட முன்வருவது அவசியமென்பதே எமது கருத்தாகும்.

## தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை ...

ஆகவே வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்கள் கடந்தகாலத் துன்பியல் நிகழ்வுகளை மறந்துவிட்டு தீர்வை வென்றெடுக்க ஓரணியில் பயணிக்க வேண்டுமென்றும் அழைப்பு விடுத்தார். இதன் அவசியத்தை உணர்ந்து முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்பட வேண்டுமென்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

## புகையிரதத்துடன் மோதி...

ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த உத்தரதேவி கடுகதி ரயிலுடன் இவ்வாறு மோட்டார் வாகனம் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. புகையிரதத்தில் மோதிய மோட்டார் வாகனம், சுமார் 200 மீட்டர் தூரம் இழுத்துச் சென்று தீப்பிடித்துள்ளது. ரயிலின் முன்பகுதியும் தீப்பிடித்து எரிந்ததையடுத்து, அப்பகுதி மக்கள் இணைந்து அதை அணைத்துள்ளனர்.



பசறை கோணக்கலை மேற்பிரிவு ஸ்ரீ முருகன் ஆலயத்தில் புதுவருட சிறப்பு பூஜை இடம்பெற்ற போது...

படங்கள்: லுணுகல நிருபர்

## நுகர்வோருக்கு தரமான GAS;..

இரு எரிவாயு தொடர்பான வெடிப்புகள் இடம்பெறுவதால், எரிவாயு நிறுவனங்களும் நுகர்வோர் விவகார அதிகாரசபையும் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவிற்கு இணங்கத் தவறிவிட்டதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நாகாநந்த கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டை மறுத்த தரப்பினர் , மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவு நடைமுறையில் இருக்கும் என்றும், திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிபுணர்களுடனான விசேட கலந்துரையாடலின் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த மனு நீதியரசர்கள் ருவன் பெர்னாண்டோ மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், 26ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## சீமெந்தின் விலை நேற்றுமுதல்...

விடவும் 100 ரூபா அதிகமாகும். அதன்படி இறக்குமதி செய்யப்படும் சீமெந்து பொதியின் விலை 1,475 ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய பிரதமருக்கு ஆவணம் அனுப்பி...

தாயகமோ அல்லவென குறிப்பிட்ட அமைச்சர் தினேஷ், இரு மாகாணங்களும் ஒரே நாட்டுக்குள்ளேயே அமைந்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

எனவே, மாகாணங்களைப் பிரித்து எந்த இனத்தவர்களும் சொந்தம் கொண்டாட முடியாதென்றும் அனைவரும் ஒரே நாட்டின் பிள்ளைகள் என்றும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அன்று இணைந்திருந்தமையினாலேயே இனக்கலவரம் வெடிக்க ஆரம்பித்ததென்றும் வன்முறைகள் தொடங்கின என்றும் அவர் கூறினார். கடந்த காலத்தில் இடம் பெற்ற இந்தத் துன்பியல் நிகழ்வுகளைத் தமிழ்க் கட்சிகள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

## 41 'ஒமிக்ரோன்' தொற்றாளருடன்...

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

புதிய ஆண்டில் மக்கள் தமது கடமைகளை செவ்வனே முன்னெடுத்துச் செல்ல நாடு முழுமையாக திறக்கப்பட்டுள்ளது.

எனினும் ஒமிக்ரோன் போன்ற புதிய வைரஸ் திரிபுகள் நாட்டுக்குள் பரவி வருகின்றதை மக்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புதிய சுகாதார வழிகாட்டல்களை பொதுமக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும். இல்லையெனில் மீண்டும் கொவிட் பரவல் அதிகரிக்க கூடுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் அசேல குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

## ஜன.20 இற்குள் சம்பளம்...

போதே அவர் இதனை தெரிவித்தார்.

எமது நீண்டகால பிரச்சினையாக காணப்பட்ட சம்பள முரண்பாட்டை தீர்ப்பதாக அரசு கூறியுள்ளது. ஆனால், இன்று வரை சம்பள முரண்பாட்டை பகுதியாக தீர்ப்போமென கூறிய அரசு, இன்னமும் அது தொடர்பாக வர்த்தமானியை வெளியிடவில்லை.

அரசு கூறியது போன்று ஜனவரி மாதம் 20ஆம் திகதி மூன்றில் ஒரு பங்கு சம்பள முரண்பாடு தீர்க்கப்பட வேண்டுமானால், ஜனவரி 05ஆம் திகதி அதற்கான சுற்று நிருபம் வெளியிடப்பட வேண்டும். இன்று வரை அந்தசெயற்பாடு நடைபெறவில்லை.

கடந்த 24 வருடங்களாக நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். இம் முறை அரசு தாம் வழங்கிய வாக்குறுதியை சம்பள அதிகரிப்பில் காட்டவில்லையென்றால் நாம் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்றார்.

## நயவஞ்சக அரசியல் செய்வதை...

அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இந் நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் இவர்களை பற்றி நன்றாக தெரியும். அரசியலை சீராக்க தலைவர் அஷ்ரபின் தலைமையில் ஒன்று சேர்ந்த கூட்டம் நாங்கள். அதில் ஒருவராக இருந்து அடுத்தகட்டங்கள் தொடர்பில் கடும் தெளிவுடன் இருக்கிறோம். இந்த ஆண்டில் நிறைய வடுக்கள் இருந்தது. புதிய ஆண்டில் வடுக்கள் இல்லாமல் நம்மை வாழ வைக்கும் ஆண்டாக புத்தாண்டு இருக்க வேண்டும்.

நாட்டில் பஞ்சமில்லாத நிலை உருவாகி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒருதாய் பிள்ளைகள் போல இனவாதம் இல்லாமல் ஒற்றுமையாக வாழ இந்த ஆண்டு இருக்க வேண்டும் என்று பிராத்திக்கிறேன். ஆட்சி அதிகாரம் என்பது சில காலங்கள் மட்டுமே இருக்கும்.

அந்த காலப்பகுதியில் மக்களுக்கு எதை செய்தோம் என்பதை மனசாட்சியுடன் செய்ய வேண்டும். இன்றைய சூழ்நிலையில் விவசாயிகளும், மீனவர்களும் கஷ்டத்தில் இருக்கிறார்கள்.ஊருக்கே சோறுபோடும் விவசாயிகள் கடுமையான இன்னல்களை சந்தித்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை அதினிலிருந்து விடுபடச்செய்வது தொடர்பில் சிந்திப்போம் என்றார்.

## தொழிலாளர்களுக்கு ஆசைகாட்டி...

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்பது கூட்டு ஒப்பந்தம் மாத்திரமே, ஆனால் சிலர் கூட்டு ஒப்பந்தம் தேவையில்லையென கூறுகிறார்கள்.

எமக்கு ஒரே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமே வேறு எவரும் கிடையாது. எதிர்கட்சியினர் இது போன்ற பொய்யான வதந்திகளை பரப்பி வருகின்றனர். எனவே தொடர்ந்தும் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருப்பார்.

தற்பொழுது நாட்டில் காணப்படுகின்ற சூழ்நிலை காரணமாக இம்முறை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தைப் பொங்கல் விழா போன்ற நிகழ்வுகளை நடத்தாது. நாம் கூறுவது எல்லாம், மக்களை பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்பதே எமது கோரிக்கை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஒரு மாதத்திற்கு புதிய...

சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் டொக்டர் அசேல குணவர்தனவினால் வெளியிடப்பட்டுள்ள புதிய சுகாதார வழிகாட்டியில் பாடசாலைகள் தொடர்பான சுகாதார தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பு கல்வி அமைச்சுக்கே வழங்கப்பட்டுள்ளது.அத்துடன், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பான சுகாதார தீர்மானங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் உணவகங்கள், சந்தைகள், மருந்தகங்கள், பல்பொருள் அங்காடிகள் உள்ளிட்டவற்றில் ஒரே சந்தர்ப்பத்தில் 50 வீதமானோருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட வேண்டும்.

தனிப்பட்ட வைபங்கள் மண்டபங்களில் ஏற்பாடு செய்யப்பட்டால் குறித்த மண்டபத்தின் கொள்ளளவில் 50 வீதமானோர் மாத்திரமே அனுமதிக்கப்பட வேண்டும்.

எனினும் வீடுகளில் ஏற்பாடு செய்யப்படும் வைபவங்களில் ஆகக்கூடியது 10 பேர் மாத்திரமே பங்குபற்ற முடியும்.

அநாவசியமாக அத்தியாவசிய தேவைகள் இன்றி வெளியிடங்களுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் புதிய சுகாதார வழிகாட்டலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பொது போக்குவரத்துக்களில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகளை ஏற்ற வேண்டும்.

குளிரூட்டப்பட்ட பஸ்களில் காற்றூட்டமாக இருக்கும் வகையில் ஜன்னல்களை திறந்து வைக்க வேண்டும். அத்தோடு பயணிகள் அனைவரும் முகக்கவசம் அணிந்திருத்தல் அத்தியாவசியமானதாகும்.

தொழில் ஸ்தலங்களில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். மறு அறிவித்தல் வரை மக்கள் ஒன்று கூடல்கள் , கூட்டங்களை நடத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொது இணைக்க ஆவணம்...

ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென்ற ஒருமித்த கருத்துக்கமைவாக இந்த ஆவணத்தை வெகுவிரைவில் தயாரிக்க தீர்மானிக்கப்பட்டதாக எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று சுமந்திரனின் இல்லத்தில் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## உலகத் தமிழர் திருநாளின் 08ஆவது...

உலகத் தமிழ் பாராளுமன்றம் அமைத்தல் ஆகிய முப்பெரும் நிகழ்வுகள் எதிர்வரும் 08, 09 ஆம் திகதிகளில் தமிழகம், சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதி 14ஆவது வருடாந்த எடிசன் விருது வழங்கும் விழாவும் நடைபெறவுள்ளது. உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு தலைவர் ஜே. செல்வகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளுக்கு இலங்கையின் ஊடக அனுசரணையை தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய மீனவர்களுடன்...

கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இச் சந்திப்பின் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

இலங்கையின் கடல் வளத்தையும் எமது மக்களின் வாழ்வாதாரத்தையும் அழிக்கின்ற இழுவை வலைத் தொழில் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்பதே எமது மக்களின் வேண்டுகோளாக இருக்கின்றது.

இதனை இந்தியக் கடற்றொழிலாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும். கடல் வளங்கள் அழிக்கப்படுவதனால் இந்தியக் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும் அழிக்கப்படுகின்றது.

ஆனால், இந்தியாவில் உண்மைகள் மறைக்கப்பட்டு தவறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இழுவை மடித் தொழிலில் ஈடுபடுகின்ற இந்தியக் கடற்றொழிலாளர்களும் தமது வாழ்வாதாரத்திற்காகவே தொழிலில் ஈடுபடுகின்றார்கள் என்பதை நான் அறிவேன்.

எனவேதான், இரண்டு வருடங்களுக்கு முன்னதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புதுடில்லி சென்ற போது இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான திட்ட வரைபொன்றை கையளித்திருந்தேன்.

அதனடிப்படையில் பரிசீலக்க இந்தியத் தலைவர்களும் சம்மதம் தெரிவித்திருந்தனர். எனினும் கொரோனா தொற்று உட்பட பல்வேறு காரணங்களினால் அதனை இன்னும் தொடர முடியவில்லை.

எது எப்படியோ, நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்ட்ள்ள நீங்கள் இன்னும் சில வாரங்கள் பொறுத்திருக்க வேண்டும். உங்களுடைய கருத்துக்களை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையில் முன்வைத்து உங்களது விடுதலை தொடர்பான முயற்சிகளை மேற்கொள்வேன்.

எனினும், உங்களின் முதலாளிமாருக்கு சொந்தமான படகுகள் அரசுடமையாக்கப்படும். அதற்கான சட்டங்கள் கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் அமைக்கப்பட்டிருந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, நீங்கள் விடுதலையாகி நாட்டுக்கு திரும்பியதும் இழுவைமடித் வலைத் தொழிலை நிறுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுத்தி, விழிப்புணர்வை மேற்கொள்ளுங்கள்" என்று தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து சட்ட விரோத தொழிலில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட சுமார் 56 இந்தியக் கடற்றொழிலாளர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.


2022
ஆரோக்கியம் நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல.356, டாக்டர்.கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
கொழும்பு 02.
www.dlb.lk


සුභ
නව වසරක්
වේවා !
Wish You A
Happy
New Year !
2022
இனிய
புதுவருட
வாழ்த்துக்கள் !
எமது வாடிக்கையாளர்களுக்கும் இலங்கையர் அனைவருக்கும்
சாந்தி, சந்தோஷம், ஆரோக்கியம் மற்றும்
சுபீட்சம் உண்டாக பிரார்த்திக்கின்றோம்!
HOTLINE
0112 425 262
www.rdb.lk
ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB
Regional Development Bank
நாட்டின் முன்னோடி அரச அபிவிருத்தி வங்கி


மலர்ந்துள்ள 2022ஆம் புத்தாண்டில் நாடெங்கும்
சுபீட்சத்துடன் நறுமணம் வீசிட வாழ்த்துகிறோம்
அம்ரிதா®
Amritha
அம்ரிதா
வெவெண்டர்
Manufactured by
ISO 9001:2015, ISO 14001:2015,
ISO 45001:2018 Certified Company
Rs. 85/-



**கொவிட் உலகப் பெருந்தொற்றை பின்னணியாகக் கொண்ட பொருளாதாரப் பின்னடைவில் இலங்கை மாத்திரம் விதிவிலக்காகி விட முடியாது. தற்போதைய நிலைமை ஜீ ரணிக்கக் கூடியதாக இல்லாவிட்டாலும், இந்தக் குழப்பத்திலிருந்து நாடு இலகுவில் விடுபடுவதற்கு எளிதான வழி இல்லை என்பதே உண்மை.**

**நிபந்தனைகளுடன் கிடைக்கின்ற உதவியை இலங்கை ஏற்றுக் கொண்டால், அனைத்து நிபந்தனைகளுக்கும் உடன்பட வேண்டிய கட்டாயத்துக்குள் நாடு தள்ளப்பட்டு விடும்**



# சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டிய அவசியமில்லை!

நிறைவடைந்திருக்கும் 2021 ஆம் ஆண்டு கடினமாக ஆண்டாக இருந்த நிலையில், பிறந்திருக்கும் 2022 ஆம் ஆண்டும் கடினமாக இருக்கப் போகின்றது என்பதையே நடைமுறையில்உள்ள சமூக, பொருளாதாரச் சுட்டிகளின் கணிப்புகள் உணர்த்துகின்றன.

புத்தாண்டு பிறந்திருக்கும் இத்தருணத்தில் நாடு டொலர் பற்றாக்குறையின் காரணமாகப் போராடி வருகிறது. டொலர் பற்றாக்குறையினால் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளது. நாடு இப்போது ஏற்றுமதி பற்றி மாத்திரமே சிந்திக்க முடியும். இதனால் எரிபொருள் போன்றவற்றின் கொள்வனவுக்கான தட்டுப்பாடும் காணப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் பெற்றுக் கொண்ட 6.9 மில்லியன் அமெரிக்க டொலர்களின் சுமை தோள்களில் காணப்படுகிறது.

வெளிநாடுகளில் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச்செலுத்தல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கான டொலர் பற்றாக்குறை காணப்படும் நிலையில், அந்நிய செலாவணிக் கையிருப்புக்களை அதிகரிக்க நட்பு நாடுகளான சீனா மற்றும் இந்தியாவின் உதவிகளை நாடுவது தொடர்பில் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாட வேண்டும் எனப் பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இருந்த போதும், சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டிய தேவை இல்லையென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தை நாடாமல் தற்போதைய பொருளாதார முட்டுக்கட்டையை எம்மால் சமாளிக்க முடியும். தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகள் இலங்கையில் மட்டுமல்ல, பல நாடுகளுக்கும் பொதுவானவை. நல்ல காலம் விரைவில் வரும் என அஜித் நிவாட் கப்ரால் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். எதிர்வரும் மாதங்கள் மற்றும் வருடங்களில் மீதமுள்ள அனைத்து வெளிநாட்டுக் கடன்களும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவின்றி மீளச் செலுத்தப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவி பல நிபந்தனைகளுடன் வருகிறது, அவர்களின் உதவியைப் பெற்றால் அனைத்து நிபந்தனைகளுக்கும் உடன்பட்டு கைச்சாத்திட வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அஜித் நிவாட் கப்ரால் சுட்டிக் காட்டினார்.

அதேநேரம், புத்தாண்டில் அரசாங்கம் எடுக்க வேண்டிய இரண்டு முக்கிய மற்றும் அவசரமான முடிவுகள் காணப்படுகின்றன. டொலருக்கு எதிரான இலங்கைப் பெறுமதியை நிலையாகப் பேணுவதா அல்லது மிதக்க விடுவதா மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடம் உதவியைப் பெறுவதா ஆகிய இரண்டு தீர்மானங்களே எஞ்சியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதில்லையென மத்திய வங்கியின் ஆளுநர் கூறியுள்ள நிலையில், இவ்விடயம் தொடர்பில் அமைச்சரவையிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவது தொடர்பில் அமைச்சரவையில் மாறுபட்ட நிலைப்பாடு காணப்படுவதாகவே தெரிகிறது. நிதி அமைச்சர் நாடு திரும்பியதும் இறுதி முடிவு எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நாளை 03 ஆம் திகதி கூடவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் கலந்துரையாடப்படவுள்ளது. மத்திய வங்கியின் ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மறு பக்கத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதன் ஊடாகவே இந்த நிலைமையிலிருந்து அரசாங்கத்தினால் மீள முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். எவ்வாறாயினும், நிலவும் பொருளாதார அழுத்தத்தைத் தணிக்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு ஆதரவாக அமைச்சரவைக்குள் பல குரல்கள் சமீப காலமாக வலுத்துள்ளன. ஆனால் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உட்பட சில அமைச்சர்கள் இந்த யோசனையை கடுமையாக எதிர்க்கின்றனர். எதிர்வரும் சில நாட்களில் அரசாங்கம் தீர்மானமொன்றை எடுக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.

**அந்நிய செலாவணிக் கையிருப்பு 1.5 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 3.1 பில்லியன் அமெரிக்க டொலாக அதிகரிப்பு; சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுமாறு எதிரணி வலியுறுத்துவதன் உள்நோக்கம் யாது?**



இலங்கையைப் பொறுத்த வரையில் சர்வதேச நாணய நிதியத்திடம் இதற்கு முன்னரும் உதவியைப் பெற்ற வரலாறு உள்ளது. 1965 ஆம் ஆண்டு முதல் இதுவரை 16 முறை சர்வதேச நாணய நிதியத்தை இலங்கை நாடியுள்ளது. இறுதியாக 2016ஆம் ஆண்டு உதவியைப் பெற்றிருந்தது. 2016 ஆம் ஆண்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் இறுதித் தவணையை சர்வதேச நாணய நிதியம் வெளியிடவில்லை.

(10ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...




**எரிபொருள் விலை அதிகரிப்புக்கான முழுமையான சுமையையும் மக்கள் மீது திணிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லையென வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்துச் சேவைகள், புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் எமக்கு வழங்கிய பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.**

# மக்கள் மீது முழுமையான சுமையை சுமத்த அரசாங்கம் விரும்பவில்லை!

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அளிக்கும் விளக்கம்

**கே: ஃபிட்ச் மதிப்பீடுகள் இலங்கை குறித்த மதிப்பீட்டை அண்மையில் குறைத்திருந்தன. கொவிட்–19 தொற்றுநோயினால் உலக நாடுகள் சவால்களுக்கு முகம் கொடுத்திருக்கும் நிலையில், இலங்கையில் காணப்படும் இவ்வாறான நேர்மறையான முன்னேற்றங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: அந்த மதிப்பீடுகள் அனைத்து வகையான நிதிப் புள்ளிகளையும் அடிப்படையாகக் கொண்டவை. அவர்களின் மதிப்பீடுகளில் தடுப்பூசி மற்றும் சுகாதாரத் திட்டங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாக நான் கருதவில்லை. வெளிப்படையாகக் கூறுவதாயின், சர்வதேச இறையாண்மை மதிப்பீடுகள் தொடர்பாக எங்களுக்கு சிக்கல் காணப்படுவதுடன், இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. நாங்கள் எங்கள் இருப்புகளைக் கொண்டு சாப்பிட்டு வந்தாலும், மக்களை வாழ வைக்க முடிந்தது. இது ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய மிக முக்கியமான விடயமாகும். கொவிட்19 மூன்றாவது அலையுடன் இணைந்ததாக பிரச்சினைகள் அதிகமாகின. இலங்கை மாத்திரமன்றி உலகின் பல நாடுகள் இவ்வாறான நிலைமையை எதிர்கொண்டுள்ளன. முழு உலகமும் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் நாம் மாத்திரம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு எந்த வழியும் இல்லை. துரதிர்ஷ்டவசமாக எதிர்க்கட்சியினரும், குறிப்பிட்ட ஒரு தரப்பினரும் எப்பொழுதும் எதிர்மறையான பக்கத்தை மாத்திரமே பெரிதுபடுத்தி வருகின்றனர். தரப்படுத்தல் மாத்திரமன்றி அந்நிய செலாவணி தொடர்பில் பிரச்சினை காணப்படுகிறது. பாரிய பணவீக்கப் பிரச்சினையும் காணப்படுகிறது. இதனை சமாளிக்க முடியும் என்று நாம் நம்புகின்றோம். இருந்தபோதும்அடுத்தவருடம்ஏப்ரல் மாதம் வரை இந்நிலைமை நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

**கே: இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு குறைந்துள்ளதாகவும், நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதாகவும் எதிர்க் கட்சிகள் கூறுவதை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: நமது வெளிநாட்டுக் கையிருப்பு குறைந்து விட்டது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. கடந்த இரண்டு வருடங்களாக ஒரு அமெரிக்க டொலர் கூட வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படவில்லை. அதன் மூலம் அந்நிய செலாவணியின் குறைவதைத் தவிர வேறு எப்படி இருக்கும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இது அனைவருக்கும் விளங்கக் கூடிய விடயம். குறைந்த கையிருப்பு நிலைமையை முகாமைத்துவம் செய்வதே தற்பொழுது காணப்படும் பிரச்சினையாகும். அதைத்தான் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். குறைந்த கையிருப்புடன் இதனைச் செய்வதானது உயிர் வாழ்வதற்கான விஷயம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனவே, பொதுமக்களை வாழ வைக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. இதில் விவாதிக்கப்பட வேண்டிய சில கட்டுப்பாடுகள் உள்ளன. உலகின் பிற நாடுகளாலும் இத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதுபோலவே பின் விளைவுகளையும் நாம் சந்திக்க வேண்டியுள்ளது. நாங்கள் இதை நிர்வகித்து, அடுத்த ஏப்ரலில் அதிலிருந்து வெளியேற முடியும் என நம்புகிறேன்.



**கே: யுகதனவி மின்நிலைய ஒப்பந்தம் குறித்து ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் மாற்றுக் கருத்துக் காணப்படுகிறதா? இது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: மாற்றுக் கருத்து உள்ளது, இதனை இல்லையென்று சொல்ல முடியாது. எனினும், இந்த விவகாரம் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக கொண்டு வரப்பட்டது. இந்த அமைச்சர்கள் உடன்படவில்லை என்றால், அமைச்சரவையில் ஏன் அதற்கு ஒப்புதல் அளித்தார்கள் என்பதே தற்பொழுது காணப்படும் பிரச்சினையாகும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

**'அமைச்சரவைக் கூட்டங்களில் சில அமைச்சர்கள் ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளித்து விட்டு வெளியே வந்து அதை எதிர்க்கின்றனர். இது சிறுபிள்ளைகளின் விளையாட்டு அல்ல'**




# பொருளாதார சவால்கள் நிறைந்த புதிய ஆண்டுக்குள் உலகம் பிரவேசம்!




**கொவிட் மூன்றாம் அலை, நீண்ட நாள் பொது முடக்கம், டொலர் பற்றாக்குறை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என பல்வேறு சவால்களுடன் 2021ஆம் ஆண்டு முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், 2022ஆம் ஆண்டு புதிய சவால்களுடன் பிறந்துள்ளது. இவ்வாறான சவால்கள் இலங்கைக்கு மாத்திரமன்றி உலக நாடுகள் பலவற்றுக்கும் காணப்படும் பொதுவான சவால்களாகவே உள்ளன.**

இலங்கையைப் பொறுத்த வரையில் தற்பொழுது நாடு எதிர்கொண்டுள்ளபொருளாதாரசாவல்கள் முக்கிய விடயமாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாடும் தமக்குக் காணப்படும் சவால்களை முறியடிப்பதற்கும், அதிலிருந்து மீண்டெழுந்து நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கும் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளன. இவ்வாறு முன்னெடுக்கும் வேலைத் திட்டங்கள் சில வெற்றியளிப்பதுடன், சில தோல்வியிலும் முடிவடைகின்றன.

அண்மைய தசாப்தங்களில் உலக நாடுகள் எதிர்கொண்ட புதியதொரு சூழலாக தற்போதைய கொவிட் பெருந்தொற்றை அடிப்படையாகக் கொண்ட நிலைமை காணப்படுகிறது. இவ்வாறான நெருக்கடியான சூழல் இலங்கைக்கு முற்றிலும் புதியதொரு விடயமாகும். இதுவரை எந்தவொரு காலமும் எதிர்கொள்ளாத சூழலுக்கு தற்போதைய அரசாங்கம் முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடிக்கான பிரதான காரணம் கடந்த இரு வருடங்களாக நாட்டை ஆக்கிரமித்துள்ள கொவிட் தொற்று ஆகும். அந்த தொற்று இன்னுமே முடிவுக்கு வந்துவிடவில்லை.

மேலே குறிப்பிட்டதைப் போன்று இலங்கை மாத்திரமன்றி உலக நாடுகளும் இப்புதிய சூழலில் தம்மை நிலைநிறுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அந்தந்த நாடுகளின் பிரஜைகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன. இது மாத்திரமன்றி கொவிட் தொற்று பரவலானது இலங்கைக்கு மாத்திரமன்றி முழு உலகத்துக்குமே பல படிப்பினைகளை வழங்கியுள்ளது.

விசேடமாக தொற்றுநோய் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள சவாலான சூழல் குறிப்பிட்ட ஒரு சமூகத்தை மாத்திரம் பாதிக்கவில்லை. சகல மட்டங்களிலும் உள்ளவர்களையும் பாரபட்சமின்றி சவால்களுக்கு உட்படுத்தியுள்ளது. இருந்தபோதும் பொருளாதார ரீதியில் சற்று பலமான நிலையில் உள்ளவர்களால் நிலைமைகளை ஓரளவுக்குச் சமாளிக்கக் கூடியதாக இருந்தாலும், வாழ்க்கையை ஓட்டிச் செல்வதற்கு அன்றாட உழைப்பை நம்பியிருக்கும் தரப்பினர் அதிகம் பாதிக்கப்பட்




வரலாற்று ரீதியாக எடுத்துப் பார்க்கும் போது இலங்கை பொதுவாகவே மானியங்கள் மற்றும் நலன்புரித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது. மக்களின் மேம்பாட்டுக்காக கடந்த கால அரசாங்கங்கள் பல்வேறு இலவசத் திட்டங்கள் மற்றும் மானியத் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந்தன.

இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் பல தசாப்தங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்களால் அவ்வாறே பின்பற்றப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கொவிட்

சாங்கத்தின் காலத்திலும் அதற்கு முன்னரும் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கட்டாயமும் அரசுக்குக் காணப்பட்டது. இதனையும் உரிய காலத்தில் மீளச் செலுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. நாட்டில் அந்நிய செலாவணிக்கு தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் முன்கூட்

## சர்வதேச நாடுகள் அத்தனையுமே சந்தித்துள்ள நெருக்கடிக்கு இலங்கை மாத்திரம் விதிவிலக்காக இருந்து விட முடியாது





டுள்ளனர். இந்த நிலைமைய மாற்றுவதற்கு அரசாங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருவதையும் நாம் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று ஒரு சில மாதங்களிலேயே கொவிட் சவாலுக்கு நாடு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. தொற்றுநோய் ஆபத்துச் சூழலுக்கு மத்தியிலேயே பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு புதிய அரசாங்கம் பதவியேற்றுக் கொண்டது. இதன் அடிப்பைடயில் பார்க்கும் போது இந்த அரசாங்கம் ஆரம்பம் முதலே சவால்களுக்கு மத்தியிலேயே நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தொற்று நோய் சூழலாக இருந்தாலும் தற்போதைய அரசுக்கும் மானியங்களைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொது முடக்கம் மற்றும் ஊடரங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் கட்டாயத்துக்கு அரசாங்கம் தள்ளப்பட்ட போது, தொழிலற்று வீடுகளில் இருந்த குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவுகளை அரசு வழங்கியது. கொவிட் முதலாவது அலை, இரண்டாவது அலை மற்றும் மூன்றாவது அலை என ஒவ்வொரு கட்டத்திலும் மக்களுக்கு இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இதற்கென பல மில்லியன் ரூபாவை செலவு செய்ய வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது. அது மாத்திரமன்றி முடக்கங்களினால் அரசுக்கு உரிய தேசிய வருமானத்தை ஈட்ட முடியாமல் போனது. இதற்கும் அப்பால் நாட்டு மக்களை கொவிட் தொற்றிலிருந்து காப்பாற்றும் வகையில் அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்குவதற்காக பல மில்லியன் ரூபாவை செலவு செய்ய வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்பட்டது.

இது இவ்விதமிருக்க, கடந்த அரடியே இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இருந்த போதும், நீண்ட கால கொவிட் தொற்று நெருக்கடி காரணமாக தவிர்க்க முடியாத நிலையில் தற்பொழுது நாட்டில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைச் சீர்செய்வதற்கு அரசாங்கம் பல்வேறு மாற்று நடவடிக்கைகள் குறித்து தீவிரம் கவனம் செலுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில், விலைவாசி அதிகரிப்புக்கான அடிப்படைக் காரணங்கள் பற்றிச் சிந்திக்காது சகலவற்றிலும் எதிர்ப்பு அரசியல் செய்வதில் சில தரப்பினர் ஆர்வம் காட்டியுள்ளனர். குறிப்பாக பிரதான எதிர்க் கட்சியானது இன்றைய நிலையில் நாடு பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீள்வதற்கு எவ்வாறான யோசனைகளையும் முன்வைக்கவில்லை.

மாறாக ஆரம்பம் முதல் விமர்சனங்களையே செய்து வருகிறது. கொவிட் தொற்று ஆரம்பித்த காலத்தில் மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென விமர்சித்தது. அதன் பின்னர் தடுப்பூசிகள் செலுத்த ஆரம்பிக்கப்பட்டதும் அவற்றின் தரங்கள் குறித்து மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தை எதிர்க்கட்சி ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்களைத் தூண்டி விட்டு அவர்களை வீதிக்கு இறங்க வைத்து போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் தற்பொழுது மீண்டும் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கான முயற்சிகளை எதிர்க் கட்சி முன்னெடுத்து வருகிறது. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று தற்பொழுது நாடு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலை நமக்கு மாத்திரம் உரியதல்ல. பல உலக நாடுகளும் இவ்வாறான நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளன. இருந்தபோதும் அந்தந்த நாடுகளில் ஆளும் கட்சி எதிர்க் கட்சிகள் என சகல தரப்பினரும் ஒன்றிணைந்து சவாலிலிருந்து வெளியே வருவதற்கான பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளார்கள்.

ஆனால் இலங்கையிலோ காட்சிகள் வேறு விதமாக உள்ளன. இலங்கையில் மக்களையும், தொழிற் சங்கங்களையும் வீணாகக் குழப்பிவிட்டு அரசுக்கு எதிரான விஷமப் பிரசாரங்களே முன்னெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு விடயத்திலும் அரசியல் இலாபம் தேட முயலாமல் பொறுப்புள்ள பிரஜைகள் என்ற வகையில் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி, அரசாங்கம் தவறிழைக்கும் இடங்களில் தவற்றைச் சுட்டிக் காட்டி அவற்றுக்கு மாற்று யோசனைகளை முன்வைத்து சவால்களிலிருந்து தம்மையும், தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டு மக்களையும் மேம்படச் செய்வதையே எதிர்க்கட்சி தற்பொழுது செய்ய வேண்டும்.

## தேசிய வருமான இழப்பு, பொருளாதார வீழ்ச்சி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவை-யெல்லாம் கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் உலக நாடுகள் அத்தனையுமே எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள்!

**கொவிட் விளைவித்துள்ள வாழ்க்கைச் செலவு உயர்வை சாதகமாகப் பயன்படுத்தியபடி அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டு, அவர்களை வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்தும் தீவிர முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபடுவது நாகரிகமான அரசியல் அல்ல!**



இதனை விடுத்து மக்களை வீணாக உருவேற்றி வீதிகளில் இறங்கச் செய்து கொவிட் தொற்றை அதிகரிக்கச் செய்வது மாத்திரமன்றி, நிலைமைகளை மேலும் சிக்கலடையச் செய்யாமலிருக்க வேண்டும். அதேநேரம், அரசாங்கமும் இன்றைய நிலையில் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய நிலைமையில் உள்ளது. தற்போதைய நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி உலகின் சில நாடுகள் இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்கு முற்படுகின்றன. அரசுக்கு எதிரான சக்திகள் அந்நாடுகளுக்கு ஆதரவாக செயற்படுவதையும் காண முடிகின்றது. இவ்வாறான சர்வதேச நெருக்கடிகளை சமாளிக்க வேண்டிய நிலையிலும் அரசாங்கம் உள்ளது.

# நம்பித்தான் ஆகவேண்டும்!

# தெல்தோட்டை குறுப் தோட்டத்தில் முறிந்துவிழும் நிலையில் கூரைகள்!


















கண்டி மாவட்டத்தில் அமைந்திருக்கும் கலஹா தெல்தோட்டை குறுப், கலஹா நகரில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இத்தோட்டத்தில் 400 தொழிலாளர் குடும்பங்கள் வாழ்கின்றன. இங்கே இவர்கள் பரம்பரையாக வாழும் 20 தொடர் குடியிருப்புகள் 1920 மற்றும் 1935 காலப் பகுதியில் கற்களையும் மண்ணையும் கொண்டு கட்டப்பட்டவை. ஓடுகளையும் மரங்களையும் கொண்டு அமைக்கப்பட்ட மூன்று தொடர் குடியிருப்புகள் பழுதான நிலையில் உள்ளன.

ஏனைய தொழிலாளர் குடியிருப்புகளின் கூரைகள் தகரம் மற்றும் அஸ்பெஸ்டஸ் கொண்டு அமைக்கப்பட்டவை. இக்குடியிருப்புகளின் கூரை மரங்கள் உக்கி செல்லரித்து காணப்படுகின்றன. இதனால் கூரை தாழிறங்கியும் உயர்ந்தும் ஒழுங்கற்று காணப்படுகின்றன. தகரங்கள் துருப்பிடித்தும் ஓடுகள் கழன்றும் உள்ளன.

மிகப் பழமையான ஆங்கிலேயர் காலத்து உறுதியும் கனமும் கொண்ட ஓடுகள். கூரை மரங்கள் மற்றும் கூரை சட்டங்கள் உக்கி செல்லரித்து உள்ளமையால் கூரை ஓடுகள் கழன்று வீட்டுக்குள் விழுகின்றன. காகங்கள் போன்ற சிறிய பறவைகள் கூரையோடுகளில் அமரும்போது ஓடுகள் வீழ்கின்றன. கூரையின் ஓட்டையூடாக ஒழுகும் மழைநீர் வயர்களுக்குள் நுழைவதால் மின் ஒழுக்குகள் அடிக்கடி ஏற்பட்டு மின்சார உபகரணங்கள் பழுதடைகின்றன. குடியிருப்புகள் தீப்பற்றும் நிலையில் உள்ளன என்றால் மிகையாகாது.

ஓடுகள் கழன்று தலையில் வீழ்ந்து மண்டை உடைபட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன. சிறுவர்கள் முதியவர்கள் நோயாளிகளை வீட்டில் விட்டுவிட்டு செல்லமுடியாது அச்சமாக உள்ளது. கரையான் கூடுகளாக கூரைமரங்கள் உள்ளன. கரையான் மற்றும் கரையான்மண் உணவில் விழுவதாகச் சொல்கிறார்கள்.

கரையானை திண்ண பல்லியும் பல்லியை பிடிக்க பாம்பும் கூரைக்கு வருகின்றன. இங்கே மலசல கூட வசதியில்லை. மலசலகூடம் கட்டிக்கொள்ள இடமில்லை. கட்டுவதற்கான இடமிருந்தால் பணம் இல்லை.

தாம் பயன்படுத்திய கழிவுநீரை வெளியேற்ற வடிகான் வசதி இல்லை. சட்டிப்பானை கழுவிய நீரையும் தூக்கி தூர இடத்திற்கு எடுத்துச் சென்று கொட்ட வேண்டியுள்ளது. இது தொடர்பாக தோட்ட நிர்வாகமோ, அரசோ நடவடிக்கை எடுக்கவில்லை. கழிவுநீர் தேங்கி துர்நாற்றம் வீசுகின்றது. குடிநீர் விநியோகம் சீராகவோ முறையாகவோ இல்லை. வருமானம் போதியதாக இல்லை என்பதால் கூரையை தம்மால் மாற்ற முடியாது என்கிறார்கள் இக்குடியிருப்பாளர்கள்.

இத்தோட்டம் 1000 ஏக்கர் தேயிலை பரப்பைக் கொண்டிருந்தது. கடந்த 25 வருடங்களாக திட்டமிட்ட வகையில் சிறிதுசிறிதாக முழு தோட்டமும் காடாக்கப்பட்டு விட்டன. 1000 ஏக்கர் தேயிலை காணி இருந்த இடத்தில் வெறும் 300 ஏக்கர் தேயிலை காணிகள் மட்டுமே உள்ளன. சகல வசதிகளையும் கொண்ட தெல்தோட்ட குறுப் தேயிலை தொழிற்சாலையானது கடந்த 15 வருடங்களாக மூடப்பட்டுள்ளது.

தேயிலை தொழிற்சாலையை திறக்க பல போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்ட போதும் பயனில்லை. குறைந்தபட்சம் இந்த தொழிற்சாலையில் வேறு தொழில்களை ஆரம்பித்து இங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க முடியும்.

அரச நிர்வாகத்தின் கீழுள்ள ஜனவசம நடத்தும் இந்த தோட்டதில். தொழில் வாப்பில்லை. மிகக்குறைந்த நாட்களே வேலை வழங்கப்படுகின்றது.

இந்த வீடுகளுக்கு ஏதேனும் நடந்து அது விபரீதமாக முடிவதற்கு முன்னர் கூரைகளை மாற்றித் தந்தால் புண்ணியமாகப் போகும். விபரீதமான பின்னர் கவலை தெரிவிப்பதில் அர்த்தம் இல்லை.

**விபரீதம் நடந்த பின்னர்தான் ஞானம் வருமா?**

ஆர். நவராஜா...✍
படங்கள்: தெல்தோட்டை தினகரன் நிருபர்

# படுமோசமான நிலையில் தோட்டத் தொழிலாளர்கள்

**'சமயாசமய ஊழியர்களாக தோட்டத்தில் தொழில் செய்பவர்களுக்கும் தினச்சம்பளம் 750 ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது. மேலும், தோட்ட நிருவாகங்களினால் சட்டரீதியாக வழங்கப்பட்ட சேமநலன்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்டு வந்த தொழிற்சங்க அங்கத்துவ நிதி, மரண சகாய நிதி, ஆலயத்திற்கான நிதி உள்ளிட்ட எந்தவொரு நிதியும் கழிக்கப்படுவதில்லை'**

## தலையிட்டு பிரச்சினைகளை தீர்த்து வையுங்கள்

## பிரதமருக்கு தொழிற்சங்கத் தலைவர் கிருஷ்ணசாமி உருக்கமான கடிதம்



பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிய நிலையில் தத்தம் வாழ்வாதாரங்களையும் முன்னெடுக்க முடியாமல் சொல்லொணா துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய துர்ப்பாக்கிய நிலையில் இருந்துவரும், தொழிலாளர் சமூகத்தை மீட்டெடுக்க வேண்டுமானால், பெருந்தோட்டங்களை தொழிலாளர் குடும்பமொன்றிற்கு தலா இரண்டு ஏக்கர் என்ற அடிப்படையிலாவது, பிரித்துக்கொடுத்து, அவர்களை நில உடமையாளர்களாக மாற்றினால் மட்டுமே முடியும் என்கிறார் விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம். கிருஷ்ணசாமி.

விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம். கிருஷ்ணசாமி, பிரதமர் மகிந்தராஜபக்சவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேற்கண்ட விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களை நில உடமையாளர்களாக மாற்றி, அவர்களிடமிருந்து தேயிலை உற்பத்தியினைப் பெற்றுக்கொள்வதன் மூலம், பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகம் எதிர்நோக்கும் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வினைப் பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருக்கும். அத்துடன் அத்தொழிலாளர்கள் தத்தமது வாழ்வாதாரங்களையும் வளமாக மேற்கொள்வர். தாம் 'தோட்ட உரிமையாளர்' என்ற பெருமையுடன், தேயிலை உற்பத்தியை பெருமளவில் அபிவிருத்தி செய்வர் என்பதை அவர் அழுத்தமாக தன் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

நில உடமையாளர்களாக தொழிலாளர்களை மாற்றும் வேலைத்திட்டம், எமது நாட்டில் பல வருடங்களுக்கு முன்பு காலி, மாத்தறை, கேகாலை போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் தற்போது ஆரோக்கியமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் தேயிலை உற்பத்திக்கான பங்களிப்பினை, நில உடமையாளர்கள் வழங்கி வருகின்றனர். சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் என்று அத்தொழிலாளர்கள் பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர். இதுபோன்று, பெருந்தோட்டங்களையும் தலா இரண்டு ஏக்கர் என்ற அடிப்படையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரித்துக் கொடுத்து, அவர்களை நில உடமையாளர்களாக மாற்றியமைக்க கவனம் செலுத்துவீர்களென்று எதிர்பார்க்கின்றேன்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணயசபை மூலம் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பள உயர்விற்குப் பின்னர், தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கத் தொடங்கியுள்ளனர். வழமையாக ஒருநாள் சம்பளத்திற்கு 18 கிலோகிராம் தேயிலைத் தளிர்களைக் கொய்ய வேண்டியிருந்தது. ஆனால், தற்போது ஆயிரம் ரூபா சம்பள உயர்விற்குப் பின் ஒருநாள் சம்பளத்திற்கு 20 கிலோகிராம் தேயிலைத் தளிர்களை கொய்ய வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. தவறின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு மறுக்கப்பட்டு 750 ரூபாவே வழங்கப்படுகின்றது.

ஞாயிறு, போயா தினங்களில் வேலை வழங்கப்பட்டால் ஒன்றரை நாளுக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்பது நியதி. அந்நியதி தற்போது மீறப்பட்டுள்ளது. அக்குறிப்பிட்ட நாட்களில் தொழிலாளர்கள் கொய்யும் தேயிலைத்தளிர்கள் ஒரு கிலோ கிராமுக்கு 40 ரூபா என்ற அடிப்படையில் வழங்கும் திட்டம், தோட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

சமயாசமய ஊழியர்களாக தோட்டத்தில் தொழில் செய்பவர்களுக்கும் தினச்சம்பளம் 750 ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது. மேலும், தோட்ட நிருவாகங்களினால் சட்டரீதியாக வழங்கப்பட்ட சேமநலன்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்டு வந்த தொழிற்சங்க அங்கத்துவ நிதி, மரண சகாய நிதி, ஆலயத்திற்கான நிதி உள்ளிட்ட எந்தவொரு நிதியும் கழிக்கப்படுவதில்லை.

தோட்டங்களில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளுக்கும், தோட்ட நிருவாகத்தினர் பொலிசாரை நாடுகின்றனர். பொலிசார் தோட்டங்களுக்குள் நுழைந்து எடுக்கும் நடவடிக்கைகள் கட்டுமீறி செல்வதால், தோட்டங்களில் அமைதியற்ற சூழல் ஏற்படுகின்றது. இதனால் தொழிலாளர்களுக்கும் தோட்ட நிருவாகத்தினருக்குமிடையே முறுகல் நிலை தோற்றுவிக்கப்படுகின்றது. இருதரப்பினருக்குமிடையே ஏற்படும் தாக்குதல் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இவ்வாறான நிலை தொடரும்போது, பெருந்தோட்டத்துறை பொருளாதாரத்தில் பாரிய தாக்கங்கள் ஏற்படவே செய்யும். அத்துடன், பெருந்தோட்டத்துறையை நம்பியிருக்கும் பல்லாயிரக்கணக்கான

22ஆம் பக்கம் பார்க்க...

பதுளை எம். செல்வராஜா ...✍

## 36 வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும்

# எஸ். செல்வராஜா



நுவரெலியா வலய கல்வி பணிமனையின் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளர் தேசபந்து. சண்முகம் செல்வராஜா நாளை (03.01.2022) தமது 36 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

அம்பேவெல, வார்விக், மார்ட்டின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் கொட்டக்கலை கனபதிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியை அம்பேவெல சிங்கள வித்தியாலத்திலும் இடைநிலைக் கல்வியை நுவரெலியா பரிசுத்தத் திரித்துவக் கல்லூரியிலும் உயர்கல்வியை புனித சவேரியார் கல்லூரியிலும் கற்றார்.

1986ம் ஆண்டு PSEDP ஆசிரியராக நியமனம் பெற்ற இவர், ஹட்டன் டிக்கோயா டங்கல்ட் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றினார். பின்னர் நுவரெலியா கல்வி வலயத்தின் லிந்துலை, ஊவாக்கலை இலக்கம் 01 தமிழ் வித்தியாலயம், கந்தப்பளை சமர்ஹில் தமிழ் வித்தியாலயம், நுவரெலியா பிளக்பூல் சென்.அந்தனிஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றினார்.

2005 ஆம் ஆண்டு கொத்மலை கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்விக்கு பொறுப்பான உதவி கல்விப் பணிப்பளராக நியமனம் பெற்றார். பின்னர் 2008 ஆம் ஆண்டு அங்கிருந்து நுவரெலியா கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்று தொடர்ச்சியாக உதவிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றிய இவர், எதிர்வரும் 03.01.2022 ஓய்வுபெறுகின்றார்.

மத்திய மாகாண கல்வி அமைச்சின் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவில் பாடத்திட்டம், ஏனைய ஆசிரியர் வள நூல்கள் தயாரிப்புக் குழுவின் வளவாளராகவும் நுவரெலியா மற்றும் தெல்தெனிய ஆசிரியர் தொழில்வாண்மை விருத்தி நிலையங்களில் ஆசிரியர் மொடியூல் கற்றல் பயிற்சிநெறியில் தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணம், சுகாதாரமும் போசாக்கும், கல்விச் சட்டங்கள் போன்ற பாடங்களுக்கான வளவாளராகவும், யுனிசெப் நிறுவனம், டீ பீல்ட் நிறுவனம், சயில்ட் பண்ட் நிறுவனம், வேல்ட் விசன் லங்கா, ரூம் டு ரீட் ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களில் ஆரம்பக் கல்வி, முன்பிள்ளை அபிவிருத்திக் கல்வி, எட்லஸ் முறை கற்பித்தல், சிறுவர் உரிமை, சிறுவர்நேயப் பாடசாலை, கட்டாயக்கல்வி, எழுத்தறிவு விருத்தி போன்ற துறைகளுக்கான வளவாளராகவும் செயற்பட்டுள்ளார்.

இதற்கு மேலாக நாட்டின் மாத்தளை, அநுராதபுரம், மாஹோ, குருணாகல், திருகோணமலை, கொழும்பு போன்ற பிரதேசங்களில் ஆரம்பக்கல்வி தொடர்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கியுள்ளார் இவர். 2005 ம் ஆண்டு தேசிய மட்டத்தில் சிறந்த அதிபருக்கான வித்தியா கீர்த்தி ஸ்ரீ விருதினையும், 2021 ம் ஆண்டு இலங்கை நாட்டின் மூன்றாவது அதி உயர் விருதான தேசபந்து விருதினையும் இவர் பெற்றுள்ளார். இவர் அமரர் சண்முகம் மீனாட்சி தம்பதியினரின் புதல்வராவார்.

தலவாக்கலை பி. கேதீஸ் ...✍

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# கைம்மாற்றுக் கடன்கள் நாட்டின் ஒதுக்குச் சொத்தல்ல

புதியதொரு ஆண்டு பிறந்திருக்கிறது. வழமைபோல இலங்கையர் அனைவருக்கும் சுபீட்சமான ஒரு ஆண்டாக இது அமையட்டும் என்று வாழ்த்த விரும்பினாலும் கூட 2021 விட்டுச் சென்ற விழுப்புண்கள் அவ்வாறு வாழ்த்துவது பொய்யான கூற்றாக அமைந்து விடுமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. காரணம் 2021 இல் நாடு சந்தித்த பொருளாதாரப் பேரிடர்கள் அதன் காரணமாக நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்ட இடையூறுகள் 2022 இலும் தொடர்ந்து செல்லும் சாத்தியங்களே அதிகம் தென்படுகின்றன.

கொவிட் பெருந்தொற்று நாட்டை வெகுவாகப் பாதித்திருந்த போதிலும் நாட்டின் இன்றைய பிரச்சினைகளுக்கு அது மட்டும் காரணமல்ல. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களே மிகப்பிரதான காரணமாக அமைந்திருப்பதாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். விவேகபூர்வமற்ற அரசியல் தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் கொள்கைச் சீர்திருத்தங்கள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு அதலபாதாளத்தில் தள்ளிவிடும் என்பதற்கு ஓர் பரிசோதனைக் கூடமாக இலங்கை அமையக்கூடும். கொவிட் பெருந்தொற்று உலகம் பூராகவும் பரவிய ஆரம்பகாலப்பகுதியில் உலக நாடுகள் அதற்கான தடுப்பூசியை ஏற்றுவதில் மும்முரமாக செயற்பட்ட காலப்பகுதியில் இலங்கை பாரம்பரிய முறையில் அதனைத் தீர்ப்பதாகக் கூறி பாணிகளை அறிமுகப்படுத்தி கங்கைகளில் மந்திரித்த பானைகளையும் விட்டது. அதனால் நோய்த்தொற்று தீவிரமாகப் பரவி பலரைப் பலிகொண்டபோது அலறியடித்துக்கொண்டு தடுப்பூசிகளைத் தேடி ஓடியது. ஆரம்பத்திலேயே தடுப்பூசிகளைப் பெற்றிருந்தால் இறப்புக்களை ஓரளவு தடுத்திருக்கலாம் என்ற அபிப்பிராயத்தை நாம் தட்டிக்கழிக்க முடியாது.

தேசிய பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்காக இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற நியாயப்பாட்டின் அடிப்படையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இலங்கையில் போதியளவு உற்பத்தி செய்யப்படாத அதேவேளை உடனடியாக உற்பத்தியைப் பெருக்க முடியாத உணவுப்பொருள்களின் இறக்குமதிகள் தடைசெய்யப்பட்டன. மஞ்சள், உளுந்து, பயறு போன்றனவும் இதில் உள்ளடங்கின. உடனடியாகவே அவற்றின் விலைகள் வானைத் தொட்டன. சுமார் 500 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ மஞ்சள் தூளின் விலை 10000 ரூபாவை எட்டியது. உளுந்து 2000 ரூபாவை எட்டியது. மனமகிழ்ந்த இலங்கை இவற்றின் உற்பத்தியாளருக்கு சிறந்த விலையைப் பெற்றுக் கொடுத்ததாக பெருமைப்பட்டுக்கொண்டது.

சாதாரண மக்கள் சாப்பிடும் வடையிலும் தோசையிலும் இட்லியிலும் உளுந்து காணாமல் போனது. ஒரு போதைப் பொருளைத் துரத்துவது போல மஞ்சள் கடத்தல்காரர்கள் துரத்தப்பட்டனர். பெருந்தொற்றைக்கருதி இலட்சக்கணக்கான லீற்றர் செயற்கைத் தொற்றுநீக்கித் திராவகங்கள் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட அதேவேளை, மிகச்சிறந்த இயற்கைத் தொற்று நீக்கியான மஞ்சளுக்கான தடை தொடர்ந்தும் செயற்படுகிறது.

நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் உணவுப்பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வெளியே சொல்லப்பட்ட நோக்கத்தோடு அத்தியாவசியப் பொருள்களின் விலைக் கட்டுப்பாடுகளை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. ஆனால் சந்தையில் குறித்த விலைகளில் அவற்றை பெற முடியாததால் அவற்றுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. இற்றைவரையில் பால்மாவுக்கும் எரிவாயுவுக்கும் ஏற்பட்ட தட்டுப்பாடு தொடர்கின்றது.

ஒரு கட்டத்தில் விதிக்கப்பட்டிருந்த விலைக்கட்டுப்பாடுகள் அனைத்தும் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் விலக்கிக் கொள்ளப்பட்ட போது அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்தன. அத்தோடு நாட்டின் எரிபொருள் விலைகளில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து 117 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒருலீற்றர் பெற்றோலின் விலை 177 ரூபாவாக அதிகரித்திருக்கிறது.

பெற்றோலிய விலை அதிகரிப்பு எல்லாப்பொருள்களின் விலைகளும் மேலும் அதிகரிக்க காரணமாகியுள்ளது. போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. மறுபுறம் இயற்கை விவசாயத்திற்கு மாறுகிறோம் என்று ஓரிரவில் இரசாயன உரங்கள் மற்றும் கிருமி நாசினிகளின் பயன்பாடு தடை செய்யப்பட்டது.

சந்தையில் மரக்கறிகள் உள்ளிட்ட உணவுப்பொருள்களின் நிரம்பல் சடுதியாக வீழ்ச்சியடைந்து இவற்றின் விலைகள் வானைத் தொட்டிருக்கின்றன. ஒரு கிலோ கத்தரிக்காய் 600 ரூபாவுக்கு சந்தையில் விற்கப்படுவதை இதற்கு முன்னர் நாம் கண்டதில்லை. இப்போதும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது என்று இலங்கை ஆனந்தமடைவது தெரிகிறது. ஆனால் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பது நாளுக்கு நாள் முடியாத காரியமாகி வருகிறது. முன்னர் பொருளாதார நெருக்கடிகளின் போது சம்பலும் சோறும் சாப்பிட்டாவது வாழ்க்கையை நடத்திய மக்கள் இப்போது அவற்றின் விலைகளும் அதிகரித்துவரும் நிலையில் வாழ்க்கையை கொண்டு நடத்தமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.



அரச செலவினங்களை ஈடுசெய்ய போதிய வருமானங்கள் அற்ற நிலையில் தொடர்ச்சியாக பெரும் அளவில் ரூபா அச்சிடப்பட்டு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டதுடன் வட்டிவீதங்கள் கீழ் மட்டத்தில் பேணப்பட்டன. அதன் விளைவாக உள்நாட்டில் ரூபாவின் பெறுமதி குறைவடைந்து விலைமட்டங்கள் தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது. அறிஞர்களின் எதிர்வு கூறல்களின்படி 2022இல் பணவீக்கம் 20 சதவீதத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மறுபுறம் ரூபாவின் நிரம்பல் அதிகரிப்பு அதன் டொலர் விலைகளில் தேய்வினை ஏற்படுத்தி இருக்கிறது.

டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி தேய்வடைந்த நிலையில் மத்திய வங்கி அதனை செயற்கையாக 203 ரூபா என்ற மட்டத்தில் பிடித்து வைத்திருக்கிறது. அந்த விலையில் டொலரின் நிரம்பலை விட அதன் கேள்வி மிக அதிகமாக இருப்பதால் டொலருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த டொலர் பற்றாக்குறையை ஈடுசெய்ய போதியளவு டொலர் கையிருப்பு மத்திய வங்கியிடம் இல்லை. இதனால் கள்ளச் சந்தையில் ஒரு டொலர் 240 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகிறது.

மத்திய வங்கி வணிக வங்கிகளிடம் வரும் டொலர்களையும் மத்திய வங்கிக்கு மாற்றுமாறு உத்தரவிட்டிருக்கிறது. அதுமட்டுமன்றி வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் உள்ள டொலர்களையும் ரூபாவுக்கு மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. செயற்கையான ஒரு நாணயமாற்று வீதத்தில் டொலர் விலைகளைப் பேணி வெளிநாட்டுத் துறையை முகாமை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை வெளிநாட்டு முதலீட்டாளரை நாட்டைவிட்டு துரத்தி விட்டிருக்கிறது.

குறிப்பாக இலங்கை அரசாங்கத்தின் பிணைமுறிகளில் முதலீடு செய்ய வெளிநாட்டவர்கள் தயக்கம் காட்டுவதால் இரண்டாம் தரச் சந்தையில் அந்த முறிகள் மிகக் குறைந்த விலைக்கு பரிமாறப்படுகின்றன. புதிதாக பிணைமுறிகளை விற்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது. புதிய முதலீட்டாளர்களை நாட்டுக்குள் கவரும் புறச்சூழல் நாட்டில் இப்போது இல்லை. மறுபுறம் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு பணம் அனுப்பும் இலங்கையர்கள் அதனையும் அனுப்பாமல் விடக்கூடிய புறச்சூழல் உருவாகியிருப்பதால் எதிர்காலத்தில் இலங்கையின் டொலர் உள்வருகை மிகவும் ஆபத்தான நிலைக்கு குறையக் கூடும்.

2021 டிசம்பரில் மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்து ஒதுக்குகள் 1.1 பில்லின் டொலராக வீழ்ச்சியடைந்தது. இது இலங்கையின் இரண்டுவார கால இறக்குமதிகளைச் செய்வதற்கே போதுமானதாக இருக்கும். ஆனால் வருடத்தின் இறுதிவாரத்தில் மத்திய வங்கி சீனாவிடம் இருந்து பெற்ற கைம்மாற்றுக்கடன் (SWAP) மூலம் இலங்கையின் ஒதுக்குகளை 3.1 பில்லியன் டொலர்களாக அதிகரித்து சாதனைபுரிந்து விட்டதாக அறிவித்தது.

மத்திய வங்கி வெளியிட்ட ஊடக அறிக்கையில் இலங்கையின் இறைமைக் கடன் தரமிடல் நிலையை கீழ் நோக்கி குறைத்த கடன் தரமிடல் நிறுவனங்களின் மூக்கில் ஒரு குத்தும் விட்டிருந்தது. ஆனால் உண்மையில் சீனாவின் கடனை டொலர் கையிருப்பாக மாற்ற முடியாது. காரணம் அது ஒரு கடன். அதனை சீனா தவிர்ந்த ஏனைய நாடுகளுடனான கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தவும் முடியாது. வெளிநாட்டுச் சொத்துகளுக்கான சர்வதேச நாணய நிதியின் வரைவிலக்கணங்களில் சீனாவிடம் இப்போது பெற்றிருப்பது போன்ற கைம்மாற்றுக் கடன்கள் நாட்டின் ஒதுக்குச் சொத்தாகக் கருதப்பட முடியாது. அதனால் சர்வதேச நியமங்களுக்கு அமையும் தரமிடல் நிறுவனங்கள் மத்திய வங்கியின் வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

இலங்கை உழைத்த வருமானங்களைக் கொண்டு ஒதுக்குகளைப் பேணினால் தரமிடலில் முன்னேற்றம் பற்றி யோசிக்கலாம் என அறிவித்திருக்கின்றன. ஆகவே உள்நாட்டில் செய்வது போல சண்டித்தனம் காட்டி குற்றம் சாட்டி சாதிக்கும் உத்தி சர்வதேச நிறுவனங்களிடம் எடுபடப் போவதில்லை. அது மட்டுமன்றி இப்போது அதிகரித்திருப்பதாகக் கூறப்படும் 3.1 பில்லியன் இலங்கையின் 2022 இற்கான அந்நியச் செலாவணித் தேவையுடன் ஒப்பிடுகையில் யானைப்பசிக்கு சோளப்பொரி அளவினது மாத்திரமேயாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவது பற்றி அரசல் புரலாக செய்திகள் அடிபடுகின்றன. ஏற்கனவே பல கொள்கைத் திட்டங்களை அமுல்படுத்தி அடிவாங்கியவுடன் ரிவர்ஸ் கியரில் சென்றது போல் சர்வதேச நாணய நிதியத்திடம் போகவே மாட்டோம் என்று அடம்பிடித்த இலங்கை அங்கு சென்றேயாக வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படலாம்.

இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் கடன் பெறுவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாக சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் (seal of approval) தேவை என்ற நிபந்தனை முன்வைக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. இல்லாது விட்டலும் கட்டாயமாக இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதை விட செலவு குறைந்த வழிகள் இலங்கைக்கு இல்லை. ஏற்கெனவே அந்நிறுவனத்திடம் சென்றிருக்கவேண்டிய காலம் கடந்து விட்டதாகக் கருதப்படும் நிலையில் சண்டித்தனம் காட்டி காலம் கடத்துவது இலங்கை மக்களுக்கு எவ்விதத்திலும் நன்மை தராது.

ஏற்கெனவே உணர்ச்சிவேகத்தில் எடுக்கப்பட்ட பிழையான கொள்கை மாற்றங்களை திருத்தி உண்மையை உணர்ந்து தேவையான சீர்திருத்தங்களை உரிய அறிஞர்களின் அறிவுரையோடு மேற்கொண்டு இலங்கையை ஒரு சந்தைப்பொருளாதாரமாக அங்கீகரித்து அதற்குரிய தராதரங்களை விருத்தி செய்து முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீளக்கட்டியமைக்க முடிந்தால் மாத்திரமே இலங்கைப்பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைவதைத் தவிர்க்க முடியும். ஆயினும் பொருளாதாரம் தரையிறங்குவதைத் தவிர்க்க முடியாது.

ஆனால் அது ஒரு மென்மையான தரையிறக்கமாக (soft landing) மாற்றப்படலாம். மாறாக இப்போதைய நிலையில் இலங்கை தொடர்ந்த பயணிக்குமாயின் விபத்து நிலையிலேயே (crash landing) தரையிறக்கத்தை சந்திக்க நேரிடும். அதிலிருந்து மீள்வது மிகவும் வலிமிக்க ஒன்றாகவே அமையும். எனவே தான் பிறந்திருக்கும் 2022இல் சகல சௌபாக்கியத்துடன் வாழுங்கள் என வாழ்த்த முடியாதுள்ளது.



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# ரஷ்ய உக்ரைன் விவகாரமும் புட்டினது தந்திரோபாயமும்

உலக அரசியல் யுரேசிய பக்கம் திரும்பியுள்ளதாகவே தெரிகிறது. அதிலும் குறிப்பாக அமெரிக்க தலைமையிலான நேட்டோ அரசுகளுக்கும் ரஷ்யாவுக்குமான முறுகல் மற்றும் ரஷ்ய உக்ரைன் விவகாரம் அதிக அரசியல் முக்கியத்துவத்தை ஏற்படுத்தி வருகிறது. ரஷ்ய ஜனாதிபதி புட்டினது நடவடிக்கைகள் உக்ரைனினுக்கு எதிரான போரை நோக்கியதாக உள்ளது எனவும் அதற்கான விலையை ரஷ்யா கொடுக்க வேண்டிவரும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி பைடனது எச்சரிக்கையையும் கடந்து அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. நேட்டோ தலைவர்கள் மேற்கொண்டுள்ள இராஜதந்திர நகர்வுகள் எல்லாவற்றையும் கடந்து ரஷ்ய ஜனாதிபதியின் தந்திரோபாய நடவடிக்கைகள் உலகளாவிய அரசியலில் தனித்துவமானதாக அமைந்துள்ளன. இக்கட்டுரையும் ரஷ்ய, உக்ரைன் அரசியலில் புட்டினது தந்திரோபாயங்களையும் அதன் விளைவுகளையும் தேடுவதாக அமையவுள்ளது.

ரஷ்யா கடந்த பல ஆண்டுகளாக உக்ரைனின் விடயத்தில் தனது பிராந்திய அரசியல் பலத்தை உறுதிப்படுத்த அதிகம் பிரயத்தனம் எடுப்பதனைக் காணமுடிகிறது. புட்டின் ரஷ்யாவின் இராணுவ பலத்தை ரஷ்யாவின் எல்லைகளையும் யுரேசியாவின் எல்லைகளையும் நோக்கியதாக வடிவமைக்கத் திட்டமிடுவதனை அவதானிக்க முடிகிறது. ஏறக்குறைய உக்ரைனின் எல்லை நோக்கி ஒரு இலட்சத்திற்கு மேலான படைகளை நகர்த்தியிருப்பதுடன் ஏவுகணைகளையும் விமான படைகளையும் மற்றும் ஆயுத தளபாடங்களையும் அவ்எல்லை நெடுகிலும் குவித்துள்ளதாக நேட்டோ நாடுகள் செய்மதிப் படங்கள் மூலம் உறுதிப்படுத்தியுள்ளன. இத்தகைய படைக்குவிப்பை அடுத்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகள் இராஜதந்திர உரையாடலை ரஷ்யாவுடன் நடத்த திட்டமிட்டதுடன், முதல் கட்டமாக அமெரிக்க ஜனாதிபதி காணொளி மூலமாக உரையாடலை நிகழ்த்தியுள்ளார். அதேகாலப்பகுதியில் நேட்டோ நாடுகளும் உக்ரைனும் இராணுவ ஒத்திகையை மேற்கொண்டதுடன் நேட்டோவின் இராணுவம் உக்ரைனுடன் இணைந்து போர் புரிய தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளன. குறிப்பாக நேட்டோவின் வரைபிலுள்ள சரத்தொன்றின் பிரகாரம் நேட்டோ நாடொன்றின் மீது வேறு ஒரு நாட்டினால் தாக்குதல் நிகழ்த்தப்பட்டாலோ அல்லது பாரிய இயற்கை அழிவு ஏற்பட்டாலோ அந்த நாட்டினை பாதுகாக்கும் பொறுப்பு அனைத்து நேட்டோ நாடுகளுக்கும் உரித்தானது என வரையறுத்துள்ளது. அந்த சரத்தின் அடிப்படையில் உக்ரைனின் மீதான தாக்குதல் எதிர்த்து ரஷ்யா மீது போர் செய்ய அனைத்து நேட்டோ நாடுகளுக்கும் உரிமையுண்டு. இவற்றை கையாளும் நகர்வையே ரஷ்ய தரப்பு ஆரம்பித்துள்ளது.

முதலாவது, இத்தகைய நெருக்கடியை கையாளும் விதத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தலைமையிலான வெளியுறவு அமைச்சு வெளியிட்ட எட்டு அம்ச வரைபில் மூன்று பிரதான கோரிக்கையை அதிகம் முதன்மைப்படுத்தி உக்ரைனின் நெருக்கடியை தவிர்க்க வேண்டுமாயின் அத்தகைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென 17 டிசம்பர் (2021) அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அத்தகைய கோரிக்கைகளாக ஒன்று, நேட்டோவின் உறுப்புரிமையிலிருந்து உக்ரைனின் விலக்கப்பட வேண்டும். இரண்டு, கிழக்கு ஐரோப்பாவிலிருந்து நேட்டோவின் படைகளும் ஆயுத தளபாடங்களும் விலக்கிக்கொள்ள வேண்டும். மூன்று, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் நேட்டோவுக்குமான போர்ப் பயிற்சிகள் மற்றும் ஒத்திகைகள் முற்றாக கைவிடப்பட வேண்டுமென ரஷ்ய தரப்பு தெரிவித்துள்ளது.



இரண்டாவது, உக்ரைன் விடயத்தைப் பொறுத்து, டிசம்பர் 21 (2021) அன்று ஜேர்மன் சான்சிலர் ஓலாப் ஸ்கோல்ஸ் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனுடன் விளாடிமிர் புட்டின் உரையாடலை நிகழ்த்தியதாக கிரெம்ளின் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. கிரெம்ளின் வெளியிட்ட அறிக்கையின் படி புடின், 'யூரேசிய விண்வெளி முழுவதும் சமமான மற்றும் பிரிக்க முடியாத பாதுகாப்பை' எதிர்பார்க்கிறது என்பதை உறுதிப்படுத்த முயன்றுள்ளது. அந்த உரையாடலில் அமெரிக்கா மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்தி ஐரோப்பாவை நம்பிக்கைக்குரிய நாடுகளாக அடையாளப்படுத்தியதை காணமுடிந்தது. அதாவது அமெரிக்காவுடன் நீண்டகால சட்டப்பூர்வமாக பிணைக்கப்பட்ட உத்தரவாதங்களை கூட நம்ப முடியாது. காரணம் அமெரிக்கா அனைத்து சர்வதேச ஒப்பந்தங்களிலிருந்தும் எளிதாக விலகுகிறது. மற்றொன்று அவர்களுக்கு ஆர்வமற்றதாகின்றது என அமெரிக்காவின் போக்கை கடுமையாக சாடியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதே நேரம் யூரேசியா பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை கோடிகாட்டியதுடன் ஐரோப்பிய நாடுகளின் முக்கியத்துவத்தையும் முதன்மைப்படுத்தியிருந்ததை அவ்வறிக்கையில் காணமுடிகிறது. இது ஐரோப்பிய நாடுகளினை தனித்துவமாக கையாளும் பொறிமுறையை பின்பற்றுவதாகவே தெரிகிறது. அதே நேரம் அமெரிக்காவை நேட்டோ கூட்டிலிருந்து பிளவுபடுத்தி தனித்து கையாள முனையும் போக்காகவே தெரிகிறது.

மூன்றாவது, ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் உத்திகளில் பிரதான அம்சமாக யுரேசியாவின் நிலப்பரப்பையும் அதன் அண்டவெளியையும் கிழக்கு ஐரோப்பிய நிலப்பரப்பின் மூலம் பாதுகாப்பதற்கான முனைப்புக்களை தனது உரையாடலில் முதன்மைப்படுத்தி வருகிறது. அத்தகைய முனைப்பு நேட்டோ தரப்பு குறிப்பிடுவது போல் முன்னாள் சோவியத் யூனியனின் விஸ்தரிப்பை நோக்கிய அரசியலை புட்டின் முன்னெடுக்க முனைகின்றார் என்ற குற்றச்சாட்டுக்கு ஒப்பானதாக அமைந்தாலும் யுரேசியா பாதுகாப்பான வலயமாக இருத்தலை உறுதிப்படுத்த முயலுகிறது. காரணம், யுரேசியாவின் பாதுகாப்பே ரஷ்யாவின் பாதுகாப்பு ஆகும். அதனாலேயே கிழக்கு ஐரோப்பா சார்ந்து தடுப்பு அரணை நேட்டோவின் பிடியிலிருந்து விலக்கிக்கொள்ள முயலுகிறது.

நான்காவது, ரஷ்ய ஆட்சியாளர்கள் யுரேசியா பொருளாதாரத்தையும், யுரேசிய இராணுவத்தையும் கையாளும் உத்தியோடு உக்ரைனை நோக்குகின்ற நிலை வளர்ச்சியடைந்துள்ளது. அதாவது ரஷ்யாவால் உருவாக்கப்பட்டுள்ள யுரேசியா கட்டமைப்பு ஆப்கானிஸ்தான் எல்லை வரை விரிவடைந்துள்ளது. இதில் உக்ரைன் ரஷ்யாவுடன் ஒரு போரை எதிர்கொள்ளுமாயின் யுரேசியாவின் இருப்பு மட்டுமன்றி ரஷ்யாவின் யுரேசிய உறவும் நெருக்கடிக்குள்ளாகும். எனவே தான் யுரேசியாவின் இருப்பை பேணுவது என்பது உக்ரைனுடனான போரை வெற்றிகொள்வது அல்லது தவிர்ப்பது என்ற எடுகோளுடன் விளாடிமிர் புட்டின் நகருகின்றார். இதனால் ஏற்படக்கூடிய நெருக்கடியில் உக்ரைனை மட்டுமன்றி நேட்டோவையும் அதன் விஸ்தரிப்பையும் தடுத்து நிறுத்துவதற்கான ஓர் இலக்காகவே உக்ரைன் விவகாரத்தை புடின் கருதுகின்றார்.

ஆறாவது, ஏறக்குறைய 12 நாடுகளுடன் ஆரம்பித்த நேட்டோ அமைப்பானது 52 நாடுகளை உள்ளடக்கிய மிகப்பலமான ஓர் இராணுவ கூட்டாக விளங்குகின்றது. யுரேசியாவையும், கிழக்கு ஐரோப்பாவையும் நோக்கி நேட்டோவின் விஸ்தரிப்பு கிரெம்ளின் குறிப்பிடுவது போல் முன்னாள் சோவியத் யூனியன் கால ஆக்கிரமிப்பு போன்றே அமைந்துள்ளது. இதில் ரஷ்யாவின் இருப்பு மட்டுமன்றி நேட்டோவின் விஸ்தரிப்பின் முடிவையும் புட்டினது நடவடிக்கை உருவாக்க முனைகின்றது. முழுமையாக நேட்டோவின் விஸ்தரிப்பு மத்திய ஆசிய குடியரசுகளை நோக்கி நிகழுமாயின் ரஷ்யாவின் பொருளாதாரம் குறிப்பாக எண்ணெய் ஏற்றுமதி, வர்த்தகம் மற்றும் மேற்கு ஆசியா நாடுகளுடனான உறவிலும் பாதிப்பை ஏற்படுத்துமென ரஷ்யா கருதுகின்றது. அதானாலேயே நேட்டோவின் விஸ்தரிப்புக்களை முடிவுக்கு கொண்டுவரும் நோக்குடன் கோரிக்கைகளை கிரெம்ளின் முன்வைத்துள்ளது. நேட்டோவின் விஸ்தரிப்பை தடுத்து நிறுத்த இயலாத சூழல் ஏற்படின் ரஷ்யா யுரேசியாவிலும் மத்திய ஆசியாவிலும் கொண்டிருக்கும் புவிசார் அரசியல் உறவு காலாவதியாகிவிடும்.

எனவே, ரஷ்ய ஜனாதிபதி புடின் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட படைகளையும் ஆயுத தளபாடங்களையும் ரஷ்ய உக்ரைன் எல்லையோரம் நகர்த்திவிட்டு நேட்டோவுடன் வலுவான இராஜதந்திர போரை நிகழ்த்துகிறார்.. கிரெம்ளின் குறிப்பிடுவது போல் ரஷ்யா முன்வைத்துள்ள எட்டு அம்சக்கோரிக்கைகளின் நலன்களைப் புறக்கணிப்பது 1962 கியூபா ஏவுகணை நெருக்கடியைப் போன்ற ஒரு இராணுவ பதிலுக்கு வழிவகுக்கும் என்பதற்கு அமைவாக விளாடிமிர் புட்டினது நடவடிக்கைகள் அமைகின்றன.

# பூக்காத பூந்தோட்டத்தின் மீது வெளிச்சமிட்ட வெளியீட்டு விழா

நீண்ட காலத்திற்குப் பிறகு கடந்த பௌர்ணமி தினம் (18.12.2021) மயங்கும் அந்தி வேளை (5:30 அளவில்) தமிழ்ப் புத்தகமொன்றின் வெளியீட்டு விழா, தலைநகர் கொழும்பு கொட்டாஞ்சேவையிலுள்ள நிவ் வைஷ்ணவி விஹார் மண்டபத்தில், வெகுசிறப்பாக மண்டபம் முழுக்க ரசிகர்களும் கலைஞர்களும் கூடியிருக்க நடைபெற்றதில், வருகை தந்தோர் வற்றாத மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இலங்கைத் தமிழ் கலைஞர் சங்கமும், சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜ் அமைப்பும் ஒன்றிணைந்து நடத்திய பிரஸ்தாப வெளியீட்டு விழாவில், கலைமாமணி பொன். பத்மநாதன் எழுதிய பத்து சிறுகதைகளை உள்ளடக்கிய 'பூக்கள் பூக்காத பூந்தோட்டம்' என்ற கதைநூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து வழமையான நிகழ்ச்சிகளுடன் (நூல் அறிமுக உரை, நயவுரை என்பன) கலகலப்பாக நடந்த இவ்வெளியீட்டு விழாவுக்கு, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தலைமை தாங்கினார். யார் இந்த கலைமாமணி பொன். பத்மநாதன்?

பாடசாலையில் படிப்பிக்கும் ஓர் ஆசிரியர் எழுத்தாளராக – பேச்சாளராக வரமுடியும். ஒரு தள்ளுவண்டி செலுத்தும் ஒரு தொழிலாளி மூடை தூக்க முடியும், பொதி சுமக்க முடியும். ஒரு வர்த்தகர் அதுவும் நகை கடை வர்த்தகத்தில் தங்க ஆபரணங்களுடன் புழங்கும் ஒருவர், ஓர் எழுத்தாளனாக வரமுடியுமா? அதுவும் ஒரு சிறுகதை எழுத்தாளனாக...

'முடியும்' என நிரூபித்து, நம் மத்தியில் நெஞ்சை நிமிர்த்தி உலா வருகிறார் ஒருவர். அவர் தான்... சமாதான நீதவானும் பரோபகாரியுமான கலைமாமணி பொன். பத்மநாதன். இவர் கடந்த மூன்று தசாப்தகாலமாக தலைநகர் கொழும்பில் இயல் இசை நாடகம் என அலைந்து, சமயம் சமூகம் அரசியல் எனப் பற்பல துறைகளில் தொட்டது துலங்கும் வண்ணம் துடிப்புடன் செயற்பட்டு வரும் சாதனையாளர். 'அட... நம்ம பத்மநாதன் அண்ணனா...? என்போருக்கு, 'சாட்சாத்... அவரே தான்' என்பதுவே பதிலாகும்.

பூக்கள் பூத்தாலே அது பூந்தோட்டமாகும்... இங்கு பூக்கள் பூக்காத பூந்தோட்டமா? அது என்ன தோட்டம்? என்றறியும் ஆவலில் தோட்டத்தில் நுழைகிறேன்.




ஆம்... நூலைத் தொட்டு, முகப் பட்டையைத் திறக்கிறேன். நூலாசிரியரை எமக்களித்த பெறற்கரிய பெற்றோரின் (தந்தை: அமரர். எஸ். வி. பொன்னையா – தாய் அமரர் திருமதி. பொ. அமராவதி) அமைதியான வதனங்கள் வரவேற்க, பெற்ற மகனின் சமர்ப்பண வரிகள் சந்தன மணங்கமழ்கின்றன.

கலைமாமணியின் கன்னி முயற்சியான இச்சிறுகதை தொகுப்பு பத்து சிறுகதைகளை தாங்கி வந்துள்ளது.

ஆசியுரை – வாழ்த்துரை – முன்னுரை – அணிந்துரை – என்னுரை கடந்து, கதைகளை ஒரே மூச்சில் படித்திடலாம்.

' அளவில் 88 பக்கங்களைக் கொண்ட ஒரு சிறிய நூல் என்றாலும், கதையாசிரியரின் அனுபவங்களை அவை பேசுகின்றன. கதைகள் தரமானவையா? என்ற விமர்சனப் பார்வை இந்நூலைப் பொறுத்தவரை தேவையற்றது என்பேன். ஏனெனில் நம் கலைமாமணியின் கன்னிப் படைப்பு இது என்பதால், படிப்போரின் விருப்பத்திற்கு – ரசனைக்கு விட்டு விடலாம்.

ஒருவருக்குப் பிடிக்கும் கதை, மற்றவருக்குப் பிடிக்காது. ரசனை உணர்வு ஆளுக்கு ஆள் மாறுபட்டிருக்கும். வேறுபட்டிருக்கும் என்பதால், படிப்போர் சுதந்திரமாக சிந்திக்க இடம் விடலாம். கன்னி முயற்சி என்பதால், நாம் நூலாசிரியரை உற்சாகப்படுத்தினால், நமக்கு எதிர்காலத்தில் நல்லதொரு சிறுகதை எழுத்தாளன் கிடைப்பான் என்ற நம்பிக்கையைத் தருகிறது ஒரு கதை. ஆம் நூலில் இடம்பெற்ற பத்து கதைகளுள் ஏழாவது கதையாக இடம்பெற்றிருக்கும் 'மனித நேயம்' என்பதாகும்.

'மனிதநேயம்' ஒரு தரமான சிறுகதை சமுதாயம் சிந்திக்க வேண்டிய ஆரோக்கியமான ஒரு கருத்தினை அது சொல்கிறது. கலைமாமணி பொன். பத்மநாதனுள்ளே ஒரு சிறுகதை எழுத்தாளன் ஒளிந்திருப்பதை மேற்படி 'மனிதநேயம்' சொல்லாமற் சொல்கிறது. அது போலவே ஏனைய சிறுகதைகளும் மற்றவர்களுக்குப் பிடிக்கலாம். பிடிக்காமலும் போகலாம்.

சிலருக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக, சகோதரர் பத்மநாதன் எழுதாமல் விடலாமா? எழுத எழுத தரம் தானாக வந்து ஒட்டிக் கொள்ளும். செந்தமிழும் நாப்பழக்கம், சித்திரமும் கைப்பழக்கம் என்று தமிழன்னை நமக்கு அறிவுறித்தியுள்ளாளே! அதனால் சமாதான நீதவானாகிய கதாசிரியர் எதிர்காலத்தில் மென்மேலும் எழுதி, பல்வேறு படைப்புக்களைத் தமிழுக்குத் தரும்படி வேண்டுவோம். ஏன் தெரியுமா? கம்யூனிஷ பிதாமகன் லெனின் சொன்னான், 'எழுதும் ஆற்றல் உள்ளவர்கள் எழுதாமல் விட்டால், அதுவொரு சமுதாயத்தையே கொலை செய்ததற்கு சமன்' என்று.

இந்த பழிபாவம் நம் பத்மநாதனுக்கு வரவேண்டுமா? அதனால் அவரை எழுதும் என்றும் உற்சாக மூட்டுவோம்.

கலாபூஷணம்
எஸ். ஐ. நாகூர் கனி ...


சதொச

விலைமனுக்கோரல்

வர்த்தக அமைச்சு

## லங்கா சதொச விற்பனையகங்களுக்கு பாதுகாப்பு சேவை வழங்கல்

ஓர் ஆண்டு காலத்திற்காக லங்கா சதொச விற்பனையகங்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகளை வழங்குவதற்காக, லங்கா சதொச லிமிடட் தலைவர் மூலம் பாதுகாப்பு சேவை வழங்குனர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள் மற்றும் தேவைகள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களிடம் இருந்து அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த விலைமனு ஆவணங்களை, **ரூபா 2,000.00 தொகையை (மீளளிக்கப்படாத) செலுத்தி 2022 ஜனவரி 03 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜனவரி 24 ஆம் திகதி** வரையான காலத்தில் இலக்கம் 27, சதொச செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2022.01.12 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் இடம்பெறும்.

முன்வைக்கப்படும் விலைமனுக்கள் **2022 ஜனவரி 24 ஆம் திகதி பி.ப. 03.00க்கு அல்லது அதற்கு முன்னர்** லங்கா சதொச லிமிடட், இலக்கம் 27, சதொச செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச விற்பனையகங்களுக்கு பாதுகாப்பு சேவை வழங்கல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது **2022 ஜனவரி 24 ஆம் திகதி மு.ப. 03.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். **வெற்றிகரமான விலைமனுதாரர்கள்** மூலம் (பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர்த்து) பதிவுக் கட்டணமாக **ரூபா 5,000/- தொகை மற்றும் 8% வட் தொகையை (மீளளிக்கப்படாத)** செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்குளுக்கு அழையுங்கள்.
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, பெறுகை (LSL) 070 1560428

கேள்விமனு / ஒப்பந்தம் வழங்குவது தொடர்பான இறுதி முடிவு, **லங்கா சதொச லிமிடெட் தலைவர்** வசமானதாகும்.

தலைவர், லங்கா சதொச லிமிடட்
இல.27, CWE பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

**பாதுகாப்பு அமைச்சு**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

## விலைமனுக்கோரல்

**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் முன்மொழியப்பட்ட செவனகள நுகேகலயாய எடிசன் ஹில் இன் தெற்கு வளாகத்தில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்தின் வடிவமைப்பு கட்டுமானப் பணி**

**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE/ 2449/2021**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தலைமையக கட்டிடத்தில் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்தினை வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்திற்காக முன்மொழியப்பட்ட செவனகள நுகேகலயாய எடிசன் ஹில் இன் தெற்கு வளாகத்தில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்தின் வடிவமைப்பு பணிக்கு தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.01.03** ஆம் திகதியிலிருந்து **2022.02.09** ஆம் திகதி வரை **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.5,000/-** கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்குறிப்பட்டுள்ள முகவரியில் **2022.01.03 முதல் 2022.02.09** ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை** சரிபார்க்கலாம் **(தொலைபேசி 0710219449 / 0710219384 தொலைநகல் 011-2632430)**
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. **2022.02.10 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), இரத்மலான ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 0710219449 / 0710219384 தொலைநகல் 011-2632430,** மற்றும் **விலைமனுக் கோரலில் www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம்).

**தவிசாளர்**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**இரத்மலான, இலங்கை.**

நீதி அமைச்சு

**சத்தியப் பிரமாண மொழிபெயர்பாளர் பரீட்சை – 202/22**

**(சிங்களம்/ஆங்கிலம், தமிழ்/ஆங்கிலம், சிங்களம்/தமிழ்)**

2021 மார்ச் 31 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர் பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சை 2022.01.15ஆம் திகதி கொழும்பு - 10, ஒல்கொட் மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. உரிய பரீட்சைக்குத் தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் www.moj.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு 0112446185 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர்**
**நீதி அமைச்சு**
**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,**
**கொழும்பு - 12**


## சர்வதேச நாணய நிதியத்திடம்...

*(06ஆம் பக்கத் தொடர்)*

சர்வதேச நாணய நிதியத்திடம் உதவியைப் பெறுவதாயின் பொதுச் செலவுகளைக் குறைத்தல், நஷ்டமடையும் நிறுவனங்களைத் தனியார்மயமாக்குதல் உள்ளிட்ட சில சிக்கலான விடயங்கள் முன்வைக்கப்படுவது என்பது இரகசியமில்லை. இருந்தபோதும் அவர்களால் விதிக்கப்படக் கூடிய நிபந்தனைகள் தற்போதைய அரசாங்கத்தின் அரசியல் உறுதிமொழிகளுடன் பொருந்தாது.

எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார உறுதியற்ற தன்மையிலிருந்து வெளியேற வேண்டுமானால், நாடு அவசர பொருளாதார சீர்திருத்தங்கள் தேவை என்பதை ஒவ்வொரு பொருளாதார நிபுணரும் ஒப்புக் கொள்வார்கள்.

எதுவாக இருந்தாலும் நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையின் காரணமாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்டவற்றின் விலையில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நாளுக்கு நாள் விலைவாசி அதிகரித்து வருவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். டொலர் பற்றாக்குறை தொடர்ந்தால் இந்த நிலைமை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கலாம் என அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்களே தெரிவித்துள்ளனர். இந்த நிலைமையை மாற்ற அரசாங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறான நிலையில், அந்நிய செலாவணிக் கையிருப்பு 1.5 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 3.1 பில்லியன் அமெரிக்க டொலாக அதிகரித்துள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறியுள்ளார். இருந்தபோதும் இத்தொகை எவ்வாறு கிடைத்தது என்பது வெளிப்படுத்தப்படவில்லையென விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.


# அறிவித்தல்


## பஹ்ரைனில் காலமான திரு. கருப்பையா நாகரத்தினம்

இலங்கைப் பிரஜையான திரு. கருப்பையா நாகரத்தினம் அவர்கள் கடந்த 2021.08.01 அன்று பஹ்ரைனில் காலமானதாக பஹ்ரைனில் உள்ள இலங்கைத் தூதரகம் வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் பிரிவிற்கு அறிவித்துள்ளது.

**காலமானவரின் தகவல்கள் பின்வருமாறு :**

**பெயர் : திரு. கருப்பையா நாகரத்தினம்**

**தே.அ.அ.இல. 572130681V மற்றும் கடவுச்சீட்டு இல. L0931447 (காலாவதியானது)**



அமரர் திரு. கருப்பையா நாகரத்தினம் அவர்களின் இறுதிக்கிரியைகளைச் செய்வதற்கான உதவிகளை பெறுவதற்காக, இறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் அல்லது அவரைத் தெரிந்தவர்களை கண்டுபிடிப்பதற்கு இலங்கை வெளிநாட்டமைச்சு, பொதுமக்களின் உதவியை கோரியுள்ளது.

இறந்தவரின் தேசிய அடையாள அட்டையில் 60/01, பழைய பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தற்போது இம்முகவரியில் இறந்தவரின் உறவினர்கள் எவரும் வதியவில்லை என அறியக்கிடைக்கின்றது.

வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் பிரிவினை பின்வரும் வழிகளில் தொடர்பு கொள்ளமுடியும்,

- **தொலைபேசி இலக்கங்கள்** - **011-2338836 / 011-7711163 / 011-2323015**
- **மின்னஞ்சல் முகவரி** - **consular@mfa.gov.lk**
- **தபால் முகவரி - கொன்சியூலர் பிரிவு, வெளிநாட்டு அமைச்சு, 2 ஆம் மாடி, செலிங்கோ கட்டிடம், ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு-01**


CBL
Tiara
நாவிற்கு இனிய
புதுச் சுவையில்
புதிய பொலிவுடன் புதிய சுவையில் வரும் டியாரா கேக்
சாப்பிடும் ஒவ்வொரு முறையும் அதிகமாய் சுவைத்திடும்.
Tiara
VANILLA
SPONGE
LAYER CAKE
310 g.NET
Tiara
CHOCOLATE
SPONGE
LAYER CAKE
Tiara
Strawberry
SWISS ROLL
200 g.NET
NEW AND
IMPROVED
TIARA CAKES
CBL
Group

வாரமஞ்சரி BUDGET adz It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845




## மக்கள் மீது முழுமையான சுமையை சுமத்த...

(06ஆம் பக்கத் தொடர்)

அமைச்சரவையில் ஏற்றுக் கொண்டு விட்டு வெளியே வந்து அதனை விமர்சிக்கின்றனர்.

வெளியே காண்பிக்கும் எதிர்ப்பினை அமைச்சரவையில் காண்பித்திருந்தால் இது நிறைவேற்றப்பட்டிருக்காது. இரு தரப்புப் பிரச்சினைகள் சிலவும் காணப்படுகின்றன. பசளை விவகாரத்தை எடுத்துக் கொண்டால், எந்த தவறான முடிவு எடுக்கப்பட்டாலும், அது சீனாவுடன் நாம் கொண்டிருந்த நற்பெயரை ஓரளவு பாதித்துள்ளது. இந்த இருதரப்பு அல்லது சர்வதேச ஒப்பந்தங்களின்படி, 40 சதவீத பங்குகளை விற்க எங்களிடமிருந்து ஒரு ஒப்பந்தமும் கோரிக்கையும் இருந்திருக்கும்.

இந்த அமெரிக்க நிறுவனம் பங்குகளை வாங்கியது மற்றும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. அமைச்சரவை ஒப்புதல் அளித்தால், மூன்று அமைச்சர்கள் அதற்கு எதிராக இருப்பதால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாது என்று நீங்கள் திரும்பிச் சென்று ஒரு பன்னாட்டு நிறுவனத்திடம் கூற முடியாது. இது சிறுபிள்ளைகளின் விளையாட்டு அல்ல. நிதியமைச்சர் கூட இதைச் செய்ய விரும்புகிறோம் என்று கூறியிருக்கலாம், ஆனால் அமைச்சரவை இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

முக்கியமான அமைச்சரவைக் கூட்டங்களில் சில அமைச்சர்கள் இந்த ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளித்து விட்டு வெளியே வந்து அதை எதிர்ப்பது என்பது மிகவும் தந்திரமான சூழ்நிலையாகும்.

பகிரங்கமாக ஏலங்களைக் கோரிவிட்டு பின்னர் வழங்க முடியாது என இரத்துச் செய்ய முடியாது.

உர விவகாரம் இதற்கு சிறந்த உதாரணமாகும். இது அரசாங்கங்களுக்கு இடையிலான சரக்குப் போக்குவரத்து அல்ல. சீன ஏற்றுமதிக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமை குறித்து இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியடையவில்லை.

**கே: எரிவாயு சிலிண்டர் விவகாரம் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட நிபுணர்கள் குழு தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தது. இந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?**

பதில்: இதனைச் செய்ய முடியும் என நான் நம்புகின்றேன். அது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒரு நிபுணர் குழு என்பதுடன், எரிவாயு சிலிண்டர் வெடிப்புகளுக்கான காரணங்கள் என்ன என்பதை அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட எரிவாயுத் தொகுதி தொழில்நுட்பத் தரத்துக்கு இல்லை என்பதால் நிராகரிக்கப்பட்டது. அது மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலை. அந்த வெடிப்புகளால் ஒரு மரணமும் ஏற்பட்டது. நாங்கள் சற்று தாமதமாகி விட்டதாகத் தெரிகிறது.

கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நினைக்கிறேன். அது அரசாங்க நிறுவனமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், எரிவாயு சிலிண்டர்களில் எரிவாயுக் கலவையில் ஏற்படும் இந்த மாற்றங்களுக்கு யாராவது பொறுப்பேற்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

**கே: மக்கள் கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், எரிபொருள் விலையை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்திற்கு எதிர்க்கட்சியினரும் மக்களும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். உங்கள் கருத்து என்ன?**

பதில்: போக்குவரத்து அமைச்சு என்ற வகையில் அண்மைய எரிபொருள் விலையேற்றத்தினால் நாமும் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளோம். இது மற்ற எல்லாத் துறைகளையும் பாதிக்கலாம், ஆனால் அவை மிகக் குறைந்த வீதத்தை குறிப்பாக பெரும்பாலான பகுதிகளை பாதிக்கும் டீசல் மீது சென்றுள்ளதாகத் தெரிகிறது.

இந்த நேரத்தில் நாம் எதிர்கொள்ள வேண்டிய இரண்டு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று உலக சந்தையில் எண்ணெய் விலை மற்றொன்று டொலருக்கு நாம் கொடுக்க வேண்டிய ரூபாவின் பெறுமதி. இது அனைத்தையும் பாதிக்கிறது. ஒரு நெருக்கடியான சூழ்நிலை உள்ளது, ஆனால் நாம் அதை சமாளிக்க வேண்டியிருக்கும். குறிப்பாக போக்குவரத்துத் துறையில் பயணிகள் மீது முழு சுமையையும் சுமத்த நாங்கள் திட்டமிடவில்லை.

எரிபொருள் விலை உயர்வு மற்றும் டொலர் ஏற்ற இறக்கம் காரணமாக உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பு ஆகியவையும் போக்குவரத்துத் துறை எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன.

உண்மையில், இதைத்தான் நாங்கள் தீர்க்க முயற்சிக்கிறோம். பஸ் கட்டணத்தை குறைந்தபட்ச மட்டத்தில் இருந்து உயர்த்தும் நோக்கத்துடன் தனியார் பஸ் நடத்துனர்களுக்கு ஏதாவது சலுகை வழங்குவது குறித்து தனியார் பஸ் சங்கங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள் மற்றும் நிதி அமைச்சகத்துடன் கலந்துரையாடுவோம். இன்னும் சில நாட்களில் ஒருமித்த கருத்துக்கு வர முடியும் என்று நம்புகிறேன்.



# கேக் வகைகளை அடுத்த நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் மீள் அறிமுகமாகும் டியாரா கேக்

2004 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது முதல் தேசத்துக்கு தரமான கேக் வகைகளை தயாரித்து வழங்கி வரும் டியாரா கேக், குடும்பங்களின் இனிமையான தருணங்களை என்றும் மறக்காமல் பேண ஏதுவாக அமைந்துள்ளது. நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு, உயர் தர நிர்ணயங்களுக்கமைய உற்பத்தி செய்யப்படுவதுடன், சிறந்த சேர்மானங்களைக் கொண்டமைந்துள்ளது. நாட்டின் கேக் உற்பத்தித் துறையில் புரட்சியை ஏற்படுத்தி, அதிகளவு விரும்பப்படும் கேக் வர்த்தக நாமமாகவும் அமைந்துள்ளது.




டியாரா கேக், தற்போது புதிய சுவையில், கவர்ச்சிகரமான பொதியில், சந்தையில் மீள அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதிகரித்துச் செல்லும் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில், சிபிஎல் ∴புட்ஸ் இன்டர்நஷனல் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்படும் டியாரா கேக், அண்மையில் தனது வர்த்தக நாமத்தை பெருமையுடன் சந்தையில் மீள அறிமுகம் செய்திருந்தது.

டியாரா கேக் வகைகளின் அதிகளவு நேசிக்கப்படும் சுவையானது, மேலும் சிறந்த தரத்தையும், சுவையையும் உறுதி செய்வதுடன், சிறந்த நறுமணம் மற்றும் ஈரப்பதனையும் கொண்டுள்ளதால், வாடிக்கையாளர்களை மேலும் நாடச் செய்வதாக அமைந்துள்ளது. தனது தயாரிப்பு செயன்முறையில் டியாரா ஒப்பற்ற சுவையை தக்க வைத்துக் கொள்வதற்காக புதிய முட்டைகளை மாத்திரம் பயன்படுத்துகின்றது. நாட்டின் மாபெரும் முட்டை பயன்பாட்டாளராக எமது நிறுவனம் திகழ்வதுடன், சுவைத்திடும் ஒவ்வொரு தருணத்திலும் மென்மைத்தன்மையுடன் புதிய சுவையினையும் வழங்குவதை உறுதி செய்கின்றது.

இந்த மீள் அறிமுகம் தொடர்பில் CBL ∴புட்ஸ் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிலுபுல் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "புதிதாக மீள அறிமுகம் செய்யப்பட்டுள்ள டியாரா கேக் வகைகளில், புதிய வகையிலான சேர்மானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், வளர்ந்து வரும் தொழில்நுட்ப அறிவுடன் தரங்களை பேணும் வகையில் அமைந்துள்ளது. புதிய மேம்படுத்தப்பட்ட சுவையிலமைந்த டியாரா கேக் தெரிவுகளான கேக் துண்டுகள், லேயர் கேக் மற்றும் சுவிஸ் ரோல்ஸ் போன்றவற்றை வாடிக்கையாளர்கள் அதிகம் விரும்புவார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். எமது வாடிக்கையாளர்கள் மத்தியில் டியாரா ஸ்பொன்ஜ் லேயர் கேக் என்பது அதிகளவு வரவேற்பைப் பெற்றுள்ளது. தற்போது சந்தையில் 70-80 சதவீதத்தை தன்னகத்தே கொண்டுள்ள டியாரா, புதிதாக மீள அறிமுகம் செய்யப்பட்டுள்ளதனூடாக மேலும் வரவேற்பைப் பெறும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்." என்றார்.

உலகத் தரம் வாய்ந்த தூய அறைச் சூழலில் தயாரிக்கப்படுவதால், டியாரா தயாரிப்புகளின் ஆயுள் காலம் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கும். இதனால் வாடிக்கையாளர்களுக்கும் பெருமளவு அனுகூலம் கிடைக்கின்றது. கவனமான முறையில் பாதுகாப்பாக பொதியிடப்படுவதனூடாக, கேக் நீண்ட நாட்கள் புதிதாக இருப்பது உறுதி செய்யப்படுகின்றது. டியாரா வர்த்தக நாமத்தின் ஒவ்வொரு பிரிவும் சுவை, தொழில்நுட்பம் மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு ஆகியவற்றை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

CBL ∴புட்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி. சமித பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "சிபிஎல் என்பது தயாரிப்பு புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் தன்னிறைவுக்காக புகழ்பெற்றுள்ளது. ஆர்வம் மிக்க அணியினரால் எமது தயாரிப்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட நிலையில், துறையில் புரட்சியை ஏற்படுத்தியிருந்ததுடன், அன்று முதல் புத்தாக்கமான தனது பயணத்தை தொடர்ந்துள்ளது. இலங்கை நுகர்வோர்கள் தற்போது மேலும் தயாரிப்புகளுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், சர்வதேச சுவை மற்றும் தூய பொதியிடல் போன்றவற்றைக் கொண்டு மீள அறிமுகம் செய்யப்பட்டுள்ள டியாரா தெரிவுகள், வாடிக்கையாளர்களின் முதல் தர தெரிவாக அமைந்திருக்கும்." என்றார்.

2004 ஆம் ஆண்டில் பொதியிடப்பட்ட கேக் துண்டுகளை அறிமுகம் செய்த தெற்காசியாவின் முதலாவது உற்பத்தி நிறுவனமாக சிபிஎல் ∴புட்ஸ் இன்டர்நஷனல் (பிரைவட்) லிமிடெட் திகழ்கின்றது. இன்று, இந்த வர்த்தக நாமம் சந்தையில் உறுதியான நிலையை கொண்டுள்ளதுடன், அதில் மென்மையான கேக் துண்டுகள், சுவிஸ் ரோல்ஸ் மற்றும் லேயர் கேக்கள் போன்றன அடங்கியுள்ளன. இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனத்தினால் அண்மையில் டியாராவுக்கு பெருமைக்குரிய SLS சான்று வழங்கப்பட்டிருந்தது. அதனூடாக இலங்கையில் 'SLS' அடையாளத்தைப் பெற்றுக் கொண்ட ஒரே கேக் வர்த்தக நாமமாக அமைந்துள்ளது. தேசிய தர விருதுகள் (NQA) 2018 இல் பாரியளவு உற்பத்தியாளருக்கான தங்க விருதை சுவீகரித்த நிறுவனமாக திகழ்வதுடன், வர்த்தக நாமச் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வில் பல தடவைகள் ஆண்டின் சிறந்த புத்தாக்கமான வர்த்தக நாமம் எனும் விருதையும் சுவீகரித்திருந்தது.

எமது நாட்டில் எமது நிறுவனமாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல வெற்றிகளை சுவீகரித்துக்கொண்ட சி.பி.எல் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிடெட், ISO 90001 தரமுகாமைத்துவச் சான்றிதழையும், உணவு பாதுகாப்பு தொடர்பான தரச்சான்றிதழான ISO 22000 இனையும், சூழல் முகாமைத்துவப் பாதுகாப்பு தரச்சான்றிதழான ISO 14001 இனையும் வென்றுள்ளது. மேலும் ஆசிய பசுபிக் தரநிர்ணய நிறுவனத்தினால் புத்தாக்கத்துக்காக வழங்கப்படும் சர்வதேச GPEA வெண்கல விருதினையும் வென்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உங்களுக்குத் தெரியுமா?

வர்த்தக அமைச்சு
அளவீட்டு அலகுகள்,
நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

1995 சட்ட இலக்கம் 35 இன் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகளின் விதிகளின்படி வர்த்தகத்திற்கான கட்டணம் அறவிடுவதற்கும், சேவைகளை வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் பின்வரும் அளவீட்டு உபகரணங்களுக்கு அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

01. இயந்திர தராசுகள் மற்றும் மின் தராசுகள்
02. பாலத் தராசுகள் மற்றும் தங்கம் அளவிடும் தராசுகள்
03. கொள்ளளவினை அளவிடும் கருவிகள்
04. எரிபொருள் வெளியிடும் இயந்திரங்கள்
05. மீட்டர் கோல்கள்
06. டெக்ஸி மீட்டர்
07. வாகன உமிழ்வு சோதனை உபகரணங்கள்
08. பொதுமக்கள் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் அளவீட்டு கருவிகள்
09. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படும் அளவீட்டு கருவிகள்
10. சுகாதாரப் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் அளவீட்டு கருவிகள்



திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்ஸி மீட்டர்கள் பற்றிய விபரங்களை www.measurementsdept.gov.lk எனும் இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

"இதன் மூலம் இலங்கை நுகர்வோர் மத்தியில் துல்லியமான மற்றும் நம்பகமான அளவீடுகள் மற்றும் நியமங்களை பயன்படுத்துவதை உறுதிசெய்வதில் நாம் முன்னோடியாக திகழ்கின்றோம்."

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும்
சேவைகள் திணைக்களம்
மாஹேனவத்த, பிட்டிபன, ஹோமாகம
தொலைபேசி : 0112182250/51
தொலைநகல்: 0112182254




## சோற்றுக்கு என்ன வழி...?

**வரக்காமுறையூர் ராசிக்**

இளமையின் கடமை மறந்தாய்
இன்புறும் வழி இழந்தாய்
காலைப் பொழுதில் எழுந்தாய்
கடைத்தெரு பக்கம் விரைந்தாய்
மாலையில் மனை வந்தாய்
மாயையில் மனம் நொந்தாய்
தண்டச் சோறு திண்டாய்
தத்துவம் வேறு சொன்னாய்
வண்டுகள் போல் ஆனாய்
வனிதையர் பின்னால் போனாய்
கண்ணி லொன்றும் காணாய்
கடமை யெல்லாம் வீணாய்

நா லாறு வயதாகுது
நற்திறமைகள் பல இருக்குது
நாளு பணம் தேடலயே
நாண முனக்கு தோன்றலயே
தொழிலுக்கு நீ போகலயே
துவண்டு மனம் வேகலயே
பெற்ற மனம் உழைக்குது
பிள்ளை மனம் பிழைக்குது
சுற்றம் வந்து சிரிக்குது
சுமந்த மனம் தவிக்குது
கருணை யுனக்கு தோன்றலயே
காசு பணம் தேடலயே
சும்மா சோறு கிடைக்குது
சுகமாய் கொஞ்சம் இருக்குது
தண்டச் சோறு மிங்கு
தாயிருக்கும் வரையி லென்று
சோம்பேறி உனக்கு புரியலயே
சோத்துக்கு வழி தெரியலயே



## முதியோர் இல்லங்கள்

**கவிக்கிறுக்கன், இணுவில்**

முதியோர் இல்லங்களில்
இருக்கின்ற அம்மா அப்பா
ஒரு காலத்தில் தன் பிள்ளைகளின்
பள்ளி வருகையை படலையிலே
நின்று எதிர்பார்த்து நின்றவர்கள்
இன்றும் இல்ல படலைகளில்
கொண்டு வந்து விட்ட மகனோ?
மகளோ? வருவார்கள் என்று
காத்துகொண்டிருக்கின்றார்கள்
அங்கே பறக்கும் காக்கைகளே
போய் சொல்லுங்கள்! அவர்களிடம்
உங்களுக்கும் மகன் பிறக்கும்
மகள் பிறக்கும் அப்போது முதியோர்
இல்லங்கள் இருக்குமென்று....

## ஆதலால் நான் இங்கு நலம்

**இணுவில் வாகீசன்**

அம்மா திகதி இருபதில் மட்டும்
தொலை பேசியில் அழைக்கின்றேன்
மீதிச்சம்பளம் உங்கள்
வங்கிக்கணக்கில்
வரவு வைத்ததாக

ஆதலால் நான் இங்கு நலம்

பள்ளி செல்ல அரச பேரூந்தும்
அவசரத்திற்கு கைவசம்
தலைக்கவசமும் வைத்திருக்கின்றேன்
நண்பர்களுடன்
பள்ளி செல்வதற்கு
ஆதலால் நான் இங்கு நலம்

படுத்துறங்க வேப்பமரக்காற்றும்
வசதியாக உள்ளதால்
கட்டிலும் மின் விசிறியும்
தேவைப்படவில்லை
முன்னால் பொதுநூலகம் இருப்பதால்
பொழுதுபோக்க
தொலைக்காட்சி நாடகங்களும்
அவசியமாகவில்லை
ஆதலால் நான் இங்கு நலம்

மீண்டும் தேதி இருபதில்
அழைக்கும் வரை
எழுத மறந்த கதைகளை
எழுதி வைக்கின்றேன்
வழமைபோல் நாட்குறிப்புக்களில்...

## வசந்தம் நீங்கிய இலையுதிர்வில்

**என்.எம்.அலிக்கான்**
**சாய்ந்தமருது**

மந்தமாருதம் வீசிய
வசந்தம் தொலைந்து
இலையுதிர்காலம்
முதுமையின் முகாரிக்குள்
'சிக்னலடிக்கும்'
மரண வேதனை
தினம் மனதில்
இசை மீட்டியவாறு

இரத்தக் கொதிப்பில்
அத்துமீறிய இளமை
கடந்த காலத்தை நினைத்து
வருந்தும்
கறந்தபால்
மீண்டும்
முலை சேருமா என்னும்
ஆழ்ந்த கவலையில்?

ஒட்டியுலர்ந்த உடல்
நரை விழுந்த தலை
குழிவிழுந்த கொடுப்பு
கூனல் ஆன முதுகு
விசா முடிந்து
விடை பெறப் போகும்
அந்திமத்திற்கான சமிக்ஞைகள்

இலையின் நுனியில்
ஊசலாடும்
பனித்துளியை போல்
உடற் கூட்டில் இருந்து
உயிர் திடீரென்று பிரிய
கபன் துணிக்குள்
உடலம்...
சடலமாகிக்
கிடப்பதைப் பார்த்த
கோட்டும், சூட்டும்
குமுறும்
எஜமானரின்
நிலை கண்ட ஏக்கத்தில்

அஞ்சாவது மாடியின்
பஞ்சணை மெத்தைக்குள்
ஏசியின் ஸ்பரிச உணர்வில்
தஞ்சமான உடல்
வெறும் ஆறடிக்குழிக்குள்
மண்மூடி, தனிமையில் விடப்பட
காரு, காணி பூமி,
பங்களா, பட்டம், பதவி
எல்லாமே...

எட்ட நிற்கும்...
ஆட்டங்கண்டு...
அந்த வேளை...
நம்மோடு
ஒட்டி உறவாட
உதவிக்கரம் நீட்டும்
ஒரேயொரு
உத்தம நண்பன்
அவன் யார் தெரியுமா?
நாம் நமக்காக
உலகில் தேடிய சொத்து
நல் அமல் என்கின்ற வித்து



## உன்னைத் தேடுமொரு நாளில்...

**ஷப்ரா இல்முத்தீன், அட்டாளைச்சேனை**

கல்லூரி வாழ்வின்
இறுதி நாளொன்றில்

இனிமேல் அடிக்கொரு முறை
அலைபேசியில் உரையாடும் வரை
நம் நட்பின் பெருமூச்சு ஓயாது
என்ற உணர்வெல்லாம் என்னவோ
அதன் பின்னரான
இரண்டொரு நாளைக்குத் தான்...

ஒன்றுக்குள் ஒன்றாகி
பெரும் குட்டைகளை குழப்பி விட்ட
கலகலப்பில் தனை மறந்து
கண்ணீருடன் கரைந்து விடாமல்
தொடர வேண்டும் நம் நட்பு எனும்
சத்திய வாக்கெல்லாம் என்னவோ
அதன் பின்னரான
இரண்டொரு மாதங்களுக்குத் தான்..

உன் திருமண அழைப்பிதழ்
முதன் முதலில்
என் கரங்களைத் தான் தொட வேண்டும்
எனும் கூற்றுக்கு
என்றைக்கும் நீதான்
என் முதல் அழைப்புக்குரியவள் எனும்
புன்னகைப் பூக்களெல்லாம்
அதன் பின்னரான
இரண்டொரு வருடங்களுக்குத் தான்..

கன்னம் வற்றிய கண்ணீரும்
காலம் தந்த வாழ்க்கை கிறுக்கல்களும்
காற்றோடு பேசும் உணர்வுத் தடங்களும்
ஒரு நாள் மனதுக்குள்
படர்ந்து கொள்கையில்

சட்டென சென்று பார்க்கத் தோன்றுவது
என்னமோ பழைய கமரா ஒன்றில்
பற்களைக் காட்டி எடுத்த புகைப்படங்களும்
பட்டினியுடன் பிய்த்து உண்ட
சொக்கலேட் உறைகளும்
உன் உயிர் நட்பு
உயிர் பிரியும் வரை தொடரும் என்ற
ஆட்டோகிரா:ப் பக்கங்களும் தான்...

உணர்வுகள் எல்லாமே
மரித்துப் போவதில்லை..
அவை சில வேளைகளில்
பொங்கிப் பிரவாகித்து
சில நட்புகளின் அணைப்புக்கு
தவமிருப்பதாகக் கூட இருக்கலாம்...

## கலையிழந்த இருப்பில்

**அ. ஜெகன், சுவிஸ்**

கனவுகளின் காத்திருப்பாய்
தூக்கம் கலைக்காத
நீண்ட....
பொழுதுகளின் ஏக்கங்கள்

எழுதாத சொல்லுக்கு
அகராதியில் பொருள்
தேடும்
அறிவையும் மறைத்திடும்
அவலமான தேடல்கள்

நிறை குடம் வழிந்ததனால்
நீர் நிலைகள் நிரம்பியதாய்
சிதம்பர ரகசியம் போல்
பேசிடும் சில பேர்கள்

தென்றலும் சுடும்
இருப்பில்
நந்தவனம் தேடிச்
செல்லும் ஆவலும்
ஓர் மூலையில்
உறக்கம் கொள்ளும்

மனித நேசிப்புக்கள்
மருவிக் கொண்டு
செல்லும் அர்த்தங்கள்
இல்லா இருப்பில்
மனிதாபிமானத்தின்
கதவுகள் மூடப்பட்டுக்
கொண்டே இருக்கும்

மருத்துவம் இல்லா
வருத்தங்களாக
தீர்க்கப்படாத
சுமைகளின் நெருடல்கள்
மரம் கொத்திப்
பறவையாக
உள் இருந்து
குடைந்து கொண்டு
இருக்கும்

தேடல்களும்
இயற்கையின் ரசனையும்
நிறைந்த இருப்பு
களையிழந்து
காட்சிப்படுத்தும்





## பெண்ணின்றிப் பெருமையில்லை...

**ஜலீலா முஸம்மில்**
**ஏறாவூர்**

மாதராய் மண்ணிலே பிறந்தோம்
மாநிலம் போற்றிட வாழ்வோம்
பேதமை ஒழித்திட முயல்வோம்
பேறுகள் பெற்றிட விளைவோம்
மழலையில் தொடங்கி முதுமை வரைக்கும்
மங்கையிவள் தாங்கும் பொறுப்புக்கள் எத்தனை?
வாழ்க்கை நாடகத்தில் கதாபாத்திரங்கள் எத்தனை?
மகளாய், மனைவியாய்,
தாயாய், தமக்கையாய்
தன்னந்தனியே தன்பணி செய்பவள்
முன்னின்றே முழு வேலையும் முடிப்பவள்
"தக்கத்திமி" என்ற தாளத்திற்கும் ஆடுவாள்
எட்டுத்திக்கும் புகழ் மணக்க ஏணிப்படி ஏறுவாள்
அடுக்களை முதல் விண்வெளி வரைக்கும்
அவள் சாதனைகள் அடுக்கடுக்காய்த் தொடரும்
அன்பு, பாசம், பொறுமையெல்லாமே
நெருக்கடி நேரங்களில்
நேர்மறை மாற்றங்கள் நிகழ்த்தியே
காட்டும் நேர்த்தியானவள் பெண்
பெண்ணினமே நீ வாழ்க
உன் புகழ் எங்கிலும் பரவுக
பெண்ணின்றிப் பெருமையும் இல்லை
கண்ணின்றிக் காட்சியும் இல்லை



## ஏழைகளின் சோக கீதம்

**குப்பிளான் பாலா**
**நோர்வே**

இரவின் கண்ணீர்
பனி என்பார்கள்
முகிலின் கண்ணீர்
மழை எனச் சொல்வர்

இயற்கை அழுதால்
சிரிக்கும் மனிதா
நாங்கள் அழுதால்
யார் மகிழ்வர்
நாம் அழுதால்
கண்ணாடி அழும்
நாம் சிரித்தால்
கண்ணாடியும் சிரிக்கும்
நாம் அழுதால்
கண்ணாடி சிரிக்குமா
எம் சோக விம்பங்கள்
கண்ணாடி முன்னே

அன்று கட்டிய
தொட்டில் சொர்க்கத்தில்
இன்று தொங்குவதோ
வறுமைக் கோட்டில்
அன்று ஆடியதோ
மாளிகை மஞ்சம்
இன்று அசைவதோ
மாமர ஊஞ்சல்
அன்று மாளிகையில்
எம் வீடு
இன்று மரக்கிளையில்
எம் கூடு

அன்று கண்டதோ
பூரணை நிலவு
இன்று காண்பதோ
அமாவாசை இருள்
அன்று இதம் தரும் தென்றல்
இன்று கதிகலங்கும் சூறாவளி

தென்றலும் புயலாய் மாறும்
இந்த மானிடர் வாழ்வே
மதியை மாய்க்க மது
உண்ணும் மன்னர்களே
எங்கள் விதியை வெல்ல
நிதி ஈவது தர்மமே

நேர்த்திகள் எத்தனையோ
நேர்ந்தோம் இறைவா
நிலை அற்ற எம்
நேர்த்திகள் யாவும்
பூர்த்தி ஆகுமா
நிலை மாறும் உலகில்
நிலைக்குமா எம் கனவு

## நம் சமூகத்தின் முகம்

**ஷஹ்னா ஸப்வான், தர்கா நகர்**

சர்வாதிகார சந்ததிகளாலும்
சதிகார சந்தர்ப்பவாதிகளாலும்
சமநிலையற்றுப்போன சமூகம்
சரிவுற்று வீழ்கிறதே...

உண்மைக்கும் இடமில்லை
உழைப்பிற்கும் மதிப்பில்லை
உயர்வும் தாழ்வும் உணர்த்தப்படுவது
உயிரில்லா பணத்தின் மதிப்பினிலே...

பணமும் பதவியும்
படைத்தாலும் முகமூடிகளாய்
பலரின் விதிகளை
பாதைக்குத் தள்ளியதே...

குலப் பெருமை குடிகொண்ட
குபேரப் பெருமக்கள்
குடில்களில் குடிகொள்ளும்
குடிமக்களை குறையாக நோக்குவதேனோ...

நித்திக்கும் உறவுகள்
நியாயமில்லா தீர்வுகள்
நிம்மதியில்லா இரவுகளாய்
நிதர்சன வாழ்வாகியதே...

உரிமைக்கும் உடைமைக்கும்
உரக்கக் கத்தியதால்
உலகெங்கும் செவியுற்றும்
உணர்வுகள் ஊமையாகின்றதேனோ...

கவலைகள் தோன்றலாம்
கனவான்கள் போர்வையிலே
கயவர்களாய் இருந்தாலும்
கண்ணியமும் அவர்களுக்கே...

## நீங்களா?

**பாரீஸ், பாலமுனை**

இந்த இரவும்
தனிமையோடு கடக்கிறது

இந்த கலக்கம் கற்பனையால்
காகிதத்தில் சிற்பமாகி
சிந்தனையில் மிதக்கிறது

நிலவின் ஒளியும்
அதன் ஓசையும்
காகிதத்தில் விதைத்து
அறுவடையாகிய
கவிதையின் விம்பமாகிறது

காதல் உணர்வு கலந்து
உவமைகள்
ரசனையின் நுனியில்
ஊஞ்சலாடியது

யாரோ அந்த கவிஞன்
வடிப்பதிற்கிடையில்
முழு இரசனையில் மூழ்கியவன்

## தேவி

**ரதிதேவி, மானிப்பாய்**

கனவும் நனவும்
இரவும் பகலும்
உந்தன் நினைவு துரத்துதே


உள்ளே இருந்து
உலகம் ஏழை
உய்விக்கும் தேவியே

மரணம் ஜனனம்
காரணம் கருவி
யாவும் கடந்த ஜோதியே

சரணம் சரணம்
உந்தன் திருவடி சரணம்
தேவ தேவியே

மௌனம் மலர்கள் சூடியே
நாணம் விலகுவாய் இன்று
ஏங்கி ஏங்கித் தவித்தனே
எழுந்து பேசு
நேரம் தீர நேர் நின்று

நிழல்கள் கதிரின் இயக்கத்தில்
நகர்தல் போலே மனிதர்கள்
உந்தன் சக்தி திசை வழி
இயங்குது இவ் உலகமே



## குழந்தை மனம்

**காரையன் கதன்**

காய்ந்து கிடக்கும் வாய்க்காலில்
சின்ன நத்தை ஓட்டை தேடி எடுத்து
கொள்கிறாள் சிறுமி

பூத்த முகத்துடன்
ஓடுகிறாள்

பழைய பனையின் கீழ்
பனையாய்
பார்வைகளை உயர்த்துகிறார் விவசாயி

ஏதோ கேட்கப் போகிறாள்
மகள் என்று
பழைய நினைவுகளை பாதியில்
நிறுத்தி விட்டு

அவள் ஓடி வருகிறாள்
அவருக்கும் பல பதில்கள்
தூரம் என்பதால்
பதற்றம்தான்

விவசாயி எத்தனை
உயிர்களுக்குத்தான்
தீனி போடுகிறார்
அறிந்தும் அறியாமலும்

அவள் வந்து விட்டாள்
நத்தையை காட்டி
வளர்ப்போம் என்கிறாள்
தண்ணீரை தேடுகிறாள்

விவசாயி கண்கள்
குளமாகி கண்ணீர்
நத்தை ஓட்டின் மேல்
விழுந்து வழிகின்றது
நத்தை மீண்டும் இறக்கிறது

SLIATE

## கல்வி அமைச்சு

## இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்

# கல்வியாண்டு 2021 இற்காக உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

2020 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளில் க.பொ.த (உ/த) பரீட்சையை வெற்றிகரமாக முடித்தவர்களிடமிருந்து இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE) நடத்தும் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**விண்ணப்பிப்பது எவ்வாறு**

விண்ணப்பம் apply.sliate.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் வேறு எந்த விதமான விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தகுதியான விண்ணப்பதாரர்கள் இஸெட் மதிப்பெண்கள் *(Z-score)* மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் (SLIATE) நடத்தப்படும் தெரிவுப் பரீட்சை மதிப்பெண்களின் அடிப்படையில் இரண்டு பிரிவுகளின் கீழ் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

| | |
|---|---|
| **இஸெட் மதிப்பெண்களின் (Z-score) அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகப் (SLIATE) பாடநெறிகள் வகுதி -1** | கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA), வியாபார நிருவாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBA), வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBF), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (சிவில்) (HNDE (CIVIL), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (இயந்திரவியல்) (HNDE (MECHANICAL), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) (HNDE (ELECTRICAL & ELECTRONICS)/ உயர் தேசிய டிப்ளோமா (தொகைக் கணக்கெடுப்பு) HNDQS, உயர் தேசிய டிப்ளோமா (நிருமாண சேவைகள் பொறியியல்) (HNDBSE), தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) (HNDT(Agri.) |
| **தெரிவுப் பரீட்சை மதிப்பெண்களின் அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகப் (SLIATE) பாடநெறிகள் வகுதி -2** | ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (HND in English), தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDIT), முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM), செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDPM), சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM), உணவுத் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDFT) |

*தயவு செய்து உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளின் நுழைவுத் தகுதிகளுக்கு பிரிவு அ வையும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் **(ATIs)** பற்றிய விவரங்களுக்கு பிரிவு ஆ வையும் பார்க்கவும்.*

தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பிரிவிலும் (வகுதி -1 மற்றும் வகுதி -2) அதிகபட்சமாக ஐந்து கல்வித் திட்டங்களுக்கு ஒரு வகைக்கு ரூபா.500/- கட்டணம் செலுத்துவதன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

ஒரு விண்ணப்பதாரர் இரண்டு வகைகளுக்கும் விண்ணப்பித்தால், ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் தனித்தனியாக நேரடியாக வங்கிக்கு பணம் செலுத்த வேண்டும். **நிகழ்நிலையில் (ஒன்லைன்) பணம் செலுத்துவது அனுமதிக்கப்படமாட்டாது.**

வங்கிக் கட்டண பற்றுச்சீட்டு பரிவர்த்தனை இலக்கம் (TRN) ஒன்லைன் விண்ணப்பத்தில் உள்ளிடப்பட வேண்டும்.

கொடுப்பனவுகள் மக்கள் வங்கி, ஹைட் பார்க் கிளை, கொழும்பு 02 அல்லது இலங்கையிலுள்ள மக்கள் வங்கியின் வேறு ஏதேனும் கிளையில் SLIATE கணக்கு 025-2-001-1-3397613 இற்கு **2022 ஜனவரி 31 ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னர் வரவு வைக்கப்பட வேண்டும்.

ஒன்லைன் விண்ணப்பம் உறுதிசெய்யப்பட்ட பிறகு உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தின் வன்பிரதியில் கையொப்பமிட்டு, பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் உரிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு **(ATI)** அனுப்பப்பட வேண்டும். அங்கு விண்ணப்பதாரரின் முதல் தெரிவு 2022 **ஜனவரி 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்** பதிவுத் தபால் மூலம் வழங்கப்படும்.

**நிகழ்நிலையில் உருவாக்கப்பட்ட உசாத்துணை இலக்கமானது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.**

விண்ணப்பத்தின் நிலையானது, செயற்படுத்தப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி, கையடக்கத் தொலைபேசி இலக்கம் அல்லது தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

2022.01.31 அன்றைய விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது..

**பாடநெறிகளை நடத்தும் முறை**

முழு நேர பாடநெறிகள்
பகுதி நேர பாடநெறிகள் (வார இறுதி நாட்களில்)
போதனா மொழி: - ஆங்கிலம்
சம்பந்தப்பட்ட துறைகளில் பணிபுரிபவர்களுக்கு பகுதி நேர பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.

**பாடநெறி கட்டணம்**

முழு நேர பாடநெறிக் கட்டணம் - இலவசம்
ஒரு அரையாண்டிற்கு பகுதி நேர பாடநெறிக் கட்டணம் பின்வருமாறு.

| | |
|---|---|
| கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – HNDA | ரூபா. 7, 500/- |
| ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா –(HND in English) | ரூபா. 12, 000/- |
| தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDIT) | ரூபா. 18, 000/- |

**பதிவு**

கல்வி மற்றும் பிற தேவையான ஆவணங்களின் அசல் மற்றும் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**விடுதி வசதிகள்**

வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான முழுநேர மாணவர்களுக்கு பின்வரும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் (ATIs) மட்டுமே கோரிக்கையின் பேரில் விடுதி வசதிகள் வழங்கப்படும்.
தெஹிவளை மற்றும் கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATI) - மாணவிகளுக்கு மட்டும்
அம்பாறை மற்றும் கொழும்பு உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATI) - ஆண் மற்றும் பெண் மாணவர்கள்

**பிரிவு "அ"**

**உயர் தேசிய டிப்ளோமாக்களுக்கான நுழைவுத் தகுதிகள்**

1. **கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA)**

**1.1 முழு நேரம் - 4 ஆண்டுகள்**

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணக்கீட்டில் திறமைச் சித்தியுடன் (வணிகப் பிரிவு மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தகுதியுள்ள மாணவர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பின் தகைமையுள்ள தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கு இரண்டாம் முன்னுரிமை வழங்கப்படும்).

**அத்துடன்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**1.2 பகுதி நேரம் - 4 ஆண்டுகள்**

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்:**

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணக்கீட்டிற்கான திறமைச் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

**அல்லது**

(ii) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணக்கீட்டிற்கான சாதாரண சித்தி

**மற்றும்**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி (DTET) திணைக்களத்தினால் நடத்தப்படும் கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ் பாடநெறிகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்

அ. கணக்கீட்டுத் துறையில் உயர் தேசிய டிப்ளோமா
ஆ. கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ்
இ. வணிகக் கல்வியில் தேசிய சான்றிதழ்
ஈ. கணக்கீட்டில் தேசிய சான்றிதழ்

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

**மற்றும்**

விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட துறையில் அரச நிறுவனம்/பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் பணியாளராக அல்லது சுயதொழில் செய்பவராக (தொழில்முனைவோர்) இருக்க வேண்டும்.

**குறிப்பு 1:** கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பகுதி நேர விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளில் ஏதேனும் ஒன்றைப் பெற்றிருந்தால், அவர்களுக்கு 1ஆம் ஆண்டிலிருந்து விலக்களிக்கப்படும், மேலும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் (ATI) கிடைப்பனவுத் திறனுடன் பிற நுழைவுத் தேவைகள் பூர்த்தி செய்திருந்தால் 2ஆம் ஆண்டுக்குப் பதிவு செய்யப்படுவார்கள்.

(i) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் (SLIATE) நடத்தப்படும் வியாபார நிர்வாகம்/ வியாபார நிதி மற்றும் வியாபாரக் கல்வியில் தேசிய டிப்ளோமா உயர் தேசிய டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்திருத்தல்.
(ii) இலங்கையின் பட்டயக் கணக்காளர்களால் நடத்தப்படும் வணிக மட்டம் I மற்றும் II (அல்லது நிர்வாக நிலை அல்லது CAB I மற்றும் CAB II அல்லது அடிப்படை (Foundation) மற்றும் இடைநிலை (Foundation) மட்டம் அல்லது உரிமம் (Licentiate) I மற்றும் II) பூர்த்தி செய்திருத்தல்.
(iii) பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் (CIMA - UK) பகுதி I மற்றும் பகுதி II இனைப் பூர்த்தி செய்திருத்தல்.
(iv) பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA-UK) பகுதி I மற்றும் பகுதி II ர்த்தி செய்திருத்தல்.
(v) கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் (AAT) பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.
(vi) சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (CMA-Sri Lanka) நடத்தும் ACMA பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு 2:** பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 46/90ன் படி, ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிசெய்யப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கணக்கீடு பற்றிய உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, பொது வணிகமாணி (சாதாரண தேர்ச்சி) பட்டத்திற்கு மாற்றுத் தகுதியாக கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. வியாபார நிர்வாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா - **(HNDBA)** முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்
3. வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா - **(HNDBF)** முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் வர்த்தக பிரிவில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

க.பொ.த (சா/த்) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

4. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (**HNDE – சிவில்**) முழு நேரம் – 3 ½ ஆண்டுகள்
5. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா **(HNDE** - (மின்னியல் மற்றும் இலத்திரனியல்): முழு நேரம்-3½ ஆண்டுகள்
6. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (**HNDE** - இயந்திரவியல்): முழு நேரம் – 3 ½ ஆண்டுகள்
7. தொகைக் கணக்கெடுப்பு உயர் தேசிய டிப்ளோமா **(HNDQS)** முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்
8. நிருமாண சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா **(HNDBSE):** முழு நேரம் - 3 ½ ஆண்டுகள்

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

அ. க.பொ.த (உ/த) பரீட்சையில் பரீட்சை பௌதீக விஞ்ஞான பிரிவில் (இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் இணைந்த கணிதம்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

க.பொ.த (சா/த்) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

9. ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (**HND in English)**

9.1 முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் எந்தவொரு பாடத்திலும் ஒரே அமர்வில் (பொது ஆங்கிலம் பிரதான மூன்று பாடங்களில் ஒன்றாகக் கருதப்படாது)

**மற்றும்**

(ii) க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்திற்கான திறமைச் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

க.பொ.த (சா/த) ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

**9.2 பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்**

9.1 இல் உள்ள மேற்கூறிய தகைமைகளுடன், விண்ணப்பதாரர் அரச துறை / பொது நிறுவனம் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (EPF/ETF ஆகியன கொண்ட) அல்லது சுயதொழில் (தொழில்முனைவோர்) ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

10. உணவுத் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா **(HNDFT)** முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதிக விஞ்ஞானப் பாடப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

க.பொ.த (சா/த) ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தியடைந்திருத்தல்

(ii). தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளமோ **(HNDIT)**

11.1 முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

11.2 பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

11.1 இல் உள்ள தகுதிகளுக்கு கூடுதலாக, விண்ணப்பதாரர் அரசு நிறுவனம் / பொது நிறுவனம் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில்முனைவோர்) ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும்.

12. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா **(HNDM),**
முழு நேரம் - 3 ஆண்டுகள்

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

**அல்லது**

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்ததால் நடத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசியச் சான்றிதழ் அல்லது வணிகப் கல்விக்கான தேசியச் சான்றிதழ் (பொது நிர்வாகம் / சந்தைப்படுத்தல்)

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

13. செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா **(HNDPM)**
முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

(i) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

14. தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) **(HNDT(Agri.)**
முழு நேரம் - 3 ஆண்டுகள்

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:**

அ. க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தி: (இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக)

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

15. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா **(HNDTHM)** முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

அ. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

**மற்றும்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

**பிரிவு "ஆ"**

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் பெயர்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகள் [(முழு நேரம் (FT) மற்றும் பகுதி நேரம் (PT) ]

| | உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கங்கள் | வழங்கப்படும் பாடநெறிகள் |
|---|---|---|---|---|
| 01 | ஹார்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அம்பாறை | பேராசிரியர் ஈவன் ஏ ஹார்டி மாவத்தை, அம்பாறை | 063-2222056<br>063-2223035 | HNDT (Agri)(FT), HNDA (FT), HNDM (FT), HNDIT (FT), HNDTHM (FT), HND in English (FT), HNDA (PT), HND in English (PT) HNDIT (PT) |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அநுராதபுரம் | ஏக்கர் 111, அனுலா மாவத்தை, பண்டுலாகம அநுராதபுரம் | 025-2234417 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDTHM (FT), HNDIT (PT) HNDA (PT), HND in English (PT) |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - பதுளை | கிரீன்லேன்ட் ட்ரைவ், பதுளை | 055-2230218<br>055-2223818 | HNDIT (FT), HNDA (FT), HNDM (FT), HND in English (FT), HNDTHM (FT), HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மட்டக்களப்பு | பிரதான வீதி, கோயில்குளம் கிழக்கு, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 065-2247519<br>065-2247470 | HNDIT (FT), HNDA (FT), HND in English,(FT) HNDA (PT), HND in English (PT), HNDIT(PT), |
| 05 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கொழும்பு | இல 42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு 15 | 011-2521152<br>011-2521282 | HNDE (Civil) (FT), HNDE (Mechanical) (FT), HNDE (Electrical & Electronics) (FT) HNDQS (FT), HNDBSE (FT) |
| 06 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தெஹிவளை | இல. 51, வைத்திய வீதி தெஹிவளை | 011-2738349 | HNDIT (FT), HNDA (FT), HNDM (FT), HNDBA (FT), HND in English (FT), HNDBF (FT), HNDTHM (FT), HNDA (PT), HND in English (PT), |
| 07 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - காலி | சிறிதம்ம மாவத்ததை, லபுதூவ, அக்மீமன, காலி | 091-2246179 | HNDE (Civil)(FT), HNDE (Mechanical) (FT), HNDE (Electrical & Electronics) (FT) HNDQS (FT), HNDIT (FT), HNDT (Agri) (FT), HNDA (FT), HNDM (FT), HNDTHM (FT), HNDBA (FT), HND in English (FT), HNDA (PT), HNDIT (PT), HND in English(PT) |
| 08 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கம்பஹா | நய்வல, எஸ்ஸால, வெயாங்கொடை | 033-2287519<br>033-2292544 | HNDT (Agri) (FT), HNDIT (FT), HNDFT(FT),HNDA (FT), HNDA (PT), HNDIT (PT), |
| 09 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணம் | இல.. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595<br>021-2229803 | HNDE (Civil) (FT) , HNDE (Electrical & Electronics) (FT), HNDA (FT), HND in English (FT), HNDQS(FT), HNDM(FT), HNDIT (FT) HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 10 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கண்டி | இல. 16, கெப்படிபொல வீதி, கண்டி | 081-2232097<br>081-2226644 | HNDIT (FT), HNDA (FT), HNDM (FT), HNDBA (FT), HND in English (FT), HNDTHM (FT) HNDA (PT),HND in English (PT), HNDIT (PT) |
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை. | 035-2221297<br>035-2221713 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDPM(FT) HNDA (PT), HND in English (PT) |
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - குருணாகல் | இல. 22/1, வில்கொடை வீதி, குருணாகல் | 037-2229583<br>037-2224911 | HNDIT(FT), HNDA(FT), HNDM(FT), HND in English (FT), HNDTHM (FT) HNDIT (PT), HNDA (PT), HND in English(PT) |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மன்னார் | டீ லாசாலே ஆங்கில மொழிப் பாடசாலை கட்டடம், தலைமன்னார் வீதி, மன்னார் | 023-3122555 | HND in English (FT), HNDIT (FT) |
| 14 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - நாவலபிடிய | இல. 154/6, கம்பளை வீதி, (ப்ளக் வீதி), ஐஸ்வர்யா மண்டபம், நாவலபிடிய | 054-2050634 | HNDTHM(FT), HNDM(FT), |
| 15 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - இரத்தினபுரி | புதிய நகரம், இரத்தினபுரி. | 045-2231492<br>045-2231493 | HNDIT(FT), HNDA (FT), HND in English (FT) HNDA (PT), HND in English (PT) |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - சம்மாந்துறை | ஏடீஜ ஒழுங்கை, சம்மாந்துறை | 067-2261304 | HNDIT (FT),HNDA (FT), HND in English (FT), HNDM (FT) HNDIT (PT),HNDA (PT), HND in English (PT) |
| 17 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தங்காலை | யாயவத்தை, நெதோல்பிடிய, தங்காலை | 0472241845<br>0472241846 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT) HNDA (PT), HND in English (PT) |
| 18 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - திருகோணமலை | கிண்ணியா வீதி, வரோதாய நகர், திருகோணமலை | 0262223232<br>0262050617 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDTHM(FT) HNDA (PT), HNDIT (PT), HND in English (PT) |
| 19 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - வவுனியா | ஓப் A 9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை வவுனியா. | 0242052733 | HNDA (FT), HND in English (FT) HNDA (PT), HND in English (PT) |

**குறிப்பு:**

1. விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் தேவையான நுழைவுத் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
2. க.பொ. த (உ/த) பொது திறன் பரீட்சைத் தாளில் (General Common Test Paper) குறைந்தபட்சம் 25 புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரரே உயர் கல்விக்கு தகைமை பெறுவார்.
3. வகுதி 2 இற்குரிய உயர் தேசிய டிப்ளோமா அபேட்சகர்களினது தகைமையுள்ள விண்ணப்பதாரிகளினது ஆட்சேர்ப்பானது நிறுவனரீதியாக நடத்தப்படும் பொது எழுத்து மூலப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.
4. 23 வயதிற்குட்பட்ட முழுநேர மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. ஒரு குறிப்பிட்ட ATI இல் பாடநெறியைத் தொடங்க குறைந்தபட்சம் 50 மாணவர்கள் குறிப்பிட்ட பாடநெறியில் பதிவு செய்திருக்க வேண்டும். திட்டத்தைத் தொடங்க போதுமான எண்ணிக்கையில் மாணவர்கள் இல்லை என்றால், அத்தகைய மாணவர்கள் அதே திட்டம் நடத்தப்படும் அருகிலுள்ள ATI க்கு மாற்றப்படுவார்கள். இறுதி முடிவு பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.
6. அனைத்து பாடப்பிரிவுகளின் முழுநேர மாணவர்கள் வாரநாட்களிலும் தேவைப்பட்டால் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளில் கலந்துகொள்ள வேண்டும்.
7. பகுதி நேர பாடநெறிகள் வார இறுதி நாட்களில் நடத்தப்படும்.
8. முழுநேர மற்றும் பகுதி நேர பாடநெறிகளுக்கான பயிற்றுவிக்கும் முறை வகுப்பில், ஒன்லைனில் அல்லது தேவையைப் பொறுத்து இரண்டுமாக இருக்கும்.
9. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA) (முழு நேர) திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் வருடங்கள் வார நாட்களில் மட்டுமே நடத்தப்படுகிறது. மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்கள் வார இறுதி நாட்களில் நடத்தப்படுகின்றன.
10. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM) நிகழ்ச்சிகளின் முதல் மற்றும் இரண்டாம் வருடங்கள் வார நாட்களிலும் மூன்றாம் ஆண்டு வார இறுதி நாட்களிலும் நடத்தப்படுகின்றன.
11. முழு நேரத் திட்டங்களின் மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் உள்ளகப் பயிற்சி பெற வேண்டும்.
12. பகுதி நேர விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட துறையில் பணியமர்த்தப்பட்டிருக்க வேண்டும்.
13. ஒரு மாணவர் முழுநேர பாடநெறியில் சேர்ந்தவுடன், வேறு எந்த ATI க்கும் மாற்றுவது எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படாது.
14. எந்தவொரு HND பாடத்திற்கும் பதிவு செய்த மாணவர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனம் வழங்கிய பதிவு முடிவடையும் திகதியில் இருந்து 60 நாட்களுக்கு முன் எந்தவித கட்டணமும் இன்றி தங்கள் பதிவை இரத்து செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.
15. 60 நாட்களுக்குப் பிறகு தங்கள் பதிவை இரத்து செய்யும் மாணவர்களிடமிருந்து பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து மாதம் ரூபா 5,000.00 வசூலிக்கப்படும். (உள்ளக சுற்றறிக்கை(பரீட்சை)04/2019 12.07.2019 திகதிய)
16. முழுநேர மற்றும் பகுதிநேர மாணவர்களுக்கு அரையாண்டு இறுதித் தேர்வுகள் வார நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் நடைபெறும்.
17. கல்வி ஆலோசனைச் சபை கூட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் ஆளும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பிற நுழைவுத் தகுதிகள் பரிசீலிக்கப்படும்.
18. க.பொ.த (உ/த) மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சைகள் இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட வேண்டும்.
19. தவறான தகவலை வழங்கிய விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.
20. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (SLIATE) பணிப்பாளர் நாயகத்தின் முடிவே உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு 2021 கல்வியாண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான இறுதி முடிவாக இருக்கும்.
21. மேலதிக விபரங்களுக்கு www.sliate.ac.lk என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும் விண்ணப்ப முடிவுத் திகதி 2022.01.31

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE)**

# பதவி வெற்றிடங்கள்

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
## நீர் வழங்கல் அமைச்சு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் நிலவுகின்ற பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

## வணிக முகாமையாளர் (ஒப்பந்தம்)

மேற்குறித்த பதவிக்கு உயர் ஊதியமும் பிற சலுகைகளும் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முடிவுத் திகதி 2022.01.17 ஆகும். மேலதிக விபரங்களுக்கு 2022.01.02ஆம் திகதிய **'(Sunday Observer)'** பத்திரிகையை பார்க்கவும்.

**பொது முகாமையாளர்**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**



## எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையை பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா?

இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமைமிக்க ஊழியர்களை கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு தேவையான தகைமைகளுடன், சிறந்த தலைமைத்துவ பண்புகளுடைய, முன்னனுபவமுள்ள தொழில் வல்லுனர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி

**முக்கிய தேவைகள்**

- ➢ பின்வருவனவற்றில் ஒரு தகுதியினை கொண்டிருக்க வேண்டும்.
  அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திலிருந்து பெற்ற பட்டத்துடன் துறைசார் பட்டபின்படிப்பு
  **அல்லது**
  ஆ) வங்கியியல் அல்லது வேறு தொடர்புடைய துறைசார் தொழிற்தகைமைகள்
- ➢ வங்கித்துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பத்து வருட அனுபவம்.
- ➢ அபிவிருத்தி வங்கியியல், வங்கிச் செயற்பாடுகள், கடன் இடர் முகாமைத்துவம், நிதி மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற வங்கியியல் அம்சங்களில் மிகுந்த ஆற்றல்மிக்கவராக இருக்க வேண்டும்.
- ➢ சிறந்த ஆளணி முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ பண்புகள் உள்ளவராக இருக்கவேண்டும்.
- ➢ வயது - 62 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

### பிரதான உள்ளக கணக்காய்வாளர் (CIA)

**முக்கிய தேவைகள்**

- ➢ ஆகக் குறைந்தது பின்வருவனவற்றில் ஒன்றில் தொழில் நிபுணத்துவ உறுப்புரிமை
  அ) இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம்.
  ஆ) இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பட்டய கணக்காளர் நிறுவனம்.
  இ) சான்றளிக்கப்பட்ட இங்கிலாந்து கணக்காளர் கழகம்/சங்கம்.
  ஈ) சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் இங்கிலாந்து/ இலங்கை அல்லது வேறு எந்தவொரு தொழிற்சார் தகைமை.
- ➢ வங்கி / நிதி நிறுவனம் ஒன்றில் உள்ளக கணக்காய்வு பிரிவுடன் தொடர்புடைய 05 வருட அனுபவத்துடன் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (உதவி பொது முகாமையாளர் மட்டத்திற்கு சமமான) 08 வருட அனுபவம்.
- ➢ தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு தொழில் நுணுக்கங்களுடன் கையாளக்கூடிய சிறந்த அனுபவம்.
- ➢ ஆளணி முகாமைத்துவம் பற்றி நிரூபிக்கப்பட்ட தள தடங்களுடன் சபை மட்டத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக் கூடிய ஆற்றல்.
- ➢ வங்கித்துறையில் கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள் பற்றிய பரிச்சயம் மற்றும் சர்வதேச நிதியறிக்கைகள் அறிக்கையிடல் நடைமுறை (IFRS) அறிவியலுடனான பிரகடனப்படுத்தக் கூடிய தேவைப்பாடுகள்.
- ➢ வயது - 57 வருடங்களுக்கு குறைவானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### உதவி பொது முகாமையாளர் – நிதி

**முக்கிய தேவைகள்**

- ➢ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திலிருந்து பெற்றுள்ள பட்டத்துடன் CA/CIMA/ACCA அங்கத்துவத்துடனான தொழில்சார் தகைமைகள்.
- ➢ சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (பிரதான முகாமையாளர்) ஆகக்குறைந்தது 03 வருட அனுபவத்துடன் வங்கி/ நிதி நிறுவனத்தில் 12 வருட அனுபவம்.
- ➢ வங்கித்துறையில் தொழில்சார் தகைமை மேலதிக நன்மை பயக்கும்.
- ➢ நிதி முகாமைத்துவம்/ இடர் முகாமைத்துவம்/கணக்காய்வு அனுபவம் மேலதிக தகைமைகளாக கருதப்படும்.
- ➢ வயது - 50 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

### உதவி பொது முகாமையாளர் – சந்தைப்படுத்தல்

**முக்கிய தேவைகள்**

- ➢ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திலிருந்து பெற்ற பட்டத்துடன் சந்தைப்படுத்தல் துறையில் முழுமையான தொழில்சார் தகைமை.
- ➢ சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (பிரதான முகாமையாளர்) ஆகக்குறைந்தது 03 வருட அனுபவத்துடன் வங்கி/ நிதி நிறுவனத்தில் 12 வருட அனுபவம்.
- ➢ வங்கித்துறையில் முழுமையான தொழிற்சார் தகைமை மேலதிக தகைமையாக கருதப்படும்.
- ➢ முக்கிய தரப்பினர்களுடன் திடமான உறவுகளை கட்டியெழுப்பக் கூடிய ஆற்றலை நிரூபிக்கக் கூடியதாக இருக்கவேண்டும்.
- ➢ ஊக்கப்படுத்தும் திறன், பன்முக பணிகள் மற்றும் சிறந்த தொடர்பாடல், தனிமனித மற்றும் ஆளணி முகாமைத்துவ திறன்கள் இருப்பது கட்டாயமாகும்.
- ➢ இலத்திரனியல் சந்தைப்படுத்தல், சந்தை ஆய்வு, வணிக குறியிடுதல் என்பவற்றில் முன்னைய வெளிப்பாடுகள் மிகவும் விரும்பத்தக்கது.
- ➢ வயது - 50 வருடங்களுக்கு குறைவாக இருக்கவேண்டும்.

### உதவி பொது முகாமையாளர் – சட்ட அலுவல்கள்

**முக்கிய தேவைகள்**

- ➢ Attorney -at- Law மற்றும் பிரசித்த நொத்தாரிசாக இருக்கவேண்டும்.
- ➢ வங்கி/ நிதித்துறையில் 05 வருட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்துடன் சட்ட அதிகாரியாக 12 வருட அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உயர் நீதிமன்றத்தில் சிரேஷ்ட மட்டத்தில் சட்ட அதிகாரியாகவும், ஒட்டுமொத்த சட்ட நடவடிக்கைகளையும் கையாளும் திறமை இருக்க வேண்டும்.
- ➢ மனிதவள முகாமைத்துவம் பற்றிய மேலதிக தகைமைகள் மேலதிக நன்மை பயக்கும்.
- ➢ வயது - 57 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

**சம்பளம்/கொடுப்பனவுகள்**
தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் வங்கித் தொழிற்துறையில் நிலவும் தரநிர்ணயங்களுக்கு ஈடான ஏனைய அனுகூலங்கள் அளிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**
பூர்த்தி செய்யப்பட்ட உங்களது சுயவிபரக் கோவையை, சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் தொடர்பு கொள்ளக்கூடிய விபரங்களுடன் 2022 ஜனவரி 12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய விடயத்தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு Careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி,
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 42 52 62 | www.rdb.lk

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்கள்

நாட்டிற்கான முதன்மையான வீடமைப்பு வங்கியான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது வாடிக்கையாளர் திருப்தியான மற்றும் பரந்தளவிலான பல்வகையான உயர்மட்ட சேவைகளை முன்வைப்பதற்காக வங்கியின் செயற்பாட்டை மீள்கட்டமைப்பு செய்யும் பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. எனவே, சுறுசுறுப்பான தலைமைத்துவ பாங்குகளை காட்சிப்படுத்தியுள்ள மற்றும் வர்த்தக இலக்குகளை அடைவதற்காக முழுமையான கடப்பாடையுடைய உரித்தான தகைமைகள் மற்றும் அனுபவமுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து பின்வரும் பதிவுக்கான விண்ணப்பங்களை நாம் அழைக்கின்றோம்.

### கிளை முகாமையாளர்

**பிரதான பொறுப்புக்கள்:**
உற்பத்தி விற்பனைகள், இலாபத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் கையேற்பு ஆகியவற்றின் பிரகாரம் குறிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்காக வங்கியை தலைமைதாங்கல், உள்ளக கட்டுப்பாடுக்களுக்கு அமைந்தொழுகுதல் மூலம் வங்கியின் செயற்பாடுகளின் சீரான இயக்கத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் வங்கியின் வியாபார இலக்குகளை நோக்கி பணியாற்றுவதற்காக ஊழியர்களுக்கு ஊக்கமளித்தல்.

**தகைமைகள்:**
அ) பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வங்கித்துறை, வியாபார நிர்வாகம், வர்த்தகம், பொருளாதாரம், கணக்கியல் மற்றும் நிதி ஆகியவற்றில் பெற்றவொரு இளமாணிப் பட்டம்.

**அல்லது**

ஆ) **ICASL/CIMA/UK**/ACCA/UK ஆகியவற்றின் இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றவரொருவர் அல்லது IBSL இன் இணைந்த அங்கத்தவரொருவர்.

**அனுபவம்:**
வங்கி கடன் தரங்கணிப்பு, கடன் பயன்படுத்துகைகள், இடர் செயற்பாடுகள் மற்றும் அறவீடுகளின் செயற்பாடுகள் ஆகிய துறைகளில் நிறைவேற்று அலுவலராக வங்கியொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதியிடல் நிறுவனமொன்றில் அனைத்தையுமடங்கிய வகையில் 6 வருட அனுபவத்தில் ஆகக் குறைந்தது பட்டப்பின் தகைமைப் பட்ட அனுபவத்துடன் நான்கு (04) வருடங்கள் உதவி முகாமையாளராக பணியாற்றிருத்தல். விண்ணப்பதாரியானவர் சிறந்த தொடர்பாடல் மற்றும் சமூகரீதியான திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வேதனம்:**
சம்பள அளவுத்திட்டம்: மாதாந்தம் 97,410-2,120x20-139,810 ரூபாவுடன் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள். இந்த அடிப்படையிலான மாதாந்த திரட்டிய சம்பளமானது அண்ணளவானதாகும்.

**வயது:**
40 வயதிற்கு மேற்பட்டதாகவிருத்தல் ஆகாது (இருப்பினும், அரச துறை அமைப்பொன்றில் ஏற்கனவே பணிபுரிவோருக்கு வயதெல்லை பிரயோகப்படுத்தப்படமாட்டாது)

### உதவி முகாமையாளர் – கடன்

**பிரதான பொறுப்புக்கள்:**
வங்கியின் கடன் கொள்கையினுள் கடன் பகுப்பாய்வு மூலமாக கடன் பயனுள்ள வாடிக்கையாளரை அடையாளம் காணல் மற்றும் விபரங்களை திரட்டுவதன் மூலம் தரமுள்ள கடன் குறிப்புக்களை கட்டியெழுப்பல். கிளை முகாமையாளரின் வழிகாட்டல் மற்றும் பணிப்புரைகளின் கீழ் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுக்கு அமைந்தொழுகல் மூலம், உடன்பட்டுள்ள இலக்குகளை நோக்கி கடன் பயன்படுத்துகைகள் மற்றும் ஆகக் குறைந்த NPL ஐ உறுதிப்படுத்தல்.

அ) பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட் பல்கலைக்கழகமொன்றிலிருந்து வங்கித்துறை, வியாபார நிர்வாகம், வர்த்தகம் அல்லது பொருளாதாரம், கணக்கியல் ஆகியவற்றில் வகுப்புடன் பெற்ற இளமானிப் பட்டம் அல்லது நிகரானது.

**அல்லது**

ஆ) பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வங்கித்துறை, வியாபார நிர்வாகம், வர்த்தகம் அல்லது பொருளாதாரம், கணக்கியல் ஆகியவற்றில் வகுப்புடன் பெற்ற இளமாணிப் பட்டம் அல்லது நிகரானது அத்துடன் இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் இடைநிலை அல்லது தகுதிச்சான்றிதழ் பரீட்சை அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர் பரீட்சையின் I ஆம் மற்றும் II படிநிலை அல்லது IBSL இன் DABF அல்லது IBSL இன் இணைந்த அங்கத்தினர்.

**அனுபவம்:**
வங்கியொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதியிடல் நிறுவனமொன்றில் கடன் தரங்கணித்தல், கடன் பயன்படுத்துகைகள், இடர் செயற்பாடுகள் மற்றும் கடன் அறவீட்டு செயற்பாடுகள் ஆகியவற்றில் 3 வருட நிறைவேற்று அனுபவம். விண்ணப்பதாரியானவர் சிறந்த தொடர்பாடல் மற்றும் சமூகரீதியான திறன்களையுடையவராகவிருத்தல் வேண்டும். கணினி அறிவு கட்டாயமானது.

**வேதனம்:**
சம்பள அளவுத்திட்டம்: மாதாந்தம் 79,740-1,500x20-109,740 ரூபாவுடன் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள். இந்த அடிப்படையிலான மாதாந்த திரட்டிய சம்பளமானது அண்ணளவானதாகும்.

வயது: 40 வயதிற்கு மேற்பட்டதாகவிருத்தல் ஆகாது (இருப்பினும், அரச துறை அமைப்பொன்றில் ஏற்கனவே பணிபுரிவோருக்கு வயதெல்லை பிரயோகப்படுத்தப்படமாட்டாது)

### உதவி முகாமையாளர் – லொஜிஸ்டிக்ஸ்

**பிரதான பொறுப்புக்கள்:**
வங்கியின் லொஜிஸ்டிக்ஸ் மற்றும் நிர்வாக பிரிவிற்கான நாளாந்த நிர்வாக உதவியை வழங்குவதே இப்பணியின் அனைத்தையுமடக்கிய நோக்கமாகும். வியாபாரிகளுக்கான ஒழுங்கு செய்தல் மற்றும் பெறுகைகளுக்கான கட்டளைகளுக்கு பொறுப்பாகவிருத்தல் மற்றும் தொடர்பாடல்கள் / கோரிக்கைகளை கையாளுதலை முன்னெடுத்தல். வழங்கப்பட்ட பெறுகை வழிகாட்டல்களுக்கமைவாக ஆவணங்களை தயாரித்தல் மற்றும் கண்காணித்தல். இந்த நிலைப்பாடானது பதிவேட்டு முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாகவிருக்கும்.

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருத்து / நிறுவனமொன்றிலிருந்து வழங்கல் சங்கிலி முகாமைத்துவம், லொஜிஸ்டிக்ஸ், வியாபார நிர்வாகம் ஆகியவற்றில் பெற்ற இளமானிப் பட்டம் அல்லது எந்தவொரு நிகரான தகைமை.

**அனுபவம்:**
புகழ்வாய்ந்தவொரு அமைப்பொன்றில் வழங்கல் சங்கிலி செயற்பாடுகள் / லொஜிஸ்டிக்ஸ் ஆகியவற்றில் 3 வருட நிறைவேற்று அனுபவம். வங்கியொன்றில் லொஜிஸ்டிக்ஸில் பெற்ற அனுபவம் கட்டாயமாக சேர்க்கப்பட்ட தகைமையாகும். விண்ணப்பதாரியானவர் சிறந்த தொடர்பாடல், சிக்கல் தீர்த்தல் திறன்கள் மற்றும் சுதந்திரமாக வேலை செய்வதற்கான சமூகரீதியான திறன்கள் மற்றும் ஊழியர்களை தலைமைதாங்கி முன்னெடுத்தல் மற்றும் ஊழியர்களை முகாமைப்படுத்தல் ஆகியவற்றுடன் பல எண்ணிக்கையான செயற்றிட்டங்களையும் கையாளுதல்.

**வேதனம்:**
சம்பள அளவுத்திட்டம்: மாதாந்தம் 79,740-1,500x20-109,740 ரூபாவுடன் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்.

வயது: 40 வயதிற்கு மேற்பட்டதாகவிருத்தல் ஆகாது (இருப்பினும், அரச துறை அமைப்பொன்றில் ஏற்கனவே பணிபுரிவோருக்கு வயதெல்லை பிரயோகப்படுத்தப்படமாட்டாது)

**பொதுவான நிபந்தனைகள்:**

**தெரிவு செய்யும் முறைமை** – வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறையின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படல்.
நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவு மேற் கொள்ளப்படும்.

**ஏனைய அனுகூலங்கள்:**

- சேமலாப நிதிய பங்களிப்பு – தொழில் வழங்குநரினால் 15% அத்துடன் 10% ஊழியரினால். வங்கியானது ஊ ந நி இற்கு பங்களிப்பை வழங்கும்.
- இரு மாதங்களுக்கான திரட்டிய சம்பளம் வருடாந்த மிகையூதியமாக வழங்கப்படும்.
- சேவையில் உறுதிப்படுத்திய பின்னர், இலகு தவணை விகிதத்தில் வீடமைப்பு கடன்.
- வங்கியின் மருத்துவ திட்டத்தின் கீழான அனுகூலங்கள்
- பாவிக்கப்படாத மருத்துவ விடுமுறைக்கான பணம் வழங்கல்.

**விண்ணப்பங்களின் மூடும் திகதி:** 2022.01.17

**விண்ணப்பிக்கும் நடைமுறை:**
ஆர்வமும் தகைமையுமுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் சுயதரவு மற்றும் அவர்களின் கல்விசார்/தொழில்சார் ஆவணங்களின் பிரதிகள் மற்றும் இரு தொழில்சார் உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு இலக்கங்கள் ஆகியவற்றை கீழேயுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்புதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் கடுமையான இரகசியமான முறையில் பரிசீலனை செய்யப்படுவதுடன் எவ்வயையான ஆதரவு தேடலும் தகைமையை நீக்குவதற்கான வழியை வகுக்கும். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக தெரிவு செய்தலை தீர்மானித்தல், பிற்போடல் அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்தல் அல்லது செயற்பாட்டை மற்றும்/அல்லது தெரிவு செய்வதற்கான தகவுத் திறனை மாற்றுவதற்கான உரிமையை வங்கியானது கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதாகும்.

**careers@smib.lk என்ற வழியால் மாத்திரமே விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.**

# 'பாரம்பரியம்' நிகழ்ச்சியில் திக்வல்லை ஸும்ரி



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் எதிர் வரும் செவ்வாய் இரவு ( 04.01. 2022) 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் 'பாரம்பரியம் ' நிகழ்ச்சியில் அதிதியாக, திக்வல்லை ஸும்ரி கலந்துகொள்கிறார். இலங்கை துறைமுக அதிகார சபையின் உதவி முகாமையாளராக, பணிபுரியும் இவர், பாடசாலை காலம் தொட்டே, கலைத்துறையில் ஆர்வம் கொண்ட ஒருவராக திகழ்கிறார். முஸ்லிம் சேவைக்கு, தன் எழுத்துக்களாலும், குரல் வளத்தாலும் பல்வேறு பங்களிப்புகள் வழங்கியுள்ளார். அதிகமான நாடகங்கள் எழுதியும், ஊடுருவல் சமூகச்சித்திரம் தொடராக எழுதியும், ஏராளமான நேயர்கள் மத்தியில் பிரபலம் தேடிக்கொண்ட திக்வல்லை ஸும்ரி, ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒலிபரப்பாகி நேயர்கள் மத்தியில் ஜனரஞ்சகம் பெற்றுவரும் 'சஞ்சாரம்' நிகழ்ச்சிக்கு 300 க்கும் மேற்பட்ட பிரதிகள் எழுதியமை குறிப்பிடத்தக்கது. இவர் சிறந்ததொரு, மேடை நிகழ்ச்சி தொகுப்பாளருமாவார். நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப்பணிப்பாளர், பாத்திமா ரினூஸியா, தயாரித்தளிக்க, எம்.எஸ்.எம்,ஜின்னா தொகுத்தளிக்கிறார்.

# திருக்கோவில் பொலிஸ்...

(03 ஆம் பக்கத் தொடர்)

*பொலிஸ் நிலையத்தினுள் இடம்பெறும் சிறு சம்பவமாக இருந்தாலும் தினேஸ் ரவீந்திர அதனை உடனடியாகவே தனது தாயிடம் கூறுவார். விடுமுறை கிடைத்த உடன் அவர் தனது தாயைப் பார்க்கச் செல்வதை அனைவரும் அறிந்திருந்தனர்.*

*இக்கொலைகளுக்கு விடுமுறை வழங்கப் படாமையே காரணம் எனப் பேசப்பட்டாலும் அவரது வாக்குமூலத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். “ரவீந்திர ஓமந்தையிலிருந்து திருக்கோவில் பொலிஸ் நிலையத்திற்கு வந்த கடந்த மார்ச் 21ம் திகதியிலிருந்து கடந்த டிசம்பவர் 18ம் திகதி வரையில் 54 நாட்கள் விடுமுறை பெற்றிருக்கின்றார். கடந்த 17ம் திகதி அம்பாறையில் பூஸ்டர் தடுப்பூசியைப் போட்டுக் கொண்ட உடனே அவர் சென்றது எத்திமலையில் அமைந்துள்ள வீட்டுக்காகும். மறுநாளே கடமைக்குத் திரும்பியிருந்தார்.*

*ரவீந்திரவுக்கு வீடு செல்வதற்கான தேவை இருந்தாலும் அவர் “லீவு விண்ணப்ப படிவம்” கூட சமர்ப்பித்திருக்கவில்லை. எனினும் வாகன போக்குவரத்துப் பிரிவின் சார்ஜன் ஒருவருடன் விடுமுறை தொடர்பில் பேசியுள்ளார். அப்போது, விடுமுறையில் சென்றவர் கடமைக்குத் திரும்பிய பின்னர் விடுமுறை பெறுமாறு அந்த சார்ஜன் கூறியுள்ளார். அதனால் மன வேதனைக்கு உள்ளான போதிலும் ரவீந்திர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் அது தொடர்பில் எதுவுமே பேசவோ, முரண்பட்டுக் கொள்ளவோ இல்லை.*

*இது உட்சபட்ச கோபத்தின் அடிப்படையில் இடம்பெற்ற சோக நிகழ்வு என்பது விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருக்கின்றது. எனினும் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ரவீந்திர பொலிஸ் நிலையங்களில் பிரபலமாகயிருப்பது “லாரா” என்ற பெயரிலாகும். என்றாலும் ரவீந்திரவின் தாயாருக்கு அவர் “சூட்டி புதா” வாகும் கடந்த புதன்கிழமை விசாரணையில் ஈடுபட்டு வரும் அதிகாரிகளால் ரவீந்திரவின் தாயான 62 வயதுடைய ஏ. எம். தயாவதியிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன் போது அவர் கூறியதாவது,*

*“சூட்டி புதா (எனது இளைய மகன்) சிறு வயதிலிருந்தே கோழி இறைச்சி சாப்பிடுவான் சேர்..... சின்ன விடயத்திற்கும் அழுது கத்துவான்.... நிறைய தடவைகள் நஞ்சு அருந்தவும் போனான்.... உண்மையிலேயே எனது மகனின் காலில் ஏற்பட்ட காயத்திற்குப் பின்னர் பொலிஸ் நிலையங்களில் அனேக பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தான்....” என கூறினார்.*

*ரவீந்திர தினேஸ் குமார எவ்வித மனநோயால் பாதிக்கப்பட்டவரோ அல்லது அவ்வாறான நோய்க்கு சிகிச்சை பெற்று வருபவரே அல்ல. எனினும் அவர் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், அக்கரைப்பற்று நீதவான் முஹம்மது ஹம்சாவினால் இம்மாதம் 06ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டதுடன், மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரவீந்திர தினேஸ் கடந்த செவ்வாய்க்கிழமை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதன் போது அவர் கடுமையான மன நோய்க்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இதனடிப்படையில் சிறைச்சாலையினால் ரவீந்திர சிகிச்சைக்காக அக்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.*

*பொலிஸ் நிலையத்தினுள்ளேயே மூவர் கொல்லப்பட்டதன் பின்னர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இரவு நேரக் கடமைக்குப் பொறுப்பான சார்ஜன் காதரும் மறுநாள், அதாவது நத்தார் தினத்தன்று அதிகாலை 6.20 மணியளவில் உயிரிழந்தார். அந்த உயிரிழப்புடன் இச் சம்பவத்தினால் இடம்பெற்ற உயிரிழப்புக்களின் எண்ணிக்கை நான்கானது.*

*இப்படுகொலைகள் தொடர்பான விசாரணைகள் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கமல் சில்வா மற்றும் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ். எம். வை. செனவிரத்ன ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய அம்பாறை பிரிவுக்குப்பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த ரத்நாயக்காவின் நேரடி கண்காணிப்பில், அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ. ஏ. வாஹிட்டின் நடவடிக்கையில் உகன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எல். டி. என். கருணாரத்ன தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் நிமல் ஜயலத் உள்ளிட்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*



# காடுகள் மற்றும் ஊர் மக்களை பாதுகாக்கும் மாற்று வாழ்வாதாரம்

மிகக் குறைந்த அளவுக்கு வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கை காடுகளின் சதவீதத்தை பாதுகாப்பது மற்றும் பேணுவதற்கு, ESCAMP என அழைக்கப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத் திட்டம் தற்போது வெற்றிகரமான பல செயற்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

அதன்படி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ திட்டத்தின் (ESCAMP) அடிப்படை இலக்கு, சுற்றுச்சூழலை பாதுகாப்பது மற்றும் அவைகளை மேம்படுத்துவதாகும். அதற்காக, காடுகளுக்கு அருகில் வாழ்கின்ற கிராமிய மக்களினால் காட்டுக்கு ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கும், அவர்களுக்கு மாற்று வாழ்வாதார வழிகளை அறிமுகப்படுத்தல், காடுகளுக்கு அருகாமையில் இருக்கும் ஊர்களில் வாழ்கின்ற மக்கள் முகம் கொடுக்கின்ற யானை - மனித மோதல் மற்றும் யானை - மனித பகையை சகவாழ்வு ஒன்றாக மாற்றுவதற்கும் முடியுமான பல நிகழ்ச்சிகளையும் தற்போது ESCAMP, மிக வெற்றிகரமான வகையில் செயற்படுத்தி வருகிறது.

தற்போதைய திட்டங்களை, குறித்த பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் முழுமையான ஆதரவு மற்றும் பங்கேற்புடன் அவர்கள் செயற்படுத்தி வருகின்றனர் என்பதோடு, சுற்றுச்சூழல் கட்டமைப்புகளினால் கிடைக்கின்ற பிரதிபலன் மற்றும் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட சுற்றாடல் தொழில்துறையை மேம்படுத்துவதற்கு, அதன்மூலம் காடுகளைச் சூழ இடைப் பாதுகாப்பு வலயங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவது இதன் நோக்கங்களில் ஒன்றாகும்.

செயற்திட்டத்தின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு ஆலோசகர் கலாநிதி டன்ஸ்டன் பெர்னாண்டோ, இந்தத் தேவைகளை தெளிவுபடுத்தியது இவ்வாறாகும்,

“காடுகள் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் வாழ்கின்ற பெரும்பாலான மக்கள் இந்த சுற்றாடல் வளங்களில் தங்கி உள்ளவர்களாவர். அவர்கள், தமக்கு அருகில் இருக்கும் காடுகளில், கிழங்கு, இலை, காய்கள், தேன் போன்ற உணவுகள், மூலிகைச் செடிகள் மற்றும் விறகு போன்ற பல்வேறு வணிகப் பொருட்களை தொடர்ந்து பயன்பாட்டுக்குப் பெறுகின்றனர். அவர்களின் பொருளாதார பிடிமானங்கள் இந்த சில வணிகப் பொருட்களிலேயே உள்ளது.

எமது திட்டத்தின் அவதானத்தை பெற்ற ஹுருலு பிரதேசம் போன்று சிகராஜ காட்டை சூழவும் நாம் இந்த விடயத்தைப் பார்த்தோம். என்றாலும் இந்த சில விடயங்களை காடுகளில் இருந்து அவ்வாறு பெற்றுக்கொள்வது சட்டவிரோதமானது. அதேபோன்று, அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீதிமன்ற செயற்பாடு வரை இவ்வாறான பிரச்சினைகள் பாரதூரமாகச் செல்லும். அவ்வாறெனில், உண்மையிலேயே இந்த மக்கள் தம்மை சூழவிருக்கும் காடுகளில் தங்கி இருக்கும் அளவை குறைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் வணிகப் பொருட்களுடன் பின்னிப்பிணைந்திருக்கும் பொருளாதாரம் உடைபெடுக்கும்போது அவர்கள் வாழ்வாதாரத்திற்காக என்ன செய்வது... இந்த பிரச்சினைக்கு தீர்வொன்றாக மாற்று வாழ்வாதாரப் பாதையை அமைத்துக் கொடுப்பதற்கு ESCAMP திட்டம் நடவடிக்கை எடுத்தது...”

அதன்படி, இன்றாகும்போது இந்த திட்டத்தின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது, குடிமக்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாக இணைந்த குழுக்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற பேச்சுவார்த்தைக்கு அமைவாக இடம்பெறுகிறது.

அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட வாழ்வாதார வழிகளில் வெற்றிகரமான வாழ்வாதாரமாக கால்நடை வளர்ப்பை குறிப்பிடலாம். கறவை மாடுகள், ஆடுகள் மற்றும் கோழிகள் வளர்ப்புக்கு ஈடுபடுத்துவது தற்போது பல ஊர்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு, எதிர்பார்க்கப்படும் பிரதிபலன்கள் வர்த்தகத்தின் மூலம் ஈட்டப்பட்டிருப்பதோடு, தற்போது பலுகஸ்வெவ, ஆசிரிகமவில் இவ்வாறான செயற்திட்டங்கள் வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப்படுகிறது.

விட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை, இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட மற்றொரு வாழ்வாதார முறையாகும். இங்கு வீட்டுத் தேவையை பூர்த்தி செய்வதோடு, மேலதிக வருவாயை பெறுவதும் பிரதான நோக்கமாகும். அதனால், உணவு மற்றும் பழங்களாக பயன்படுத்த முடியுமான பலா போன்ற தாவரங்களுக்காக அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்மூலம் வீடுகளில் விறகுத் தேவைகளை வீட்டுத் தோட்டத்தில் இருந்தே பூர்த்தி செய்வதற்கு முடிவதோடு, அதன்மூலம் விறகுகளை சேகரிப்பதை குறைப்பதற்கு முடியுமாகிறது.

சிங்கராஜ காட்டை சூழவிருக்கும் பகுதியில் செயற்படுத்தப்பட்டுள்ள மற்றொரு வாழ்வாதார முறை, கித்துல் பாணி மற்றும் கருப்பட்டி தயாரிப்பதாகும். இவை குறிப்பிடத்தக்க வருவாய் ஒன்றை பெற முடியுமான பொருட்களாகும். அதேபோன்ற, மற்றொரு வாழ்வாதார வழியாக, பூமர விற்பனையில் ஈடுபடுத்தலை குறிப்பிடலாம். மற்றொரு பிரதேசத்தில் பகுதி அளவாக பூர்த்தி செய்யப்பட்ட தும்புத் தூரிகைகளின் விற்பனைக்காக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று தையல் பயிற்சி மற்றும் தேனீ வளர்ப்பு மேலும் சில பகுதிகளில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது சுற்றுலா தொழில்துறையில் சுற்றுலா பயணிகளின் ஆர்வத்தை அதிகம் பெற்றிருக்கும் ஒரு துறையான Home stay திட்டம் காடுகளைச் சூழவுள்ள ஊர்களுக்கு கொண்டு செல்வதற்கு ESCAMP திட்டத்தினால் முடிந்துள்ளது. சிங்கராஜவின் குடாவ பகுதியிலும் கன்னொலி பகுதியிலும் சுற்றுலா பயணிகள் தங்குமிட இல்லங்களை (Home stay) ஏற்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அங்கு கிராமிய வீட்டில் தங்குவதற்கு விரும்புகின்ற சுற்றுலா பயணிகளுக்கு வசதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.



உப்புல் நாலக்க
Homestay வர்த்தகர் - கன்னெலிய



நதீஷா ஜீவன்தி, சுற்றுச்சூழல் சார்பு பை உற்பத்தியாளர் - சிங்ஹகம, ஹபரணை



சஞ்சய மதுசங்க
அலங்கார மீன் வளர்ப்பு - கன்னெலிய



சரத் அபேசிங்க
பயிர்ச்செய்கையாளர் - வத்துபலகம



கே. டபிள்யூ. நிலன்தி
பழ ஜாம் உற்பத்தியாளர் - கோரலேகம

அதன்படி தேர்வு செய்யப்பட்ட வீடுகளில் வசதிகளுடனான அறை ஒன்று மற்றும் குளியலறை வசதிகளை சுற்றுலா பயணிகளுக்காக நிர்மாணிக்கப்படுகிறது. இதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஓர் அலகுக்கு இரண்டு இலட்சம் ரூபா அளவான பண உதவி திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் அடையாளம் காணப்பட்ட மற்றொரு சமூகப் பிரச்சினையாகும். அதாவது, தேவையான நிதியில் பற்றாக்குறை மற்றும் தமது உற்பத்திகளை விற்பனை செய்வது தொடர்பான பிரச்சினைகள் புதிய வாழ்வாதாரம் ஒன்றை ஆரம்பிக்கும்போது மக்களுக்கு இருக்கும் சிக்கலாகும். ஏதேனும் வாழ்வாதாரம் ஒன்றை மேற்கொள்வதற்கு தேவையான அறிவு மற்றும் திறமை அவர்களிடம் உள்ளது. சில நேரம் முதலீடு ஒன்றை மேற்கொள்வதற்கு பணம் இருந்தபோதும், துணிந்து செயற்படுவதற்கு அவர்கள் ஈடுபாடு காட்ட மாட்டார்கள்.

எவ்வாறாயினும், தற்போது இந்த வாழ்வாதாரத்தை முன்னேற்றும் செயற்பாடுகளுடன் இருக்கின்ற பெரும்பாலானவர்கள் பெண்களாவர். அதாவது, மொத்த பயனாளர்களில் 55% க்கு மேற்பட்டவர்கள் பெண்களாவர். அதன்படி ஆண், பெண் சமத்துவத்திலும் திட்டத்தின் நியாயத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று இந்த செயற்பாடு தொடர்பில் மீளாய்வு ஒன்றை திட்டக் காலத்தின் பின்னரும் மேற்கொள்வதற்கு ஏற்பாடாகியுள்ளது. அதற்காக வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படுகிறது. அது இந்த பணியின் பேண்தகு நிலைக்கு காரணமாகும். அதேபோன்று இங்கு மக்கள் அடிப்படையான அமைப்பாக அவர்கள் ஒன்றிணைந்திருப்பதும் பேண்தகு நிலைக்கு பங்களிப்புச் செய்கிறது. இது தொடர்பில் கருத்துக் கூறிய கலாநிதி டன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் கூறும்போது,

“தற்போது உள்ள கொவிட் பெருந்தொற்று நிலைமை காரணமாக சற்று குறைவாகக் காணப்பட்டபோதும், இந்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட அனைத்து இடங்களிலும் போல் இந்த திட்டம் வெற்றிகரமாக இயங்குகிறது. அதேபோன்று, மறுபக்கம் இது சுற்றுச்சூழல் மற்றும் மனிதனுக்கு இடையிலான தொடர்பை அதிகரிக்கின்ற நன்மை பயக்கும் பணியாகும்... என்றார்.

என்றபோதும், வத்துபொலகம மஹவவில் வசிக்கும் சரத் அபேசிங்க இது பற்றி கூறும்போது, “யானை பிரச்சினை தீர்க்கப்பட்ட பின் நாம் மீண்டும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோம்...” என்றார்.

“நான் விவசாய குடும்பத்தின் இளைஞனாக இருந்தவன். ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறுகளில் காலப்பகுதியில் இருந்து எமது ஊருக்கு ஏற்பட்ட காட்டு யானை அச்சுறுத்தல் காரணமாக எமது ஊர்களில் அதிகமானவர்கள் விவசாயத்தில் இருந்து விலகினார்கள். அவர்கள் வேறு வேலைகளை தேடிச் சென்றார்கள். நானும் இராணுவத்தில் இணைந்து, இருபத்தி இரண்டு ஆண்டுகள் சேவை புரிந்தேன். சேவைக் காலம் முடிந்த பின் ஓய்வு பெற்றேன். அப்போது கூட ஊரில் யானை அச்சுறுத்தல் தீவிரமாக இருந்தது. விவசாயம் செய்வது கடினமானது என்பதால் யானை வேலி ஒன்றை அமைக்க முயற்சித்தபோதும் முடியாமல்போது.

ஆனால் 2020 ஆம் ஆண்டில் ESCAMP திட்டத்தின் ஒத்துழைப்புடன் யானை வேலி ஒன்றை அமைக்க வாய்ப்புக் கிடைத்தது. அது ஊரில் உள்ள அனைவரதும் பங்களிப்போடு அமைக்கப்பட்ட ஒன்று. அதன்மூலம் இத்தனை காலமும் ஊருக்கு இருந்த யானை அச்சுறுத்தல் குறைந்தது. இத்தனை காலம் ஊரில் கைவிடப்பட்டிருந்த காணிகளில் பயிர்ச் செய்ய ஆரம்பித்தோம். பழைய விவசாயிகளும் பயிர்செய்கைக்கு வந்தார்கள். உளுந்து, சோளம் போன்ற பயிர்கள் நன்றாக வளர ஆரம்பித்தன.

அந்த நேரத்தில் நான் தேர்ந்தெடுத்தது உளுந்து பயிர்ச்செய்கையை. அவ்வாறு கிடைத்த சந்தர்ப்பத்துடன் நான் அதிக விலைக்கு விற்பதற்கு முயற்சித்தேன். யாழ்ப்பாணத்தில் அதிக விலைக்கு விற்க முடியும் என்று தெரிந்தது. முதலாவது பயிர்ச்செய்கையிலேயே எனக்கு நல்ல வாய்ப்பு மற்றும் இலாபம் கிடைத்தது. பெரும்பாலானவர்களுக்கு நல்ல இலாபம் கிடைத்தது. மீண்டும் பயிரிடக் கிடைத்தது மகிழ்ச்சி...

காட்டிலேயே தங்கி இருந்த ஊர் மக்கள், இன்று தேனீ வளர்ப்பில் வாழ்வை வெற்றிகொள்ளும் முறை பற்றி, ஐக்கிய பிதுனு எல விவசாய சங்கத்தின் தலைவர், அஜித் விக்ரமசிங்க இவ்வாறு விளக்கினார்.

“எமது ஊருக்கு யானையின் பிரச்சினை இருந்தது. யானை வேலியின் தேவை அதிகம் இருந்தபோதும் அது சரியாகச் செய்யப்படவில்லை. ஆனால் இந்த திட்டத்துடன் எமக்கு மீண்டும் ஆரம்பிக்க முடிந்தது. தற்போது ஊருக்கு பாதுகாப்பு உள்ளது.

முன்னர் எமது ஊர் மக்கள் காட்டுக்குச் சென்று மரம் வெட்டி, மண்வெட்டி பிடி செய்தும் விறகுக்கு மரம் வெட்டியும் தான் வாழ்ந்தார்கள். ஆனால் தற்போது எமது ஊர் மக்களினால் காட்டுக்கு பாதிப்பு இல்லை, விறகு உடைப்பதும் இல்லை. விவசாய செயற்பாடுகள் போன்றவற்றை செய்து வருகிறோம். ஊரில் உள்ளவர்களுக்கு அரசின் வேலை வாய்ப்புத் தேவையில்லை. எமக்கு ESCAMP திட்டத்தினால் மாற்று வேலைக்கான வாய்ப்பை செய்து தந்தார்கள். வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை, தேனீ வளர்ப்பு போன்ற பல வாழ்வாதாரங்கள் உள்ளன. எம்மவர்கள் அவற்றால்தான் தற்போது வருவாய் ஈட்டுகிறார்கள்.

நானும் ஊரைச் சேர்ந்தவன் என்ற வகையில் தேனீ வளர்ப்பையே தேர்வு செய்தேன். அதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் அறிவு திட்டத்தினால் கிடைத்தது. தேனுக்கு அதிக கேள்வி இருக்கிறது. விற்பனை செய்ய முடியும். மற்றது நான் செய்யும் வேலையுடன், தேனீ வளர்ப்பு மேலதிக வருவாயாக உள்ளது. இப்போது எமது குடும்பத்தின் வருவாய் நிலை ஓரளவுக்கு இருக்கிறது. தேவையான மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் என்னால் முடியும்...

சிங்ஹகம, சிசிலச சமூக அடிப்படை சங்கத்தின் தலைவர், நதீகா ஜீவன்தி அவர்கள் கூறியதாவது, ESCAMP திட்டம் அறிமுகப்படுத்திய மாற்று வாழ்வாதார வழிகள் ஊடாக ஊருக்கு புதிய வருவாய் வழிகள் உருவாகி உள்ளது என்றார்.

“சிங்ஹகமவில் 150-200 அளவான குடும்பங்கள் வாழ்கின்றன. காட்டில் இருந்து விறகு வெட்டி விற்பது அவர்களின் வருவாயாக இருந்தது. அதன் மூலம் தான் நாளாந்த வருவாயை ஈட்டினார்கள். ஆனால் அது நிலையான வருவயாக இருக்கவில்லை. மறுபுறம், மக்கள் அதிகம் துன்பப்பட்டார்கள். ஏனென்றால், இவை அனுமதி இன்றி செய்த வேலை என்பதாலாகும். அரச அதிகாரிகளிடம் இருந்து அதிக பிரச்சினைகள் வந்தன.

ESCAMP திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின் நாம் சங்கத்தின் ஊடாக செயற்பட்டோம். அப்போது காட்டில் இருந்து விறகு வெட்டுவதற்கு பதில் மாற்று வாழ்வாதார முறை ஒன்றை அறிமுகப்படுத்தினோம். அதற்காக திட்டத்தில் இருந்து எமக்கு உதவி கிடைத்தது. சங்கத்தின் உறுப்பினர்கள் வருவாய் ஈட்டும் பல்வேறு வழிகளில் ஈடுபட்டார்கள். கோழி வளர்ப்புக்கு விருப்பம் காட்டுகின்றவர்களுக்கு இருபத்து இரண்டு விலங்குகள் என பெற்றுக்கொடுத்தோம். வீட்டுத் தொட்ட பயிர்ச்செய்கையை தேர்வு செய்தவர்களுக்கு அதற்கு தேவையான உபகரணங்கள் கிடைத்தன. தையலுக்காக பயிற்சி பெற்றவர்களுக்கு தையல் இயந்திரங்கள் பலவும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. நான் உட்பட நால்வர் பைகள் தைக்கும் தொழிலில் ஈடுபட்டோம். இயற்கை சார்ந்த பைகளையே நாம் தைக்கிறோம். அவைகள் நன்றாக விற்பனையாகின்றன. எமக்கு அன்றாடம் தேவையான வருவாயை ஈட்டுவதற்கு இதன்மூலம் முடியுமாக உள்ளது. தற்போது எமக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

மறுபுறம், இந்த சங்கத்தின் மூலம் பணம் சேமிக்கப்பட்டிருப்பதால், இது போன்ற விடயங்கள் எதிர்காலத்திலும் செய்வதற்கு முடியுமாக இருக்கும். எம்முடன் இணைகின்ற புதியவர்களுக்கு மாற்று வாழ்வாதாரத்தை அறிமுகப்படுத்துவதற்கு நாம் விரும்புகிறோம்...

இத்தனை காலமும் காட்டை சார்ந்து மாத்திரம் வாழ்வை நடத்தி வந்த பெரும்பாலான ஊர் மக்கள் ESCAMP திட்டத்தின் மூலம் இன்று சிறு தொழில்முயற்சியாளர்களாக மாறியுள்ளார்கள். மதிப்பு மிக்க தொழில் ஒன்றில் ஈடுபடும் கௌரவத்தை, அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

இதன்மூலம் புதிதாக சிந்திப்பதற்கும் புதிய வருவாய் வழிகளை ஏற்படுத்துவதற்கும் அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். சூற்றுச்சூழல் மற்றும் காட்டை பாதுகாத்து, அவர்களின் வாழ்வை கட்டியெழுப்புவதற்கான திட்டம் ஒன்றாக ESCAMP செய்த பங்களிப்பு வெற்றியளித்திருப்பதை, இந்த ஊர் மக்கள் தமது வாழ்க்கையை உதாரணமாகக் கொண்டு காண்பித்துள்ளார்.

**இனோக்கா பெரேரா பண்டார**



**நிகழ்வைக் காண**
**QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**





வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

வன பாதுகாப்பு திணைக்களம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ திட்டம்

இது தான், நீங்கள் எமக்கு எழுத வேண்டிய முகவரி:
ESCAMP திட்டப் பணிப்பாளர்,
இலக்கம் 82, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
escamp.pd@gmail.com

# மூங்கிலாறு கிராமத்தையே உறைய வைத்த சிறுமி நிதர்சனாவின் கொலை

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய ஒரு கிராமங்களில் ஒன்றாக அமைந்துள்ள மூங்கிலாறு வடக்கு கிராமத்தில் நிகழ்ந்த செல்வி நிதர்சனாவின் மரணம் ஆரம்பத்தில் அந்த மக்களிடம் ஒரு அச்சத்தை ஏற்படுத்திய நிலையில் வேலியே பயிரை மேய்ந்த கதையாக சிறுமியின் கொலைக்கு அவரது குடும்பமே காரணம் என ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூங்கிலாறு கிராமத்தையே உறைய வைத்த சிறுமி யோகராசா நிதர்சனாவின் கொலை தொடர்பிலான விசாரணைகளில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிந்துள்ளன.

கடந்த டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வீட்டில் இருந்து காணாமற்போன நிதர்சனா, தனது வீட்டிலிருந்து ஏறக்குறைய 400 மீற்றர் தொலைவிலுள்ள அவரது அக்காவின் வீட்டுக்கு செல்வதாகக் கூறிவிட்டு வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். ஆனால் அதன் பின்னர் அவரைக் காணவில்லை என அவரது குடும்பத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து கிராம மக்கள் பொலிசார் இராணுவத்தினர் எனப்பலரும் இணைந்து தேடுதல்களை மேற்கொண்டன் விளைவாக உருக்குலைந்த நிலையில் நிதர்சனா சடலமாக மீட்கப்பட்டாள்

நான்கு நாட்களின் பின்னர் கடந்த 19ஆம் திகதி சிறுமியின் சடலம் கண்டெடுக்கப்பட்ட இடம் ஏற்கனவே சிறுமி காணாமல் போனபின்னர் கிராம மக்களும் இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து தேடுதல் மேற்கொண்ட பகுதிதான். ஆனால் அங்கு ஆரம்பத்தில் மேற்கொண்ட தேடுதல்களின் போது சடலம் அங்கிருக்கவில்லை. இந்தச் சடலம் எவ்வாறு அப்பகுதிக்கு வந்தது என்ற மர்மம் தொடர்ந்த நிலையில், உறவினர்களால் சொல்லப்பட்டவை அனைத்தும் உண்மையை மறைப்பதற்காக கட்டப்பட்ட கதைகள் என்பது ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் நிதர்சனா கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவரது சகோதரியின் கணவரை பொலிஸார் கைது செய்து விசாரணையை ஆரம்பித்தனர். பின்னர் இந்த கொலை சம்பவம் தொடர்பில் அவரது குடும்ப உறுப்பினர்களான தாய், தந்தை, அக்கா, மற்றும் மைத்துனர் முறைகொண்ட ஒருவர் ஆகியோரை தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர். இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சிறுமியின் தந்தை இந்தக் கொலை தொடர்பான பல திடுக்கிடும் உண்மைகளை வாக்குமூலமாக பொலிசாருக்கு வழங்கியிருந்தார்.

தனது மகள் நிதர்சனா இரண்டு மாத கர்ப்பிணியாக இருந்ததாகவும் அவரது தாய் கருவை கலைப்பதற்காக சிறுமியை மயக்கமடையச் செய்யும் நோக்கில் ஏதோவொரு மருந்தை வழங்கியதாகவும் தந்தை தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். சிறுமியின் கருவினை கலைக்கும் முயற்சியின் போது அவர் உயிரிழந்திருக்கலாம் என்பது தற்போதைய விசாரணையில் தெரியவந்திருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் பற்கள் கழன்று விழுந்திருந்தமை பிரேதப் பரிசோதனையின் போது தெரியவந்த நிலையில், மேலதிக பரிசோதனைக்காக பல்லின் மாதிரியொன்றை கொழும்பிற்கு அனுப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சிறுமி நிதர்சனாவின் சகோதரியின் கணவரின் வீட்டிலும் தடயவியல் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

நிதர்சனாவின் சடலம் நீண்ட நேரம் நீரில் ஊறியிருந்ததால் சிறுமியின் வீட்டிற்கு அருகிலுள்ள சில கிணறுகளின் நீரை இறைத்து பொலிசார் மேலதிக பரிசோதனைகளை மேற்கொண்டனர்

சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் ரீ.சரவணராஜா சென்று பார்வையிட்டுள்ளதுடன் சிறுமியின் வீட்டிலும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டார். இளநீல நிற கறைபடிந்திருந்த மேசையொன்றினை சான்றாக மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு கட்டளையிட்டிருந்தார்

சம்பவ இடத்தில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஜ்.சமுத்திரஜீவ மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரும் விசாரணைகளை முன்னெடுத்தனர்

திருகோணலையிலுள்ள பாடசாலையொன்றில் தரம் 7இல் கல்வி கற்ற யோகராசா நிதர்சனாவின் நினைவாக அவர் பயன்படுத்திய கற்றல் உபகரணங்கள் மாத்திரமே இன்று அவரின் வீட்டில் எஞ்சியுள்ளன.

ஒரு குழந்தை இவ்வுலகில் பிறக்கும் போது, அதற்கு சரியான அன்பும் அரவணைப்பும் கிடைக்குமிடத்து அக்குழந்தை நற்பிரஜையாக வளரும், மாறாக இவ்வாறான உரிமைகள் மறுக்கப்படுமிடத்து அக்குழந்தையினுடைய எதிர்காலம் வேறு திசையில் சென்றுவிடும்.

சிறுவர்களின் உடல், உள ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்றவாறு அவர்களது குடும்ப சூழல் அமைகின்ற போது, அக்குழந்தையினுடைய வளர்ச்சியும் எதிர்காலமும் என்பன சிறப்பாக அமையும்.

மாறாக, குடும்பச்சூழலில் காணப்படுகின்ற குறைபாடுகள் அக்குழந்தையின் உடல்,உள வளச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

நிதர்சனாவுக்கு நிகழ்ந்தது போன்ற வன்கொடுமைகள் இன்றும் பல சிறுமிகளுக்கு நிகழ்ந்த வண்ண மேயுள்ளன. ஆனால் அவை வெளிச்சத்துக்கு வரும் போதுமட்டும்அதுபற்றிப் பேசி விட்டு நாமும் மறந்து விடுகின்றோம். எங்கோ ஒரு மூலையில் இன்னொரு நிதர்சனாவுக்கு நிகழும்வரை.



**ஜது பாஸ்கரன்...**









## கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடிய சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகம்










சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகம் அண்மையில் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடியது. இறை செய்தயை அருட்தந்தை. மனோவா சந்தோஷம் வழங்கினார், எழும்பூர் வெஸ்லி தேவாலய போதகர் மற்றும் தலைவர், அருட்தந்தை ரிச்சர்ட்சன், பிரார்த்தனைகளை வழிநடத்தினார்.. சென்னையில் உள்ள செவிப்புலனற்றோர் பாடசலை மாணவர்கள் கரோல் கீதங்ளை இசைத்தனர். இந்தியாவுக்கான துணைத் தூதுவர் துரைசாமி வெங்கடேஸ்வரனும் படத்தில் காணப்படுகின்றார்.





கொழும்பு சைவமங்கையர் வித்தியாலயத்தின் 2019 /2020ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரிமண்டபத்தில் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. 2019ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் சகலதுறையிலும் சித்தியடைந்த மாணவி ஹம்சிகா மோகனசுந்தரம், 2020ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் சகலதுறையிலும் சித்தியடைந்த மாணவி அபிராமி தில்லை நடராசா ஆகியோருக்கு பிரதம அதிதியான வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கேடயம் வழங்கி கௌரவிப்பதையும், கழக முகாமையாளர், அங்கத்தவர்களையும் காணலாம்.



தமிழ்நாடு இந்து அறநிலை துறை அமைச்சர் கே. சேகர்பாபு இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார். கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயத்தின் அறங்காவலர் கே. சுந்தரலிங்கம் தமது ஆலயத்திற்கு விஜயம் செய்யுமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ள இந்திய தமிழக அமைச்சர் சேகர்பாபு விரைவில் தான் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளார். அறங்காவலர் சுந்தரலிங்கத்தின் அழைப்பினை இலங்கை இந்திய பத்திரிகை தொடர்பாளர் மணவை அசோகன் தமிழக அமைச்சரை நேரில் சந்தித்து கையளித்த போதே அவர் தனது இலங்கை விஜயம் தொடர்பான விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

## கலைஞர் கலைக்கமல் 2021 கலாபூஷண தேசிய விருதுக்குத் தெரிவு



ஜனரஞ்சக பாடகரும், கவிஞரும், எழுத்தாளருமான எம்.ஜே. கலைக்கமல் 2021 ஆண்டுக்கான கலாபூஷண தேசிய விருத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

பன்முக ஆளுமை மிக்க இவர் இலங்கையிலும் இந்தியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பல மேடைகளில் பாடியது உட்பட இதுவரை 5000க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை எட்டியுள்ளார்.

கடந்த 40 ஆண்டுகளாக கலை இலக்கியத் துறைகளில் புகழ்பெற்றுவரும் கமல் கவிக்கோ அப்துல் ரகுமானால் தெரிவு செய்யப்பட்டு 2016 கும்பகோணம் இசை இலக்கிய மாநாட்டில் 'இசைச்சுடர்' விருதும் பொற்கிழியும் வழிங்கி கௌரவிக்கப்பட்டார்.

"ஈழத்து இசைமுரசு" "இசைமதி" அருளிசை அரசு போன்ற பட்டங்களையும் கௌரவங்களையும் பல்வேறு அமைப்புகளினால் வழங்கி பாராட்டப்பெற்றுள்ளார்.

வலம்புரி கவிதா வட்டத்தின் சிரேஷ்ட ஸ்தாபக உறுப்பினரான கலைக்கமல் கொழும்பு புதுக்கடை பிரபல பாடகர் மூசிக்தூரி மர்ஹூம் மஹ்தூம் ஏ. காதர், ஜனுல் ஸெக்கியா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் கொழும்பு ஹமீத் அல் ஹூசைனி கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

**கே. ராம்ஜி உலகநாதன்**

## கலாபூஷண விருதுக்கு தெரிவு




மலாய் மொழியை தாய் மொழியாகக் கொண்ட மலாய் வம்சத்தைச்சேர்ந்த டிவாங்ஸோ தமிழ்ப் பற்றினால் பல காத்திரமான ஆக்கங்களை எழுதி பல கவிதைப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளார். மூத்த ஊடகவியலாளரும் சிரேஷ்ட கலைஞருமான கலைவாதி கலீஸ்ரீ மலாய்கவி எனும் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டுள்ளார். வலம்புரி கவிதாவட்டத்தின் முன்னணி கவிஞர்களில் ஒருவராக விளங்கும் இவர் வானொலி – தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியுள்ளார்.

கொழும்பு அல் ஹிதாயா கல்லூரியின் பழைய மாணவரான இவர் துவான் யஹியா, டிவாங்ஸோ றஹ்மா பீபீ தம்பதிகளின் புதல்வராவார்.



புதுடில்லியில் நடைபெற்ற அடுத்த தலைமுறைக்கான ஜனநாயக வலையமைப்பு மகாநாட்டில் கலந்துகொண்ட இலங்கை பிரதிநிதிகளான இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் காவிந்த ஜயவர்தன, கொழும்பு மாநகரசபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பக்லேயை இந்திய இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது எடுத்த படம். படத்தில் தூதரக செய்தி தகவல் மற்றும் காலாசாரத்துறை செயலாளர் எல்டோ மத்யூ பன்னோசே பொருளாதார கலாசார செயலாளர் இர்ணா தாக்கூர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



BE BETTER INFORMED!

Dinamina Daily News Thinakaran

News you can trust now free on your mobile phone.

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE

MIHILAK

# 2022 இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்...

அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் சுபீட்சமான நோக்கு கொள்கைப் பிரகடனத்தை செயலுருவாக்கி விவசாயிகளின் உற்பத்திக்கு கூடிய விலையை வழங்கி உற்பத்தி செய்யப்படும் சில உற்பத்திகள் சாதாரண விலையில் எம்மிடமிருந்து பாவனையாளர்களுக்கு...

நிலையான விவசாயத்திற்கு இயற்கையின் கைகோர்ப்பு



மேல் மாகாண விவசாய அமைச்சு

204, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொலைபேசி: 011-2092652 E-mail: planningagri@gmail.com


கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

# தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் 1979 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டுக் கல்வித்துறையில் பாடநெறிகளை நடாத்தும் முதன்மை நிறுவனமாகும்.







# விளையாட்டுக் கல்விப் பாடநெறிகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரல் - 2022

## பயிற்றுவிப்பாளர் உயர் பாடநெறி - பலம் மற்றும் உடற்றகைமைகள் பயிலுகை (NVQ 6)

விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஒருவராக கடமைகளை மேற்கொள்ளும் போது அது தொடர்பாக தேவைப்படும் உடற்றகைமைகள் மட்டம் தொடர்பான அறிவை மேம்படுத்துதல், விளையாட்டு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுவதில் பயிற்றுவிப்பாளர்களை ஈடுபடுத்துதல் மற்றும் அது தொடர்பாக அவசியமான வழிகாட்டலை வழங்குதல் இப்பாடநெறியின் போது மேற்கொள்ளப்படும்.

**பாடநெறியின் காலஅளவு** : 12 மாதங்கள் (06 மாதங்கள் கோட்பாட்டு ரீதியிலான கற்கை மற்றும் செயன்முறைப் பயிற்சிகளும் மற்றும் 06 மாதங்கள் ஆய்வு மற்றும் துறைசார் பயிற்சிகளும் கொண்டதாகக் காணப்படுவதுடன் கிழமை நாட்களில் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப.4.00 மணி வரை பாடநெறி இடம்பெறும்).

**பாடநெறியின் ஊடக மொழி** : சிங்களம் / ஆங்கிலம்

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா. 45,000.00

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் விளையாட்டு டிப்ளோமாவில் சித்தியடைந்திருத்தல் மற்றும் குறைந்தது தேசிய விளையாட்டுப் பெருவிழாவில் மாகாண, தேசிய பாடசாலை போட்டிகளில் வெற்றி பெற்ற பயிற்றுவிப்பாளராக இருத்தல்.

அல்லது

2. 03 வருடங்களில் (கற்கை விஞ்ஞான பீடம்) உடலநல விஞ்ஞான டிப்ளோமா சித்தி பெற்றிருத்தல் மற்றும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவில் மாகாண, தேசிய மட்ட பாடசாலை போட்டிகளில் வெற்றி அணியின் பயிற்றுவிப்பாளராக இருத்தல்.

## விளையாட்டு விஞ்ஞான பாடநெறி (NVQ5)

விளையாட்டு மற்றும் உடல்நல கற்கை துறையில் தொழில் புரியும், தொழில் செய்ய விரும்புபவர்களுக்கு விஞ்ஞான விளையாட்டு பயிற்சி தொடர்பில் 1973 இல 25 தேசிய விளையாட்டு சட்டத்தின் மூலம் நிருவப்பட்டுள்ள ஒரேயொரு டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெவ்வேறு விளையாட்டுக்கள் தொடர்பில் மற்றும் விளையாட்டு விஞ்ஞானம் தொடர்பில் கோட்பாட்டு அறிவு மற்றும் பிரயோக அறிவு ஆகியவற்றை வழங்குவது நோக்கில் இப்பாடநெறியானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**இப்பாடநெறியை கற்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் அங்கீகாரம் பெற்ற NVQ5 மட்ட சான்றிதழ் வழங்கப்படும்.**

**பாடநெறியின் காலஅளவு** : 12 மாதங்கள் (முழு நேர பாடநெறி)

**பாடநெறியின் ஊடக மொழி** : சிங்களம் / ஆங்கிலம்

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா. 60,000.00

**பாடநெறிக்காக இணைத்துக்கொள்ளப்படும் வயதெல்லை :**

வயது 18-35 (அரச சேவையாற்றுபவர்களுக்கு வயதெல்லை 45ற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.)

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. கல்விப்பொதுத் (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழியில் மற்றும் கணிதம் / எண் கணிதம் உள்ளிட்ட இரண்டு முறைக்கு குறைந்த தவணைகளில் 06 பாடங்களில் குறைந்தது 03 சிறப்பு சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

2. அங்கீகாரம் பெற்ற விளையாட்டு மற்றும் உடல் நல கற்கை தொடர்பிலான கல்வியத்தில் 06 மாத பாடநெறியை நிறைவுசெய்திருத்தல்.

அல்லது

3. முப்படையில், பொலிஸில் அல்லது சிவில் பாதுகாப்புப் பிரிவில் பயிற்சி நிறுவனத்தில், பாடசலையில் அல்லது உடல் நல பயிற்சி ஆலோசகராக 06 மாதத்திற்கு குறையாமல் ஆரம்ப மற்றும் உயர் பாடநெறியை வெற்றிகரமாக சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4. பாடசலை ஒன்றின் ஆசிரியராக அல்லது மாவட்ட நிர்வாக நிறுவனத்தில் விளையாட்டு மைதான ஆலோசகராக அதனுடன் சார்ந்த துறையில் 05 வருட முன்அனுபவத்துடன் விளையாட்டுத் துறையில் சிறப்பு திறமையை பெற்றிருத்தல்.

அல்லது

5. ஏதேனும் ஒரு விளையாட்டு தொடர்பில் தேசிய விளையாட்டு அணியில் அங்கத்தவராக இருக்க வேண்டியதுடன் ஏதேனும் சர்வதேச போட்டியில் கலந்து கொண்டிருத்தல்.

அல்லது

6. விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவில் மாகாண மட்ட போட்டியில் முதல் அல்லது இரண்டாம் இடத்தை பெற்றிருத்தல். அவ்வாறு இல்லாவிடின் தேசிய விளையாட்டு சங்கமொன்றினால் நடாத்தப்படும் தேசிய அளவிலான போட்டியில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தை பெற்றிருத்தல்.

**குறிப்பு** : அரச, மாகாண சபை மற்றும் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவகங்கள் மற்றும் அதிகாரபூர்வ திணைக்களங்களில் சேவையாற்றும் அதிகாரிகளினால் முன்வைக்கப்படும் விண்ணப்பங்கள், குறித்த திணைக்களத்தின்/ நிறுவகத்தின் தலைவரினால் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## (ஏரோபிக்ஸ் உடற்பயிற்சி ஆலோசகர் பயிற்சி பாடநெறி)

(Aerobics instructor training course - 2022

இப்பாடநெறியின் மூலம் தொழிற்துறையில் உடற்பயிற்சி ஆலோசகர்களாக செயற்பட தேவையான அறிவு வழங்கப்படுவதுடன் இதன் மூலம் உடலின் தன்மை மற்றும் களிப்புடன் கூடிய உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல், தற்காலத்தில் அதிகம் காணக்கூடிய பரவமுடியாத நோய்களை கட்டுப்படுத்தலுக்கான உடற்பயிற்சி செயற்பாடுகளை வடிவமைத்தல் என்பன தேவையான தகைமைகளை பெற்றுத்தரும்.

**பாடநெறியின் காலஅளவு** : 100 மணித்தியாலங்கள் (ஞாயிறு/திங்கள்)

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா. 20,000.00

**பாடநெறியின் ஊடக மொழி** : சிங்களம்

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளுவதற்கான தகைமைகள் :**

க.பொ.த சா.த பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் விளையாட்டு பின்னனியைக் கொண்டிருத்தல்.

## விளையாட்டு உபாதைகள் முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி

விளையாட்டு வீரர்களை உபாதைகளில் இருந்து தவிர்த்துக்கொள்ளுதல் மற்றும் விளையாட்டு உபாதைகள் முகாமைத்துவம் தொடர்பான ஆரம்ப அறிவை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் விளையாட்டு பயிற்சிவிப்பாளர்கள் மற்றும் உடல் நல ஆலோசகர்களை இலக்காகக் கொண்டு இப்பாடநெறியானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**பாடநெறியின் காலஅளவு** : 100 மணித்தியாலங்கள் (வாரத்தின் இரண்டு நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 04.00 மணி வரை பாட நெறி இடம்பெறும்.)

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா. 17,250.00

**பாடநெறியின் ஊடக மொழி** : சிங்களம் / ஆங்கிலம்

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளுவதற்கான தகைமைகள் :**

விளையாட்டு பயிற்சிவிப்பாளர்கள் அல்லது உடல் நல ஆலோசகர்களாக சேவையாற்றிய முன்அனுபவத்தை கொண்டிருத்தல்.

## விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி - படிமுறை I

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாக வெற்றியை நோக்கி பயணிக்க முயற்சிக்கும் பயிற்சியாளர்களுக்கு (நிறுவனமயமாக்கப்பட்ட மற்றும் சுவேட்சை பயிற்றுவிப்பாளர்கள்) விளையாட்டு அறிவு மற்றும் ஆற்றுகை அபிவிருத்தியினை மேற்கொள்ளுவதற்காக இப் பாடநெறி நடாத்தப்படுவதுடன் கபடி, மல்யுத்தம் மற்றும் டைகொண்டோ ஆகிய விளையாட்டுக்கள் தொடர்பாகவுள்ள பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும்.

**பாடநெறியின் காலப்பகுதி** : 06 வாரங்கள் (60 மணித்தியாலங்கள் - வாரத்தின் இரண்டு நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 04.00 மணிவரை பாட நெறி இடம்பெறும்.)

**பாநெறியின் ஊடக மொழி** : சிங்களம் / ஆங்கிலம்

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா. 7,000.00

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. திறந்த மட்டத்தில் மாகாண முதலாம், இரண்டாம் அல்லது மாகாண, தேசிய விளையாட்டொன்றில் மாகாண முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்ட வீர, வீராங்கனைகள் ஆவதுடன் அல்லது வீர, வீராங்கனைகளை பயிற்றித்திருத்தல்.

அல்லது

2. பாடசாலை மட்டத்தில் மண்டலங்களின் முதல், இரண்டாம் அல்லது மாகாண, தேசிய போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்ட வீர, வீராங்கனைகள் ஆவதுடன் அல்லது வீர, வீராங்கனைகளை பயிற்றித்திருத்தல்.

அல்லது

3. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் வழங்கப்படும் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறியை சித்தி பெற்றிருத்தல்.

## விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி - படிமுறை II

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாக சரியான தொழில்நுட்ப அறிவினை மேலும் வழங்கும் முன்நோக்கிய படிமுறையாக மெய்வல்லுநர் விளையாட்டுக்களான ஜுடோ, பூப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுத் துறையுடன் தொடர்புடைய பாடநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடநெறியின் காலப்பகுதி** : 12 வாரங்கள் (120 மணித்தியாலங்கள்-கிழமையொன்றிற்கு 02 நாட்கள் வீதம் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப. 04.00 மணி வரை பாடநெறி இடம்பெறும்).

**பாடநெறியின் ஊடக மொழி** : சிங்களம் / ஆங்கிலம்

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா. 10,000.00

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி - படிமுறை I **(ஜுடோ, பூப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம்)** இல் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

2. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் வழங்கப்படும் விளையாட்டு டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

3. தேசிய/மாகாண/மாவட்ட மட்டத்தில் வெற்றிகளை ஈட்டிய விளையாட்டு வீர்ர்களைப் பயிற்றுவித்திருத்தல்.

## பயிற்றுவிப்பாளர் ஆற்றுகை அபிவிருத்திப் பாடநெறி

இலங்கையின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களது விளையாட்டு அறிவு மற்றும் ஆற்றுகை அபிவிருத்தியினை மேற்கொள்ளுவதற்காக இப் பாடநெறி நடாத்தப்படுவதுடன் **கூடைப்பந்து மற்றும் கராத்தே** ஆகிய விளையாட்டுக்கள் தொடர்பாகவுள்ள பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**இப்பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் பயிற்றிவிப்பாளர்களுக்கு இலங்கையில் குறித்த விளையாட்டை பயிற்றுவிப்பதற்கான தகைமைகளைக்கொண்ட விளையாட்டு பயிற்றுனர்களாக அங்கீகாரம் கிடைக்கப்பெறுவதுடன், அப்பயிற்றுனர்கள் இவ்வமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டு "பயிற்றுனர் பதிவு சான்றிதழ்" வழங்கப்படுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.**

**பாடநெறியின் காலப்பகுதி** : 03 மாதங்கள் (சனிக்கிழமை/ஞாயிறு நாட்களில் மு.ப. 9.00 இலிருந்து பி.ப. 4.00 மணி வரை பாடநெறி இடம்பெறும்).

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா. 8,000.00

**பாடநெறியின் ஊடக மொழி** : சிங்களம் / ஆங்கிலம்

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. பயிற்றுவிப்பாளர் ஒருவராக 03 வருட அனுபவம்

அல்லது

2. சர்வதேச/ தேசிய/ மாகாண/ மாவட்ட மட்டத்தில் வெற்றிகளை ஈட்டிய விளையாட்டு வீர்ர்களைப் பயிற்றுவித்திருத்தல்.

முக்கியமானவை : இப்பாட நெறிகளுக்கான ஆட்சேர்ப்பிற்கு கோரப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக முன்வைக்கப்படும் மேலதிக திறன்கள் மற்றும் விளையாட்டு கற்கை தகைமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை

அனைத்து பாடநெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை **www.niss.gov.lk** எனும் இணையத்தளத்தில் அல்லது வார நாட்களில் **மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 04.00** மணி வரை தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். **பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2022 ஜனவரி 27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

**குறிப்பு : விண்ணப்பப் படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடநெறி/ விளையாட்டை குறிப்பிடல் வேண்டும்.**



பணிப்பாளர்,

**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்**

100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07.

தொலைபேசி : 011-2684 921 தொலைநகல் : 011-2667709 இணையதளம் : www.niss.gov.lk

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

## GLOBAL MOTOR TRADING

### HAPPY NEW YEAR 2022



**RANGE ROVER VOGUE LONG WHEEL BASE AUTOBIOGRAPHY**
Year of manufacture - 2018, Long wheel base, White with tan interior, Company registered, Mileage -26,000 miles, Leather electric memory seats, Massage seats, Head up display, Fixed panaromic sunroof, Height Control, Power boot, Rear entertainment



**AUDI A3 ETRON FACELIFT VERSION!!**
UNREGISTERED, Plug in hybrid, Year of Manufacture - 2017, Mileage - 5000km, 201 BHP, Full LED lights, Paddle Shift, Adaptive cruise Control, Audi pre sense safety system, Retractable winker mirrors, Full leather electric seats, Original reverse cam with 360 sensors, Lumbar support, Aluminum package trim, High spec car



**JAGUAR F-TYPE 3L V6**
Year of manufacture 2016, Owners - 1, Mileage -14,000 miles, Maintained only by agents(access), Extended premium Leather package, Panoramic roof, 24 way controlled electric memory seats, Meridian signature sound system, Sports exhaust, Turbine wheels, One of the highest spec cars in the country



**TOYOTA LANDCRUISER VX V8**
Parliament model, Double spare wheel, Year of manufacture- 2012, Mileage -119,000km (records available), Maintained by Toyota Lanka, Leather electric seats, Sunroof, Cool box, Cruise control



**BMW X5 DIESEL**
YEAR OF MANUFACTURE- 2015, Mileage - 97,000kms, Leather electric memory seats, M sport body kit, 4 zone climate control, Cruise control, Day time running lights, Power boot, Winker mirrors, Auto braking, Lane assit, Reverse camera with guidance



**RANGE ROVER SPORT AUTOBIOGRAPHY UNREGISTERED**
year of manufacture -2016, 3 litre diesel hybrid, Mileage 2800km, 7 seater, Leather electric memory seats, massage seats, 3rd row electric seats, 2 tone interior, Panoramic sunroof, , off road pack, meridian sound system, dynamic wheels, negotiable upon inspection only!!



**RANGE ROVER VOGUE AUTOBIOGRAPHY**
Standard Wheel Base, 2018, Rosello Red exterior, Ivory & Beige leather interior (Two-Tone), Head-up display, Meridian DOLBY Digital surround sound system, Panoramic glass sunroof, Led headlamps with Signature DRL, Deployble Auto Side steps, Ambient Lighting interior, Thigh spec, Agent SML Frontier Maintained from day one, First Owner / In MINT Condition (Like brand new), Exchange considered



**NISSAN NAVARA OUTLAW**
Unregistered, Mileage 43,000km, Diesel, Year of manufacture 2008, Leather electric seats, Sunroof, Manual, Highest spec



**LAND ROVER DISCOVERY SPORT 7 SEATER**
2015, 1 owner, 56,900 miles, Company maintained, Leather electric seats, Panoramic roof, Lane assit, Off road pack, Power boot, Reverse camera with guidelines



**MERCEDES BENZ S300 (LWB)**
2011, 67000km, Company Maintained, 2nd Owner, 3500cc, petrol, Black, Cruise Control, Dual Exhaust, Sports Mode, Rear Electric Seats, Electric Blinds, Sunroof, Electric Boot, 2 Color Ambient Lighting, Digital Speedometer



**NISSAN DAYZ 2018 SAFETY**
Year of manufacture - 2018, Owners - 1, 3200km only, Auto braking, Lane assit, Scoop lamps, Fog lights, Touch ac, Highest possible spec, Not a hybrid only petrol

**14, Galle Road, Mount Lavinia | 077 77 32 832 / 077 77 01 779**

## போட்டோ குறும் விளம்பரம்



**Tata 709**
அலுமீனியம் பொடி, உற்பத்தி 2018, ஆகக் கூடிய விலைக்கு விற்பனைக்கு.
071-4395483

*RPT*



நிசான் டீனா **(Nissan Teana)** வி6 – 2010 (பளபளக்கும் வெள்ளி நிறம்) வெளிநாடு செல்பவர். ஊடனடி விற்பனை. 10,275,00 (பேசித்தீர்க்கலாம்). அதிசிறந்த நிலை.
**078 5000 294** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



**De hydrator** இயந்திரம் குறைந்த விலைக்கு மற்றும் நம்பிக்கையான நிறுவனத்தில் விற்பனைக்குண்டு. N.C. இன்ஜினியரிங் (பீவிடி) எல்டிடீ, பிலியந்தல.
**info@ncengineering.lk/ www.ncengineering .lk**
**011 5 882 077 / 077 2 357 502 / 076 66 31 887**

## HOTEL - WANTED

Sea view 3 Star Hotel from Colombo Fort To Wellawatte. Looking for immediate purchase.

**Contact - 077 7 258 280**
E-mail - donandsato@gmail.com

## SATURDAY /SUNDAY BUFFET LUNCH



DAY OUTING SPECIAL OFFERS
SPEND YOUR DAY JUST FOR Rs 1800/-

**Sea Shine Beach Hotel**

- Welcome Drink
- Well Spread Buffet Lunch & Dessert
- Evening Tea with Piece of Cake
- One Rest Room Complimentary for Over 25 Pax
- Swimming Pool with Kids Play Area
- No Corkage for Hard Liquor & Beer

Comfortable 51 Rooms, Reception Hall, Conference Rooms, with modern facilities, Eastern/ Western & Chinese Cuisine, Swimming Pool

WE UNDERTAKE WEDDINGS, PARTIES, SEMINARS & DAY OUTINGS

10 min. to Colombo Airport
15 min. to Colombo City
Overlookong Colombo Harbour City

212, BOPITIYA ROAD, USWETAKEIYAWA, WATTALA.
Tel: + 94 112 985 555, 0114 328 422 Fax: 2 793 060
HOTLINE : 0773 404 975, 0773 633 979
Email: info@seashinebeach.com Web: www.seashinebeach.com

## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

adzsuo@gmail.com




தினகரன் வாரமஞ்சரி

# திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும

**classified@lakehouse.lk**

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு **100/-** ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) **000000377**

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

### 303 உயர்தொழில்துறையாளரின் ஆலோசனை — பொதுவான சேவைகள்

உங்களுக்கு தேவையான வீட்டை எம்மைக் கொண்டு குறைந்த விலையில் நிர்மாணித்துக் கொள்ளுங்கள் கொடுப்பனவுகள் நிர்மாணத்தின் அடிப்படையில் பழைய வீட்டை புதுப்பித்தல் இடைநடுவில் விடப்பட்ட வேலைகள் உட்பட எந்த நிர்மாணத்திற்கும் அழையுங்கள். தூரப்பிரதேசங்களுக்கும் சேவை வழங்கப்படும். 0726003169. 085292

### 308 வெற்றிடங்கள் — சந்தைப்படுத்தல்

பத்தரமுல்லயிலுள்ள ஆடை காட்சிசாலைக்கு விற்பனை பெண்கள் தேவை. ஆங்கில அறிவு பேசுவதற்கும் விற்பனை செய்வதற்கும் தேவை. 0777 362495 என்ற இலக்கத்தை அழைக்கவும். 085740

முன்னணி நிதி நிறுவனமொன்றின் கொள்ளுப்பிட்டிய புதிய கிளைக்கு விற்பனை நிறைவேற்று அலுவலர்கள் தேவை. சந்தைப்படுத்தலில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அழைக்கவும். 077 3627519. 085615

### 310 வெற்றிடங்கள் — எழுது வினைஞர்/ செயலாளர்கள்

அலுவலக உதவியாளர் (Office Peon) வத்தளையில் அமைந்துள்ள் தொழிற்சாலைக்கு அலுவலகத்தில் வேலை செய்ய அலுவலக உதவியாளர் தேவை. இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவும் வழங்கப்படும். நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த வத்தளை. தொ லைபேசி 076 6200300. 085893

### 312 வெற்றிடங்கள் — தொழில் நுட்பம்

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு 55 வயதிற்கு குறைவான அனுபவம் வாய்ந்த (Auto Electricians) தேவை. இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவும் வழங்கப்படும். நேரில் வரவும். இல. 18, வெளிமுன வீதி, ஹேகித்த, வத்த ளை. தொ. பே.இ ல. 076 6200300 085977

### 313 வெற்றிடங்கள் — அச்சடித்தல்

Top Printer - KORS/ KORD மெஷின் மைன்டர் மற்றும் Die Cutters தேவை. No. 105, Temple Road, Ma radana, Colomb o-1 0. Tel: 0 771 675715, 077402 422 5, 0112677847. 084472

### 319 வெற்றிடங்கள் — வீட்டு வேலையாளர்கள்

எமது வயோதிபர் இல்லத்திற்கு அன்பான சமையல் செய்யக்கூடிய பெண் மற்றும் அன்பளிப்புகளை வீடுகளில் சேர்க்கக் கூடிய ஆண் தேவை. 388/ 1/ 1, பேஸ்லைன் வீதி, தெமட்டகொடை, கொழும்பு 09. 077 5509641, 011 2677 6 4 1 , . 070 3318641. 082611

கொழும்பு வீடொன்றில் தங்கி சமையல் மற்றும் சுத்திகரிப்பு வேலைகளிற்கு வயது 3550 அனுபவமுள்ள தமிழில் கதைக்கக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் 25,000/ அழைக்கவும். 0777 362495. 085629

வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் அட்டென்டன்கள் தேவை. 16 இலிருந்து 35 வரையும் அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம் மற்றும் வேலை நிபந்தனைகள் தொடர்பு 75/ 1, W.A. சில்வா மாவத்தை , கொழும்பு 6 259 11 69, 255541 0, 07 77 452447 மற்றும் 075 5091379 ஆகிய இலக்கங்களை அழைக்கவும். 085863

5 வயது மற்றும் 01 வயது பெண் பிள்ளைகளை க வனித்துக் கொ ள்வ தற்கு 45 வயதிற்கு குறைந்த பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். கம்பஹா. அழையுங்கள் 0777173599, 0714493644. 085296

### 320 வெற்றிடங்கள் — ஹோட்டல்கள், பேக்கரிகள்

பொலிஹுல் ஓயவில் உள்ள ஓர் வில்லாவில் கீழ்க்காணும் வேலைப வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. முக்கியமாக வெளிநாட்டு விருந்தினர்களை விருந்தோம்பல் செய்தல். சமையலாளர்/கெயார்டேக்கர், ஹவுஸ்போய்/காட்னர், தொழில்வகை முழுநேரம், மூடப்படும் திகதி 2022.01.14, Email: ruwande@gmail.com. அழையுங்கள் 0771698533. 085096

மொறட்டு வ ஹோட்டலுக்கு cook, cook helper Room boy மற்றும் வெயி ட்டர் தேவை. 011 2 6 50668/ 0777 563940. 085788

### 322 வெற்றிடங்கள் — மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

சட்டரின் பாஸ் மற்றும் மே சன் பாஸ் வேலை தெரிந்த உதவியாளர்கள் உடன் தேவை. குருநாகல், கம்பஹா, அத்துரு கிரியவில் அமைந்து ள்ள வேலைத்தளத்திற்கு. 071 5785678. 085681

### 323 வெற்றிடங்கள் — தொழிலாளர்கள்

கட்டுமான பணிகளுக்கு தொழிலாளர்கள் தேவை. கொழும்பில் கட்டுமான பணிக்கு தகுதியுடன் கூடிய உதவி தொழிலாளர்கள் தேவை. திறமையான உதவியாளர் 2000 2500 + OT. பொது உதவியாளர் 1800 + OT. தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு. 076 7931218/ 076 0955782. 085418

சீமெந்து, புளொக்கல் ஏற்றுவ தற்கு இறக்குவத ற்கு ஊழியர்கள் தேவை. உணவு, தங்குமிடம் வேறு கொடுப்பனவுகளுடன் பிலியந்தலை. 072 7815991. 085645

### 325 தொழில்துறை — பொது

சர்வதேச முன்பள்ளிக்கு சுத்திகரிப்பாளர்களின் சேவை தேவை. மஹரகம பொரலஸ்கமுவ, பிலியந்தலை பிர தேசங்களில் விரும்பத்தக்கது. தொ.பே இல 0113132978. 085064

பிரபல நிறுவனங்கள் பலவற்றில் பாதுகாப்பு வெற்றிடம் உண்டு. 12 மணி நேர சேவை நேரத்திற்கு ரூ. 1200/ ரூ. 1300/ OIC, SSO, LSO வெற்றிட ங்கள் உண்டு. உணவு இலவசம் . வட்டி இன்றிய கடன் அவசரமான எந் த வேலையிலும் முற்பணம். காப்புறுதி காப்பீடு EPF, ETF வத்தளை. ம ட்டக்குளி, கொட்டாஞ்சேனை, யூனியன் பிளே ஸ், திம்பிரிகஸ்யாய, ராஜகிரிய, கொலன்னாவ பிரதேசங்களில் வெற்றிடங்கள் உண்டு. 0777 677872. 085067

புற க்கோட்டையில் அச்சுக் கட தா சி விற்பனை நி லை யத்திற்கு ஊழிய ர்க ள் தேவை. அச்சக ம் அல்லது கடதாசி க டையில் சேவை செ ய் து ள் ள வ ர் க ள் வி ரும்பத்தக்கது. பைண்டிங், பேக் ஒட்டுநர்களு ம் தேவை. 0777313478 085319

விற்பனை உதவியாளர் பள்ளியை விட்டு வெளியேறுபவர் விரும்பத்தக்கது. நேரில் வந்து பேசவும். இல. 05, குவாரி வீதி, கொழும்பு 12. (0756740280). 084325

Field Officer வத்தளையில் அமைந்துள்ள நிறுவனத்தில் இருந்து வேறு நிறுவனங்களுக்கு Documents, Samples கொண்டு சென்று கொடுப்பதற்கு மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் உடைய Field Officer தேவை. சம்பளம் ரூ. 30,000/ முதல் 35,000/ வரை வழங்கப்படும் 40 வயதிற்கு குறைவானவர்கள் சான்றி தழ்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே.இ ல. 076 6200300. 085973

Watcher நி றுவனத்திற்கு சொந்தமான கட்டிடம் ஒன்றை பா துகாத்து தங்கி இருந்து பராமரி ப்பதற்கும் அதை மேற்பார்வை செய்வதற்கும் பாதுகாவளர் (Watchman) தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 076 6200300 இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. 085895

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

கொழும்பு 06 வெள்ளவத்தை, மகளிருக்கான தளபாடங்களுடன் அறைகள், இணைந்த குளியல றை, உணவு அறை, ச மையலறை, குக்கர், சலவை இயந்திரம், குளிர் சாதனம். 75/ 1, W.A. சில்வா மாவத்த , தொ.பே 011 2 5 91169, 07550 9 1 379, 07774 5 2 447. 082160

தெஹிவ ளையில் ஆண் மாணவ ர்கள் மற்றும் தொழி ல் சார்ந்தோருக்கான அறைகள் (உணவு, படிப்பதற்கு மற்று ம் வாகனம் நிறுத்தும் வசதிகளும் உண்டு). 077 4123435. 085431

பொரள்ள கொட்டா வீதியில் 3 அறைகள் 700 ச.அடி கட்டில்கள் 5x10000 ஒரு குழுவினருக்கு அனெக்ஸ் ஒன்றாக உபயோகிக்கலாம். 0722 914443. 085635

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து — கொழும்பு மாவட்டம் — விற்பனைக்கு

கொழும்பு 13 கொட்டாஞ்சேனை 12.5 பேர்ச் பழைய வீடு ஒரு பேர்ச் 3.6 மில்லியன் தரகர் தேவையில்லை. 077 3978298 என்ற இலக்கத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். 085775

கொழும்பு 14 பிரதான வீதிக்கு முகப்பாக 5.9 பேர்ச் பழைய வீடு வியாபாரத்துக்கு உகந்தது. ஒரு பேர்ச் 3 மில்லியன். 077 3978298. 085756

மஹரகம தஹம் மாவத்தை 19.5 பேர்ச் காணியுடன் முழுமையான வீடுகள் இரண்டு விற்பனைக்கு. உண்டு. 077 2457874, 076 6645333. 085642

### 617 வீடு சொத்து — கம்பஹா மாவட்டம் — விற்பனைக்கு

களனி நாகஹமுல்ல தஹம் மாவத்தை, 96 பேர்ச் வெ ற்று நிலம் ஒரு பேர்ச் 110,000/ உடனடி விற்பனைக்கு. 071 439208 2 . 085765

### 621 வீடு சொத்து — கண்டி மாவட்டம் — விற்பனைக்கு

கண்டி உடுதும்பர ரம்மியமான சுதந்திரமான சூழலில் ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்கு 40 பேர்ச் காணித்துண்டு 20 இலட்சம் மட்டுமே. 50% செலுத்தி குடியேறிய பின் மிகுதியை ஒரு வருடத்திற்குள் வட்டியின்றி செலுத்துங்கள். வங்கிக் கடன் வசதிகள் செய்து கொடுக்கலாம். தொடர்பு 0711 210473, 071 9445373. 085679

### 641 வீடு சொத்து — கொழும்பு மாவட்டம் — வாடகைக்கு குத்தகைக்கு

தெஹிவளை, பெயார்லைன் வீதி, சிறிய அனெக்ஸ் வாடகைக்கு. தெஹிவளை முச்சந்திக்கு மற்றும் ரயில் நிலையத்திற்கு மிக அருகில் 15000/ 0777 348764. 085643

வெள்ளவத்தை, மெனிங் பிளேஸ் 59 ஆம் ஒழுங்கையில் 24/ 18/ 1/ 1 எனும் முகவரி யி ல் 2 படுக்கையறைகளுடன் வீடு வாட கைக்கு. தொடர்புகள் 0761263828. 085302

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

# அறிவித்தல்

தற்போது பத்தரமுல்ல, ரஜமல்வத்த ஒழுங்கை ''கொவிஜன மந்திரய'' 80/05 எனும் இலக்கத்தில் உள்ள தேசிய உரச் செயலகம்,

**2022-01-03ஆம் திகதி முதல்**

புதிய சேவை இடத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

**புதிய சேவை இடத்தின் முகவரி**

**தேசிய உரச் செயலகம்,**
**13வது மாடி,**
**D முனையம், 11ஆம் கட்டம்,**
**செத்சிறிபாய,**
**பத்தரமுல்ல.**

தொலைபேசி: 0112876275
தொலைநகல்: 0112876377

மின்னஞ்சல் முகவரி: nfssrilanka@yahoo.com
nfsstock@gmail.com
nfsfeg@gmail.com
nfsquality@gmail.com

**சந்தன லொக்குஹேவகே,**
**பணிப்பாளர்,**
**தேசிய உரச் செயலகம்.**
2022-01-02.

# பாதுகாப்பு அமைச்சு
## ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# விலைமனுக்கோரல்

**இரத்மலானை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தலைமையக கட்டடத்தில் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்தினை வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணி - நிலை I**

**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE/ 2524/2021**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தலைமையக கட்டடத்தில் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்தினை வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்திற்காக தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2022.01.03 ஆம் திகதியிலிருந்து 2022.02.09 ஆம் திகதி வரை மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00 மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூ.15,000/-கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் 2022.01.03 முதல் 2022.02.09 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை சரிபார்க்கலாம் (தொலைபேசி 0710219449 / 0710219384 தொலைநகல் 011-2632430)
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. 2022.02.10 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் (ஏற்பாடடியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 0710219449 / 0710219384 தொலைநகல் 011-2632430, மற்றும் **www.kdu.ac.lk/ocls/-tender-notices** பார்வையிடலாம். விலைமனுக் கோரல்)

**தவிசாளர்**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**இரத்மலான, இலங்கை.**

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2022

## கூட்டுறவு சேவைகள், விற்பனை அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

1.0 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை புதிய தொழில்நுட்ப கலவையுடன் வலுவான, வினைத்திறனுடைய, பல்வகைப்படுத்தப்பட்ட வர்த்தக வலையமைப்பொன்றை உருவாக்குவதற்காக ஒன்றிணைந்த மையப்படுத்தப்பட்ட கொள்வனவு முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யக்கூடிய எந்தவொரு பொருளையும் வழங்கக்கூடிய வழங்குநர்கள் உடனடியாக பதிவு செய்துகொள்ளப்படுவர்.

2.0 இதன் பொருட்டு பின்வரும் தகவல்களை உடன் சமர்ப்பிக்கவும்.

i. வழங்கக்கூடிய பொருள் / பொருள் வகைகளின் அளவு, தரம் அல்லது விபரக்குறிப்பு, வர்த்தக நாமம் அல்லது சான்றுபடுத்தல்

ii. சந்தையில் அதிகூடிய சில்லறை விலை, வழங்குநர்களின் களஞ்சியசாலையிலிருந்து 2022-01-01ஆம் திகதியில் உடன் பணக் கொடுப்பனவில் பெற்றுக்கொள்ளக்கூடிய மொத்த விலை, அன்றைய தினத்தில் கூட்டுறவு விற்பனை நிலையத்திற்கு கொண்டு வந்து கொடுக்கக்கூடிய விலை, கடனுக்கு மொத்த விலையில் பெற்றுக்கொள்ள முடியுமானால், கடன் நிபந்தனை

iii. வழங்குநரின் பெயர் / முகவரி / பதிவுச் சான்றிதழின் பிரதி / இறுதியாக தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையின் பிரதி

iv. அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் / கையடக்கத் தொலைபேசி இலக்கம் / மின்னஞ்சல் முகவரி / இணையதளம்

3.0 எந்தவொரு வழங்குநரும் வருடத்தின் எந்தவொரு வேளையிலும் இதன்பொருட்டு பதிவு செய்து கொள்ளலாம் என்பதுடன், ஏதாவது தெளிவுபடுத்தல் தேவையாயின், அலுவலக நேரத்தினுள் 011-268-1189 எனும் தொலைபேசி இலக்கத்தில் திரு. டீ. டீ. உபுல் சாந்த டி அல்விஸ் அவர்களிடம் விசாரித்தறியலாம்.

4.0 எந்தப் பொருளை, எவ்வளவுத் தொகையை, எந்த விலைக்குக் கொள்வனவு செய்தல் என்பவை பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு உடன்படிக்கை செய்துகொண்டு பொருள் / வழங்குநர்களுக்கான உடன்படிக்கை நிபந்தனையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படும் என்பதுடன் ஏனைய பொருட்கள் வாரத்திற்கொருமுறை 24 மணித்தியாலத்திற்குள் மின்னஞ்சல் முகவரி மூலம் விலைகளைக்கோரி 06 மணித்தியாலத்திற்குள் தீர்மானம் பற்றி அறியத்தரப்படும்.

5.0 எதிர்பார்க்கப்படும் குணாம்சங்களுடன் கிடைக்காத பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும் என்பதுடன் விசாரணை செய்து அவர்களை அபகீர்த்தியாளர் பட்டியலப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6.0 தகவல்களை சமர்ப்பிக்க வேண்டியவர்

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**கூட்டுறவு சேவைகள், விற்பனை அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு,**
**எச். கியூ. கலம்பு கட்டிடம்,**
**இல. 464 A, டீ. பீ. ஜயா மாவத்தை,**
**கொழும்பு 10.**

**தொலைபேசி இலக்கம் : 011-268-1186 கைடக்கத் தொலைபேசி இலக்கம்: 071-445-7846**
**மின்னஞ்சல் முகவரி : info@coopmin.gov.lk**

**- நவீனமயப்படுத்தப்பட்ட கூட்டுறவு -**

# பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சி.

மற்றும்

பீப்பள்ஸ் மைக்ரோ – கொமர்ஸ் லிமிடெட்

# தரமான வாகனங்கள் ஏல விற்பனை

டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் டிராக்டர்கள், இயந்திர உபகரணங்கள் உட்பட 97 வாகனங்கள்

2022 ஜனவரி 8ஆம் திகதி சனிக்கிழமை BMICH இல்' "மிஹிலக்க மெதுர" வில் காலை 9.00 மணி முதல் நடைபெறும்.

முழு நாடும் உள்ளடக்கப்படும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 09 கிளைகளில் நேரடியாக ஏல விற்பனையுடன் தொடர்புகொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அன்றைய தினம் கீழ் குறிப்பிடப்படும் கிளைகளுக்கு பிரவேசிப்பதன் மூலம் உங்களுக்கு இந்த ஏல விற்பனையில் விலை மனுக்களை முன்வைப்பதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

களனி/ கம்பஹா/ குருநாகல்/ தம்புள்ளை/ மொனராகலை/ மாத்தறை/ கண்டி/ வவுனியா/ அநுராதபுரம்

பரீட்சிப்பது ஜனவரி 04 செவ்வாய் கிழமை தொடக்கம் 07 வெள்ளிக்கிழமை வரை காலை 9.00 தொடககம மாலை 5.00 வரையில கீழுளள வாகனக கூடஙகளில.

மருதானை : 0112 688026 / மாபிம : 0112 401031 / கலேவலை : 0662 287355

மாலபே : 0761 064773 / மாத்தறை : 041-3127271 / மொனராகலை : 055-2277461

கலேவல வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| NC BIG-4XXX | MOTOR BIKE | BAJAJ PULSAR 150 | 2019 |
| NC BIJ-6XXX | MOTOR BIKE | HONDA DIO SCV110 | 2019 |
| CP BHL-1XXX | MOTOR BIKE | HONDA SHINE | 2018 |
| EP BFV-7XXX | MOTOR BIKE | SUZUKI GIXXER GSX 150 | 2017 |
| CP BIL-0XXX | MOTOR BIKE | TVS NTORQ | 2019 |
| SP ABU-5XXX | THREE WHEELER | BAJAJ RE | 2019 |
| NW AAR-5XXX | THREE WHEELER | BAJAJ RE | 2014 |
| CP ABD-4XXX | THREE WHEELER | BAJAJ RE | 2015 |
| NC BGC-8XXX | MOTOR BIKE | TVS SCOOTY PEPT + | 2017 |
| NW- RD 9XXX | TRACTOR | TAFE 45DI | 2015 |
| NW-RF-8XXX | TRACTOR | MAHINDRA YUVO 575DI 4WD TRACTOR | 2018 |
| NW-RE-9XXX | TRACTOR | MASSEY FERGUSON MF1540 | 2016 |
| NW-RE-0XXX | TRACTOR | MAHINDRA 575DINSTMKM | 2015 |
| NW-RG-0XXX | TRACTOR | CASE JX45T | 2018 |
| CP-RF-9XXX | TRACTOR | TAFE 45DI | 2018 |
| NP-RE-1XXX | TRACTOR | TAFE 45DI | 2015 |
| CP-AAW-6XXX | THREE WHEELER | TVS KING | 2014 |
| WP-GX-9XXX | BUS | LEYLAND VIKING SEAT 49 | 2002 |
| NW-LI-1XXX | LORRY | TATA LPT709 | 2011 |

மருதானை வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| SG BEB-6XXX | MOTOR BIKE | MAHINDRA ROCKSTAR | 2016 |
| WP-BGH-2XXX | MOTOR BIKE | HERO MAESTRO EDGE | 2018 |
| SG BGQ-4XXX | MOTOR BIKE | BAJAJ V12 | 2018 |
| WP BGU-9XXX | MOTOR BIKE | HERO MAESTRO EDGE | 2018 |
| WP BIG-2XXX | MOTOR BIKE | TVS NTORQ | 2019 |
| SP BGB-7XXX | MOTOR BIKE | SUZUKI LET S | 2017 |
| SP BFP-5XXX | MOTOR BIKE | TVS SCOOTY PEP + | 2017 |
| WP ABS-0XXX | THREE WHEELER | TVS KING GS | 2018 |
| WP AAY-0XXX | THREE WHEELER | BAJAJ RE | 2015 |
| WP AAS-0XXX | THREE WHEELER | BAJAJ RE | 2014 |
| SG AAN-4XXX | THREE WHEELER | BAJAJ RE | 2013 |
| SP BHH-0XXX | MOTOR BIKE | TVS WEGO | 2018 |
| WP BFJ-9XXX | MOTOR BIKE | BAJAJ PULSAR 160NS | 2017 |
| SP AAW-5XXX | THREE WHEELER | BAJAJ RE | 2015 |
| NC-KE-0XXX | CAR | TOYOTA DBA-KGC10 | 2004 |
| WP-QT-5XXX | THREE WHEELER | BAJAJ 4S | 2009 |
| WP-YY-7XXX | THREE WHEELER | TVS KING | 2012 |
| WP-AAU-7XXX | THREE WHEELER | TVS KING | 2014 |
| 300-4XXX | CAR | NISSAN SUNNY | 1994 |
| NW-ND-8XXX | BUS | NISSANU-RA530RBN SEATS 56 | 1995 |
| SP-YD-0XXX | THREE WHEELER | HERO WHEELS - HRW | 2010 |
| 65-8XXX | CAR | FIAT MAREA | 2000 |
| 300-2XXX | CAR | MERCEDES BENZ | 1990 |
| WP-KR-4XXX | CAR | TATA NANO | 2011 |
| WP CAR-3XXX | CAR | NISSAN DAA-HNT 32 X-TRAIL | 2015 |
| WP KU-6XXX | CAR | TOYOTA DBA-NZT260 ALLION | 2011 |
| WP KL-5XXX | CAR | TOYOTA DBA-NZT260 PREMIO | 2010 |
| WP CBD-6XXX | CAR | SUZUKI ALTO LXI PETROL | 2018 |
| WP CBD-6XXX | CAR | SUZUKI ALTO LXI 800 PETROL | 2018 |
| WP CBD-6XXX | CAR | SUZUKI ALTO LXI 800 PETROL | 2018 |

மொனராகலை வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| UP BIF-9XXX | MOTOR BIKE | TVS SPORT ELS | 2019 |
| SG BFP-5XXX | MOTOR BIKE | TVS METRO | 2017 |
| SG ABS-9XXX | THREE WHEELER | BAJAJ RE | 2018 |
| UP BIQ-2XXX | MOTOR BIKE | YAMAHA YC125-5 | 2019 |
| SP-RF-8XXX | TRACTOR | MF1552 | 2017 |
| | PAVER MACHINE | BARBER GREENE SA 144A | 1993 |
| | ROAD ROLLER | INGERSOLL RAND IR DD 90 | 1993 |
| | COMBINE HARVESTER | KIOTI DSF75GT | 2018 |
| EP-RG-0XXX | TRACTOR | FARMTRAC FT_6050 | 2018 |
| CP-ZA-6XXX | WHEEL LODER | CASE721 WHEEL LOADER | 2004 |
| EP-RF-7XXX | TRACTOR | MITSUBISHI MAHINDRA GX3600S | 2018 |
| | COMBINE HARVESTER | DN-XIAG RAND V | 2017 |

மாபிம வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| WP-NA-7XXX | BUS | JAC HFC6720K SEATS 28 | 2005 |
| WP-NA-4XXX | BUS | LEYLAND VIKING SEATS 42 | 2007 |
| WP-ND-6XXX | BUS | EICHER 10.75 STARLINE SEATS 28 | 2018 |
| SP-ND-1XXX | BUS | DAEWOO SEATS 42 | 2006 |
| | DUST COLLECTING MACHINE | MES PULSE TYPE DUST EXTRACTION SYSTEM | 2015 |
| | PVC EXTRUDER MACHINE | KABRA EXTRUSIONTECHNIK LTD525 75V /11 | 2006 |
| | PRINTING MACHINE | LEIBINGER JET 2 NE0 | 2017 |
| WP-JW-3XXX | BUS | TATA LPO 1313 SEATS 41 | 2004 |
| WP-HR-9XXX | BUS | LEYLAND VIKING SEATS 42 | 2003 |
| WP-JN-2XXX | BUS | TATA LP1510 SEATS 48 | 2004 |
| WP-NA-6XXX | BUS | MITSUBISHI FUSO SEATS 45 | 1992 |
| SG-DAG-8XXX | LORRY | NISSAN CABSTAR 3.0 | 2015 |
| WP-ND-7XXX | BUS | TOYOTA BB59RZEMQZ5 SEATS 31 | 2014 |
| SP-NB-1XXX | BUS | TOYOTA COASTER PB-XZB50 SEATS 29 | 2005 |
| SP-ND-1XXX | BUS | TOYOTA BB59RZEMQZ5 SEATS 31 | 2006 |
| 61-5XXX | BUS | LEYLAND COMET MINOR SEATS 29 | 1993 |
| 63-1XXX | BUS | TOYOTA COASTER SEATS 28 | 1991 |
| 62-8XXX | BUS | ISUZU SEATS 28 | 1992 |
| 60-7XXX | BUS | TOYOTA SEATS 25 | 1985 |
| WP-NB-0XXX | BUS | ZONDA YCK6849HP SEATS 33 | 2011 |
| NW-RF-5XXX | TRACTOR | MAHINDRA 575DI YUVO | 2018 |
| WP-LY-0XXX | PRIME MOVER | RENAULT 340 PRIMIUM | 2001 |

மகோலா வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| | PRINTING MACHINE | SOLNA OFFSET | 1989 |

மாலபே வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| WP-ND-8XXX | BUS | MITSUBISHIU-MS729S SEATS 54 | 1992 |
| WP-NC-7XXX | BUS | TOYOTAPB-XZB50 COASTER SEATS 28 | 2007 |
| SP-NA-8XXX | BUS | LEYLAND VIKING SEATS 41 | 2011 |
| WP-NB-6XXX | BUS | NISSAN DIESELKC-RA531MBN SEATS 50 | 1996 |
| WP-ND-3XXX | BUS | HINO PDG-XZB50M LIESSE II SEATS 28 | 2009 |

மாத்தறை வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| SP-LN-4XXX | LORRY | ISUZU TQG-NPR85AN ELF | 2012 |
| SP-HL-9XXX | BUS | LAYLAND VIKING SEATS 42 | 2003 |
| 63-1XXX | BUS | ISUZUU-BE28 SEATS 28 | 1991 |
| SP-LH-7XXX | LORRY | LEYLANDE COMET 1112 | 2008 |
| SP-PR-6XXX | CAB | MAHINDRA MAXXIMO | 2011 |
| SP-LA-8XXX | TIPPER | DAIHATSU DUMP TRUCK V118 DJU5 | 2000 |
| 048-1XXX | LORRY | FREIGHT ROVERTUSKER SUPER | 1996 |
| 061-5XXX | VAN | TOYOTA HIACE | 1987 |

**விற்பனை தொடர்பான நிபந்தனை**

- உள்நுழைவு : ஏல விற்பனை அரசாங்கத்தின் சுகாதார சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்கொள்ளப்படும்.
  ஏல விற்பனைத் தினமன்று முதலில் வருகைதரும் முறைக்கமைய, நிலவும் ஒழுங்கு விதிகளுக்கமைய வரையறுக்கப்பட்ட எண்ணிக்கை அனுமதிச் சீட்டுக்கள் மாத்திரமே வழங்கப்படும்.
  கொழும்பின் பிரதான ஏல விற்பனைக்கான நுழைவுக் கட்டணமாக மீளச் செலுத்தப்படாத ரூ.2000/- அனுமதிச் சீட்டு மற்றும் மீளச் செலுத்தப்படும் ரூ.10000/- அனுமதிச் சீட்டு மூலமாக அறவிடப்படும்.
  வலையமைப்பு அடிப்படையிலான ஏல விற்பனைக்கான பதிவுகள், குறித்த கிளைகளில் ஏல விற்பனை தினமன்று மேற்கொள்ளப்படும்.
- கொடுப்பனவு : சுத்தியல் வைக்கப்பட்ட உடன் மீளளிக்கப்படாத 25% ஆரம்ப வைப்பு ஒன்றை பணமாக செலுத்த வேண்டும் என்பதோடு எஞ்சிய 75% தொகையை 2022 ஜனவரி 12 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.00க்கு முன்னர் இல,: 1161, மருதானை வீதி, கொழும்பு - 08 முகவரியில் அமைந்துள்ள பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் தலைமை அலுவலகத்தில் செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ளல் வேண்டும்.
- எந்தவொரு வாகனத்தை / வாகனங்களை முன்னறிவித்தல் இன்றி ஏல விற்பனையிலிருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.

ஏல விற்பனையாளரின் முடிவே இறுதி முடிவாகும்.

Doadv

ඒ එන් අල්ගෙවත්ත ඕක්ෂනියර්(ර්)
A N ALGEWATHTHA AUCTIONEER
ANA AUCTIONEER Black Tie Service with True Aloha!
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.lankaauction.lk



## களனி பல்கலைக்கழகம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பல்கலைக்கழக பரந்தளவு கம்பியற்ற வலையமைப்பை (Wide Wireless Network) வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் - களனி பல்கலைக்கழகம், தலுகம, களனி

**UK/GA/GA3/2021/55**

1. களனி, தலுகம, களனி பல்கலைக்கழகம் - பல்கலைக்கழக பரந்தளவு கம்பியற்ற வலையப்பை (Wide Wireless Network) வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் பணிக்கு களனி பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது தகைமை மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் விலைமனுக் கோரல் இடம்பெறும்.
2. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதித் தேவைப்பாடுகள்:

   இலங்கையில் செல்லுபடியாகும் இயைபுடைய வியாபாரப் பதிவைப் பெற்றிருத்தல்

   விலைமனுதாரர் இதே போன்ற WLAN தீர்வுகளைப் பயன்படுத்துவதில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் தீர்வுக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்குச் சான்றளிக்கப்பட்ட குறைந்தபட்சம் இரண்டு பொறியியலாளர்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

   கடந்த மூன்று (03) ஆண்டுகளில் 10,000,000.00 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு குறைந்தபட்சம் ஒரு கம்பியற்ற வலையமைப்பை பூர்த்தி செய்திருத்தல்

   Access point களின் உற்பத்தியாளர்கள் கடந்த 3 ஆண்டுகளாக கம்பி மற்றும் கம்பியற்ற அணுகல் உட்கட்டமைப்புக்கான 'Leader' quadrant of the Gartner Magic Quadrantஇல் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும். கம்பியற்ற access points, சுவிட்சுகள், டிரான்ஸ்ஸீவர்கள், ஒப்டிகல் ∴பைபர் கேபிள்கள், UTP கேபிள்கள் மற்றும் இந்த ஆவணத்தில் உள்ள விவரக்குறிப்புத் தாள்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிற பொருட்களுக்கு உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதம் (MAL) வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. தொழில்நுட்பத் தகவல்களை பணிப்பாளர்/ICT (தொலைபேசி இல. 0112910163) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைக்கோரல் ஆவணங்களை பல்கலைக்கழக இணையதளத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம். (www.kln.ac.lk) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 ஜனவரி 03ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 8,000.00 ரூபாவைச் செலுத்தி, உதவிப் பதிவாளர், பொது நிர்வாகப் பிரிவு, களனி பல்கலைக்கழகம், களனி என்ற முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோளைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை தலைவர், பெறுகைக் குழு, மே/பா உதவிப் பதிவாளர், பொது நிர்வாகப் பிரிவு, களனி பல்கலைக்கழகம், தலுகம, களனி என முகவரியிட்டு 2022 ஜனவரி 25ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னர் களனி, தலுகம, களனி பல்கலைக்கழகத்தின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரின் அலுவலகத்திற்கு அருகிலுள்ள நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். (ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்). தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் செல்லுபடியாகும் விலைமனுக்களாகக் கருதப்படுவதற்கு கட்டண பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 2022 மே 24ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
6. சகல விலைமனுக்களுடனும் (VIII) பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பிணை முறிப் படிவத்தைப் பயன்படுத்தி இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் (இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டது) அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2022-05-24ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையில் 300,000.00 ரூபாவுக்கான விலைமனுப் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது களனி பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கருமபீடத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மற்றும் தள விஜயம் 2022 ஜனவரி 12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் ICT நிலையத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம், தலுகம,**
**களனி.**

**02/01/2022**



# සතොස விலைமனுக்களுக்கான அழைப்பு

வர்த்தக அமைச்சு

## லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு விரைதூதர் சேவையை (Courier Service) வழங்கல்

லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு ஓர் ஆண்டு காலத்திற்கு விரைதூதர் சேவையை வழங்குவதற்கு, ஆர்வம் காட்டுகின்ற நிறுவனங்களிடம் இருந்து லங்கா சதொச லிமிடட் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள் மற்றும் தேவை விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

**3,000.00 ரூபாவை செலுத்தி (மீளளிக்கப்படாதது) 2022 ஜனவரி 03 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜனவரி 25 ஆம் திகதி வரை** லங்கா சதொச லிமிடட் தலைமை அலுவலகம், இல. 27, சதொச செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்று முகவரியில் பெறுகை பிரிவுக்கு (3ஆவது மாடி) அங்கீகாரக் கடிதம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் விலைனு ஆவணங்களை பெற முடியம்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022 ஜனவரி 12 ஆம் திகதி பி.ப. 03.00க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

முன்வைக்கப்படுகின்ற விலைமனுக்கள் **2022 ஜனவரி 25 ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர்**, லங்கா சதொச லிமிடட், இலக்கம் 27, சதொச செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "லங்கா சதொச லிமிடட் நிறுவனத்திற்கு விரைதூதர் சேவையை வழங்கல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணை தொகையை (மீளளிக்கப்படும்) கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது **2022 ஜனவரி 25 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். வெற்றிகரமான விலைமனுதாரர் மூலம் (பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் தவிர்த்து) பதிவுக் கட்டணமாக **5,000.00 ரூபா மற்றும் 8% வட் தொகையை (மீளளிக்கப்படாதது) செலுத்த வேண்டும். மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 10% தொகையை செயல்திறன் உத்தரவாதமாக (மீளளிக்கப்படும்) செலுத்த வேண்டும்.**

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரியை அழைக்கவும்.
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, பெறுகை (லசலி) - 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்குவது தொடர்பான இறுதி முடிவு **தலைவர், லங்கா சதொச லிமிடட் வசமானது.**

தலைவர், லங்கா சதொச லிமிடட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02


# மலையக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் நன்னம்பிக்கை கல்வி நிதியம்

நன்னம்பிக்கை கல்வி நிதியமானது (GOOD HOPE EDUCATION FUND) கடந்த பத்து வருடங்களாக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் பொருளாதார வசதி குறைந்த மலையக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது. இம் மாணவர்கள் பாடசாலை அதிபர்களின் பரிந்துரையின் பேரில் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 40 மாணவர்களுக்கு இன்று (02.01.2022) ஹட்டன் வெப்ஸ்டர் சர்வதேச பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் நிதி உதவி வழங்கப்படும்.

நன்னம்பிக்கை கல்வி நிதியமானது உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் 16ஏ உறுப்புரையின் கீழ் வரிவிலக்கு பெற்றுள்ள தொண்டு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1960களில் மலையகத்தைச் சேர்ந்த பி. கந்தசாமி, கே. வீரையா, எஸ். சொக்கலிங்கம் ஆகியோரால் உருவாக்கப்பட்டது. அவர்களுடன் எம். வாமதேவன், எஸ். செல்வராஜ் எஸ். அருணாசலம் பிள்ளை ஆகியோரும் இணைந்திருந்தனர். 1983வரை இந்நிதியம் சுமார் 20 பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கியது. எனினும் 1983 கறுப்பு ஜுலை கலவரத்தின் போது இந்நிதியத்தின் அலுவலகம் அழிந்து போனது. எனினும் சொக்கலிங்கத்தின் பெரு முயற்சியினால் 2010 முதல் இந்நிதியம் புத்துயிர் பெற்று இயங்கி வருகிறது.

கடந்த பத்துவருடங்களில் இந்நிதியம் சுமார் 150 பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. தற்போது திருமதி கந்தசாமி (ஸ்தாபகரின் துணை பேராசிரியர் எஸ். செங்கமலை (ஐக்கிய அமெரிக்கா) மேற்படி நிகழ்வில் 40 மாணவர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிக்கு மேலதிகமாக அவுஸ்திரேலியாவில் இயங்கும் E80 LEGACY PROTECT என்னும் நிறுவனம் தற்போது கிழக்கு பல்கலைக்கழகத்தில் பயிலும் மலையக மாணவர்கள் ஐந்துபேருக்கு மாதாந்த நிதி உதவி வழங்க உள்ளது. இதற்கான முன்னெடுப்பை குணரத்தினம் திருக்குமாரன் (அவுஸ்திரேலியா) என். பாலசுந்தரம், பேராசிரியர் தனராஜ் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். மேற்படி E80 குழுவின் 1980ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் கற்கைநெறியில் இணைந்து இன்று அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் பணிபுரியும் பொறியியலாளர்களாவர் இக்குழுவின் தன்னலமற்ற கல்விப்பணிக்கு தமிழ் மக்கள் குறிப்பாக மலையக மக்கள் நன்றி கூற கடமைப்பட்டுள்ளனர். மலையகத்திலிருந்து அரச பல்கலைக்கழகங்களுக்கு இவ்வாண்டு சுமார் 650 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வரலாற்றுரீதியாக நோக்கும்போது இது குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். எனினும் இம்மாணவர்களில் பெரும்பாலானோர் போதுமான நிதி வசதி இல்லாது பெரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். இம் மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கி இவர்கள் நமது கல்வியை தொடர ஊக்கப்படுத்த வேண்டியது. மலையகத்தின் வசதி படைத்தோரின் தார்மீகக் கடமையாகும்.

கொழும்பில் இயங்கும் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தினர் கடந்த பலவருடங்களாக மலையகக் கல்வி மேம்பாட்டில் ஈடுபட்டு வருவது இங்கு குறிப்பிடவேண்டிய விடயமாகும். அண்மையில் அவர்கள் பங்களாதேஷ் பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்படிப்புக்காக சென்றுள்ள ஒரு மலையக மாணவிக்கு விமான பயணச் சீட்டுபெற்றுக் கொடுத்து உதவினர். பல்கலைக்கழகங்களில் பயிலும் வசதி குறைந்த மலையக மாணவர்களுக்கு உதவி விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளலாம்.



**பேராசிரியர் தை. தனராஜ்**
செயலாளர்/
நன்னம்பிக்கை
கல்வி நிதியம்
தொ. பே 0779825028
thanaraj2006@gmail.com

## படு மோசமான நிலையில்...

08ஆம் பக்கத் தொடர்

தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் பாரிய எதிர்விளைவுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும். அரசின் வருமானமும் வீழ்ச்சியடைவதுடன், தொழில் திணைக்களமும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாத திணைக்களமாக மாற்றமடையுமென்பதில், சந்தேகமேயில்லை.

பெருந்தோட்டப்பகுதிகளில் 37 ஆயிரம் ஹெக்டயர் நிலப் பிரதேசங்கள் தரிசு நிலங்களாக இருந்து வருகின்றன. இதை விவசாயத்திற்காகவும், கால்நடை, கோழி வளர்ப்புகளுக்கும் பயன்படுத்த முடியும். இதன் மூலம் படித்த இளைஞர், யுவதிகள் ஆகியோருக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கலாம். அல்லது தோட்டங்களில் தொழில்வாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு மேற்படி 37 ஆயிரம் ஹெக்டயர் நிலப் பிரதேசங்களை பகிர்ந்தளிக்க திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

கொழும்பு போன்ற பிரதேசங்களில் தொழில் செய்தவர்கள் அனைவரும், கோவிட்19 தொற்றின் தாக்கத்தினால் தமது தோட்டங்களுக்குள்ளேயே முடங்கியுள்ளனர். இவர்களுக்கும் தொழில் வாய்ப்புக்களை வழங்க வேண்டியுள்ளது. மேலும், பெருந்தோட்டங்களில் மூடப்பட்டிருக்கும் தேயிலை தொழிற்சாலைகளை கைத்தொழில் பேட்டைகளாக மாற்றியமைக்கும்பட்சத்தில், பெருமளவிலானோருக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று தன் கடிதத்தில் தெரிவித்துள்ள கிருஷ்ணசாமி, இவற்றை பரிசீலிக்க ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுக்கும்படி பிரதமரிடம் கேட்டுள்ளார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 342

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | | 08 |
| 09 | | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | | 16 | | 17 |
| | 18 | 19 | | 20 | |
| 21 | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ....................................................
வகுப்பு ....................................................
பாடசாலை பெயர் ....................................................
பாடசாலை முகவரி ....................................................
....................................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) இது புதிய வருடத்தின் ஆரம்பம். நாமெல்லாம் நேற்றுத்தான் இதற்குள் காலடி வைத்திருக்கின்றோம்.
(10) மாப்பொருள் சத்து அதிகம் கொண்ட உணவு இது. நெல், குரக்கன், கோதுமை, உழுந்து போன்றவையெல்லாம் இதற்குள் அடங்குகின்றன.
(14) குற்றச் செயல்கள் தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவரையோ அல்லது குற்றம் நிரூபிக்கப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருபவரையோ இவ்வாறு குறிப்பிடலாம்.
(18) அறிவுக் கண் திறக்கும் ஆசான் இவர். (தலைகீழான சொல்)
(21) நாம் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டுச் செல்லும்போது மழை, வெயில் போன்றவற்றில் இருந்து எமக்குப் பாதுகாப்புத் தருவது. (தலைகீழான சொல்)
(23) வானமெங்கும் வெண்பஞ்சுக் கூட்டங்களாக எப்போதும் அலைந்து கொண்டிருக்கின்றது. ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தால், இச்சொல்லைக் கண்டு பிடித்து விடுவீர்கள்.

**மேலிருந்து கீழ்**

(01) நம் ஒவ்வொருவர் முகத்துக்கும் உண்மையான அழகைத் தருவது இதுதான். ஒருவர் எத்தனை நகைகளை அணிந்து கொண்டாலும், இது இன்றேல் இயற்கையான அழகு வந்து விடுவதில்லை.
(03) வயது மிகவும் முதிர்ந்த ஆண்களை மரியாதையின் நிமித்தம் இவ்வாறு குறிப்பிடும் வழக்கம் பெரும்பாலும் இந்தியாவில் வழக்கத்தில் உள்ளது. இலங்கையில் சிங்கள மொழியில் இச்சொல்லுக்கு வேறு அர்த்தம் உள்ளது.
(08) தேங்காயை சூழ காணப்படுவது இது. கயிறு, கால் துடைப்பம், தும்புத்தடி போன்றவற்றைத் தயாரிப்பதற்கான மூலப்பொருள்.
(11) இப்போதெல்லாம் அதிகாலையில் குளிர் காலநிலை நிலவுகின்றது. அதற்கான காரணம் இதுதான். (தலைகீழான சொல்)
(15) எமது உடலுக்குள் எப்போதும் சுற்றோட்டமாக ஓடிக் கொண்டேயிருக்கின்ற திரவப் பதார்த்தம். (தலைகீழான சொல்)
(20) இருவித்திலைத் தாவரங்களில்தான் இவற்றைக் காணலாம். கொப்பு என்றும் கூறலாம். (தலைகீழான சொல்)

**போட்டி இல. 342**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 341

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பரீட்சை 10. கராம்பு 14. வதந்தி
22. குடிசை

**மேலிருந்து கீழ்**

01. பகலவன் 04. திராட்சை 05. அம்புலி
10. கந்தை 21. செடி

தற்போதைய சூழ்நிலை காரணமாக குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படாது என்பதை எமது சிறார்களுக்கு அறியத் தருகின்றோம். ஆனாலும் ஆர்வம் கொண்ட சிறார்களுக்காக குறுக்கெழுத்துப் போட்டிகள் தொடர்ந்தும் இடம்பெறும். (ஆர்)



குறளமுதம் :

பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று.

***தெளிவுரை :***

***வரம்பு கடந்து பிறர் செய்த தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும். அத் தீங்கை நினைவிலும் கொள்ளாமல் மறந்துவிடுதல் பொறுத்தலை விட நல்லது.***

# வர்ணமயமான உலகம்



நம்மைச் சுற்றியுள்ள உலகம் அழகுமயமானது. அதேவேளை இயற்கையின் கொடைகள் அழகாக மட்டும் இருப்பதில்லை. அவை மிகப் பயனுள்ளவையாகவும் அர்த்தம் நிறைந்ததாகவும் இருக்கும். வானவில்லைக் காண்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

வானவில்லில் சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா ஆகிய ஏழு வர்ணங்கள் அலங்கரிக்கின்றன.

ஒவ்வொரு வர்ணமும் ஒரு விடயத்தை வெளிக்காட்டக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கின்றது. வர்ணங்கள் பெரும்பாலும் எங்களுடைய பாதுகாப்பான வாழ்க்கைக்கு உதவக்கூடிய வகையில் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக வாகன போக்குவரத்து சமிக் ஞை விளக்குகள் சிவப்பு விளக்கு எரிந் தால் நிறுத்துங்கள், பச்சை எரிந்தால் செல்லுங்கள், மஞ்சள் எரிந்தால் அவதானமாக இருங்கள். சிவப்பு இரத்தத்தின் நிறமாக இருப்பதனால், அது ஆபத்துக்கான சமிக் ஞையாக ஆண்டாண்டு காலமாகப் பயன்படுகிறது.

நன்மையான அல்லது நம்பிக்கையூட்டும் நிறமாக பச்சை பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆரம்பிப்பது அல்லது தொடங்குவதற்கும் நம்பிக்கையூட்ட முடியும் என்பதால் பச்சை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வர்ணங்களின் வரலாற்றையும் அதன் ஜாலங்களையும் நாம் அறிந்துகொள்வது அவசியமாகும்.

**ஏ.எச்.அப்துல் அலீம்**
தரம் 07 சி,
அலிகார் தேசிய கல்லூரி,
ஏறாவூர்

# தவளையும் சுண்டெலியும்



அது ஒரு அழகிய குளம். அந்த குளத்திற்கு அருகில் ஒரு மரப்பொந்து ஒன்று இருந்தது. அந்த மரப்பொந்தில் சுண்டெலி ஒன்று வசித்து வந்தது. அந்த சுண்டெலிக்கு குளத்தில் வசித்த தவளையுடன் நட்பு ஏற்பட்டது. தினமும் அந்த தவளையும் எலியும் சந்திப்பது வழக்கம்.

ஒரு நாள் எலி, தவளை நீரில் விளையாடிக் கொண்டிருப்பதை பார்த்தது. உடனே எலி தவளையிடம், "எனக்கும் நீச்சல் கற்றுத் தர முடியுமா?" என்று கேட்டது. தவளையும், "நாளை உனக்கு நீச்சல் நான் கற்றுத் தருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றது.

அடுத்தநாள் சுண்டெலிக்கு நீச்சல் கற்றுத்தருவதாக கூறிய தவளை தன்னுடைய காலை எலியின் காலுடன் சேர்த்து ஒரு கைற்றினால் கட்டிக்கொண்டது.

அப்போது மேலே பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று இவைகளைப் பார்த்து தாக்க வந்தது. உடனே தவளை தன் உயிரை காப்பாற்றிக்கொள்வதற்காக சுண்டெலியுடன் தண்ணீரில் பாய்ந்தது.

தண்ணீரில் மூழ்கிய சுண்டெலி மூச்சுத்திணறி இறந்து போனது. அதன் உடல் மேலே மிதந்த போதும் அதனுடைய கால்கள் தவளையுடன் சேர்த்து கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தது.

அந்த சமயம்... தண்ணீரின் மீது சுண்டெலி செத்து மிதந்ததைக் கண்ட கழுகு கீழ் நோக்கி வந்து அந்த எலியைக் கொத்திக் கொண்டு உயரே பறந்தது.

அதனுடன் சேர்ந்து கட்டப்பட்டிருந்த தவளையும் பருந்தின் பிடியில் சிக்கியது.

இரண்டு விருந்து கிடைத்த சந்தோசத்தில் பருந்தானது தவளையையும் கொன்று தின்றது.

**நீதி: நாம் ஒருவரை நண்பராக ஏற்றுக்கொள்வதற்கு முன் அதற்கு அவர்கள் தகுதியானவரா என்று யோசிக்கவேண்டும். இல்லையேல் தவளைக்கு நேர்ந்த கதிதான் நமக்கும் ஏற்படும்.**

# பதுளை - ஸ்ப்ரிங்வெளி தமிழ் மகா வித்தியால வருடாந்த பரிசளிப்பு விழா



**லுணுகல நிருபர்**

பதுளை ஸ்ப்ரிங்வெளி தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 24ஆம் திகதியன்று அதிபர் எம். வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் ஊவா மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கலையரசி பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என். வெங்கடேஸ்வரன், வலயக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி என். சாரங்கி ஹெட்டியாராச்சி, உதவிக் கல்விப் பணிப்பாளர் தமிழ் பிரிவு ஆர். கார்த்தீபன் மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் மார்க்கண்டன் ரூபவதனன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



இவ்விழாவின்போது இப்பாடசாலையில் அதிபராக சேவையாற்றிய திரு திருமதி முத்துக்கருப்பன் தம்பதிகள், M. சண்முகராஜா ஆகியோரும் இப்பாடசாலையில் ஆசிரியராக சேவையாற்றி பின் தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுக் கொண்ட கலாநிதி நவரட்ணம், M.யோகநாதன், ஜனாப் M. R. M. நவாஸ், M. G. சௌந்தர்ராஜன், திருமதி J. ஜீவராணி ஆகிய ஆசிரியர்களும் பழைய மாணவராகிய ஓய்வு நிலை அதிபர் சகாயம் பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக பல்கலைக்கழகம் தெரிவான செல்வி செல்வின்ராஜ் தர்ஷிகாவுக்கு கற்பித்த ஆசிரியர்களான J. ரஞ்சித்குமார், திருமதி V. வனிதா, திருமதி S. யோகேஸ்வரி ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.



இந்நிகழ்வில் இப்பாடசாலையின் பெரிதும் உதவிய அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஸ்தாபகர்கள் அமரர்களான எஸ்.கே. காளிமுத்து, எம். மாரிமுத்து, பி. சின்னதம்பி ஆகியோரின் உருவப் படங்களும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இப்பாடசாலைக்கு நிலத்தைப் பெற்றுக் கொடுத்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமரர் கே. வேலாயுதம் அவர்களுக்கு விசேட அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ....................................
பிறந்த திகதி ....................................
வகுப்பு ....................................
பாடசாலை ....................................
....................................

....................................
வகுப்பாசிரியர் கையொப்பம்

**வர்ணப் புகைப்படம்**

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**

# இவ்வார மழலை



**ஸ்வர்ணிகா**

ஜெயரதன் - விக்னேஷ்வரி,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.




## குட்டி சுட்டிகளுக்கு...

குட்டி சுட்டிகளுக்கு புத்தாண்டு வாழ்த்துகளைச் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். இரண்டு ஆண்டுகள் நீங்கள் வீடுகளிலேயே கழித்து விட்டீர்கள். படிப்புதான் மிக மிக முக்கியம் என்பதை மறக்க வேண்டாம். எனவே இந்த ஆண்டை கல்விக்காக செலவிடுங்கள். பெற்றோருக்கு கீழ்படிவாக நடந்து கொள்ளுங்கள்..!

## சிறுவர் சித்திரங்கள்





**ஷைனி நிரஞ்சன்,**
லிட்டில் ஏஞ்சல் பாலர் பாடசாலை,
வத்தளை.



**செஷா சைனப் கைஸ்,**
அல் பதுல் ஆரம்ப பாடசாலை,
குட்டிக்கராச்சி, கிண்ணியா.



**ஆமினா ரீபாய்,**
தரம் 01, ஸாஹிறா ஆரம்பப் பாடசாலை,
தர்கா நகர்.



**ஜெ. கோஷினி,**
தரம் 04, சர்பேர்ட் சர்வதேச பாடசாலை,
வத்தளை.

# விளையாட்




# 2021 விளையாட்டுத் துறையில் அரங்கேறிய முக்கிய சம்பவங்கள்

2020ஆம் ஆண்டில் விளையாட்டு உலகிற்கு ஓய்வு கிடைத்த பிறகு, 2021ஆம் ஆண்டானது உலக அரங்கைப் போல, இலங்கைக்கும் ஒப்பீட்டளவில் சிறந்த ஆண்டாக அமைந்தது. அதில் சில மறக்க முடியாத தருணங்களும் எமது மனதில் இடம்பிடித்தன.

கொரோனா வைரஸ் தொற்று நோய் இன்னும் சீற்றத்துடன் இருக்கும் அதேவேளையில், 2021ஆம் ஆண்டைப் பொறுத்தவரை இலங்கையின் விளையாட்டுத் துறையானது கொரோனா வைரஸின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டன.

கொரோனா வைரஸின் 3ஆவது அலை காரணமாக கிட்டத்தட்ட சில மாதங்களாக நாடு முழுவதும் ஊடரங்கு பிறப்பிக்கப்பட்டதுடன். விளையாட்டு உள்ளிட்ட முக்கியமான பல அம்சங்கள் இதனால் தடைப்பட்டன.

கொரோனா கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், சுகாதார அமைச்சின் அனுமதியுடன் ஒரு சில விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாக நடைபெற்றன.

நிறைவு பெற்றுள்ள 2021 ஆண்டு இலங்கையின் விளையாட்டுத்துறையில் ஓரளவு முன்னேற்றத்தையும், வெற்றியையும் கொடுத்த ஆண்டாக விளங்கியது.

இதில் லசித் மாலிங்க,திசரபெரேரா, இசுரு உதான போன்ற வீரர்களின் ஓய்வு, யுபுன் அபேகோன், உஷான் திவங்க ஆகியோரது மெய்வல்லுநர் சாதனைகள். தினேஷ் பிரியன்த ஹேரத் பாராலிம்பிக் தங்கப் பதக்கம், சர்வதேச கால்பந்து சம்மேளத்தின் தலைவரின் இலங்கை வருகை, இலங்கை கால்பந்து அணியின் அசுர முன்னேற்றம், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தரின் இராஜினாமா மற்றும் மைதானம் நிறைந்த ரசிர்களுடன் அரங்கேறிய எல்பிஎல் தொடர் உள்ளிட்ட விடயங்கள் முக்கிய இடம் பிடித்தன.

2021இல் இலங்கையில் இடம்பெற்ற முக்கிய விளையாட்டு நிகழ்சிசகளும்,அதன் முக்கிய தருணங்களையும் இந்தசிறப்புக் கட்டுரையில் பார்க்கலாம்.

## ஜனவரி

இலங்கை அணியை வீழ்த்தி 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியது.

நாட்டில் கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் தொடர்ந்து நீடிப்பதால் 2020 இற்கான தேசிய இளைஞர் விளையாட்டு விழாவை ரத்து செய்ய தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடவடிக் கை எடுத்தது.

இலங்கை தேசிய அணியில் விளையாடிய, சுழல் பந்து வீச்சு சகலதுறை வீரர் செஹான் ஜயசூரிய, இலங்கை கிரிக்கெட் அணியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

சிரேஷ்ட வீர வீராங்கனைகளுக்கான 40ஆவது தேசிய ஸ்குவாஷ் சம்பியன்ஷிப் தொடரின் ஆடவர் பிரிவில் தியரவிந்து லக்சிறியும்,மகளிர் பிரிவில் பெதும் சாலிஹா இஸ்ஸடீனும் சம்பியனாக மகுடம் சூடினர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட தேர்வாளரான அசந்த டி மெல் தனது பதவியினை இராஜினாமா செய்தார்.

## பெப்ரவரி

ஆசிய பளுதூக்கல் சம்பியன்ஷிப் தொடரை இலக்காகக் கொண்டு இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தினால் பொலன்னறுவையில் நடாத்தப்பட்டதேசிய பளுதூக்கல் தகுதிகாண் போட்டியில் ஏழு இலங்கை வீரர்களால் 16 இலங்கை சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

இலங்கை கிரிக்கெட் அணியின் கிரிக்கெட் இயக்குனராக, முன்னாள் அவுஸ்திரேலிய வீரரும்,இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளருமான டொம் மூடி நியமிக்கப்பட்டார்.

பெண்களுக்கான பளுதூக்கலில் முன்னணி நட்சத்திரமாக வலம் வருகின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆஷிகா விஜயபாஸ்கர் தேசிய பளுதூக்கல் தகுதிகாண் போட்டியில் 71 கிலோ எடைப் பிரிவில் களமிறங்கி தனது இரண்டு தேசிய சாதனைகளை முறியடித்தார்.

இலங்கை கிரிக்கெட்டை வளப்படுத்தும் முகமாக அரவிந்த டி சில்வா தலைமையிலான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான உபுல் தரங்க, சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.





## மார்ச்

ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் இலங்கை வீரர் டங்கன் வைட் 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில்,வெள்ளிப் பதக்கத்தை வென்ற நாளான ஜூலை மாதம் 31ஆம் திகதியை, தேசிய விளையாட்டு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அமெரிக்காவின் டெக்சாஸில் நடைபெற்ற டெக்சாஸ் ரிலேஸ் சம்பியன்ஷிப் தொடரில் உயரம் பாய்தலில் பங்குகொண்ட இலங்கைவீரர் உஷான் திவங்க பெரேரா, 2.28 மீற்றர் உயரம் பாய்ந்து இலங்கையின் பதினேழுவருடங்கள் பழமையான உயரம் பாய்தல் சாதனையை முறியடித்தார்.

## ஏப்ரல்

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் 17ஆவது தலைவராக காஞ்சன ஜயரட்ன போட்டியின்றி ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை விமானப்படையைச் சேர்ந்த முன்னணி நீச்சல் வீரரான, ரொஷான் அபேசுந்தர பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து புதிய சாதனை படைத்தார்.

ஐசிசியின் ஊழல் தடுப்புசட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் டில்ஹாரலொக்கு ஹெட்டிகேவுக்கு, 8 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது.

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஆசிய சிரேஷ்ட பளுதூக்கல் சம்பியன்ஷிப்பில் ஆண்களுக்கான 55 கிலோ எடைப்பிரிவில் பங்குகொண்ட இலங்கை வீரர் டிலங்க இசுரு குமார வெண்கலப் பதக்கத்தைவென்றார்.

ஐ.சி.சி.யின் மூன்று வகையான ஊழல் தடுப்பு விதிகளை மீறிய இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான நுவன் சொய்ஸாவுக்கு 6 வருட தடை விதிக்கப்பட்டது.

விஸ்டன் இதழினால் 2000ஆம் ஆண்டுகளின் தலை சிறந்த கிரிக்கெட் வீரராக இலங்கையின் முன்னாள் சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் பெயரிடப்பட்டார்.

## மே

டோக்கியோவில் இவ்வருடம் நடைபெற்றஒலிம்பிக் விளையாட்டுவிழாவில் பங்குபற்றும் முதல் இலங்கையர் என்ற பெருமையை குதிரைச் சவாரி வீராங்கனை மெட்டில்டா கார்ல்சன் பெற்றுக் கொண்டார்.

இலங்கையின் கனிஷ்ட ஜிம்னாஸ்டிக் வீராங்கனை மில்கா கிஹானி, 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார்.

துருக்கியில் நடைபெற்ற சர்வதேச மெய்வல்லுநர் தொடரில் இலங்கை வீராங்கனை சாரங்கி டி சில்வா, பெண்களுக்கான நீளம் பாய்தலில் 6.44 மீற்றர் தூரத்தைப் பாய்ந்து புதிய இலங்கை சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.





இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் திசர பெரேரா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இத்தாலியின் சவோனாவில் நடைபெற்ற சர்வதேச சிட்டே டி சவோனா மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் பங்குகொண்ட இலங்கை வீரர் யுபுன் அபேகோன் 100 மீற்றர் போட்டியை 10.15 செக்கன்களில் கடந்து தனது சொந்த இலங்கை சாதனையை முறியடித்தார்.

இலங்கையின் உயரம் பாய்தல் வீரரான உஷான் திவங்க பெரேரா, டெக்சாஸில் நடைபெற்ற ஸ்டார் கன்பிரன்ஸ் சம்பியன்ஷிப் போட்டியில் 2.30 மீற்றர் உயரம் பாய்ந்து, இலங்கை சாதனையையும், தெற்காசிய சாதனையையும் முறியடித்தார்.

முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர் அவிஷ்க குணவர்தனவுக்கு எதிராக எமிரேட்ஸ் கிரிக்கெட் சபை, முன்வைத்திருந்த இரண்டு விதமான ஊழல் குற்றச்சாட்டுகளையும் ஏகமனதாக நீக்குவதாக ஐசிசியின் சுயாதீன ஊழல் தடுப்பு தீர்ப்பாயம் அறிவித்தது.

இலங்கை கிரிக்கெட் தலைவராக ஷம்மி சில்வா, போட்டியின்றி மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

## ஜூன்

டுபாயில் நடைபெற்ற ஆசிய குத்துச்சண்டைபோட்டியில் இலங்கை வீராங்கனை நதீக்கா புஷ்பகுமாரி வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.






சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண வில்வத்தைப் போட்டியின் ரிகர்வ் பிரிவில் இலங்கை வீரர் ரஜீவ் டி சில்வா தங்கப் பத்தகம் வென்றார். உலகக் கிண்ண வில்வித்தைபோட்டியில் தனி நபர் பிரிவில் இலங்கை வென்ற முதலாவது தங்கப் பதக்கம் இதுவாகும்.

இந்தியாவின்,பாட்டியாலா நகரில் நடைபெற்ற இந்தியமா நிலங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட் டியில் லக்ஷிகாசுகன்தி, அமாஷா டி சில்வா, நிமாலி லியனாராச்சி மற்றும் காலிங்ககுமாரகே ஆகியோர் பதக்கங்களை வென்று அசத்தினர்.

இந்தியாவின் பாட்டியாலாவில் நடைபெற்ற இந்திய மாநிலங்களுக்கு இடையிலான தேசியமெய்வல்லுநர் போட்டியில் பெண்களுக்கான 4×100 அஞ்சலோட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்ற இலங்கை அணி,19 வருடங்களுக்குப் பிறகு 4×100 அஞ்சலோட்டத்தில் அதிசிறந்த காலப்பெறுமதியை பதிவுசெய்தது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் வழங்கப்படும் ஹோல் ஒப் பேம் விருதுக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவின் பெயர் உள்வாங்கப்பட்டது.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் புதிய தலைவராக ஜஸ்வர் உமர் தெரிவாகினார்.

## ஜூலை

சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபற்ற ஆசிய கரப்பந்து சம்பியன்ஷிப் தொடருக்கான தகுதிகான் போட்டியில் உஸ்பகிஸ்தானை 3-0 என இலகுவாக வீழ்த்திய இலங்கை குறித்த தொடருக்கு தகுதியினைப் பெற்றுக் கொண்டது.

இலங்கையின் விளையாட்டுத்துறை வரலாற்றில் ஒலிம்பிக் குத்துச்சண்டைப் போட்டியில் முதல் பெண் நடுவராக பணியாற்றும் வாய்ப்பை டி.நெல்கா ஷிரோமலா பெற்றுக் கொண்டார்.

டோக்கியோ ஒலிம்பிக் ஆண்கள் ஒற்றையர் பிரிவு பெட்மிண்டன் முதல் சுற்றில் பங்கு கொண்ட இலங்கையின் நட்சத்திர வீரர் நிலூக கருணாரத்ன, 2 போட்டிகளிலும் தோல்வியைத் தழுவி ஏமாற்றத்துடன் ஒலிம்பிக் அரங்கிற்கு விடைகொடுத்தார்.

சுற்றுலா இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான ரி-20 கிரிக்கெட் தொடரின் மூன்றாவது போட்டியில், இலங்கை அணி 7 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியினை பதிவு செய்திருப்பதுடன் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரினையும் 2-1 எனக் கைப்பற்றியது.

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் இசுரு உதான, சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

## ஆகஸ்ட்

டோக்கியோ பாராலிம்பிக் ஈட்டி எறிதல் ரி 46 போட்டியில் உலகசாதனையுடன் தங்கப் பதக்கம் வென்று இலங்கையின் தினேஷ் பிரியன்த ஹேரத் புதிய வரலாறு படைத்தார்.

டோக்கியோ பாராலிம்பிக் ஆண்களுக்கான ரி 64 ஈட்டிஎறிதல் போட்டியில் 65.61 மீற்றர் தூரத்தைப் பதிவுசெய்த இலங்கை வீரர் சமித்ததுலான் வெண்கலப் பதக்கத்தைசுவீகரித்தார்.

## செப்டெம்பர்

சுவிட்சர்லாந்தின் சூரிக்கில் நடைபெற்றடயமண்ட் லீக் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையின் யுபுன் அபேகோன் 9ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இந்தியன் ப்ரோகபடிபிரீமியர் லீக் வரலாற்றில் வீரர்களுக்கான ஏலத்தின் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டமுதல் இலங்கை வீரர் என்ற பெருமையை இலங்கை கடற்படையைச் சேர்ந்த 25 வயதான அன்வர் சஹீப் பாபா பெற்றுக்கொண்டார்.

இலங்கை அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் லசித் மாலிங்க அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலுமிருந்து ஓய்வுபெறுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இலங்கை இராணுவப்படை குத்துச்சண்டை வீரரான சஜீவ நுவன், ரஷ்யாவில் நடைபெற்ற 58ஆவது உலக இராணுப்படை குத்துச்சண்டைசம்பியன்ஷிப் தொடரில் வெண்கலப்பதக்கம் வென்றார்.

உலக மெய்வல்லுநர் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வீரர்களுக்கான புதிய தரவரிசையில் இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரரான யுபுன் அபேகோன், 40ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

ரி 20 உலகக் கிண்ணத்தின் முதல் சுற்றின் போது இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசகராக மஹேல ஜயவர்தன நியமிக்கப்பட்டார்.

## ஒக்டோபர்

இத்தாலியில் நடைபெற்ற உலகக் கிண்ண சக்கர நாற்காலி டென்னிஸ் போட்டித் தொடரில் 6ஆவது இடத்தை இலங்கை சக்கர நாற்காலி டென்னிஸ் அணி பெற்றுக்கொண்டது.

ஆசிய மேசைப்பந்து சம்பியன்ஷிப் தனி நபர் பிரிவு போட்டிவரலாற்றில் முதல் 16 இடங்களுக்குள் தகுதி பெற்ற முதலாவது இலங்கையர் என்ற சாதனையை முத்துமாலிபிரியதர்ஷனி படைத்தார்.

ஒலிம்பிக் வெள்ளிப் பதக்கம் வென்ற இலங்கையின் முன்னாள் குறுந்தூர ஓட்ட வீரங்கனையான சுசந்திகா ஜயசிங்க விளையாட்டுத்துறை அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராக மீண்டும் நியமிக்கப்பட்டார்.

இலங்கையின் ரக்பி விளையாட்டுக்கு அளப்பெரிய சேவையாற்றிய முன்னாள் வீரரும், பயிற்சியாரும், பிரபல ஊடகவியலாளருமான சந்திரஷான் பெரேரா தனது 60 வயதில் காலமானார்.

2022 இல்நடை பெறவுள்ள ஆசிய கால்பந்து சம்மேளனத்தின்) 23 வயதின் கீழ் ஆசிய கிண்ணத்திற்கான தகுதிகாண் சுற்றுத் தொடரில் பங்குகொண்ட இலங்கை அணி, தாம் பங்கேற்ற 3 போட்டிகளிலும் தோல்வியடைந்தது.

கிரிக்கெட்டின் சட்டவிதிமுறைகளை தீர்மானிக்கும் மெரில்போன் கிரிக்கெட் கழகம் இலங்கையின் முன்னாள் சுழல் பந்து ஜாம்பவான் ரங்கன ஹேரத்துக்கு வாழ்நாள் உறுப்பினர் பதவியை வழங்கியது.

இலங்கையின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் அணித் தலைவர் பந்துல வர்ணபுர காலமானார்.

## நவம்பர்

இலங்கை கபடி அணியின் பயிற்சியாளராக தமிழ் நாட்டைச் சேர்ந்த கே.பாஸ்கரன் நியமிக்கப்பட்டார்.

99ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது அத்தியாயத்தில் ஐந்து இலங்கை சாதனைகளும், 3 போட்டி சாதனைகளும் முறியடிக்கப்பட்டன.

99ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது அத்தியாயத்தில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் பங்குகொண்ட வடக்கின் நட்சத்திரவீரரான அருந்தவராசா புவிதரன் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை அணியை பெனால்டியில் 3-1 என்றகோல்கள் கணக்கில் வீழ்த்திய சீசெல்ஸ் அணி சம்பியனாக மகுடம் சூடியது.

இலங்கையில் உள்ள பிரதான கழகங்களுக்கிடையில் நடைபெறும் ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் ராகம கிரிக்கெட் கழகத்தை 36 ஓட்டங்களால் வீழ்த்தி தமிழ் யூனியன் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.

சர்வதேச கால்பந்து சம்மேளத்தின் தலைவர் ஜியானி இன்பன்டீனோ, இரண்டுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்தார்.

## டிசம்பர்

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் பாரா விளையாட்டு விழாவில் பங்கு கொண்ட இலங்கை வீரர்கள் 4 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்கள் என ஒட்டுமொத்தமாக 12 பதக்கங்களை சுவீகரித்தனர்.

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற பொதுநலவாய பளுதூக்கல் சாம்பியன்ஷிப் போட்டித் தொடரில் இலங்கை அணி 7 பதக்கங்களை வென்று அசத்தியது.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தரின், பயிற்றுவிப்புகாலம் மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருடன் நிறைவுக்கு வந்தது.

சர்வதேச நீச்சல் சம்மேளனத்தின் புதிய தரவரிசையின்படி, ஆண்களுக்கான பின்நோக்கிய நீச்சல் போட்டியில் உலகின் முதல் 50 வீரர்களில் இலங்கை நீச்சல் வீரர் அகலங் கபீரிஸ் இடம்பிடித்து அசத்தினார்.

இலங்கையின் நட்சத்திர மரதன் ஓட்டவீராங்கனையான ஹிருனி விஜேயரத்ன, கலிபோர்னியாவில் நடைபெற்ற சர்வதேச மரதன் ஓட்டப் போட்டியில் பங்குகொண்டு 10ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

பங்களாதேஷில் இடம்பெற்றுவரும் 19 வயதின் கீழ் பெண்களுக்கான தெற்காசிய கால்பந்து சம்மேளன கிண்ண தொடரில் இலங்கை அணி தாம் பங்கேற்ற அனைத்து போட்டிகளிலும் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது.

லங்கா பிரீமியர் 2021 ஆம் ஆண்டு தொடரின் இறுதிப் போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணி 23 ஓட்டங்களால் கோல் கிளேடி யேட்டர்ஸ் அணியை வீழ்த்தி, தொடரின் சம்பியனாக இரண்டாவது முறையாக நாமம் சூடியிருக்கின்றது.

இலங்கை கிரிக்கெட் வீரர் ஜீவன் மெண்டிஸ் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற 33ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் 170 புள்ளிகளைப் பெற்ற கம்பஹா மாவட்டம் தொடர்ச்சியாக ஏழாவது தடவையாக சம்பியனாக மகுடம் சூடியது.

ஆசிய பங்கபந்து மத்திய வலய ஆடவர் கரப்பந்தாட்ட கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணியை 30 என வீழ்த்தி இலங்கை அணி சம்பியன் கிண்ணத்தை வெற்றிக்கொண்டது.

**பஸ்ரிப்** -பாணந்துறை

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மஞ்சரி களஞ்சியம்

## வாழ்வாதாரமா சேதாரமா 204



தமிழ்க் கவி பேசுகின்றார்

# முடிவுக்கு வரும் நெற்களஞ்சியங்கள்?



## கேள்விக்குறியாகும் விவசாயிகளின் வாழ்க்கை

விவசாயிகளின் நெற்களஞ்சியங்கள் முடிவுக்கு வருகின்றனவா? விவசாயிகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகிறதா? மக்களின் உணவில் அரசியல் புகுந்து அட்டகாசம் புரிகிறதா?

படிப்படியாக விவசாயிகளின் மனநிலை பெரும் குழப்பத்திற்குள் ஆழ்ந்துவருகிறது. அவர்களது உடல்நலம் வெகுவாக குன்றி வருகிறது. காரணம் அவர்களது வாழ்க்கையை அவர்கள் எப்படி நடத்தப் போகிறோம் என்ற பெருங்கவலையில் ஆழ்ந்திருக்கிறார்கள். இம்முறை வன்னி விவசாயிகளின் நெற்பயிர்கள் வரம்பை விட்டு மேலெழவில்லை ஆட்காட்டி விரலளவே கதிர் வருகிறது. சோளக்கதிர்போல அடர்ந்து வளர்ந்த கதிரை சென்ற வருடம் பார்த்தோம் இம்முறை அது சாத்தியமில்லை.

யுத்தம் நடைபெறாத பகுதிகளில் பசளை வகைகள் தாராளமாக கிடைக்கின்றனவாம். யாரோ அநாமதேயமானவர்கள் ரசாயன உரத்தை அந்தர் இருபத்தைந்தாயிரமாக கொண்டு வந்து விற்கிறார்களாம். அப்படி விலையில் விவசாயிகளால் அதை கொள்வனவு செய்ய முடியவில்லை. பிரச்சனை தொடங்கு முன்பே பெரும் பணக்காரர்கள் தேவையான அளவில் உரத்தை பதுக்கி வைத்திருந்திருக்கிறார்கள். ஆனாலும் செட்டிகுளம், வவுனியாநகரின் தென்பகுதிக் கிராமங்களில் போதிய ரசாயனப் பசளை விற்பனையாகிக் கொண்டிருப்பதாக ஒரு ஆதாரமற்ற தகவல் கசிகிறது.

இந்திய அமைதிப் படை வந்திருந்த தான காலத்தில் மக்களுக்கான கடைத்தெருக்கள் இல்லாமல் சிலகாலம் இருந்தது. அப்போது மளிகைச் சாமான்கள் எதுவும் வவுனியா நகருக்குள் வரவில்லை. ஆனால் வவுனியாவின் எல்லைக் கிராமங்களில் இருந்த இளைஞர்கள் அயலிலுள்ள சிங்களக் கிராமங்களூடாக சீனி மூடைகளை கொண்டுவந்து நல்ல விலைக்கு விற்றார்கள். அவர்களைத் தவிர வேறுயாரும் அந்த வியாபாரத்தை செய்யமுடியாதபடிக்கு கவனமாக வியாபாரத்தில் உழைத்தார்கள். சந்தைகள் கடைகள் எல்லாமே வவுனியாக் குளத்தின் வரண்டகாலத்தில் குளவெளியிலேயே நடந்தது.

வவுனியாவுக்கு வடக்கே வாழ்ந்த பெருவாரியான மக்கள் தமது தேவைகளுக்காக அந்தக் குளவெளிக்கு தாண்டிக்குளம் வழியாக வந்து பொருட்களை கொள்வனவு செய்துகொண்டு போனார்கள். அதேநிலை இன்று பசளைக்கு விசேடமாக யூரியாவுக்கு வந்திருக்கிறது. அதே சமயம் இதை கடத்த முடியாத அளவுக்கு தடைகளும் இருக்கிறதாம்.

என்னடா மதுரைக்கு வந்த சோதனை என்று தோன்றுகிறது. கிளிநொச்சியை பொறுத்தவரையில் அங்கே சொந்தமாக வயல் விதைப்பவர்களது தொகைக்கு நிகராக குத்தகைக்கு வயலை பெற்று விதைப்பவர்களும் உண்டு. அவர்களால் இம்முறை குத்தகை நீங்கலாக எந்த லாபத்தையும் பெறமுடியாமல் போகும் என்பது நிச்சயம்.

மல்லாவிப் பிரதேசத்தில் விவசாயிகளின் நிலை மிகவும் மோசமாகும். ஒரு சாதாரண வைத்தியசாலை ஊழியர் சொன்னார். இப்போது விவசாயிகளுக்கு பிறசர் கூடுவதும் குறைவதுமே வியாதியாக இருக்கிறது என்று. காரணம் அவர்கள் தமது எதிர்காலத்தை வாங்கிய கடனை, வயல் விதைத்த செலவை. மீதமுள்ள வாழ்க்கையை, பிள்ளைகளின் எதிர்காலத்தை எண்ணிக் கவலைப்படுகிறார்கள். மண்ணை நம்பி மட்டுமே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். தமது வாழ்க்கையை இனி எப்படி கொண்டுசெல்லப் போகிறோம் எனவும் இருக்கிற வயலை எப்படி விளைய வைக்கப் போகிறோம் எனவும், யோசித்து யோசித்து மாய்கிறார்கள். இந்தியாவில் கடன்பட்ட விவசாயிகள் அதைக் கட்டமுடியாமல் தற்கொலைசெய்து கொள்வதை நாம் பெரிய ஆதங்கத்துடன் பார்த்தோம்.

அதேநிலை எமது விவசாயிகளுக்கும் வந்துவிடுமோ என்ற அச்சம் தவிர்க்க முடியாதது.

வருடாந்தம் அறுவடைசெய்த நெல்லை விற்க முடியாமல் இது போனவருச நெல் இது அதற்கு முந்தியவருச நெல். இது இந்த வருட நெல் என்று கட்டிவைத்து அதை அரிசியாக்கி விற்று சிறிதளவு பணத்தை பெற்று வாழ்ந்தமக்கள் நாம். இவ்வருட நெல் விற்காமல் கிடந்தாலும் அடுத்த வருட விதைப்பை விவசாயி விட்டதில்லை. இன்றைய நிலையும் அப்படித்தான். விவசாயம் என்பது விவசாயிக்குதொழிலல்ல, அது அவனுடைய வாழ்க்கை. அதை அவன் வாழ்ந்துதான் ஆகவேண்டும்.

'மேழிபிடிக்கும் கை வேல் வேந்தர் நோக்கும் கை ஆழி சூழ் உலகத்தே அருளும் கை காராளர் கையே' என்று அவ்வை சொன்னமொழி பொய்யாகி இன்று அவர்களுடைய வாழ்க்கைக்கே ஆதாரமற்றுப் போகலாமா..

ஒரு காலஅவகாசமில்லாமல் அரசாங்கம் கொண்டு வந்ததிட்டம் பலரை காவுகொள்ளப் போகிறது என்பது பெரியவிடயம் . கொரனாவுக்கு அடுத்தபடியாக இந்த விவசாயிகளின் பிரச்சினை மண்ணை ஆட்டிப் படைக்கப்போகிறது என்பது நிஜம். எப்போதும் உற்சாகமாக திரிந்த விவசாயிகள் எதையோ பறிகொடுத்தவர்கள் போலத் திரிவதைக் காண மனது வலிக்கிறது.

விவசாயி விவசாயம் செய்வான். நெல் விளையும் அந்த நெல்லை களத்தில் மாடு கொண்டு போரடித்து காற்றிலே தூற்றிவிட்டு பதர் நீக்கி கட்டிக் கொண்டு வருவதன் முன் விவசாயம் செய்ய நிலமில்லாத ஏழைமக்கள் குல்லமும், கடகமும் கொண்டு ஒவ்வொரு களமாக செல்வார்கள்.

விவசாயி தன் தலையில் தலைப்பாகை கட்டிக்கொண்டு களப்பிச்சை கொடுப்பான். பொலிக் குவியலில் குல்லத்தால் கோலி ஒவ்வொரு கடகத்திலும் போடுவான். அவர்கள் அவனும் அவன் குடும்பமும் வாழ்க வென்று வாழ்த்தி கொண்டு செல்வார்கள். அதன்பிறகு கூலிவேலை செய்தவர்களுக்கும் நெல்லே கூலியாக அளப்பான். மீதமே வீட்டுக்கு கொண்டுசென்று குதிரில் சேர்ப்பான்.

ஊர் முழுதும் விவசாயத்தால் செழித்த அந்தக் காலத்தில். நெல் வெட்டிய பின் அடுத்தபோக விதைப்புவரை கால்நடைகள் இடையறாது நிறைந்து நின்று மேயும். அந்தவயல் வெளிகளில் சாணுக் கொன்றாக சாணம் இருக்கும். எருக்கு படர்ந்து செழிக்கும். போகவிதைப்பு தொடங்க இரு மாதங்களின் முன்னதாக வரும் உகைப்பு மழையில் இந்த நிலத்தை உழுது அந்தசாணத்தையும் எருக்கையும் வயலுக்குள் மண்ணில் சேர்த்து உழுதுவைப்பான் விவசாயி. அருமையான பசளையும் கிருமிநாசினியாகவும் அதுவே வேலைசெய்யும்.

இந்தக்காலம் போல பசளை விசிறியதை நாமறியோம். ஆக குளங்கள் வற்றும் காலத்தில் அதன் அடிப் பொருக்கை அள்ளி வயலில் பரவுவார்கள்.

அருமையான நாட்டு ரகங்களான முருங்கைக்காயன் (காரணப்பெயர்) முத்துச்சம்பா, பச்சைப்பெருமாள் சீனட்டி மொட்டைக் கறுப்பன் சீரகச்சம்மா என எத்தனைவகை நெல்லரிசி. சாதம் அடுப்பில் வேகும்போதே கமகமக்கும் வாசனை. எல்லாம் போயிற்று. அதிகப்படி விளைச்சலை ஆசைப்பட்டு, புதுப்புது ரகங்களை கொண்டு வந்தும் அவற்றை விளைய வைக்க புது வகை ரசாயன உரங்களை கொடுத்ததும் யார் . இன்று இந்த புதிய ரகங்களுக்கு ரசாயனப் பசளைதான் வேண்டும் என்ற தேவை உண்டு.

நாட்டுமாடுகளை அழித்து அதிக பால் கொடுக்கும் மாடுகளை பெற்றோம். அவற்றுக்கு நமது மண்ணின் மூலிகைச் செடிகளை தெரியாது. நமது காவல் நாய்களை தெருநாய்களாக்கிவிட்டு பெரியபெரிய வெளிநாட்டு இனத்து நாய்களை பெரும் விலையில் வாங்கினோம். அவற்றுக்கு குரங்கு கலைக்கக் கூடத் தெரியாது.

'அன்னநடையாலே தன் நடையும் கெட்டகதையாய்'.

## வெள்ளை வைரமுத்து!



முழுப்பெயரில்
"லெப்பை"இருப்பதால்தான்
இவன்
பாடலாசிரியராக
எழும்பியிருக்க வேண்டும்!
தூண்டிலில்
கவிதையை
இரை குத்தினான்
இவனுக்கு
சினிமாக் கடலில்
திருக்கை
இழுபட்டு வந்தது!
கவிதை உலகின்
மொத்த வியாபாரி!
இவனது கவிதைகளில்
இரும்புச் சத்து அதிகம்
இதனால்தான்
விமானத்தில் இறங்குகிறான்
தமிழகத்தில்!
கவிதை ஒரு
புகையிரதம் எனில்
இப்போதெல்லாம்
'பெஸ்ட் கிளாஸ்'
இவனுக்குத்தான்!
அஸ்தமிக்க வேண்டும்
மேற்கில்
இவன் அங்கே
உதிக்கிறான்!
ஊர்
பொத்துவில்
இவன்
உயர்ந்து விட்டான்
நீ
பொத்து வாய்!
கவிதைகளை
இறக்குமதி செய்யும்
இக்காலங்களில்
இவன் ஒருவன்தான்
ஏற்றுமதி செய்கின்றான்!
நீ
பாற்சங்கு
நத்தைகளுக்குத் தெரியுமா
உன் பெருமை!
நண்பனே
உன்னிடம் ஒரு கேள்வி
'திரை கடலோடி
திரவியம் தேடு' என்கிறார்கள்
அது
உனக்குத்தானா?
கவிதை
உலகம் எனில்
இவன்
தனித்தீவு!
வெள்ளை வைரமுத்து!

கவிஞர்
வாழைச்சேனை ஷல்மானுல் ஹரீஸ்





# பிச்சிப் பிலாவடி ..

பிரதான தெருவும் மேற்கில் சேர்கின்ற குளக்கட்டும் அந்தண்டையில்தான்; அங்கிருந்து நற்பிட்டிமுனைக்குப் பிரிகின்ற வயல் பாதை இடத்தில் ஒரு மரம் நின்றது; மூத்த குடியானவரில் மூத்தம்பி ஆலிமின் இரண்டு தலைமுறையை விடவும் அது வயதான மரம்; அதன் பெயர் தான் வம்மி; அழகான வாசம் சிந்தும் மரம் என்று எல்லோராலும் தீர்ந்திருந்தது; அதன் பிறகு பெரும் இடி ஒன்று விழுந்து பட்டுப் போனதாகக் கதை பரவிற்று; அம்மரத்துக்குத் தெற்கே ஆறும் இருந்தது; அதற்கு மேல் கருவேலங்காடும் நெருங்கிய தூரத்தில் பிரம்புப் பற்றையும் கிழக்கே கடலுமாக எங்கள் ஊர்...



அந்தக் காற்றை உணர்ந்ததும் எங்கள் உடம்பில் திடுமென ரத்தம் சுரப்பதுமாதிரிச் சந்தோஷ அலைகள் பரவும்; பூசரி மரம் அதன் கிளைகள் உரசி எழுப்பும் ஒலியில் தூக்கம் காவும்; அரைச் சாயங்கால நேரம், கோணக் குட்டியோடு விளையாட்டைத் தொடங்கியிருப்போம்; அயல் தெருப் பையன்களும் குட்டிகளும் எங்களுடன் சேர்ந்து கொள்வார்கள்; சத்தம் தெருவைப் பிளக்கும்; பெரியவர்கள் எட்டிப் பார்ப்பார்கள்; இரைச்சல் தாளாமல் கெட்ட வார்த்தைகளும் உதிர்ப்பார்கள்; நாங்கள் வலிப்புக் காட்டுவோம்; "என்னிக்காவது ஒரு நாளைக்கு எங்கிட்ட தனித் தனியா மாட்டுவீங்கடா, அன்னிக்கு உங்களப் புளியாணம் காய்ச்சிறோம் பாருங்க.." என்பார்கள்..

உச்சி வெயிலானாலும் உக்கிரம் கிடையாது; முன் யோசனையாக என்றோ வீட்டின் நடு முற்றத்தில் நட்டிருந்த புளிய மரம் நெகு நெகுவென்று கிளை பரப்பிக் குடையாய் விரிந்து சூட்டைத் தணித்தது; அதன் நிழலில் தர்வீஷ் அப்பாவின் கயிற்றுக் கட்டில் ஒரு நிரந்தரச் சிம்மாசனம்தான்; தலையில் கொண்டை போட்டுக் கொண்டே பக்கத்தில் இருந்து அரிசி புடைத்துக் கொண்டிருக்கும் அவர் நங்கினத்தின் (மனைவி) சுளகிலிருந்து தவறித் தரையில் சிந்திக் கிடந்த குறுநெல்லை ஒரு குருவி தயங்கித் தயங்கிக் கொத்திக் கொண்டிருக்கும்; வீட்டின் பின்புறமிருக்கும் காய் கறித் தோட்டம் மீது யாராவது கை வைத்து விடுவார்கள் என்ற அச்சத்தில் கட்டிலில் தலை சாய்த்த நிலையிலும் கண்ணசரக் கூடாது என்கின்ற வைராக்கியத்தில் தர்வீஷ் அப்பா புரண்டு படுப்பார்...

சந்தையில் சனங்கள் நுழைந்தது போன்ற ஓசையுடன் குழந்தைகள்போடும் இரைச்சலில் அவர் விடுக்கென்று எழுந்து உட்கார்ந்து "ஏலே என்னடா சத்தம் போடுறீங்க.." என்பார்; அவர் கனைப்புக்கு நான் அருகில் சென்றால் இடுப்பில் முடிந்து வைத்திருக்கும் சுருக்குப் பையிலிருந்து ஒரு இருபத்தைந்து சத நாணயத்தை எடுத்து எனது கையில் வைத்து, "விழுது விழ விழ நிலத்திலே பதிஞ்சு தூணாய் ஆல மரத்துக்குப் பலம் சேர்க்கிறமாதிரி, அன்பா ஆரோக்கியமா நடக்கணும். ." என்று ஆசீர்வதிப்பார்; அவரைச் சூழ்ந்து எதிரும் புதிருமாக மரங்கள் முதிரை, சமலை, காட்டுக் கொய்யா, ரானை, ஆலை என்பன சீராகக் கிர் கிர்ரென்று அசைவதைச் சில வினாடிகள் அப்பா பரவசத்துடன் பார்ப்பார்....

அருவியில் குளிப்பவர்களையோ துவைப்பவர்களையோ யாரையும் காணவில்லை; காயப்போட்டிருந்த துணிகள் மட்டும் கேட்பாரற்று அப்படியே கரையில் பரவிக் கிடந்தன; நான் யோசனையோடு பார்த்துக் கொண்டிருக்கும்போது அப்பா வந்தார்; அந்தரமாய் மேலெழும்பிக் காற்றில் சிறகை விரித்துச் செல்லும் பறவைகள்போல் வண்ண வண்ணத் துணிகள் சடசடக்க "இங்கு காவலுக்கு யாருமில்லையா.." என்றேன்; "தேவையில்லையே ஆமணக்கு மரங்கள் இருக்கும்வரை, எந்த மிருகமோ பட்சியோ நெருங்க ஏலாது; மனிதர்கள் கூடச் சில வேளைகளில் பயந்து ஓடி விடுவார்கள்; வெயில் ஏற ஏற வெடில் பறிவதுபோல் அதன் விதைகள் வெளியாகித் தெறித்து அச்சமூட்டும்.." என்கிறார்; எனக்கு அன்று ஆச்சரியமாகவே இருந்தது; கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஆமணக்கு மரங்களே வரிசையாக நின்றன...

வீட்டின் உள் பக்க மூலையிலிருந்து வரும் குழந்தைகளின் அழுகுரல் வளையல் ஓசைகள், தெருநாய்க் குரைப்பு, மாட்டுத் தொழுவத்தில் நிற்கும் மாடுகளின் மூச்சும் சில இரவுகளில் துல்லியமாகக் கேட்கும்; தூக்கம் வராத இரவுகளில் தடியைப் பிடித்தபடி உலாவிவிட்டு வரும்போது, சூ..! சூ..! சனியன், அப்படி தர்வீஷ் அப்பா போட்ட சத்தத்தில் எல்லோரும் எழுந்து கொண்டோம்; அந்தக்கருவேப்பம் மரத்தில் அமர்ந்து யாரோ அழுவது கேட்கிறது என்றார்; சடசடத்து பறந்துவந்து, எதிரில் நின்ற கழுகு இருட்டுக்குள் தாவணியை இடுப்பில் சுற்றி இழுத்துக் கட்டியிருக்கும் ஒரு பெரிய மனுஷிபோல தெரிந்தது; அதன் ஒரு கந்தின் முனையில் தொத்தி உட்கார்ந்திருந்த

கருப்பு நிறக் குருவியொன்று ஊஞ்சலாடிக் கீச்சிட்டது; பாதித் தூக்கத்தில் கண்கள் பிதுங்கியிருந்தன; எரிச்சலோடு கலைந்தோம்....

பூவரசம் மரத்தின் இலைகள் பழுத்து உதிர்ந்து கிடக்கும்; தோழர்கள் பப்பி செய்து ஊதுவது ஆடு கனைப்பதுபோல் கேட்கும்; தூரத்திலிருந்து பார்த்தால் வளைந்து குனிந்திருக்கும் காட்டு வம்மி அப்பா மாதிரியே தெரியும்; காமணக்கா மரம் பூத்துக் காய்க்கும் உருவம் உம்மாவின் கொசுவம் வைத்த முந்தானைபோல் அசையும்; வாய் நிறைய உப்பிய கூழை உள்ளுக்கு விழுங்கி விட்டு "ம்" என்று தலையை ஆட்டும் வாப்பா போலவே நிமிர்ந்து நிற்கும் சமலை மரம்; எங்கள் சீனிக் காக்காவின் முதுகை நினைத்தால் கோப்பத்தம் பட்டைகளைத் தன் சருமம் வழியே அவிழ்த்துவிடும் கமுகு பரம்போல்தான் கம்பீரம் தெரியும்; எங்கள் பக்கத்து வீட்டு மம்மசன் காக்காவைப் பனை மரம் என்றுதான் அழைப்போம்; சூபியா மாமியின் வீட்டைப் "பூமரத்துவீடு" என்று அடையாளப் படுத்துவோம்...

வமியடி, கட்டையடி, மயர் பற்றை, பலாச்சோலை, மருத நிலம், பிச்சிப் பிலாவடி, அத்தியடி, விழிணையடி, கூழாவடி, ஆமணக்குச் சந்தி, ஆலயடி, அரசயடி, முந்திரிக் காடு என்றெல்லாம் மரங்களை வைத்தே இடங்களுக்குப் பெயர்கள்; வீதியை விட்டு ஒதுக்குப் புறமாய் ஓடை உள்வாட்டமாகவே கொஞ்சத் தூரம்; ஓரத்தில் உயர உயரக் குறிஞ்சா மரங்கள், இலுப்பை, அருகம்புல், லாமிச்சையென்று சின்னச் சின்னக் கன்றுகள்; பாதத்தில் குளிர்ச்சி தட்டும் குளுமை பரவிய நெருகமான புதர்; ஒரே ஒரு தென்னை மரம் அதுவும் கப்பு விட்டு நின்றிருக்கும்; என்ன ஏது என்று சொல்ல முடியாத அதிசயமாக கப்புத் தென்னை தோணா வாய்க்கால் ஓரமாக நின்றிருந்ததாக அப்பா சொல்லக் கேட்டிருக்கிறேன்...

மாமரத்தின் கீழே பூக்கள் சிந்திக் கிடக்கும்; மரத்தில் கட்டை எறும்பு ஊரும்; அருகில் பாய் போட்டுக் காலைப் பின்னிப் பதமாகப் படுப்பதென்பது அலாதிதான்; அந்நேரம் நீல நிறக் குருவியொன்று வாலை ஆட்டியபடியே விட்டுவிட்டுக் கத்திக் கொண்டிருக்கும்; அடர்ந்த மரம்; அசையும் நிழல் உச்சி வேளையிலும் தழுவி அப்பும் காற்று; நல்ல நித்திரையில் மூழ்கிக் கண் விழிக்கும்போதில் பின் தலையிலும் முதுகிலும் பொடி மணல் உறுத்தும்; புறங்கைகளால் தட்டி விட்டு எழுந்ததையும் பாயை எடுத்துப் பழையபடியே இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்ததையும் நினைக்கச் சந்தோசமாக இருக்கிறது...

பலா, முருங்கை, வேம்பு, தோடை இந்த மரங்கள்தான் மட்டைப் பந்து விளையாட்டின் எல்லைகள்; ஒவ்வொரு மரமாகத் தரித்து ஓடுவோம்; மேகத்திடையே சூரியன் நகர்ந்து வந்தபோது மத்தியானமாயிருந்தது; வீட்டுத் தெருப்பக்கம் கண்களை இறுக்கிக் கொண்டு ஒருவர் "ஆளக் காணல்லயா.." என்று பதறுவது தெரிந்தது; ஒரு பத்தே பத்து நிமிடம்தான்; முகத்துக்குள் சுற்றிச் சுற்றிவந்த கொசுவை விரட்டிக் கொண்டே சிலர் கூடினார்கள்; அந்த ஆலமரத்தில் தொங்கிக் கொண்டிருந்த கயிறு ஆடி முடித்திருக்கவில்லை; அதற்கிடையில் தங்கராசா வின் உயிர் பிரிந்திருந்தது; சனங்கள் அவர் தூக்குப் போட்ட காரணத்தை என்னவெல்லாமோ சொல்லி முணு முணுத்தாலும் சில ஆண்டுகளோடு கதை நின்றுபோனது; அந்த ஆலைக்கு மட்டும் "தூக்காலை" என்ற பெயர் நிலைத்தே விட்டது.

# OPPO வினால் Air Glass மற்றும் Spark Micro Projector அறிமுகம்



OPPO INNO Day 2021 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் OPPO Air Glass இன் புதிய வடிவமைப்பை அறிமுகப்படுத்த OPPO நடவடிக்கை எடுத்துள்ளது. OPPO இன் தயாரிப்பான, Spark Micro Projector அதிநவீன Micro LED மற்றும் Diffraction Optical Waveguide Display ஆகியவற்றைக் கொண்ட இந்த aR (assisted Reality) கருவியை தொடுகை, குரல், தலை மற்றும் கை அசைவுகளால் கட்டுப்படுத்தக் கூடியது என்பதால் பயன்படுத்துபவர்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை விரைவாகவும், எளிதாகவும் அணுக முடியும்.

"நாம் நீண்டகாலத்துக்கு முன்னர் Extended Reality (XR) தொழில்நுட்பத்தின் திறன்களை ஆராய்ச்சி செய்தோம். இதன் மூலம் தற்பொழுது வாடிக்கையாளர்கள் சௌகரியமாகக் கொள்வனவு செய்யக்கூடிய ஸ்மார்ட் கிளாஸ் உற்பத்தியை அறிமுகப்படுத்த முடிந்துள்ளது. OPPO Air Glass என்பது எமது தகவல்களைப் பெற்றுக் கொள்வது மற்றும் பயன்படுத்தும் முறையை முற்றிலும் மாற்றும் ஆற்றலைக் கொண்ட ஒரு தயாரிப்பு ஆகும். எமது கண் முன்னால் தெரியும் காட்சியை திரையில் கொண்டுவர முடியும் என்ற பிரதான செய்தியையே கூற விரும்புகின்றோம். OPPO Air Glass இன் ஊடாக நாம் பார்க்கும்போது உலகம் மாறுபட்டதாக இருக்கும்" என OPPO இன் உபதலைவரும், OPPO இன் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய உப தலைவருமான லெவின் லியூ தெரிவித்தார்.

முன்னோடியான monocle waveguide வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. 30 கிராம் எடையைக் கொண்ட OPPO Air Glass உலகத்திலேயே எடை குறைந்த monocle waveguide கருவியாகக் காணப்படுவதுடன், இதனை சாதாரண மூக்குக் கண்ணாடி போன்று அணியவும் முடியும்.

அத்துடன், OPPO இன் மற்றுமொரு தயாரிப்பான அதிநவீன Micro LED மற்றும் உயர்ந்த வெளிப்படைத் தன்மையுடன் கூடிய ஐந்து கண்ணாடி வில்லைகளைக் கொண்ட Spark Micro Projector உயர்ந்த மட்டத்தில் aR அனுபவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு உதவியாகவிருக்கும்.

# உயிர்ப்பாக செயற்படும் குடிமக்கள் சமூக நடவடிக்கை திருமலையில் நிறைவு



Muslim Aid உடன் இணைந்து இலங்கை British Council, திருகோணமலை மாவட்டத்தில் காலநிலை மாற்றம் தொடர்பில் உயிர்ப்பாக செயற்படும் குடிமக்கள் எனும் முயற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இந்த ஒட்டுமொத்த திட்டமும், தற்போது உலக மக்களைப் பாதிக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தல்களில் ஒன்றான காலநிலை மாற்றத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க இளைஞர்களை அணிதிரட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஆறு தனித்துவமான திட்டங்களை உள்ளடக்கியதாகும்.

'உயிர்ப்பாக செயற்படும் குடிமக்கள்' முயற்சியின் கீழான ஆறு திட்டங்கள்: கிண்ணியா காலநிலை மீளெழுச்சி, பாரிஜாதம், மூதூர் பாதுகாவலர்கள், Tiny Tide, வைர மாதிரிக் கிராமம், கண்டல் தாவரங்கள் (Kinniya Climate Resilience, Parijatham, Muthur Guardians, Tiny Tide, Diamond Model Village and Man Grow)

கிண்ணியா காலநிலை மீளெழுச்சித் திட்டமானது, காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் திருகோணமலை இளைஞர்கள் மத்தியில் சமூகத் தலைமைத்துவத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். அந்த வகையில், கிண்ணியா அல் இர்பான் மகா வித்தியாலய சிரேஷ்ட மாணவர்களை இலக்காகக் கொண்ட, காலநிலை மாற்றம் மற்றும் மீளெழுச்சி தொடர்பான முக்கியமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் ஒரு நாள் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொற்கேணி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிஜாதம் திட்டமானது, வறுமை ஒழிப்பு மற்றும் சூழல் மாற்றத்தை மையமாகக் கொண்டிருந்தது.

# ஆரி வேலைகளில் சிறந்து விளங்கும் வெள்ளவத்தை ஈட்ன் கலெக்ஷன்ஸ் நிறுவனத்துக்கு BWIO விருது




இந்து மற்றும் கிறிஸ்தவ திருமண வைபவங்களில் மணப்பெண்ணை அலங்கரிப்பதற்கு தவிர்க்க முடியாத அங்கமாக மாறியுள்ள ஆரி வேலைப்பாடுகளை (Aari Work) செய்து கொடுப்பதில் தலைநகரில் தனித்துவ நிறுவனமாக விளங்கும் வெள்ளவத்தை ஈட்ன் கலெக்ஷன்ஸ் (Eden Collections) நிறுவனம், Buisiness World International (BWIO) விருதுவழங்கும் விழாவில் ஆரி வேலைத் துறையில் சிறியளவிலான பிரிவின் சிறந்த இளம் தொழில் முயற்சியாளருக்கான ப்ளெடினம் விருதை வென்றுள்ளது. Buisiness World International நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி விருதுவிழா அமைச்சர் சமல் ராஜபக்ச, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஆகியோரின் தலைமையில் கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. பல்வேறு துறைகளில் சாதனை படைத்த தொழில் முயற்சியாளர்கள் பலர் இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

"Fashion Design துறையில் எனக்கிருந்த ஆர்வத்தின் விளைவாகவே நான் இந்த நிறுவனத்தை ஆரம்பித்தேன். 2017 ஆம் ஆண்டு சிறியளவில் ஆரம்பிக்கப்பட்டு இன்று நாடறிந்த ஒரு நிறுவனமாக வளர்ச்சியடைவதற்கும் இவ்வாறு விருதுகளை வெல்வதற்கும் இத்துறையின் மீது எனக்கிருந்த ஈர்ப்பால் அதனை செவ்வனே செய்தமையே காரணமாகும். ஆரி வேலைப்பாடுகள் என்பது மிகநுணுக்கமாகவும் நேர்த்தியாகவும் செய்யவேண்டிய ஒரு தொழிலாகும். தொழில் என்பதைவிடவும் அது ஒரு கலை. ஒரு நாளைக்கு எத்தனை ஆடர்கள் வந்தாலும் அத்தனையையும் என் கைப்படவே செய்வதை நான் வழக்கமாக கொண்டுள்ளதால் எமது நிறுவனத்தை சுற்றி ஏராளமான வாடிக்கையாளர்கள் உருவாகியுள்ளார்கள். இத் தொழில் என்னைப் பொறுத்தவரைக்கும் தியானத்தில் ஈடுபடுவதற்கு சமன். என விருது வென்ற ஈட்ன் கலெக்ஷன்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் சங்கீதா பிரபாலன் குறிப்பிட்டார்.

# கொழும்பு பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக எக்ஸ்டமினேட்டர்ஸ்



சூழல் பாதுகாப்புக்கான தீர்வுககளை வழங்குவதில் முன்னோடியாக விளங்கும் எக்ஸ்டமினேட்டர்ஸ் நிறுவனம் கொழும்பு பங்குச் சந்தையில் பதிவு செய்வதற்கான அங்கீகாரம் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடைமுறைகளை பூர்த்திசெய்து விரைவில் பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக மாறவுள்ளது.

Carbon Neutral Certified Pest Control சான்றிதழை வென்ற ஆசியாவின் முதலாவது கிருமிநாசினி நிறுவனமான எக்ஸ்டமினேட்டர்ஸ் நிறுவனம் உலகின் முதலாவது Carbon Neutral Disinfection தொற்றுநீக்கி சேவைகள் நிறுவனமுமாகும். சுமார் 57 தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை வென்றுள்ள எக்ஸ்டமினேட்டர்ஸ் நிறுவனம் சிறந்த SME வர்த்தகநாமமாக 08 தடவைகள் மகுடம் சூடியுள்ளது. 1998 ஆம் ஆண்டு தொடக்கம் விசக்கிருமி ஒழிப்புச் செயற்பாட்டில் எக்ஸ்டமினேட்டர்ஸ் நிறுவனம் உலகின் முன்னணி சூழல் வர்த்தகநாமமான PelsisUK உற்பத்திகளை இலங்கையில் சந்தைப்படுத்தி வருகிறது. மேலும், இரசாயனமின்றி எலி, நுளம்பு மற்றும் ஈ போன்றவற்றை கட்டுப்படுத்துவதற்கான தீர்வுகளை வழங்குகிறது.

எக்ஸ்டமினேட்டர்ஸ் நிறுவனம் அடிப்படைபங்குகள் வழங்கலின்போது மக்களுக்கு அளிக்கப்படுகின்ற 20% பங்குகளுக்கான தொகையில் கிளைகள் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கு, புதிய பொறித் தொகுதிகள் மற்றும் உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்கு மற்றும் இராசாயனமற்ற சூழல்நேய வர்த்தகநாமமாக தடம் பதிப்பதற்கு தயாராக உள்ளது.

# காலியில் புதிய கிளையை திறந்துள்ள TourmalineLanka Gemological Laboratory




இலங்கையில் முன்னணி இரத்தினக்கல் ஆய்வகங்களில் ஒன்றான Tourmaline Lanka Gemological Laboratory (TGL) தமது 5ஆம் ஆண்டு நிறைவினை இவ்வாண்டின் ஆரம்பத்தில் கொண்டாடியது. தமது 5ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் காலியில் புதிய கிளையை திறந்துவைத்தது.

இலங்கையில் முன்னணி இரத்தினக்கல் ஆய்வகங்களில் ஒன்றான Tourmaline Lanka Gemological Laboratory (TGL) தமது 5ஆம் ஆண்டு நிறைவினை இவ்வாண்டின் ஆரம்பத்தில் கொண்டாடியது. இவ்வினிய தருணத்தில் காலி நகரில் புதிய கிளையை ஆரம்பித்துள்ளது.

இப்புதிய கிளையானது காலி ஜின்தொட்டையில் அமைந்துள்ள இரத்தினக்கல் சந்தையில் அமைந்துள்ளது. மேலும் இங்கு அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் Tourmaline Lanka Gemological Laboratory (TGL) இன் உயர் சான்றிதழ் பெற்ற, ஆழ்ந்த அனுபவம் உள்ள இரத்தினவியலாளர்களால் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் துல்லியமான மற்றும் தொழில்முறை வர்ணக்கல் அடையாள சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பண்டைய காலங்களில் காலி நகரம் இரத்தினங்கள், முத்துக்கள், பட்டை, வாசனை திரவியங்கள் மற்றும் தந்தங்கள் போன்றவற்றின் வர்த்தகங்களுக்கு ஒரு மையமாகவும், உலகத் தலைமையகமாகவும் விளங்கியது. ஜின் கங்கை மற்றும் ஜிந்தொட்ட போன்ற ஆறுகள் மற்றும் அதைச்சுற்றியுள்ள மேட்டு நிலங்களில் தெளிவான இரத்தினக்கற்கள் நிறைந்து காணப்படுகின்றன. ஜின் கங்கை, தெனியாய, மொரவக்கை மற்றும் அலகொலதெனிய ஆகிய பிரதேசங்களின் மேட்டு நிலங்களில் உலகப்புகழ்பெற்ற நீலக்கற்கள் (சபையர்கள்) காணப்படுகின்றன.

# Spring & Summer காட்சியறை நீர்கொழும்பில்



நீர்கொழும்பில் தனது முதல் காட்சியறையைத் திறந்து, புகழ்பெற்ற ஆடையணி மற்றும் நவநாகரிக வர்த்தகநாமத்தின் நாடளாவிய விரிவாக்க திட்டங்களை Spring & Summer அறிவித்துள்ளது. 367A, பிரதான வீதி, நீர்கொழும்பு என்ற முகவரியில் இப்புதிய காட்சியறை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், பிரதம விருந்தினர்களாக திரு மற்றும் திருமதி கொலின் ரொட்ரிகோ மற்றும் Spring & Summer குடும்பத்தினர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

நீர்கொழும்பில் வர்த்தகரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தின் மையத்தில் அமைந்துள்ள இக்காட்சியறை, பிரத்தியேகமயமான ஆடையணித் தெரிவுகளுடன், விசாலமான மற்றும் பல்வேறுபட்ட வாடிக்கையாளர்கள் பிரிவுகளுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தகநாமம் அப்பிரதேச வாசிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் என இரு தரப்பினருக்கும் அவர்களது அபிமானம் பெற்ற வர்த்தகநாமங்களின் தனித்துவமான நவநாகரிக ஆடையணி தெரிவுகளை வழங்குகிறது. மேலும், புதிய பிரத்தியேக ஆடையணிகள் மிகவும் அழகாகக் கவர்ந்திழுக்கும் பலதரப்பட்டதாக உள்ளதுடன், கட்டுபடியான விலைகளில் கிடைக்கின்றன.

Spring & Summer இன் இணை ஸ்தாபகரான ஷியாமலி விஜேகுணவர்த்தன இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "நீர்கொழும்பு அதிக மக்கள் தொகை கொண்ட பிரதேசமாகும். இந்த காட்சியறையை இன்று திறந்து வைப்பது நாடளாவிய ரீதியில் எமது விஸ்தரிப்பிற்கான மற்றொரு முதல் படியாகும். பண்டிகைக்காலம் நெருங்கி வருகின்ற நிலையில், சரியான நேரத்தில் நீர்கொழும்பில் நாங்கள் பிரசன்னமாகியுள்ளோம் என்பதை எங்கள் Spring & Summer குடும்பத்திற்கு அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்," என்று குறிப்பிட்டார்.

Spring & Summer தனது நாடளாவிய பாரிய விரிவாக்கத் திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர்களுக்கு ஆடையணிக் கொள்வனவு மற்றும் பொழுதுபோக்கு ரீதியில் தனித்துவமான அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள இடமளிக்கும் காட்சியறைகளை இலங்கையின் பல பாகங்களிலும் அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளது.

# SLT-MOBITEL இன் டிசம்பர் மாத பொனான்ஸா அறிமுகம்



தேசிய தகவல் மற்றும் தொலைத் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களைச் சேர்ந்தவர்களுக்கு வலுவூட்டும் வகையிலமைந்த பிரத்தியேகமான டிசம்பர் மாத பொனான்ஸா திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

புதிய ஹோம் புரோட்பான்ட் வாடிக்கையாளர்களுக்காக ஊக்குவிப்புச் சலுகைகளை உள்ளடக்கிய விறுவிறுப்பான தெரிவுகளை SLTMOBITEL அறிமுகம் செய்துள்ளது. அதனூடாகஅவர்களுக்கு பரிபூரணதொலைத்தொடர்பாடல் மற்றும் களிப்பூட்டும் கட்டமைப்பை அணுகுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும். டேட்டா பிளான்கள் முதல் PEO TV சலுகைகள் வரை புதிய வாடிக்கையாளர்களுக்கு தமது பிரத்தியேகமான தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய வகையிலமைந்த தெரிவுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. டிசம்பர் பொனான்ஸாவில் பல பெறுமதி சேர் சேவைகள் அடங்கியுள்ளன. இவற்றினூடாக வாடிக்கையாளர்களுக்கு பெருமளவு சௌகரியம் வழங்கப்படுவதுடன், தமது வாழ்க்கை முறைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு பங்களிப்பு வழங்குவதாக அமைந்திருக்கும். புதிய வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வலையமைப்பு அனுபவத்தை வழங்கும் SLTMOBITEL, விறுவிறுப்பான Fibre, ADSL மற்றும் LTE புரோட்பான்ட் டேட்டா திட்டங்களை சமூக வலைத்தளங்கள் பாவனை, வீட்டிலிருந்து பணியாற்றல் மற்றும் கேமிங் தேவைகளுக்காக வழங்குகின்றது. Youtube பாவனையாளர்களுக்கு 25GB10GB, Messenger பாவனையாளர்களுக்கு 10GB, Google Meet 10030GB, Gaming bundle 50GB போன்றன வாடிக்கையாளர்களின் பக்கேஜ்களுக்கமைய வழங்கப்படுகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு உயர் தரமான களிப்பான அனுபவத்தை உறுதி செய்து, வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களைச் சேர்ந்த புதிய வாடிக்கையாளர்களுக்கு SLTMOBITEL இனால் PEO TV மற்றும் PEOTV GO களும் வழங்கப்படுகின்றன. 4G LTE வாடிக்கையாளர்களுக்கு விலைக்கழிவுடனான சலுகையாக ரூ. 5500 வழங்கப்படுகின்றது.

# வாரபலன்



02.01.2022 - 08.01.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

பொருளாதார நிறைவு ஏற்படும். உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும், விரயங்களும் அதிகரிக்கும். சொத்து விற்பனையால் லாபம் உண்டு. தொழில் செய்பவர்களுக்கு, எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல், இலாகா மாற்றம் கிடைக்கலாம்.

## ரிஷபம்

செயல்பாடுகள் மந்த நிலையில் இருக்கும். செலவு கூடும். எதையும் நினைத்த மாத்திரத்தில் செய்ய இயலாது. குரு பகவான் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பதவி மாற்றம், இடமாற்றம் உண்டு என்பது பொது நியதி. இதுவரை தடைப்பட்டு வந்த உத்தியோகத்திற்கான முயற்சி, இப்போது வெற்றியாகும். தொழில் புரிபவர்களுக்கு பங்குதாரர்கள் விலகினாலும் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். தூரதேசத்தில் இருந்து அழைப்புகள் வந்தாலும் அதை யோசித்து ஏற்றுக் கொள்வதே நல்லது.

## மிதுனம்

தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். நல்ல சந்தர்ப்பங்கள் இல்லம் தேடி வரும். நம்பிக்கைக்குரிய விதம் நண்பர்கள் நடந்து கொள்வர். புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். இதுவரை இருந்த தடைகளும். தாமதங்களும் அகலும். கடைதிறப்பு விழா, கட்டிடத் திறப்பு விழா போன்ற புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பொருளாதாரத்தில் இதுவரை இருந்த தொய்வு அகலும்.

## கடகம்

செலவு கூடுதலாக இருக்கும். வாங்கல் கொடுக்கல்களில் மந்தநிலை உருவாகும். அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைத்துள்ளார். இது அவ்வளவு நல்லதல்ல. நினைத்த காரியம் நிறைவேறுவதில் தாமதங்கள் ஏற்படும். தொடர் விரயங்களால், உறவுகளோடு பகை ஏற்படும். கொடுத்த கடன்கள் வசூலாகாமல் போகலாம். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் உருவாகும். எதையும் யோசித்துச் செய்வது நல்லது.

## சிம்மம்

நிகழ்காலத் தேவை பூர்த்தியாகும். மனதளவில் செய்ய நினைத்த காரியங்களை மறுநிமிடமே செய்து முடிப்பீர்கள். பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். சப்தம ஸ்தானத்தில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான குரு உங்கள் ராசியைப் பார்க்கும் பொழுது பல நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வாங்கல் கொடுக்கல்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். வளர்ச்சிக்கு உறுதுணையாக நண்பர்கள் விளங்குவர்.

## கன்னி

ஆரோக்கியம் சம்பந்தமாக அச்சுறுத்தல்களும் அதனால் விரயங்களும் ஏற்படலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் தடைகளும், தாமதங்களும் ஏற்படும். குரு பகவான் 6ம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். மறைமுக எதிர்ப்பு கொஞ்சம் அதிகரிக்கலாம். இருப்பினும். எதிரிகள் ஸ்தானாதிபதி சனி சொந்த வீட்டில் மகரத்தில் வலுப்பெற்றிருப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. தொழில், உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வழக்குகள் இழுபறி நிலையில் இருக்கும்.

## துலாம்

பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அதை அந்த நேரத்தில் செய்து முடிக்க இயலும். குரு பார்வையால் குழப்பங்கள் அகலும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பான பலன்கள் கிடைக்கும். பிள்ளைகளால் மேன்மை ஏற்படும். திருமணம் போன்ற சுபகாரியங்களில் இதுவரை இருந்த தடைகள் அகலும். தொழில் வளர்ச்சிக்காக புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்வீர்கள்.

## விருச்சிகம்

ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும் சேமிப்பு அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவம் கைகொடுக்கும். வீடு வாங்கும் யோகம் அல்லது வீடு கட்டும் யோகம் ஒருசிலருக்கு ஏற்படலாம். 'பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள்.

## தனுசு

எண்ணங்கள் ஈடேறும். அரசு வழியில் அனுகூலம் உண்டு. பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய பொறுப்புகளும் கிடைக்கும். கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. ஏழரைச் சனியால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது என்றாலும், ஆரோக்கியத்தில் மட்டும் அச்சுறுத்தல்கள் வந்து கொண்டேயிருக்கும். பணிபுரியும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாக அகலும். பொதுவாழ்வில் நினைத்த இலக்கை அடைவீர்கள்.

## மகரம்

தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். திடீர் இடமாற்றங்கள், வீடுமாற்றங்கள் ஒருசிலருக்கு ஏற்பட லாம். கேதுவின் பார்வை ராசியில் பதிவதால் புது முயற்சியில் ஈடுபடும் பொழுது அனுபவஸ்தர்களையோ, அருளாளர்களையோ கலந்து ஆலோசித்துச் செய்வது நல்லது. உடன் பிறப்புகளின் வழியிலும், உடன் இருப்பவர்களின் வழியிலும் செலவுகள் ஏற்படலாம். இல்லத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். பயணங்கள் அதிகரிக்கும்.

## கும்பம்

தனவரவு தாராளமாக வந்தாலும் விரயங்களும் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. உங்கள் ராசியிலேயே குரு சஞ்சரிக்கின்றார். தன லாபாதிபதியானவர் குரு என்பதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். ஆரோக்கியத் தொல்லை அகலும். வாகன மாற்றங்களால் மகிழ்ச்சி காண்பீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக எடுத்த முயற்சிகள் கைகூடும். பணிபுரியும் இடத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

## மீனம்

தொழிலில் லாபம் கிடைத்தாலும் உடனுக்குடன் விரயம் ஏற்படலாம். பிள்ளைகளாலும், உற்றார், உறவினர்களாலும் மன அமைதி குறையலாம். திடீர் இடமாற்றங்கள் ஏற்பட்டு திகைக்க வைக்கலாம். எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் விரயங்கள் ஏற்படலாம். மக்கள் செல்வங்களாலும் நிம்மதி குறையும். இனத்தார் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. குரு மாற்றம் ஏற்படும் வரை எல்லா விஷயங்களிலும் கவனமுடன் இருப்பது அவசியம்.

# சாதனை மாணவி தர்ஷிகாவை கௌரவித்தது தென்கிழக்குப் பல்கலைக்கழகம்!

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா நிகழ்வின்போது 13 தங்கப் பதக்கங்களை பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்றினைச் சேர்ந்த மருத்துவர் தணிகாசலம் தர்ஷிகாவை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது. பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பதிவாளர் உட்பட பல்கலைக்கழக உயர் அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.

பல்கலைக்கழக உபவேந்தரின் அழைப்பின் பேரில் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்திருந்த மாணவி தர்ஷிகாவுக்கு பல்கலைக்கழக நிருவாகம் பொன்னாடை போர்த்திக் கௌரவமளித்தது. இதன்போது தர்ஷிக்காவுக்கான நினைவுச் சின்னத்தினை உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் வழங்கினார்.

இந்நிகழ்வில் கருத்துதெரிவித்த பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ், எதிர்காலத்தில் இந்தப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் அமையப்பெற வேண்டிய தன் அவசியத்தினைச் சுட்டிக்காட்டியதுடன் இவரைப் போன்ற சாதனையாளர்களின் ஒத்துழைப்பு அதற்கு அவசியமானது எனவும் குறிப்பிட்டார். இந்தப் பிராந்தியத்திலுள்ள உயர் கல்வி நிறுவனங்களுள் ஒன்று என்ற வகையில் தர்ஷிக்கா போன்ற சாதனையாளர்களை கௌரவிப்பதில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மகிழச்சியுறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். தர்ஷிகா கௌரவித்த பல்கலைக்கழக உபவேந்தருக்கு நன்றி கூறியதுடன் தனது சாதனை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். தமது குடும்பம், ஆசிரியர்கள், நல்ல நண்பர்கள், விடா முயற்சி என்பன தனது சாதனைக்கு வித்திட்டதனையும் அவர் நினைவுகூர்ந்தார்.





நூருள் ஹுதா உமர்...

# வவுனியா மக்களுக்கான சுத்தமான குடிநீர் திட்டம்



நீர் இன்றி அமையாது உலகெனின் யார் யார்க்கும் வான் இன்று அமையாது ஒழுக்கு". நீர் இல்லையென்றால் இவ்வுலகமே இல்லை என்கிறார் திருவள்ளுவர். அந்தளவுக்கு நீரின் முக்கியத்துவமானது காணப்படுகிறது. இங்கே மனித உடலில் நீரானது உடல் வெப்பநிலையை பேணவும் உடலில் உள்ள அனைத்து கலங்களுக்கும் ஊட்டச்சத்துக்களை கொண்டுபோய் சேர்க்கவும் பயன்படுகிறது.

மனிதர்கள் எல்லாம் சிந்திக்க தவறிவிட்டார்கள். நீரைப் பற்றியும் அதனை உருவாக்கும் மழையைப் பற்றியும். அதனால் ஏற்பட்ட மாற்றமே இன்று நீர் இன்றி மக்களுக்கு ஏற்படும் குடிநீர் தட்டுப்பாடு.

மழைச்சாரலை தடுக்க குடைகள் ஏந்திய மக்களின் கைகள் இன்று வெயிலின் தாக்கம் தாங்க முடியாமல் குடைகள் ஏந்துகின்றன. இதற்கு முக்கிய காரணம் நாம் இயற்கை வளங்களை அழித்ததே.

இயற்கையை அழித்து வளங்களை அனுபவிக்கும் நாம் அனைவரும் அதனை மீண்டும் உருவாக்க முயற்சிப்பது இல்லை. பணம் சம்பாதிக்க நேரம் ஒதுக்கும் மனிதர்கள் யாவரும் சுவாசிக்கும் காற்றை சம்பாதிக்க விரும்புவதில்லை. அதேபோன்று மழைநீரை சேமிக்க மறுத்தவர்கள் இன்று குடிநீரை இழந்து நிற்கிறார்கள். அருகிவரும் நீர் வளம் குறித்து நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் மக்களுக்கான சுத்தமான குடிநீரை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள திட்டம் பற்றிய ஆய்வு அண்மையில் இடம் பெற்றது. சுத்தமான குடிநீர் வழங்கல் திட்டம் மூலம் வவுனியா மக்கள் சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை பெற முடியும் எனவும் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா நீர் வழங்கல் திட்டமானது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ஆகியோரின் முயற்சியின் பலனாக நடைமுறைப்படுத்தப் பட்டது. இதன் மூலம் மூன்று லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள். இலங்கையில் சிறுநீரக நோயாளர்கள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் இரண்டாவது இடத்தில் வவுனியா மாவட்டம் காணப்படுகின்றது அதாவது வவுனியா பிரதேச செயலகத்தில் 3420 பேரும். வெங்கலசெட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் 1266 பேரும். வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் 426 பேரும். வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தில் 640 பேரும் சிறுநீரகக் கொடுப்பனவு பெறுபவர்களாக உள்ளனர். இம் மாவட்டத்தில் காணப்படும் குடிநீர் பிரச்சினையே நிறுநீரக நோய் ஏற்படுவதற்கான பிரதான காரணம் என கண்டறியப்பட்டுள்ளது .



பிரியதர்ஷினி

"அனைவருக்கும் நீர் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவால் மக்களுக்கு முன் வைக்கப்பட்ட மிக முக்கிய வாக்குறுதியாக அனைவருக்கும் சுத்தமான குடிநீரைக் குறிப்பிடலாம். இதற்கமைவாக மக்களுக்கான சுத்தமான குடிநீரை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டம் வவுனியா மாவட்டத்தில் 92மில்லியன் ரூபாய் செலவில் வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக 23 கிராமசேவையாளர் பிரிவுகளில் ஒருகிராமத்துக்கு 4நான்கு மில்லியன் என்ற அடிப்படையில் 1,84,750 பயனாளிகள் பயன் பெறக்கூடிய வகையில் அமைக்கப் பட்டுள்ளது . நாட்பட்ட சிறுநீரக நோய் உலகளாவிய சுகாதார இடராகக் காணப்படுகின்றது. கடந்த சில தசாப்தங்களாக இந்நோயானது இலங்கையில் பாரிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மிக அண்மையில் வவுனியா மாவட்டத்தில் நாட்பட்ட சிறுநீரக நோயின் பரவுகையானது சடுதியாக அதிகரித்துள்ளது. அதன்படி வவுனியா மாவட்டத்தில், குறிப்பாக 23கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு சுத்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான அடிக்கல்லை, நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான கு.திலிபன் வைபவ ரீதியாக நாட்டி வைத்தார்.



ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைவாக செழிப்பான பார்வை எனும் வேலைத்திட்டத்தின் கீழ், வவுனியா மாவட்டத்தில் பனிகர் புளியங்குளம் கள்ளிக்குளம், சுந்தரபுரம், காத்தார் சின்னங்குளம், தரணிக்குளம், கருப்பனிச்சங்குளம், மெனிக்பாம்,காந்திநகர்,காஞ்சிராமோட்டை, பெரியதம்பனை, சலலிகினிகம, பரநாட்டாங்கல், ஸ்ரீராமபுரம், மதீனாநகர், எல்லப்ப, மருதங்குளம், சண்முகபுரம், கங்குளம், நைநாமடு, நாகரிலுப்பைக்குளம், அலுத்கமஹலம்பக சுவேவா,குடகச்சாக் கொடிய, மணிப்புரம் போன்ற கிராமங்களில் இந்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இவ்வாய்வானது வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் நாட்பட்ட சிறுநீரக நோயின் பரவுகையும் அதன் போக்கும் எவ்வாறுள்ளது என்பதை கண்டறிவதை பிரதான நோக்கமாகக் கொண்டமைந்துள்ளது. அத்துடன் நாட்பட்ட சிறுநீரக நோயின் சமனற்ற பரம்பல் எவ்வாறுள்ளது என்பதை கண்டறிவதை பொதுவான நோக்காகவும் கொண்டுள்ளது.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட மக்கள் குறைந்த ஆயுள் காலம் மற்றும் வேறு சிக்கல்களையும் அனுபவிக்கிறார்கள். வவுனியா மாவட்டத்தில் 3082 பேர் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவுகளை பெற்றுவருகின்றனர். இதில் வவுனியா செயலகப்பிரிவில் ஈச்சங்குளம், ஆசிகுளம், பூவரசங்குளம் போன்ற கிராமசேவகர் பிரிவுகளில் சிறுநீரக நோய்க்கான கொடுப்பனவை அதிகளவில் பெறும் நபர்கள் காணப்படுகின்றனர்.


மேலும் சிறுநீரக நோய்க்கான அதிகளவான கொடுப்பனவை பெறும் நபர்கள் உள்ள கிராம சேவகர் பிரிவாக ஆண்டியா புளியங்குளம் காணப்படுகிறது.

இதைவிட பெரிய புளியங்குளம், கந்தசாமி நகர், பெரிய உலுக்குளம் போன்ற கிராம சேவகர் பிரிவுகளிலும் அதிகளவான நபர்கள் கொடுப்பனவை பெறுகின்றனர் என வவுனியா மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் மகிந்தன் சபர்ஜா தெரிவித்துள்ளார்

வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க வவுனியா மாவட்டமானது சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகளவில் கொண்ட ஒரு மாவட்டமாக காணப்படுகிறது. ஏனெனில் பாதுகாப்பான குடிநீருக்கான கேள்வியும், மக்களது உணவுப் பழக்க வழக்க முறைகளுமே இதற்கான பிரதான காரணியாக காணப்படுகிறது.

ஆரோக்கியமான, பாதுகாப்பான குடிநீரை பிரதேச மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவைப்பாடும், ஆரோக்கியமான உணவுப்பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதுமே உடனடி நடவடிக்கைகளாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் தற்போது வவுனியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் நனோ தொழில்நுட்பத்துடனான குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி அதனூடாக பாதுகாப்பான ஆரோக்கியமான குடிநீரை பிரதேச மக்களிற்கு பெற்றுக் கொடுக்கும் செயற்பாடானது வரவேற்கத்தக்கதும், நிலைபேறான தன்மையுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டியதுமான ஒரு செயற்பாடாகக் காணப்படுகிறது என வவுனியா பிரதேச செயலக உதவிபிரதேச செயலாளர் பிரியதர்ஷினி சஞ்சீவன் தெரிவித்தார்

வவுனியா மாவட்டத்தில் தொடரும் வறட்சி காரணமாக பல இலட்சம் மக்கள் வருடாவருடம் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் இதனால் இத் திட்டம் கிராமப்புற மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்று. அத்துடன் இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்லும் என்பதிலும் ஐயமில்லை.




சிவகுமார் திவியா...



என். சரவணன்

# இலங்கையின் வத்திக்கான் என அறியப்படும் கொட்டாஞ்சேனை புனித லூசியா ஆலயம்


லூசியா ஆலயம் அமைக்கப்படும் தருணத்தில் ...

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள புனித லூசியா பேராலயம் (ST. LUCIA'S CATHEDRAL) மிகவும் பிரசித்தி பெற்றது. அது இலங்கையின் ரோமன் கத்தோலிக்கப் பேராயத்தின் பேராயரின் இருப்பிடம் ஆகும். இலங்கையின் மிகப் பழமையானதும், பிரமாண்டமானதுமான திருச்சபை (Parish) அது. இரு நூற்றாண்டு வரலாற்றை உள்ளூர அமைதியாக வைத்திருக்கும் தேவாலயம் அது. கொழும்பு நகரின் வடக்குப் பகுதியில் உள்ள கொட்டாஞ்சேனையில் இத் தேவாலயம் அமைந்துள்ளது. 18,240 சதுர அடி பரப்பளவையும்மேலே கூரை வரை 151 அடிகள் உயரத்தையும் கொண்டது. இந்த தேவாலயத்தில் சுமார் ஆறாயிரம் பேர் வரை அமரலாம். இப் பேராலயம், புனித லூசிக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் (டச்சு) காலத்தில் கத்தோலிக்கரின் வணக்கத்தலமாக சிறிய கட்டடமாகவே இது இருந்தது. இந்தத் தேவாலயத்தின் முக்கியத்துவமே அது வத்திகானிலுள்ள உலக கிறிஸ்தவர்களின் தலைமைப் புனித தேவாலயமான புனித பேதுரு (ST. Peter) பேராலயத்தின் சாயலைக் கொண்டிருப்பது தான். அதுபோல பண்டைய கிரேக்க கட்டிட தூண்களை நினைபடுத்தும் வகையில் முகப்பின் தூண்கள் காணப்படுகிறன. கத்தோலிக்க மதத்தின் புனிதர்களில் ஒருவராக கருதப்படும் கன்னியரான புனித லூசியின் (Saint Lucia) பெயரில் கட்டப்பட்ட இந்த தேவாலயம் இலங்கையின் மிகப் பழமையான, மிகப்பெரிய திருச்சபை பேராலயமாக கருதப்படுகிறது. ஏழு சிலைகளால் அலங்கரிக்கப்பட்ட உயரமான குவிமாடத்திற்கு முடிசூட்டப்பட்டது. போல வளைந்த அரைப்பந்து கொன்கிரீட் கூரையின் மீது வானத்தை நோக்கி பார்த்தபடி நிற்கின்ற சிலுவையும் இந்த தேவாலயத்தின் மீது ஒரு பிரமாண்ட உணர்வை ஏற்படுத்திவிடும். டச்சு காலத்தில் கட்டப்பட்ட இந்த தேவாலயம் ஆங்கிலேயர் காலத்தில் பெரிய அளவில் கட்டிமுடிக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றது. இந்த தேவாலயத்தின் கல்விச் சேவை கிளையாக 1856 இல் தொடங்கப்பட்டது தான் அருகில் உள்ள புனித பெனடிக் வித்தியாலயம் (இப்போது கல்லூரி). அதுபோல அருகில் உள்ள கன்னியாஸ்திரி மடமும் 1869 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். உள்ளே உள்ள சிலைகள் எல்லாமே மிகவும் கலைநுட்பத்துடன் அமைக்கப்பட்டவை நூற்றாண்டு பழைமையான சிலைகள்.1924 ஆம் ஆண்டு சிற்பக் கலை அறிந்தபாதிரியார் ஜே.மிலினர் (Fr. J Milliner) தான் இதனை முடித்தார். ஐரோப்பிய நாடுகளில் இருந்து கப்பல்களின் மூலம் எடுத்து வரப்பட்ட சிலைகள் உள்ளே வைக்கப்பட்டுள்ளன.வழமைக்கு மாறான விசித்திரமாக இருண்ட நிறத்தினாலான கன்னி மேரியின் சிலை இங்கே உள்ளது. அதை கொட்டாஞ்சேனையின் புனிதப் பெண்மணியாக ("Our Lady of Kotahena") கொண்டாடப்படுகிறது. அந்தச் சிலையை ஆண்டுதோறும் மே மாதம் கொட்டாஞ்சேனை வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்வது வழக்கமாக நடைபெற்று வருகிறது. இந்தத் தேவாலயத்தின் உயரத்தில் வைக்கப்பட்டுள்ள மணி சுமார் இரண்டு தொன் எடையைக் கொண்டது. 1903ஆம் ஆண்டு பிரான்சிலுள்ள மர்சீலஸ் (Marseilles) என்கிற தேவாலயத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. கிறிஸ்தவ சின்னங்களால் ஆன வேலைப்பாடுகளுடன் மிகுந்த கலை நுணுக்கத்துடன் செய்யப்பட்ட மணி அது. ஒரு வகையில் கொட்டாஞ்சேனையை ரோமன் கத்தோலிக்க நகரம் என்று கூறினால் அது மிகையாகாது.18ஆம் நூற்றாண்டில் கொட்டாஞ்சேனை கொச்சிக்கடைப் பகுதிகளில் கத்தோலிக்கர்களின் செறிவை கருத்திற்கொண்டு ஒரு தேவாலயம் ஒன்றின் தேவையை டச்சு ஆட்சியாளர்களும், மிஷனரிமாரும் உணர்ந்தனர். அங்கே அதற்கு முன் ஒல்லாந்தர் காலத்தில் ஓரத்தோரியன் மிஷனரிகளால் (Orathorian Missionary) கட்டப்பட்டிருந்த ஒரு தேவாலயம் (St. Lucia's chaple)1760 அளவில் கட்டப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் கொஸ்மோ அந்தோனியோ (Cosmo Antonio) (Miguel de Alburquerque) மிகேல் அல்பகூர்கே போன்ற ஓரத்தோரியன் பாதிரியார்கள் இங்கே பூஜைகள் நடத்தியுள்ளனர். டச்சு கிழக்கிந்தியக் கம்பனியினரின் நெருக்கடிகளின் காரணமாக அவர்கள் தென்னிந்தியாவின் கோவாவுக்கு திரும்பிவிட்டனர். அப்போது இங்கே தேவாலயம் தென்னை ஓலைகளால் முதன் முதலில் கட்டப்பட்டிருந்தது. அப்போதெல்லாம் இப் பகுதி கட்டடங்கள் இல்லாமலும், பெரும்பாலும் காடுகளாகவும் காணப்பட்டது. கொட்டாஞ்சேனையில் இருந்த இந்த மேட்டுபகுதியாக இருந்ததால் தேவாலயத்தின் அமைவிடத்துக்குப் பொருத்தமாக இருந்தது.



எனவே தான் ஒல்லாந்தர் இங்கே ஒரு ஒழுங்கான தேவாலயத்தை 1779 ஆம் ஆண்டு நிறுவினர். நிக்கலஸ் றொட்ரிகோ என்கிற பாதிரியார் தான் இங்கே நிரந்தர தேவாலயத்தை நிறுவும் பணியை 1782இல் மேற்கொண்டார். 1834 இல் தான் கோவாவிலிருந்த ஆயர்களின் அதிகாரத்திலிருந்து இலங்கை விடுபட்டபின் பாதிரியார் வின்சன்ட் றொசாரியோ (Fr. Vincente Rozairo) முதலாவது ஆயராக நியமிக்கப்பட்டதுடன் இலங்கையின் முதலாவது கதீட்ரல் தேவாலயமாக 1838 இல் மாற்றம் பெற்றது. இலங்கையில் ரோமன் கத்தோலிக்க, மற்றும் அங்கிலிக்கன் கதீட்ரல் தேவாலயங்கள் பிற்காலத்தில் பல கட்டப்பட்டபோதும்.

கொட்டாஞ்சேனை லூசியா தேவாலயம் தான் இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது கதீட்ரல் தேவாலயம். 1820இலும் 1834இலும் மேலும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பல மாற்றங்களுக்கு உள்ளானது.1852 இல் முதலாவது அடிக்கல் நாட்டப்பட்டு1873 இல் எச்.டிசில்லானி (HD Sillani), எஸ்.தப்பரானி (Fr. S Tabarrani) ஆகிய திறமையான பாதிரிமார்களின் திட்டத்தின் பிரகாரம் அழகிய வடிவம் கண்டது.1887 டிசம்பரில் சிறந்த முழுமையான வடிவமைப்பைப் பெற்றது இது. ஆகவே 1887 ஆம் ஆண்டைத் தான் இது உருவாகிய வருடமாக கணக்கிற் கொள்கிறார்கள். சில்லானியே இதன் வடிவமைப்புக்கு உரியவராகக் கருதப்படுகிறார். இந்த இடைப்பட்ட காலத்தில் அன்றைய ஆயர் கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் (Christopher Bonjean), பாதிரியார் தங்கநெல்லியிடம் (Tanganelli) ஒப்படைத்தார். ஆயர் கிறிஸ்தோப்பர் ஓராண்டுக்குள்ளேயே ரோமுக்கு அழைக்கப்பட்டுவிட்டார். ஆனால் திரும்பி வந்து இலங்கையில் பல முக்கியப் பணிகளை முன்னெடுத்தார். அன்றைய பாப்பரசர் லியோ (Pope Leo XIII)புனித லூசியா தேவாலயத்தை கொழும்பின் மறை மாவட்டமாக 1885 இல் அறிவித்தார்.

பேராயரான பொன்ஜீன் புனித லூசியாவின் சிறிய எலும்புப் பகுதியை அதிகாரபூர்வமாக கொண்டுவந்து தேவாலயத்தில் சேர்த்தார். அது இன்றும் இங்கே பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவரால் உருவாக்கப்பட்டதே புனித ஜோசப் கல்லூரி. அவர் இலங்கைக்கு 1855 இல் முதன் முதலில் வந்ததே யாழ்ப்பாணத்திற்குத் தான். அங்கே அவர் செய்த பணிகள் தனியாக தொகுக்கப்படவேண்டியவை. அங்கே இயங்கிய சிறிய பாடசாலைகள் பலவற்றை கல்லூரிகளாக மாற்றியது அவர் தான். புனித பற்றிக் கல்லூரி அதற்கொரு உதாரணம். கொட்டாஞ்சேனை புனித லூசிய தேவாலயத்தை உருவாக்குவதில் அவர் காட்டிய அக்கறையின் காரணமாக அந்த தேவாலயம் அமைந்திருக்கும் வீதி (கொட்டாஞ்சேனை பஸ் நிலையம் வரையானது) பொன்ஜீன் வீதி என்று தான் இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. பாதிரியார் பொன்ஜீன் அவர்களின் காலத்தை இலங்கை கத்தோலிக்க தேவாலய வரலாற்றின் பொற்காலமென பலரும் பதிவு செய்திருக்கிறார்கள். தேவாலயத்தின் இன்றைய முழுமையான தோற்றம் 1902 இல் தான் பூர்த்தியானது. ஆரம்பத்தில் இதன் கட்டுமானப்பணிகள் முடிவடைந்தபோது அன்றே சுமார் 160,000 ரூபா செலவாகியிருந்தது. இலங்கைவாழ் கத்தோலிக்க மக்கள் நிதிப் பங்களிப்பை செய்திருந்தனர். குறிப்பாக மீனவ சமூகத்தின் உதவியே அதிகளவாக இருந்தது. 1956 ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய பாதிரிமார்களே தலைமை பாதிரிமார்களாக இருந்தனர். 1956 ஆம் ஆண்டு நெருவஸ் பெர்னாண்டோ (Fr. Nereus Fernando) இலங்கையின் முதலாவது கதீட்ரல் பாதிரியாராக தெரிவானார். 1987 ஆம் ஆண்டு முதலாவது நூற்றாண்டு பாதிரியார் ருபுஸ் பெனடிக் (Fr. Rufus Benedict) அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது.


இரண்டு தொன் எடை கொண்ட ஆலய மணி

இரண்டாம் உலகப் போர் நடத்து கொண்டிருந்த போது கொழும்பில் இலகுவாக தெரியக் கூடிய இடங்கள் பல ஜப்பானின் விமானத் தாக்குதலுக்கு உள்ளானது. அப்படியான தாக்குதலை தவிர்ப்பதற்காகவே கொழும்பு காலிமுகத்திடலில் முதலாம் உலக யுத்த நினைவுக்காக கட்டப்பட்டிருந்த உயரமான தூபியையே கழற்றி ஒளித்தனர். தேவாலயத்தை அப்படி ஒழிக்க முடியுமா என்ன? 1942ஆம் ஆண்டு கொட்டாஞ்சேனை தேவாலயம் ஜப்பானின் தாக்குதலுக்கு உள்ளானது. டோம் என்று கூறக்கூடிய பிரதான குவிமாடம் சேதமுற்றது. பின்னர் மக்களின் நிதிப் பங்களிப்புடன் அது சீர் செய்யப்பட்டது. புனித பாப்பரசரின் இலங்கை விஜயத்தின் போது 1995 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி இங்கே வந்து பூசை செய்தார். கொழும்புவாழ் லட்சக்கணக்கான கத்தோலிக்கர்கள் இங்கே தமது திருமணச் சடங்குகளை செய்கின்றனர். ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழி பூசைகளும், சேவைகளும் நீண்ட காலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதிகாலையில் தேவாலயத்தின் பின்னால் இருந்து சூரியன் உதித்தெழும் போது அந்த ஒளியில் தெரியும் தேவாலயம், பின்னேரத்தில் சூரியன் மறையும் போது அழகான வெளிச்சத்தில் எவரையும் கவரும் பிரமாண்டத் தோற்றத்தில் இந்த இந்த தேவாலயத்தை ஒரு முறையாவது கண்டு களியுங்கள். இலங்கையில் நிகழ்ந்த முதலாவது வகுப்புக் கலவரமும் இங்கிருந்து தான் தொடங்கியது. '1883 கொட்டாஞ்சேனை கலவரம்' என்று அது அழைக்கப்படுகிறது. அதில் ஒரு பௌத்தரும் ஒரு கத்தோலிக்கரும் கொல்லப்பட்டதுடன் முப்பது பேர் காயமடைந்தார்கள். இந்த தேவாலயத்தின் வரலாற்றிலும் இலங்கை, கொட்டாஞ்சேனை என்பவற்றின் வரலாற்றிலும் செலுத்திய தாக்கத்தை அடுத்த வாரம் பார்ப்போம். **(தொடரும்)**

## நூல் அறிமுகம்

# எழுதித்தீராப் பிரியங்கள்

எழுத்து இலக்கிய உலகில் தடம் பதித்த திருமலைக் கவிஞர்களுள் ஒருவராக மைக்கல் கொலின் விளங்குகிறார். சிறந்த கவிஞராக, எழுத்தாளராக, குறும்பட இயக்குனராக, சஞ்சிகையாளராக, பத்திரிகையாளராக, வெளியீட்டாளராக பல்வேறுபட்ட பரிணாமங்களிலும் பல்வேறுபட்ட ஆளுமைகள் நிறைந்த எழுத்தாளராக இலக்கிய உலகில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். என் பிரிய ராஜ்குமாரிக்கு (கவிதை) பரசுராம பூமி (சிறுகதை) சிலுவைகளே சிறகுகளாய் (கவிதை) வீணையடி நீ எனக்கு (நாவல்) என்ற நான்கு நூல்களை வெளியிட்டு ஐந்தாவது நூலாக இவனைச் சிலுவையில் அறையுங்கள்(கவிதை) ஆறாவதாக "எழுதித்தீராப் பிரியங்கள்" (கவிதை) எனும் இரு கவிதை நூல்கள் என்பன, இவருடைய படைப்பில் வெளியாகியிருக்கின்றன.



இதில் "எழுதித்தீராப் பிரியங்கள்" எனும் கவிதை நூலானது, கவிஞர் மைக்கல் கொலினின் 22 வருடகால திருமண வாழ்வினது காதலின் நினைவுப் பரிசாய் வெளி வந்திருக்கிறது. அவரது மனைவியின் மீதான அன்பின் வெளிப்பாடே இந்நூலாகும். காதல் ஒரு சுவாரஸ்யமான பெட்டகம். அதனை திறக்கத் திறக்க தெவிட்டாது இன்பம் தந்து கொண்டேயிருக்கும். காதலின் தரிசனங்கள் கிடைப்பவன் வாழ்ந்து இறக்கிறான். இறந்தும் வாழ்கிறான். அத்தகைய காதலின் அகத்திணை மரபு இந்நூலில் பேணப்பட்டிருக்கிறது. எழுதியும் தீராப் பிரியங்களை கவிஞர் எழுதித் தீர்த்தே விட்டிருக்கிறார். காதலின் வெளிப்பாட்டை கவிதைகள் மூலம் காண்பதும், கவிதைகளின் இரசனை காதலாய் மலர்வதும் இயற்கை. இதில் அந்த இயற்கையோடே தனது காதலை ஒன்றித்துக் காட்டியுள்ளார்."மலைச் சிகரத்தில் ஊற்றெடுக்கும் மாநதியின் நீரோட்டம் உன்னை ஊடறுத்துப் பாய்கிறது.

விண்ணிலிருந்து பூமியில் விழும் எரி நட்சத்திரமாய் நான் உன்னில் வீழ்ந்து எரிந்து போகிறேன். எரிமலைக் குழம்பென வெடித்துச் சிதறுகிறாய் நீ "

"நான் கொஞ்சுவதற்கும்நீ விஞ்சுவதற்கும் இடையில் காமத்தின் நூலில் பகிறது காதல் பட்டம்"

" அதீதத்தின் பிரியங்களுடன் பெருங்கடலென பரந்திருக்கிறாய் நீஎன்றுமே தீரா பெருந்தாகத்துடன் நீந்தும்மீன் குட்டியாய் நான்"

" நெற்றியில் நீ தந்த முத்தத்தில் உருகி வழிந்து கொண்டிருக்கிறது ஒரு கடல் நிறைந்த காதலின் பிரியங்கள்"" என் கழுத்தில் நீங்கள் முகம் புதைக்கும் போதெல்லாம் களவு போகிறது என் முத்தங்கள் என்கிறாய் திருடனிடமே புகார் கொடுக்கும் திருடி நீ "

" பாலைவன மணற்பரப்பில் பயிர் செய்து தண்ணீர் இன்றிபயிர் வளர்க்கும் மாயக்காரி நீ என் சோலைவன மனப்பரப்பில் பூப்பறிக்கும் ஜாலக்காரி நீ"

" ஆதியிலே காதல் இருந்தது அது நீயும் நானுமாய் இருந்தது"

இவ்வாறு கவிதை நூல் எங்கும் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கவிதைகளும் இயற்கையின் அணைப்பில், காதலின் தகிப்பில் வடிக்கப் பட்டுள்ளன. மிக ஆழமான அழகான கவி வரிகளை மாயா ஜால வார்த்தைகளைக் கொண்டு வார்த்திருக்கிறார் கவிஞர். இதனை அவருக்கானதாய் மட்டும் படைத்து விடாது பாரெல்லாம் இந்நூலை யாரெல்லாம் வாசிக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் இன்பம் தருவதாய் அளித்திருக்கிறார். நூலிற்கு நல்லதொரு அணிந்துரையை நல்கியிருக்கிறார் பேராசிரியர் பாலசுகுமார். .... "வாழ்வின் பக்கங்களில் காதலின் பயணம் எப்போதும் நம்மோடு கை கோர்த்துக் கொண்டிருக்கும். அதை எழுதித் தீராத இலக்கியமாக்கியிருக்கிறார் மைக்கல் கொலின்.காதலில் களம் ஆடுதல் என்பது இதுதானோ? விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் காதலில் கசிந்துருகி, கூடி மயங்கி தன் காதலை கொண்டாடியிருக்கிறார். காதல் எனும் திகைப்பூண்டில் மிதித்ததுபோல் இவர் கவிதைகள் வந்து வீழ்கின்றன" என முடிக்கிறார் பாலசுகுமார்.

இதுவரையிலும் எந்தவொரு கவிதை நூல்களிலும் வெளிவராத, எக் கவிஞரும் செய்திராத வகையில் தனது மனைவியின் புகைப்படத்தினையே அட்டைப்படமாயும், பக்கங்களின் காட்சிப் படமாகவும் பல வர்ணங்களில் அச்சிடப்பட்ட இந்நூல் கவிதையுலகின் புதிய படைப்பாகும்.

**விலை. 300.00**
**தொடர்புகளுக்கு: மகுடம் பதிப்பகம்**
**0774338878, க.மங்களேஸ்வரி,**
**திருகோணமலை**







# மாபெரும் கலை இலக்கிய நிகழ்வு



மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் கடந்த 26ஆம் திகதி ஞாயிறன்று காலை 10 மணிக்கு நடைபெற்ற அனாமிகா கலை இலக்கிய கூடலில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீ காந்த் , அமரர் டொமினிக் ஜீவா நினைவு நூலை வெளியிட நிகழ்விற்கு தலைமை தாங்கிய கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக இயக்குனர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி பெற்றுக் கொள்வதையும், அனாமிகா நினைவுப் பேருரை நூலை பேராசிரியர் செ. யோகராசா வெளியிட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா பெற்றுக் கொள்வதையும் காணலாம். மட்டக்களப்பின் மூத்த பெண் படைப்பாளி மண்டூர் அசோகா, மேலதிக அரசாங்க அதிபரினால் "தகைசால் இலக்கியர்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். விழா பற்றிய அறிமுகத்தை மகுடம் வி. மைக்கல் கொலினும், தலைமையுரையை பணிப்பாளர் திருமதி பாரதி கென்னடியும், நூல் வெளியீட்டுரையை அதிபர் ச. மணிசேகரனும், விருதாளர் உரையை ஓய்வு நிலை அதிபர் திருமதி திலகவதி ஹரிதாஸும், நூல் அறுமுகவுரைகளை பேராசிரியர் செ.யோகராசா, சிரேஷ்ட விரிவுரையாளர்கள் அருட்பணி அகஸ்தின் நவரெத்தினம், திருமதி பிரியா ஜெதீஷ்வரன், கலாநிதி ச. சந்திரசேகரம், கவிஞர் வெல்லவூர்க்கோபால், கவிஞர் வாசுதேவன், அதிபர் சுதாகரி மணிவண்ணன் ஆகியோரும், நினைவுப் பேருரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாவும் ஆற்றினர்.ஏற்புரையை மண்டூர் அசோகாவும், நன்றியுரையை செல்வி அம்ரிதா விஜயனும் நிகழ்த்தினர். இந் நிகழ்வை சிரேஷ்ட விரிவுரையாளர் கலைஞர் க. மோகனதாசன் தொகுத்து வழங்கினார்.



# முன்மொழிவுகளுக்கான விண்ணப்பம்

ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு

**ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சிற்காக மருத்துவ வழங்குகைகளின் முகாமைத்துவத்திற்காக 'சுவஸ்த' இன் அபிவிருத்திக்காக முழுமையான தகவல் முகாமைத்துவ முறைமையொன்றை பெற்றுக்கொள்வதற்கான உசாத்துணை சேவை**

SM/PSRP/07/2021/03

மேலேயுள்ள பெறுகைக்காக முன்மொழிவுகளுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்காக ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் செயலாளரின் சார்பாக அமைச்சு உசாத்துணை பெறுகைக் குழுவானது தகுதியுள்ள உசாத்துணையாளர்களை அழைக்கின்றது.

தகுதித் தேவைப்பாடுகள் பின்வருமாறு:

1. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனியானது இலங்கையில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
2. கம்பனியின் பெரும்பான்மையான பங்குகள் இலங்கையர்களுக்கே உரித்தானதாகவிருத்தல் வேண்டும்.
3. இலங்கையின் மென்பொருள் தொழில்துறையில் கம்பனியானது 3 வருடங்களுக்கு மேலான அனுபவத்தையும் இலங்கை அரசாங்க துறையுடன் ஆகக்குறைந்தது 3 வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் (அரசாங்க சுகாதார துறையுடனான தொடர்பிற்கு முன்னுரிமை வழங்கப்படும்)
4. தேவைப்படும் முறையிலான பிசிஏ 3 சான்றிதழ்கள்
5. கம்பனியானது உரித்தான தொழில்நுட்ப சிறப்பறிவுத்தன்மை மற்றும் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை தேசிய பெறுகை முகவராண்மையினால் வெளியிடப்பட்ட உசாத்துணையாளர்களை தெரிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு வழங்கலுக்கான உசாத்துணை வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள தரம் மற்றும் ஆகுசெலவு அடிப்படைக்கமைவாக உசாத்துணையாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2022 சனவரி 3 ஆம் திகதியிலிருந்து 2022 சனவரி 21 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலுள்ள முன்மொழிவுகளுக்கான முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

1. ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தல்.
2. வியாபார பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.
3. ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் கணக்காளருக்கு ரொக்கப்பணத்தில் 5,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்துதல்.
4. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுகளுக்கான விண்ணப்பமானது ஏனைய உரித்தான ஆவணங்களுடன் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என இரு தபாலுறைகளில் உரித்தான முறையில் அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்பட்டு இவையிரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு அந்த குறிக்கப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Request for proposals for Procurement of Consultancy Services to develop "Swastha", SM/PSRP/07/2021/03" என குறிக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 2022 சனவரி 24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை. 464/ஏ, T.B. ஜாயா மாவத்தையின் ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சில் 2022 சனவரி 13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்மொழிவுகள் முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனு ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

மேலதிக தகவலை 2022 சனவரி 13 ஆம் திகதியிலிருந்து அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் கீழேயுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளப்படலாம்.

**செயலாளர்,**
**ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு,**
**இல. 464/ஏ,**
**T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10**
**(5 ஆம் மாடி - தலைமையக கட்டிடம்)**

---

# සතොස விலைமனுக்களுக்கான அழைப்பு

வர்த்தக அமைச்சு

## வாடகை அடிப்படையில் லங்கா சதொச லிமிட் நிறுவனத்திற்கு களஞ்சியம் ஒன்றை பெற்றுக்கொள்ளல்

லங்கா சதொச லிமிட் (LSL) நிறுவனத்திற்கு 06 மாத காலத்திற்காக வாடகை அடிப்படையில் **களஞ்சியம் ஒன்றை வழங்க முடியுமான வழங்குனர்களிடம் இருந்து, லங்கா சதொச லிமிட் மூலம்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் மூலம், கீழ் குறிப்பிடப்பட்ட விபரங்கள் உள்ளடங்கிய தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2022.01.25 ஆம் திகதி **பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர், தலைவர், கவனத்திற்கு - பிரதிப் பொது முகாமையாளர் பெறுகை, லங்கா** சதொச லிமிட், இலக்கம் 27, சதொச செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும்.

முத்தரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வாடகை அடிப்படையில் லங்கா சதொச லிமிட் நிறுவனத்திற்கு களஞ்சிய வசதிகளை வழங்கல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுவுடன் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்.
1. களஞ்சியத்தின் உரிமையை உறுதி செய்கின்ற ஆவணங்கள் (உறுதியின் ஒரு பிரதி)
2. உரிமையாளரின் விபரம் (பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்)
3. எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகைத் தொகை (சதுர அடிக்காக - ரூபா.)

**களஞ்சியமானது கீழுள்ள விபரக்குறிப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**
- மேல் மாகாணத்திற்குள் அமைந்திருத்தல்.
- 25000 சதுர அடி அளவைக் கொண்டிருத்தல்.
- 20 தொன் லொரி வண்டி பயணிக்க முடியுமான நுழைவுப் பாதை ஒன்று இருத்தல்.
- 06 களஞ்சிய வாயில்கள் இருத்தல். (லொரி வண்டி நுழைய முடியுமானது)
- போதுமான பாதுகாப்பு (மதில்/ வாயில் கதவு)
- தொலைபேசி/ வலைப்பின்னல்/ 3 கட்ட மின்சாரம் 3ph /60A/வசதி
- 400 சதுர அடி அலுவலக வசதி
- 30 பணிக் குழுவினருக்கான சுகாதார வசதி
- பூச்சி கட்டுப்பாடு
- 05 லொரி வண்டிகள் அளவு நிறுத்தி வைக்கும் வசதி
- முறையான மழை நீர் முகாமைத்துவ கட்டமைப்பு ஒன்று நிலத்தில் இருத்தல் வேண்டும்.
- களஞ்சியத் திட்டத்தின் பொருட்கள் தொடர்பான விபரம் (சுவர் மற்றும் கூரை)
- களஞ்சியமானது சிறந்த முறையில் மூடப்பட்டதும் காற்றோட்ட கட்டமைப்பை (Ventilation) கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- நிலத் திட்டம் (Plan & Evolution Draw)
- மாகாண சபை மற்றும் நகர சபை ஒப்புதல் கடிதம் (COC)

விலைமனுவுக்கு முந்திய **சந்திப்பு 2022.01.13 ஆம் திகதி** மு.ப. **11.00க்கு** இடம்பெறும்.

**விலைமனுக்களை ஏற்பது 2022.01.25 ஆம் திகதி பி.ப. 01.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் இடம்பெறும். அதற்காக விலைக்களை சமர்ப்பிக்கின்றவர்களுக்கு அல்லது நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
முகாமையாளர் செயற்பாடு, லசலி - 0703611462

**இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் தலைவர் லங்கா சதொச லிமிட் கட்டிடக் குழுவின் வசமானதாகும்**

தலைவர், லங்கா சதொச லிமிட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

---

Best way to fulfil your Future Dreams
SUNDAY OBSERVER Marriage Proposals
E-mail your advertisements to,
classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## தேவை

கணக்கியல் அறிவு மற்றும் கணக்காய்வு அனுபவமுடைய ஓர் துரித புத்தக இயக்குநர் (book operator) தேவை. சம்பளம் பேசித்தீர்க்கலாம். கொழும்பு தலைமையகத்திற்கு மற்றும் வவுனியா அலுவலகத்திற்கு (இலங்கை நிரப்பு நிலையம்) வவுனியாவில் மாத்திரம் தங்குமிடம் வழங்கப்படும். AMT டிரான்ஸ்போர்ட் சேர்விஸ்.

**இல. 230, ஆட்டுப்பட்டித்தெரு,**
**கொழும்பு -13.**
**0777-391221**
**newamttransport@gmail.com**
**பெக்ஸ்: 011 2342138**

---

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

---

## காலியிடங்கள்

பின்வரும் பணியிடங்களுக்கு பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்

1. சிக்கன் ஸ்டால்களுக்கு
2. கோழி பண்ணைகளுக்கு
3. பாதுகாப்பு அதிகாரிகள்

கவர்ச்சிகரமான சம்பளத்துடன்

**இலவசம் தங்குமிடம் உணவு மற்றும்**

**தரிது பண்ணை பிரைவேட்**
**எண்: 147/டி, ததுகம,**
**ஜா-எல.**
**அழையுங்கள்: 076 3315868**

---

# සතොස விலைமனுக்கோரல்

வர்த்தக அமைச்சு

## லங்கா சதொச லிமிட்டிற்கு வெப்பக் காகிதங்களை (Thermal Papers) வழங்கல்

லங்கா சதொச லிமிட்டிற்கு 06 மாத காலத்திற்காக POS இயந்திரத்திற்கு அட்டவணை அச்சிடப்படும் காகித சுருள் வழங்குவதற்காக லங்கா சதொச லிமிட் தலைவரினால் உள்நாட்டு வழங்குனர்கள், உள்நாட்டு முகவர்கள், அவர்களின் அதிகாரம் பெற்ற உள்நாட்டு பிரதிநிதிகள், இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள்: விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது

தேவைகள்:

| உருப்படி விபரம் | அளவு |
|---|---|
| POS இயந்திரத்திற்கு அட்டவணை அச்சிடப்படும் காகித சுருள்கள் (POS Machine Paper Rolls) | 250,000 |

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களிடம் இருந்து அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த விலைமனு ஆவணங்களை, **ரூபா 5,000.00 தொகையை (மீளளிக்கப்படாத) செலுத்தி 2022 ஜனவரி மாதம் 03 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜனவரி மாதம் 24 ஆம் திகதி வரையான காலத்தில்** இலக்கம் 27, சதொச செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2022 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி மு.ப. 11.00க்கு இடம்பெறும்.**

முன்வைக்கப்படும் விலைமனுக்கள் **2022 ஜனவரி மாதம் 24 ஆம் திகதி பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர்**, லங்கா சதொச லிமிடெட், இலக்கம் 27, சதொச செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச லிமிடெட்டிற்கு வெப்ப காகிதங்கள் வழங்கல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்) விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது **2022 ஜனவரி 24 ஆம் திகதி பி.ப. 01.00க்கு முடிவுறுவதோடு** விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். வெற்றிகரமான விலைமனுதாரர்கள் மூலம் (பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் தவிர்த்து) பதிவுக் கட்டணமாக **ரூபா 5,000.00 தொகை மற்றும் 8% வட் தொகையை (மீளளிக்கப்படாத)** செலுத்துவதுடன் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் **10% செயல்திறன் பாதுகாப்பு தொகையாக செலுத்த வேண்டும்.**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, பெறுகை (LSL) 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்குவது தொடர்பான இறுதி முடிவு, **லங்கா சதொச லிமிட் தலைவர் வசமானதாகும்.**

தலைவர், லங்கா சதொச லிமிட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

---

# வேலை வாய்ப்பு

සතොස

## பிரதிப் பொது முகாமையாளர் - நிதி

இலங்கையின் பாரிய சில்லறை வலையமைப்பிற்கு

**வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

(01). ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ வர்த்தகம்/ கணக்கியல/நிதி முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம்.

மற்றும்

தொடர்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு பட்டம் பெற்ற தகைமை (முதுமாணி) அல்லது பதவியுடன் தொடர்புபட்ட விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் முழு அங்கத்துவம்.

மற்றும்

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவுடன் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் 15 ஆண்டுகள் அனுபவம். அதில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(02). பதவியுடன் தொடர்புபட்ட விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் சக அங்கத்துவம்.

மற்றும்

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவுடன் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் 15 ஆண்டுகள் அனுபவம். அதில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 45 வயதுக்கு குறையாதவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:** அடிப்படை சம்பளம்: ரூபா 150,000/=
(செயல்திறன் கொடுப்பனவு: ரூபா 75,000/= போக்குவரத்து கொடுப்பனவு 50,000/= + மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு : ரூபா 15,000/= + கையடக்க செலவு ஈடு செய்தல் ரூபா 9,000/=)

**நியமனத்தின் பண்பு:** EPF மற்றும் ETF இற்கு உரித்தான ஒப்பந்த நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்**
- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பாட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை நிரூபிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத்துவம் செய்த அனுபவம்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**
I. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
II. பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
III. சிறந்த ஆளுமையுடைய நபராகவிருத்தல் வேண்டும்.

நீங்கள் சரியான தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்றவராக இருந்தால், சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுய விபரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது vacancies@lankasathosa.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இந்த விளம்பரம் வெளியான 14 நாட்களுக்குள் அனுப்பவும். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலின் "Subject" பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்)

**(தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்புகொள்ளும்)**

வர்த்தக அமைச்சு

தலைவர், லங்கா சதொச லிமிட்,
சதொச செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

සතොස

# செல்லாக் காசு

பச்சைக் கம்பளமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது அந்த அழகான தேயிலை தோட்டம். அதற்கு மத்தியிலே அரை, குறையாகவும், அலங்கோலமாகவும் ஒரு லயன். அந்த லயன் திண்ணையில் பரட்டை தலையுடனும், காய்ந்து போன முகத்துடனும் தனது முன்னங்கால்களை கட்டிப்பிடித்துக் கொண்டு களைத்துப் போனவளாய் அமர்ந்திருந்தாள் மங்களம். தனது கணவன் மாடசாமியின் வருகையை எதிர்பார்த்திருந்தன மங்களத்தின் மங்கிய விழிகள். தோட்ட வேளைகள் முடிந்து மாடசாமி வருவதற்கு ஐந்து மணிக்கு மேலாகிவிடும் என்பது மங்களத்துக்கு தெரியும். இருந்தாலும் தனது தலைவனின் வருகைக்காக காத்திருப்பதிலும் ஒரு தனி சுகம் இருப்பதாகவே அவள் உணர்ந்தாள். இதனால் அவளுக்கு உடல் வலிகள் விளங்கவே இல்லை. எனினும் இடைக்கிடை வரும் இருமலை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

வலிகளின் மிகுதியால் அவளையும் அறியாமல் எழுந்து வந்த மங்களத்தின் முனகல் சத்தம் கேட்டு எட்டிப் பார்க்கிறாள் இளைய மகள் தர்ஷனி.

'அம்மா இவ்வளவு நேரமா காய்ச்சல்ல அவதிப்பட்டு போட்டு இப்ப இங்க என்ன செய்ற. வெளிய கனக்க காத்தும் வீசுது. எழும்பி உள்ள வாயேன்.'

'இல்ல மகள் நான் பெனடோல் ரெண்டு போட்டன். இப்ப கொஞ்சம் சொகமா இருக்கு. மூச்சுதான் சரியா வர மாட்டேங்குது'

'உனக்கு சளி வந்து நல்லா முத்திப் போச்சு அம்மா. அதுதான் மூச்செடுக்க ஏலாம இருக்கு. வெளிய குளிராவும் இருக்கு நீ உள்ளால வந்து இரு'

'எங்களுக்கு உள்ள, வெளிய ரெண்டும் ஒன்டுதானே மகள். வெளிய வீசுற குளிர் காத்து கூரைக்கால உள்ளுக்குத்தானே வீசுது.'

மங்களம் இப்படி சொன்னதும் அவளுடைய மகளுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. தனக்குள் பீறிட்டுப் பாய்ந்த கண்ணீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைகிறாள் தர்ஷனி. இதை அவதானித்த மங்களத்தின் கஷ்டம் இரட்டிப்பானது போலிருந்தது. காய்ச்சலின் வேதனை ஒரு புறம். வறுமையின் ரணம் மறு புறம். எண்ணிப் பார்த்த போது அவளின் இதயமே வெடித்து விடும் போல் இருந்தது.

ஆமாம் மாடசாமியும்,மங்களமும் இல்லற வாழ்வினுள் நுழைந்து இருபது வருடங்கள் கழிந்து விட்டன. இதற்குள் கண்டதெல்லாம் நான்கு குழந்தைகள் மட்டுமே. தனிக்குடித்தனம் நடத்த தொடங்கிய நாள் தொட்டே வறுமை அவர்களை வாழ்த்தி கொண்டிருந்தது. இத்தனைக்கும் மாடசாமியை சொல்லியும் குற்றமில்லை. ஏனெனில் அவனும் ஓயாது மாடாக உழைத்தான். இதனால் அவனைப் போலவே அவனது வாழ்க்கையும் தேய்ந்தது. உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாத இந்த தோட்டத்து ஊழியனான மாடசாமியால் மீட்சி பெறவே முடியவில்லை.

இந்நிலையில் ஒருநேரம் சாப்பிட்டாலும் கூட மாடசாமியின் மனநிலை மட்டும் உறுதியாகவே இருந்தது. எனினும் ஒரு நேரம் கூட நிரம்பாத அந்த சின்னஞ்சிறுசுகளின் வயிறுகள் வறுமைக்கு வரைவிலக்கணம் கூறிக்கொண்டிருந்தன. இந்நிலமைகளை நிவர்த்திக்க அந்த தோட்டத்து துரையின் பங்களாவுக்கு வேலைத்தேடிச் சென்றாள் மங்களம். அங்கு துரையின் வேண்டுதலுக்ிணங்க அடுப்படி வேலைகளை செய்து கொடுத்து ஒரு சொற்ப வருமானத்தையும் சம்பாதித்தாள்.

என்னதான் விசேஷ திருநாட்கள் வந்து போனாலும் அவர்கள் வாழ்வில் மட்டும் வித்தியாசம் தெரிவதே இல்லை. நோயொன்று வந்தால் கூட மருந்து வாங்க யாரிடமாவது கைநீட்ட வேண்டியநிலை. இதனால்தான் இரண்டு நாட்களாக மங்களத்தை வாட்டும் கடுமையான காய்ச்சலுக்கு மருந்தெடுப்பதற்கும் வழியின்றி தடுமாறினான் மாடசாமி. பசியும் நோயும் இணைந்து மனைவி படும் அவஸ்தைகள் அவனுக்கு அழுகையை வரவழைத்தது.

இத்தனைக்கும் இரண்டு பெனடோல் வாங்கிக் கொடுக்கவும் அவனுக்கு வழி இருக்க வில்லை. இதனால் அடுத்த வீட்டு வேலுவிடம் ஐந்து ரூபா வாங்கி அதற்கு மாத்திரைகள் வாங்கி கொடுத்தான். அந்த மாத்திரைகளுக்கு கொஞ்சம் தாக்குப் பிடித்த மங்களம் திண்ணையில் வந்து அமர்ந்து கொண்டாள். அவள் சிந்தனைகள் சிறகு கட்டிப் பறந்தன. இன்றைக்காவது ஏதாவது வாய்க்கு ருசியா சாப்பிட கிடைக்குமா என எதிர் பார்த்திருந்தாள்.



தூரத்தே மாடசாமி வருவது அவளது கண்களுக்கு மங்கலாகத் தெரிகிறது. கையில் ஏதாவது கொண்டு வருகிறானா என்று நெற்றியில் கரங்களை வைத்து மறைத்து பார்க்கிறாள். மண்வெட்டியை தவிர அவன் கையில் எதுவும் தென்படவில்லை. அவளை அறியாமல் ஆழ்ந்த பெருமூச்சொன்று வெளிப்படுகிறது.

'என்ன மங்களம் காய்ச்சல் இப்ப எப்படி இருக்கு? ஏதாச்சும் சாப்புட்டயா?' எனக் கேட்டுக் கொண்டே அருகில் வந்தான் மாடசாமி. 'இப்ப கொஞ்சம் பரவாயில்ல. வாங்க...வந்து முதல்ல ஏதாச்சும் குடிங்க' என்றவளாய் அவனை உள்ளே அழைத்து சென்றாள். வெறும் சாயத்தை மட்டும் உறிஞ்சி குடித்தான் மாடசாமி. அவனது கண்களில் மனைவியினதும் பிள்ளைகளினதும் ஒட்டிய வயிறுகள்தான் பட்டன. 'என்னங்க யாரிடமாவது கடனுக்கு ஏதாச்சும் கேட்டுப்பார்த்தா என்னங்க' என பேச்சுக் கொடுத்தாள் மங்களம். 'ச்சே இந்த நிலமையில யார்தான் கடன் தரப்போரா' என நினைத்தாலும் அவன் அதை வெளிக் காட்டவில்லை. அந்த லயத்தில் வாழும் அனைவரின் கதையும் ஒரே மாதிரியாக இருக்கும் போது யாரு யாரிடம் கடன் கேட்பது. இதைப்பற்றி நன்கு தெரிந்திருந்தும் மங்களத்தை சமாதானப்படுத்துவதற்காக 'நான் எத்தனையோ பேரிடம் கேட்டுப் பார்த்துட்டன் மங்களம் ஆனா யாருமே உதவி பண்ணல.' என்று தட்டுத் தடுமாறி கூறிவிட்டு உள்ளுக்குள் உருகிக் கொண்டிருந்தான்.

ஒருவாறாக அன்றைய இரவு கழிகிறது. இரவு முழுக்க விழித்திருந்த களைப்பையும் பொருட்படுத்தாமல் மண்வெட்டியை தூக்கிக் கொண்டு தோட்டத்துக்கு போனான் மாடசாமி. ஒருவாறாக நேரமும் கடந்து செல்ல வேலை முடிந்து வரும் மாடசாமி தனக்கு தெரிந்தவர்களிடம் தன் சோகக் கதையை சொல்லி கடன் கேட்டான். எப்படியாவது இன்று மங்களத்துக்கு மருந்தெடுக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் இறுதியாக துரையிடமும் கேட்டுப்பார்த்தான். ஆனால் அவனுக்கு ஏமாற்றமே விடையாக கிடைக்க வேதனைப்பட்டான்.

இந்த நிலையில் மங்களத்தின் முகத்தைக் கூட பார்க்க வெட்கப்பட்டு போனவனாய் வீட்டுக்குள் நுழைகிறான். ஆனால் மாடசாமியின் எண்ணத்துக்கு மாறாக மங்களத்திற்கு ஓரளவு காய்ச்சலும் குணமாகி இருந்தது. இதனால் அவன் மனம் சற்று ஆறுதலடைந்தது. இந்த திருப்தியில் மாடசாமி நேரத்தோடு தூங்கிவிட்டான். இரவு ஒரு மணியிருக்கும் களைப்பின் மிகுதியில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த மாடசாமி மங்களத்தின் முனகல் சத்தம் கேட்டு கண் விழித்தான்.

'மங்களம்...மங்களம் உனக்கு என்னம்மா செய்து? ஏன் இப்படி உளர்ர?' என அவளை தட்டியெழுப்பியவன் அதிர்ந்து போனான். மேனியெல்லாம் நெருப்பாக கொதிக்க ஒரு வார்த்தை கூட சொல்ல முடியாதவளின் விழிகள் மட்டும் மாடசாமியையே நோக்கிக் கொண்டிருந்தன. அடுத்தகணம் 'மங்களம் இது என்ன மங்களம் என்னைப்பாரேன் ஏதாவது பேசேன்' என மாடசாமி பதற பிள்ளைகளும் விழித்துக் கொண்டனர். அனைவரும் போட்ட கூச்சலினால் சற்று நேரத்தில் பெரியதொரு கூட்டமே கூடிவிட்டது. மாடசாமியின் இதயம் வேகமாக அடித்தது.

'என்னய்யா இப்ப பதறி என்ன லாபம் விடியட்டும் ஏதாச்சும் செய்வம்' என்றான் பக்கத்தில் வசிக்கும் ஒருவன்.

'மாடசாமி நேரங்காலத்தோட ஆஸ்பத்திரிக்கு கூட்டிப் போ உனக்கு அறிவில்லையா?' என்றான் இன்னொருவன்.

'உங்களுக்கெல்லாம் எப்பதான் புத்தி வருமோ தெரியல' இது இன்னொருவன்

மாடசாமியின் நிலைமை புரியாமல் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொன்னார்கள். ஆனால் அடுத்த வீட்டு வேலு மட்டும் கொஞ்சம் மனமிரங்கி 'அண்ண விடியும் வரை பார்த்துக்கிட்டிருக்க முடியாது. அக்காவ இப்பவே ஆஸ்பத்திரிக்கு கூட்டி போகணும் அதனால நம்ம துரை கிட்ட போய் கொஞ்சம் காரை கேட்டுப் பார்த்தா என்ன?' என்ற யோசனையை முன்வைத்தான். வேலுவின் பேச்சில் மாடசாமிக்கும் நம்பிக்கை பிறந்தது. உடனே இருவரும் அந்த பங்களா நோக்கி புறப்பட்டனர்.

அங்கே அந்த பங்களாவை மயான அமைதி சூழ்ந்திருந்தது. துரை வீட்டு நாய் மட்டும் விழித்துக் கொண்டு கத்த தொடங்கியதும் துரையும் விழித்துக் கொண்டார். முன் லயிட்டை போட்ட துரை ஜன்னலால் எட்டிப் பார்ப்பது தெரிந்தது. மாடசாமி மெதுவாக ஜன்னல் அருகில் செல்கிறான். ஜன்னலைத் திறந்த துரை கடும் சினத்துடன் இருப்பது தெரிந்தது. அவரிடம் வீசிய சாராய வாசைனயை பொருட்படுத்தாத மாடசாமி

'ஐயா...ஐயா என் மங்களம் உயிருக்காக போராடிக்கிட்டிருக்கா ஐயா. அவள இப்பவே ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகனும் ஐயா. உங்கட கால்ற விழுந்து கெஞ்சுறன் உங்க கார தந்து உதவிபண்ணுங்க தயவு பண்ணி முடியாதுன்னு மட்டும் சொல்லிடாதிங்க ஐயா?' மாடசாமி கெஞ்சிக் கொண்டே இருந்தான். ஆனால் துரையின் உள்ளக்கதவுகள் திறப்படவே இல்லை. படாரென ஜன்னலை சாத்தியவர் விளக்கை அணைத்து விட்டு உள்ளே சென்று விட்டார். மாடசாமிக்கு மயக்கம் வருவது போல் இருந்தது. அவனை தாங்கிப் பிடித்துக் கொண்ட வேலு 'அண்ண..அண்ண கடவுள் கைவிட மாட்டார் அண்ண' என ஆறுதல் சொல்லிக் கொண்டே வீட்டுக்கு அழைத்து வந்தான்.

வேதனையுடன் பக்கத்துக் கடையைத் தட்டி இரண்டு மாத்திரைகள் வாங்கிக் கொண்டு இருவரும் வீடு நோக்கி வேகமாக நடந்தனர். வீட்டுக்குள் இருந்து வந்த சத்தம் மாடசாமியை பதற வைத்தது. 'அம்மா.. அம்மா எங்கள பாரம்மா. பேசம்மா' என்று பிள்ளைகள் கதறும் சத்தம் மாடசாமியை உலுக்கியது. ஓடிச் சென்றவனின் கண்களில் மங்களத்தின் உயிரற்ற உடல்தான் தென்பட்டது. ஆமாம் மங்களம் நிரந்தர உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். பிள்ளைகளோடு சேர்ந்து அவனும் கத்தினான் கதறினான் அந்த தோட்டத்து மக்கள் அனைவரும் அழுது தமது சோகங்களைப் பரிமாறிக் கொண்டனர்.


கொஞ்ச நேரத்தில் எல்லாம் அடங்கியது. இரண்டு நாட்களில் மங்களத்தின் இறுதி கிரிகைகளும் நடந்தேறின. அதற்குள் வேலுவின் வேண்டுதலுக் கிணங்க தோட்டதுரை தனது தவறுகளை உணர்ந்து மன்னிப்பு கேட்கும் வரை யாரும் வேலைக்கு செல்வதில்லை என முடிவு செய்தனர்.

'வேலு நாம இப்படி செய்றதால நமக்குதானப்பா நஷ்டம்' என கவலைப் பட்டான் மாடசாமி. 'இல்ல அண்ண, நாங்களும் மனுஷங்கதான் என்கிறத அந்த கல் நெஞ்சக் காரனுக்கு உணர்த்தியாகனும்' என இளமையின் வேகத்தில் சூடாக பதிலளித்தான் வேலு. அதற்கு மேல் மாடசாமி எதையுமே பேசவில்லை. நாட்களின் நகர்வில் வேலை நிறுத்தம் ஆறாவது நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்த லயன் மக்களின் வயிறுகள் ஒட்டிப்போய் விட்டன. ஆனால் துரையின் மனம் தளரவில்லை மாறாக இன்னும் ஒரு நாளைக்குள் வேலைக்கு வராவிட்டால் வேறு இடத்திலிருந்து தொழிலாளர்களை கொண்டு வரப்போவதாக அறிவித்தல் கொடுத்தார். இதற்கு ஈடு கொடுத்து செயற்பட முடியாதளவுக்கு அந்த மக்களை வறுமை வாட்டி எடுத்தது. இந்த ஒரு சில நாட்களுக்குள் மாடசாமிக்கும் பெரும் கஷ்டமாகிவிட்டது. பிள்ளைகளின் நிலை அவனுக்கு வேதனையைக் கொடுக்கவே ஒரு முடிவுக்கு வந்தான். அதாவது இனியும் வேலைக்குச் செல்லாமல் இருந்தால் தனது பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகும் என்பதை அந்த மக்களுக்கு உணர்த்தினான். மாடசாமி சொல்வது அனைவருக்கும் சரியாகப்பட நாளைக்கே வேலைக்கு செல்வதென முடிவு செய்தனர். வேலு வாலும் இனி எதுவுமே செய்ய முடியாத நிலை. மறுநாள் பொழுது விடிகிறது. அங்கே உதிரங்களை வியர்வையாக்கி பிறரை வாழ வைக்கும் அந்த வசந்தம் காணாத வள்ளல்கள் மண்வெட்டியுடனும், கூடைகளுடனும் மலைகளில் ஏறிக் கொண்டிருந்தனர்.

வரக்காமுறையூர் ராசிக்...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 04




திரு/திருமதி.செல்வி ..........................................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................................
..........................................................
..........................................................
திகதி கையொப்பம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :04

**இடமிருந்து வலம்**

(01) பெரும் பணக்காரன்.
(04) காலநெருக்கடியால் ஏற்படும் அவசரம்.
(07) மாறாத இடம்.
(09) வாரத்தில் ஒருநாள் இது. (திரும்பியுள்ளது)
(10) மற்றொருவரை நினைவுபடுத்தும் ஒத்த தன்மை. (திரும்பியுள்ளது)
(11) கீழ்த்தரமான அல்லது தீய குணமுள்ளவன். (குழம்பியுள்ளது)
(13) சொல். பக்குவமாக இருக்கும் தன்மையையும் குறிக்கும். (குழம்பியுள்ளது)
(14) உறுதியான தன்மையுள்ள ஒருமரம்.
(16) கேலிப்பேச்சு.
(19) ஒரு கருமத்தை இதுவரை செய்ய முடிந்ததற்கும் மேலாகச் செய்துமுடிப்பது.
(20) ஈடுபாடு.
(21) மீன் பிடிப்பதற்குத் தேவையானது.
(22) இதுவும் ஒரு உணவுப் பண்டம்.
(23) தன்னோடு கூடவே படிப்பவர் அல்லது பணிபுரிபவரைக் குறிப்பது.
(24) தலைமுடி.
(25) இளைய சகோதரன் திரும்பிவிட்டான்.

**மேலிருந்து கீழ்**

(01) இதுவும் ஒரு பறவை.
(02) வாகன ஓட்டுநர். (குழம்பியுள்ளது)
(03) முன்னால் இருப்பவரை சுட்டிக்கூறும் ஒருமைச் சொல். (கீழிருந்து மேல்)
(05) வடமாகாணத்திலுள்ள பெருநிலப் பகுதி. (குழம்பியுள்ளது)
(06) சௌகரியம். (தலைகீழ்)
(08) இது ஒரு தானியம். (தலைகீழ்)
(12) இராமாயணம் படைத்தவர்.
(13) நிலப்பகுதி.
(14) நீர்வாழ் பிராணி.
(15) இதுவும் தானிய வகையைச் சேர்ந்தது.
(17) பாதுகாப்பு அங்கி.
(18) மடல். (குழம்பியுள்ளது)
(19) தற்காலிக செயற்பாட்டுக்கான கொட்டகை அல்லது கட்டடம்.
(20) எதிர்பார்ப்புடன்கூடிய உணர்வு அல்லது விருப்பம்.
(22) மயிலுக்கு இது உண்டு.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 03

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. புதுவருடம் 06. ரகளை 07. சகாரா
9. காந்தள் 11. பஞ்சு 12. அப்பம்
14. மதிப்பு 15. கீரி 16. மது
17. தாகம் 19. கரடி 21. படலை
23. இன்பம் 24. தமாஷ்

**மேலிருந்து கீழ்**

01. புரதம் 02. துகள் 03. வளைகாப்பு
04. பஞ்சம் 05. பராமரிப்பு 08. காசு
10. அந்தாதி 13. கப்பம் 14. மதுரம்
16. மகன் 18. தடம் 20. இடி
22. மாலை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 02

### பாராட்டு பெறுவோர்

**ஏ. செபஸ்தியன்,**
இல. 24/2, உடுப்பிட்டிய,
உக்குவளை.

**சாஹிரா பானு லியாவுத்தீன்,**
இல. 12/6, சென் பீற்றர்ஸ் லேன், நிந்தனி,புத்தளம்.

**எஸ். தவநாயகி,**
24/41, செல்வநாயகம் வீதி,
முதலாம் குறுக்குத்தெரு, மட்டக்களப்பு.

**கே. பத்மநாதன்,**
தெஹிகலகந்துர,
நாரங்கல,ஹாலி எல.

**மங்களம் மனோரஞ்சன்,**
இல. 69, வட்டை விதான வீதி,
கல்முனை 02.

**எம்.ஏ.ஏ. அத்தாஸ், ரஹ்மத் மன்ஸில்**
141/1, குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.

**கோபிநாத் ஜெரிஷ்,**
209/2, மார்கண்டு வீதி,
பாண்டிருப்பு 01,
கல்முனை.

**மல்லிகாதேவி பத்மநாதன்,**
டெமேரியா குறூப்,
முதலாம் பிரிவு,பசறை.

**மங்கையற்கரசி மனோகரன்,**
53, லேடி மனிங் டிரைவ்,
மட்டக்களப்பு.

**ஹலீமா சித்தீக்கா அக்பர்,**
25, சீத்தாகம பி, குடகம வீதி,அவிசாவளை.

# கசப்பும்... இனிப்பும்...



தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு–1

அபிமானிகளின் தொலைக் காட்சிப் பெட்டிகளில் தமிழகத்த மிழ் ஒளிபரப்புகள் என்னென்ன வெல்லாம் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கின்றன?



இங்கே தரப்பட்டிருக்கும் தலைப் புகளைக் கண்டிருக்கிறீர்களா?

★ லைட்ஸ் ஒன்
★ டயலாக்
★ விசுவல் பேஸ்ட்
★ புக் ஷெல்ஃப்
★ பயோ டேட்டா
★ ரீடர்ஸ் ஒபீனியன்
★ ஆட்டோ கிராப்
★ ரேசன் கார்ட்
★ டவுன் லோடு மனசு
★ ஃப்ளாஷ் பேக்
★ ப்ளாக் அண்ட் வைட்
★ டொப் ஏங்கிள்
★ ரிலாக்ஸ் ப்ளீஸ்
★ டொப்டென் மூவிஸ்
★ சூபர் சிங்கர்
★ டிரைலர் டைம்
★ சோங் ஃபார் யூ
★ கிரைம் டைம்
★ கிரைம் ஸ்டோரி
★ ப்ரைம் டைம்
★ பயோ கிராபி
★ ஹலோ டாக்டர்
★ கிச்சன் டைம்
★ பிக் பாஸ்
★ கனெக்சன்ஸ்
★ ஜீன்ஸ்
★ மியூசிக் ட்ராக்ஸ்
★ மிக்ஸ் மசாலா
★ மிட்நைட் மசாலா
★ செம காமெடி
★ கொலிவூட் ஹிட்ஸ்
★ சினி டைம்

அப்பாடா! பட்டிய லிட்டு மூச்சு வாங்குகிறது.

இவை அத்தனையும் தமிழ் மொழி காட்சி ஊடகங்களில் (தொ.கா) மட்டுமன்று அச்சு ஊடகங்களிலும் அன்றாடம். தமிழ் நாட்டவர் பார்க்கிறார்கள், நம்மில் பலரும் சேர்ந்து அர்த்தம் 'கிர்த்தம்' எதுவும் புரியாமலேயே! ஆங்கில அறிவே இன்றி அன்னையர் விழி விழி!



தமிழ் மக்களை தமிழ்ப் பற்றாளர்களாக பரிணமிக் கும் பணியில் முனைந்துள்ள முதல் வர் முத்துவேல் கருணாநிதியாரின் மகனார் இந்தத் 'தமிழாங்கிலத்திலும் ஒரு பார்வை செலுத்த வேண்டும்.

இவற்றை சிரத்தையுடன் தொகுத்து, 'இந்து இதழ்' நாளேட் டில் 'தமிழ்த் திசைப்பகுதியில் வெளி யிட்டுள்ள **அருள் செல்வனுக்கும்** முகநூலில் பதிவிட்டிருக்கிற **சுகுமார் சண்முகத்திற்கும்** நன்றியறிதல்கள்.

**ஓர் அடிக்குறிப்பு:**

இங்கே நம்ம தொ.கா. தமிழ் ஊடகங்களில் கண்டு கொண்டிருப் பவற்றையும் நானே தொகுத்துக் கொண்டிருக்கிறேன். சற்று அவகா சம் அளியுங்கள்.

## கசப்பு–2

நாளும் பொழுதும் 'ஹராம்', 'ஹலால்' பேசித்திரிந்த பென்னம் பெரிய இஸ்லாமிய தேசமான சவூதி அரேபியா, 2021க்கு விடை கொடுக்க ஒரு பிரம்மாண்டமான, **இசைவிழாவை** நடத்தி முடித்திருக்கிறது. கேட்டவர்களும் பார்த்தவர்களும் பல்லாயிரமாம்.

ஒரு காலத்தில் இசையையும் நாட கத்தையும், இவை உள்ளடங்கிய திரைப்படங்களையும் தூக்கி வீசி எறிந்திருந்த தேசம் அது! அந்த அறபு தேசத்தையே பின்பற்றி, 1990களில் (21)ஆண்டுகளுக்கு முன்) ஆப்கான் நாட்டை ஆண்ட தலிபான்கள் 'ஷரீயத்' 'இஹ்லாஸ்' என இஸ்லாமி யக் கோட்பாடுகளை வாய்வலிக்கப் பேசிக்கொண்டு அபின் போதைப் பொருளை உலகெல்லாம் கடத்திக் காசு பார்த்துக் கொண்டிருந்தவர்கள், கடந்தாண்டு மறுபடியும் ஆள வந்து விட்டார்கள்.

ஆனால் சவூதி அரேபிய வழியில் செல்லத் தயாரில்லை!

இசையும் நாடகமும் பொது இடங்களில் கிடையாது என்பது மட் டுமன்று, தொ.காகளில் பெண்கள் நடிப்பது தடை. இசை நிகழ்ச்சிகள் இல்லை.

அத்தோடு, அவசியம் கருதி சில நிகழ்ச்சிகளைப் பெண்கள் தயாரித்து வழங்க நேர்ந்தால் ஹிஜாப் உடை அணிந்திருக்கவேண்டும்.

கண்மணிகளாம் பெண்மணிகள் உயர் கல்வி கற்க மேல் நிலைக்கல் லூரிகளில் அனுமதி இல்லை.

முன்பு பெண்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கவனிக்கவும் மேம்பாட்டுக்குமென ஒரு தனியான அமைச்சு செயல்பட்டது. இப்பொ ழுது மூடு விழா!

அதே சமயம், ஆண் துணை யில்லா பயணம் செய்யப் பெண்க ளுக்கு அனுமதி மறுப்பு!

அதாவது, குடும்ப உறுப்பினர், உறவினர் துணையின்றி 75 கிமீ தூரத் திடத்திற்கு மேல் பிரயாணம் நஹி ஹே!

இந்தத் தலிபான் வாலாக்கள் நடுத் தெருவில் அபின் போதை விற்பனை செய்து கொண்டே பெண்களையே குறிவைப்பது புதிரோ புதிர்!

## இனிப்பு 2

**'கர்நாடகம்'** என்றதொரு வார்த் தைக்குச் சரி பொருத்தமான ஆசாமி கள் பழம் பேனை கொண்டு எழுதும் என் போன்றவர்களே! "மாறிவரும் சமுதாயப்பழக்க வழக்கங்கல்க ளுக்குத் தக்கபடி மாற்றிக் கொள்ள விரும்பாத பழைய மரபு வழிமுறை களைக் கடைப்பிடித்து வருபவர்" எனப் பொருள் கூறிகிறது **'நர்மதா வின் தமிழ் அகராதி'**

அச்சொட்டான விளக்கம் ஆயினும் அந்த வார்த்தையில் பரந்த பாரத் (இந்திய) நாட்டில் ஒரு மாநிலமே உள்ளது என்றதகவலை அகராதி அளிக்கவில்லை. என் பேனையே அளிக்கிறது.

**'கர்நாடகா'** என்றதொரு மாநிலம், தமிழகத்தை ஒட்டியதாக உள்ளது. மாவீரர் திப்பு சுல்தான் அணட பிர தேசம். பெங்களூருவும், மைசூரும் அங்கே பிரபலமான சுற்றுலா நகரங் கள்.



இங்கே **'விஜயப்புரா'** என்றோர் இடம். சமூக நல்லிணக்கத்திற்கு புகழ்பெற்றது.

**மெஹபூப் மஸ்னவி** என்ற பெயரில் ஒரு மனிதர் அங்கே! கடந்தாண்டு ஆகஸ்ட் பொழுதில் அவரும் துணைவியாரும் செய்தி ருக்கிற காரியம் இன்ப அதிர்ச்சியோ அதிர்ச்சி!

தங்கள் பராமரிப்பில் பத்தாண்டு களுக்கு மேலாக வளர்ந்த குமரிப் பெண்ணொருத்திக்கு ஜாம் ஜாம் எனத் திருமணம் செய்து வைத்திருக் கின்றனர்.

இதுயாரும் செய்வது தானே இதற்கேன் ஜாம் ஜாம் போடுகிறீர் கள் என்பீர்கள்!

அங்கே தான் ஒளிந்திருக்கிறது பெரும் சமூக நல்லிணக்கம் எடுத் துக் காட்டு!

வளர்ப்பு மகள் பதினெட்டு அகவை **பூஜா என்ற இந்துப் பெண்!** தனது வீட்டையே திருமண நிகழ் விடமாக்கி இந்து முறைப்படியே கல்யாணக் காட்சி நடத்திவிட்ட முஸ்லிம் தம்பதி பெரிய ஆச்சரிய குறிகள்!

இன்னும் விரிவாக விவரித்து விடுகிறேன்.

கர்நாடக மாநிலம், விஜயப் புராவை வதிவிடமாகக் கொண் டவர் பூஜா என்ற பருவப் பெண். அவர் அநாதை ஆக்கப்பட்டார். வறுமை காரணமாக பெற்றோர்க ளால் கைவிடப்பட்டாள்.

இந்த அநியாயத்தைக்காணப் பொறுக்காத மெஹபூப் மஸ்னவி தம்பதி, தங்கள் பராமரிப்பில் பூஜாவைத் தத்து எடுத்தனர் என்றா லும்.

முஸ்லிம் பெயர் சூட்டி பிறப்புப் பதிவுப் பெயரை மாற்றவில்லை! பத்தாண்டுகள் பறக்க, பதினெட்டு வயதை எட்டும் வரையில் பூஜா வுக்குத் தந்தையும், தாயும் அந்த முஸ்லிம் தம்பதியே!

இந் நிலையில், திருமண வயது வந்த அந்த பெண்ணுக்கு இந்து மதமுறைப் படி, மணமகனை தேடி பிடித்து திரு மணம் செய்யும் முயற்சியில் வெற்றி பெற்றனர்! மணம கன் வீட்டினர் வர தட்சணை இன்றி மகிழ்ச்சியுடன் திரு மணத்திற்கு ஒப்புக் கொண்டனர்.

இந்த அற்புத நிகழ்வு குறித்து ஜனாப் மெஹபூப் மஸ்னவி என்ன கருத்தைச் சொல்கி றார் என்பதைக் கேட்கும் பொழுது அதுவும் ஓர் இன்ப அதிர்ச்சியாக இருக்கிறது.

"10 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த சிறுமி எனது வீட்டிலேயே வசித்து வந்துள்ளார். எங்களுடைய மதத்திற்கு மாறவோ அல்லது முஸ்லிம் நபரை திருமணம் செய்யவோ நான் ஒருபோதும் கட் டாயப்படுத்தியது இல்லை. சமூகம் வேறாக இருப்பினும் மக்கள் நல் லிணக்கத்துடன் வாழ வேண்டியது இன்றைய காலகட்டத்தின் மிக மிக அவசியமாகும்!"

இதைப் பதிவிடுகிற சமயத் தில் தனிக்குடித்தனம் நடத்துகிற பூஜாவும் ஒன்றைச் சொல்கிறார்.

"இப்படியொரு நல்லுள்ளம் கொண்ட ஒரு வளர்ப்புத் தந்தையை யும் தாயையும் பெற நான் பாக்கிய சாலி. அனைத்திற்கும் மூலகாரணம் நம் எல்லோருககும் பொதுவான கடவுளின் திட்டங்களும் ஆசிக ளுமே!

ஆம்! என் பேனையும் நானும் அடிக்கடி சொல்வது போல, 'அனைத்தும் அவன் எண்ணப்படி யும் திட்டப்படியும்!'

**மேலும் சில தகவல்கள்:**

ஜனாப் மெஹபூப் அந்த அழகிய கர்நாடக மாநிலம் விஜயப்புராவில் ஒரு பிரபல சமூகசேவையாளரும், சமூகநல்லிணக்கவாதியுமாவார். அவருக்கு ஆசை ஆசையாக மகன் கள் இருவர், மகள்மார் இரண்டு பேர் உள்ளனர். வாழ்த்தி மகிழ்வோம்.




# இன்னும் சிக்கவில்லை கொலைகாரன் எங்கே இருக்கிறான் அந்த சதிகாரன்!

9

சிறிது நேரம் இன்ஸ்பெக்ட ரையே பார்த்துக் கொண்டி ருந்து,

கஜன் சொன்னான், "இல்லை இன்ஸ்பெக்டர் எனக்குத் தெரிந்த வரையில் அப்படி யாரும் இல்லை இன்ஸ்பெக்டர்!" "மோகனுக்கு இல் லையென்றால் கஜனுக்கு எதிரிகள் யாரும் இல்லையா?"

"மோகனும் நானும் இணைபிரியா நண்பர்கள் இன்ஸ்பெக்டர் ஆனாலும் எங்களுக்கு எதிரிகள் என்று யாருமே இல்லை இன்ஸ்பெக்டர்...!"

"நாங்கள் அப்படி நினைத்தாலும் இந்தக் கொலையில் யாருடைய ஒரு எதிரியோதான் சம் பந்தப்பட்டிருக்கிறான். இது கண்டிப் பாக அவனுடைய வேலையாகத் தான் இருக்கும்... விரைவில் அவன் யாரென்று கண்டுபிடித்து அவனை நான் கைது செய்வேன் கஜன்.

"நன்றி இன்ஸ்பெக்டர்... அதைத் தான் நான் எதிர்பார்க்கிறேன்...!"

"விசாரணை செய்து கொண்டுபோ கும் போது மீண்டும் உங்களை சந் திக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

"நான் எப்போது வேண்டுமான லும் அதற்குத் தயாராகவே இருப் பேன் இன்ஸ்பெக்டர்... உங்களுக்கு வேண்டிய தகவல்களைத் தந்து உத வுவதற்கு...

"சரி அப்போ நான் புறப்படு றேன்.... இதோ என் போன் நம்பர் இருக்கிறது.... ஏதாவது புதிய தக வல்கள் கிடைத்தால் எனக்கு உடனே போன் பண்ணுங்கள்!"

"ஆகட்டும்... இன்ஸ்பெக்டர்"

துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்ப ராஜ் சொன்னதுபோல்,

தீபனின் தகவல்களைத் திரட்டுவ தற்காக,

முதலில்,

தீபனின் வீட்டிற்குத்தான் சென்றார் இன்ஸ்பெக்டர் ராகவன்.

அவர் தீபனின் வீட்டிற்குச் சென்ற போது,

அவன் அப்பா கோபால் வீட்டில் தான் இருந்தார்.

இன்ஸ்பெக்டர் சாதாரண உடையில் தான் சென்றிருந்தார்.

தனது வீட்டுக்கு புதிதாக ஒருவர் வந்திருப்பதைப் பார்த்து விட்டு,

மெல்ல எழுந்து வெளியே வந்தார் தீபனின் அப்பா கோபால்.

"ம்... யார்வேணும் உங்க ளுக்கு...?"

"நான் பொலிசில் இருந்து வரு கிறேன்... என்பெயர் இன்ஸ்பெக்டர் ராகவன்!"

இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார். என் றதும்,

தன் மூத்தமகளின் மரணம் சம் பந்தமாக விசாரணை செய்யத்தான் அவர் வந்திருக்கிறார் என்பது கோபா லுக்குப் புரிந்து விட்டது.

"ஓ... வாங்க... சேர் உட்காருங்க!" அன்புடன் அவரை உள்ளே அழைத் தார்.

"நன்றி... தீபிகாவின் மரணம் தொடர்பாக சில தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்... நான் உங்களை பார்க்க வந்தேன்!" உள்ளே வந்து அமர்ந்தபடியே சொன்னார் ராகவன்.

"ஐயோ சேர் என்னோட பொண்ணு செத்துப்போய் ஒரு மாசமாச்சி... இதுக்கு பொறவு விசாரணை எல்லாம் நடத்தி என்ன ஆகப்போகுது...?"

"அப்படி எல்லாம் சொல்லாதீங்க கோபால்... உங்க மகளின் மரண விசாரணைகளில் இருந்து அது தற் கொலையல்ல கொலை என்றுதான் தெரிய வந்திருக்கிறது. அதனால் அந்த கொலையை செய்தவனை கண்டு பிடித்து தண்டனை வழங்கு வது பொலிசாரின் கடமை."

"என்மகன் கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு தீபனுடன் சேர்ந்து வட்டவல பாதாளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாள் என்பது எங்களுக்கு நன்றா கத் தெரியும்... இது எப்படி சேர் கொலையாக முடியும்?"

"அங்கு தான் விசயமே இருக்கி றது. கடிதத்தை எழுதியது தீபிகா வாக இருந்தாலும்... கவரில் உள்ள பெயரை எழுதி தபாலில் போட்டிருப் பது வேறு ஒருவர்...!" அந்த வேறு ஒருவர்யார் என்பதை கண்டு பிடிப் பதற்காகத்தான் நாங்கள் இப்போது விசாரணைகளை நடத்திக் கொண்டி ருக்கிறோம். அதற்காகத்தான் உங்கள் உதவி எங்களுக்குத் தேவைப்படுகி றது!"

"ஆ...! ஐயோ சேர். இதைப்பத்தி எல்லாம் எங்களுக்குத் தெரியாதே... ம்.. மங்களம் கொஞ்சம் வெளியே வாங்களேன்... இன்ஸ்பெக்டர் வந்தி ருக்கிறார் எங்கட மகளோட சாவபத்தி விசாரிக்க"

சிறிது நேரத்தில்,

உள்ளே இருந்து அவருடைய மனைவி வெளியே வந்தாள்.

"ஐயோ இன்ஸ்பெக் டர் எங்கட மகள் எங் களுக்கு இல்லாமல் போயிட்டாளே சேர்... எல்லாம் அந்த தீபனால் வந்த வினை...!"

"ஏய்... இப்படி கத்தாம இந்த சேர் சொல்றத கேளுங்க... எங்க மகளோட சாவு தற்கொலை இல்லையாம் கொலையாம்...!"

"எ... எ... என்னது கொ... கொ... கொலையா! அப்படீன்னா அந்த தீபன் தான் அவளையும் தள்ளி விட்டு அவனும் அந்த பாதாளத்தில் பாய்ந்திருப்பான்.. இப்படி அவன் குடும்பத்துக்கு இடிதான் விழனும்... ஐயோ... பாவம் என்னோட பொண்ணு...!"

இப்படி சொல்லிவிட்டு,

அவள் அழ ஆரம்பித்தாள்

இதைப் பார்த்ததும்,

இன்ஸ்பெக்டரின் மனம் வேறு விதமாக சிந்தித்தது.

தனது தங்கை தற்கொலை செய்து கொண்டிருக்க முடியாது. கண்டிப்பாக அது கொலைதான் என்று கஜன் உறுதியாக நம்புகிறான். ஆனால் இவர்களுக்கு அது பற்றி எல்லாம் தெரியவில்லையே இதுவி யப்பாக அல்லவா இருக்கிறது!

தனது விசாரணையை ஆரம்பித் தார்.

"கஜன் என்பது.... உங்கள் மகன்... அதே நேரம் தீபிகாவின் ஒரே அண்ணன்... என்ன நான் சொல்வது சரிதானே...?"

"ஆமாம் இன்ஸ்லிபெக்டர் அவன் எங்கள் மகன்...!"

"ஓ.... அப்போ... ஜனனி என்பது உங்கள் இரண்டாவது மகள் அப்படித் தானே..."

"ஆமாம் இன்ஸ்பெக்டர் கடைக் குட்டி தீபிகாவிக்கும் கஜனுக்கும் தங்கை!"

"ஜனனியிடம் நாங்கள் இன்னும் வாக்குமூலம் பெறவில்லை... அதே நேரம் கஜன் தான் இந்த மரணத் தில் சந்தேகம் இருப்பதாக பொலிசா ரிடம் தெரிவித்திருக்கிறார். அதுபற்றி உங்கள் இருவருக்கும் எதுவும் தெரியாதா?" புருவங்களை உயர்த்தி அவர்களைப் பார்த்த படியே கேட்டார் இன்ஸ்பெக்டர் ராகவன்.



"இல்ல இன்ஸ்பெக்டர் நீங்க இப்ப சொல்லும் வரைக்கும் அதுபற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு வட்டவளையில் இருக்கும். பாதா ளத்தில் தீபனும் தீபிகாவும் பாய்ந்து விட்டதாகத்தான் கஜன் எங்களிடம் சொன்னான் ஆனால் இது கொலை என்றோ... அதில் இப்படி மர்மம் இருப்பதாகவோ எங்களிடம் சொல்ல வில்லை.

"சரி அப்படியானால் நான் இப்போது கேட்கப் போகும் கேள் விக்களுக்கு பதில் சொல்லுங்கள்... விரைவில் கொலைகாரனை கண்டு பிடிப்பதற்கு நாம் முயற்சி செய்கி றோம்!"

"இது அந்த தீபனின் வேலையாகத் தான் இன்ஸ்பெக்டர் இருக்கும் அவ னுடைய பெற்றோர்களும் சரியான மோசமானவர்கள்... நான் ஏற்கனவே சொன்னது போல் அந்த தீபன் தான் கொலைகாரன்!" படபடவென்று பேசினாள் மங்களம்...

"நீங்கள் சொல்வதைப்போல் திடீ ரென்று ஒருவர் மீது அப்படி குற்றம் சாட்ட முடியாது... சாட்சிகள் மூலம் தான் அது நிரூபனமாக வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் இவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம். உங்கள் குடும்பங்கள் இரண்டுக்கும் இடையில் காணித்தகறாறு ஒன்று இருப்பதினால்தான் உங்களுக்கு தீபனை பிடிக்கவில்லை. ஆனால் அந்த தீபனும் உங்கள் மகளைப் போலவே பல்கலைக்கழகத்தில் படிக் கும் ஒரு மாணவன். பள்ளிக்குச் சொல்லும் காலத்திலேயே இவர்கள் இருவரும் நட்பு கொள்ளத் தொடங்கி விட்டார்கள். அதனால் உங்கள் மகள் தீபிகாவின்மீது அவன் உயிரையே வைத்திருக்கிறான். அப்படிப்பட்ட ஒருவன் இப்படியான ஒரு காரியத் தைச் செய்திருக்க மாட்டான். இது வேறுயாரோ ஒருவர் செய்த வேலை யாகத்தான் இருக்கும் சிலசமயம் தீபிகாவைத் திருமணம் செய்து கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த ஒரு வரின் வேலையாகக் கூட இருக்க லாம்!"

"இல்லை இன்ஸ்பெக்டர் வேறுஎ வரும் தீபிகாவை எதிர்பார்த்துக் காத் திருக்கவில்லை... அதுஎங்களுக்கு நன்றாகத் தெரியும்!" மங்களம் உறு தியுடன் சொன்னாள்.

"இல்லை அம்மா நீங்கள் அப்படி சொன்னாலும் யாரோ ஒருவர் இருந்திருக்கலாம்... அதை நாங்கள் எப்படியும் கண்டு பிடித்து விடுவோம்... சரி உங்கள் இளைய மகள் ஜனனியைக் கூப்பிடுங்கள் விசாரிக்க வேண்டும்?"

அவர் இப்படிச் சொன்னதும், இரு வரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

(இளமை வளரும்)



# யாவரும் கேளீர்


## பல்சுவை இலக்கியத் திரட்டு 72

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

**('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்!)**

### எழுத்தாளர், இலக்கியச் செயற்பாட்டாளர், சமூகசேவையாளர் நா. சோமகாந்தன்





எழுத்தாளர் அமரர் சோமகாந்தன் 14.01.1934இல் பிறந்தவர். அவரது 88ஆவது ஜனன ஆண்டு நினைவுப் பகிர்வாக இப்பத்தி அமைகிறது

கரணவாய் தெற்கில் நாகேந்திரஐயர் – செல்லம்மா தம்பதியினருக்குப் புதல்வராக பிறந்த சோமகாந்தன், ஆரம்பக் கல்வியை, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் உயர்கல்வியை தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியிலும் பெற்றவர்.

சுதந்திரன், கலைச்செல்வி ஆகியவற்றின் மூலம் இலக்கிய உலகில் கால்கோள் கொண்ட சோமகாந்தனின் ஆரம்பகாலச் செயற்பாடுகளாக எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துதல், காரசாரமான இலக்கியக் குறிப்புகளை எழுதுதல் போன்றவை அமைந்தன. 1960களில் 100க்கு மேற்பட்ட எழுத்தாளர், கலைஞர்களை சுதந்திரன் மூலமாக அவர் அறிமுகம் செய்துவைத்தார்.

அறுபதுகளின் ஆரம்பத்தில் அவர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து கொண்டார். 1964இல் இ.மு.எ.ச.வின் தேசிய அமைப்பாளர் ஆனார்.

நாவலர் விழா (1963), யாழ்ப்பாணத்தில் இ.மு.எ.ச. நடத்திய இரண்டாவது மாநாடு, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த தமிழ் – சிங்கள எழுத்தாளர் தேசிய ஒருமைப்பாட்டு மாநாடு (1975) 198283 காலப்பகுதியில் மகாகவிபாரதி நூற்றாண்டுவிழா, 1987இல் தேசிய இனப்பிரச்சினையில் இ.மு.எ.ச. நிலைப்பாட்டை விளக்கும் மகாநாடு ஆகியவற்றை சிறப்பாக நடத்துவதில்; சோமகாந்தன் முன்னின்று உழைத்தார். 1969இல் நடைபெற்ற நாவலர் மகாநாடு, நல்லூரிலே நாவலர் சிலைநிறுவுதல், நாவலர் மாநாட்டு மலர் வெளியிடல் என்பன சோமகாந்தனின் உழைப்பின் வெளிப்பாடு.

அறுபதுகளின் முற்பகுதியில் சென்னையில் நடந்த அனைத்திந்திய எழுத்தாளர் மகாநாட்டில் இலங்கை இ.மு.எ.ச. பிரதிநிதிகளாக சோமகாந்தனும் திருமதி பத்மா சோமகாந்தனும் அங்குசென்று உரையாற்றினார்கள். தமிழகத்திற்கு அடிக்கடி இலக்கியப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள எழுத்தாளர்களை இங்கு அழைத்துவந்து கலை இலக்கிய நிகழ்வுகளில் பங்குபற்ற வைப்பதோடு நம்நாட்டு இலக்கிய கர்த்தாக்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இலக்கியப் பாலமாக விளங்கினார் சோமகாந்தன்.

1990இல் சின்மயமிஷன் ஆன்மீக இயக்கத்தில் இணைந்து அவ்வியக்கத்தின் உதவிப் பொதுச் செயலாளரானார். சின்மயமிஷன் வெளியிட்ட 'வொய்ஸ் ஓவ் சின்மயா" காலாண்டிதழின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றினார்.

சோமகாந்தனின் இலக்கியப் பணிகளைப் பாராட்டி, இலக்கியக் குரிசில் (1993), தமிழ்மாமணி (1994), தமிழ்ஒளி (1994) ஆகிய பட்டங்கள் இலக்கிய நிறுவனங்களால் வழங்கப்பெற்றன. மல்லிகை சஞ்சிகை தனது 1989 ஏப்ரல் இதழ் அட்டையில் இவரது படத்தைப் பொறித்து கட்டுரை வெளியிட்டுக் கௌரவித்தது. இலங்கை அரசினால் 2005ஆம் ஆண்டில் கலாபூஷணம்/ பட்டம் வழங்கப்பட்டது. சோமகாந்தன் 28042006 அன்று அமரரானார்.

### கலாபூஷணம் வீ.என். சந்திரகாந்தியின் வாழ்வியல் அனுபவப் பகிர்வு பாகம் 3


கலாபூஷணம் வீ.என்.சந்திரகாந்தி எழுதிய வாழ்வியல் அனுபவப் பகிர்வுபாகம் 3 என்ற நூல் பார்வைக்குக் கிடைத்தது. இந்த நூலின் ஆசிரியர் யாழ்ப்பாணம் அச்சுவேலியில் பிறந்தவர்.



திருமலையைத்தன்இருப்பிடமாக வரித்துக்கொண்டு திருமலை வீ.என். சந்திரகாந்தி என்ற பெயரில் இலக்கியம் படைப்பவர். சிறுகதை, நாவல், கட்டுரை, பத்திஎழுத்து ஆகிய துறைகளில் இயங்கி வருபவர். படைப்பிலக்கியத் துறையில் இவர் ஏற்கனவே ஸ்திரீ இலட்சணம், தொடரும் தலைமுறைகள், நிகழ்காலத்தில் வாழ்தல், இந்திரர்கள் நாடும் அகலிகைகள் ஆகிய, நான்கு சிறுகதைத் தொகுதிகளையும் மீண்டும் வசந்தம்/ என்ற நாவலையும் தந்தவர். இவற்றைவிட, சந்திரகாந்தியின் நூல்வரிசையில்; வாழ்வியல் அநுபவப் பகிர்வு இரண்டு பாகங்கள் அடங்குகின்றன. இந்த நூல் ஆசிரியரின் எட்டாவது நூலாகும். ஆசிரியர்; இரண்டு வருடகாலம் தொடர்ச்சியாகப் பத்திரிகைகளுக்கு எழுதிய 114க்கும் மேற்பட்ட சமூகம் சார் கட்டுரைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 கட்டுரைகள்; இந்நூலில் இடம்பிடித்துள்ளன. இக்கட்டுரைகள் வாழ்வின் அனுபவங்களை அக்குவேறு ஆணிவேறாக அலசுகின்றன. ஆசிரியர் தனது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொள்கின்றார். இவை ஒவ்வொன்றும் இரண்டு விடயங்களை வலியுறுத்துகின்றன. ஒன்று நாம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியது யாது? என்பது. மற்றையது எம்மால் தவிர்க்கப்பட வேண்டியவை எவை எவை என்பது? ஏற்கனவே சிறுகதை இலக்கியத்திலும் நாவல் இலக்கியத்திலும் தனக்கெனத் தனியிடத்தைப் பிடித்திருக்கும் நூலாசிரியரின் எழுத்துக்கள் மனிதப் பண்புகளையும், ஆத்மநேயத்தையும் வாழ்வியலையும் அடிப்படையாகக் கொண்டவை. அது அவர் மனிதர்கள்மீது கொண்ட அன்பினாலும் வாழ்வின்மீதுகொண்ட பற்றினாலும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படுகின்ற நல்லொழுக்கத்தின் பாலும் உருவானது. இந்நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் எமது வாழ்வைப் புடம்போடவல்லன. அந்தவகையில் இந்நூல் படித்துப் பயன்பெறவும் பேணிப் பாதுகாக்கவும் ஏற்றதாகத் திகழ்கிறது. பயன்மிக்க இந்த நூலைத் தந்த ஆசிரியர் பாராட்டுக்குரியவர். இந்த நூலை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்: 572A ஏகாம்பரம் வீதி, திருக்கோணமலை (T.P 026 2224706, 0719392190).

### இலண்டனில் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்

இலண்டனில் உள்ள பிரித்தானிய அருங்காட்சியகம் பல பிரிவுகளாகப் பல கட்டிடங்களில் இயங்கி வருகிறது. அத்தகைய பிரிவுகளில் ஒன்றாக விளங்குவது இயற்கை வரலாற்றுஅருங்காட்சியகம்.



கூர்ப்புக் கொள்கை என்று கூறப்படும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை அறிமுகம் செய்தவர் சாள்ஸ் டார்வின் என்ற சிந்தனையாளர்;. அவரது உருவச் சிலையை இந்த அருங்காட்சியகத்தின் மாடிப்படியின் வாசலில் அமைத்திருக்கிறார்கள்.

இந்த அருங்காட்சியகத்தைச்; சுற்றிப் பார்த்தபோது சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கையின் பல்பரிமாணங்களைக் காணக் கூடியதாக இருந்தது.

டார்வின் தனது கூர்ப்புக்கொள்கையை எழுந்தமானத்தில் கூறிவிடவில்லை. தன் நண்பர் ஒருவரின் உதவியுடன் கப்பலில் ஐந்து வருடங்கள் பயணம் செய்து உலகை வலம்வந்து பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதுவரை அறியப்படாத பல விநோதமான விலங்குகளின் எலும்புகளைச் சேகரித்தார். அவை இடத்துக்கிடம் மாறுபட்டிருப்பதையும் சில ஒற்றுமைகளைக் கொண்டிருப்பதையும் கண்டு வியந்தார். தான் சேகரித்த எலும்புகளுக்குச் சொந்தமானவை முற்றாக அழிந்துபோயிருக்கும் என்று முதலில் யூகித்தார். ஆனால் பின்னர் அந்த விலங்குகளில் இருந்துதான் தற்போதைய சிறிய அளவிலான விலங்குகள் தோன்றியிருக்க வேண்டும் என்று பகுத்தறிந்தார். அதன் பின்னரும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொண்டு தனது முடிவுகளை நூலாகவெளியிட்டார்.





இந்த இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் கடந்த நானூறு வருடங்களாக உலகளாவிய ரீதியில் சேகரிக்கப்பட்ட 700 இலட்சம்பொருட்கள் இருப்பதாக அறியமுடிந்தது.

இந்த அருங்காட்சியகத்தின் நுழைவாயில் நடுவிலே மிகப்பெரிய டைனோஸோர்/ என்ற பிராணியின் எலும்புக்கூட்டைக் காட்சிப் படுத்தியுள்ளார்கள். டைனோஸோர் என்பது பலகோடி வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு விலங்கினம். இந்த விலங்கின் நீளம் 26 மீற்றர். இந்த விலங்குக்கு 70 முள்ளந்தண்டு எலும்புகளும் 292 ஏனைய எலும்புகளும் உள்ளன. இந்த விலங்கு நீண்ட கழுத்தையும் நீண்ட வாலையும் உடையது. அதன் உடம்பு பீப்பா போன்று தோற்றமளிக்கிறது. கால்கள் பாரிய தூண்கள் போன்று அமைந்துள்ளன. கூரிய பற்கள் கொண்ட இந்த விலங்குகள் சிங்கத்தின் வாயின் கடிப் பலத்தைவிட மூன்று மடங்கு கடிப்பலம் உடையதாம். ஆனாலும் இவை தாவர போஷணிகள்.

இந்த டைனோஸோர் விலங்குகளை வைத்து சிறுவர்க்கான ஆங்கிலப் படங்கள் பல சிலகாலத்திற்கு முன்னர் திரையிடப்பட்டமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்த அருங்காட்சியகத்தில் உயிரற்ற பலவிதமான பறவைகள், ஜந்துக்கள், இரத்தினக் கற்கள், வண்ணத்துப் பூச்சிகள் விலங்குகள், மனிதரின் மண்டை ஓடுகள், மிருகங்களின் மண்டை ஓடுகள், தாவரங்கள், உலோகங்கள் எனப் பலவற்றைப் பார்க்கலாம். இவற்றுள் பெரும்பாலானவை பத்துலட்சம் ஆண்டுகளுக்கு முந்தியவை. பல்வேறு நாடுகளிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டவை.

இங்கே ஒரு பறவையின் முட்டை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இதனை யானைப் பறவையின் முட்டை எனக் குறித்திருக்கிறார்கள். இது 88 சென்ரிமீற்றர் நீளமும் நடுப்பகுதியில் 76 சென்ரிமீற்றர் சுற்றளவும் கொண்டது. இந்த முட்டைக்குச் சொந்தமான யானைப் பறவை மூன்றுமீற்றர் உயரமும் 500 கிலோ எடையும் உடையது. 1650 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த இந்தப் பறவையினம் தற்போது உலகில் இல்லை எனவும் அறிய முடிந்தது.


**(முற்றும்)**

(வணக்கம். யாவரும் கேளீர் என்ற இத் தொடர்பத்தி நிறைவுபெறுகிறது. இப் பத்தித்தொடரை வாசித்து அவ்வப்போது தமது கருத்துக்களைக் கூறி உற்சாகமூட்டிய வாசக அன்பர்களுக்கும் இதனைத் தொடராகப் பிரசுரித்து பெருமைப்படுத்திய தினகரன் ஆசிரிய பீடத்திற்கும் எனது மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும். சந்திப்போம் தி.ஞா.)





# படித்ததும் பகர்வதும் 77



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### பிறந்தது புத்தாண்டு 2022

2021ம் ஆண்டு விடைபெற்று 2022ம் புத்தாண்டு பிறந்துள்ளது. புதிய எண்ணங்களோடு, புதிய எதிர்பார்ப்புகளோடு, உலக மக்கள் அனைவரும் புது வருடத்தை வரவேற்கின்றனர்.

கடந்த வருடத்தில் ஏற்பட்ட துன்பங்கள், துயரங்கள், சோகங்கள், பாதிப்புகள், இழப்புகளிலிருந்து மீண்டுவரும் நேரிய எண்ணம் எல்லோர் மனதிலும் உறுதியாக இருக்கிறது. இயற்கையான நிகழ்வுகளின் பாதகங்களுக்கு அப்பால் ஒவ்வொருவரும் தமது தகுதி, வசதி, ஆற்றல், சூழல் என்பவற்றுக் கேற்ப எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளும் வகையில் இப்புதுவருடத்தின் ஆரம்பத்திலேயே சரியாகவும், முறையாகவும் திட்டமிடுதல் சிறந்தது.

செய்யும் தொழிலில் முன்னேற்றம் காண்பதற்கும், தமது வியாபார நடவடிக்கைகளை அபிவிருத்தியடையச் செய்வதற்கும், குடும்பத்தின் பொருளாதார நிலையை உயர்வடையச் செய்யவும் உறுதியான எண்ணம் கொண்டு, சரியாக திட்டமிட்டு செயல்படுதல் வேண்டும். எதிர்மறையான சிந்தனைகளை விட்டு



விட்டு, நேர்மறையான புதிய சிந்தனைகளை விருத்தி செய்து, சரியான இலக்குகளை நிர்ணயித்து, அவற்றை அடைவதற்கான முறையான, பொருத்தமான திட்டமிடலை செயற்படுத்திட வருடத்தின் ஆரம்பத்திலேயே உறுதி கொள்ளல் வேண்டும்.

நேரிய உயரிய இலக்குகளை நோக்கி முன்னேறும்போது ஏற்படக்கூடிய இடையூறுகளையும் தடைகளையும் தகர்த்தெரியும் சீரான, சரியான நெறிமுறைகளையும் வியூகங்களையும் வகுத்துக்கொள்ளல் வேண்டும். எத்தகைய சவால்கள் வந்தாலும் அவற்றை சரியாக சமாளிக்கும் உள உறுதியை ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

நாமும் வளர்ந்து நமது வசதி வாய்புக்களும் வளர்ச்சியடைந்து, மற்றவர்களுக்கு தாராளமாக உதவும் நிலையை எட்டிப்பிடிக்க வேண்டும். சுயநலம் துறந்து, பொதுநலத்தை விருத்தியடையச் செய்து, எல்லோரும் நலம் வாழ, நல்லன செய்யும் நல்லவர்களாக வாழ, பிறந்துள்ள இப்புத்தாண்டின் முதல் வாரத்திலேயே நாம் அனைவரும் உள உறுதி கொள்வோம்.

எல்லோருக்கும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நல்வாழ்வும் தரும் நல்லாண்டாக, எதிர்பார்ப்புகள் வெற்றியடைந்து மகிழ்ச்சி பொங்கும் குதூகல ஆண்டாக இவ்வாண்டு அமைய உளம் நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

## நெஞ்சுக்கு நீதி

பிறந்ததே புத்தாண்டு, புத்துணர்வை புதுப்பொலிவை
நெஞ்சிலேநிறைத்து, பிறர் துயரங்கள் துடைத்திடவே
சிறந்ததை செயலாக்கி நற்சேவைகள் செய்தே நிதம்
சிறப்பாக வாழ்ந்திடவே திடவுறுதி கொண்டிடுவோம்


## சிந்தனை செய் மனமே

### பட்டங்களும் தகுதியும்!

இன்று பட்டங்கள், விருதுகள் பெறுவதற்காக சிலர் குறுக்கு வழிகளை நாடுவதையும், சிலர் பணம் கொடுத்து அவற்றைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதையும் காணும்போது பரிதாபமாக உள்ளது.

இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வீரர், இந்திய அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளர் இராகுல் டிராவிட் பெங்களூர் பல்கலைக் கழகம் தமக்களித்த கௌரவ டாக்டர் பட்டத்தை திருப்பி அளித்து, இத்தகையவர்களுக்கு நல்லதொரு பாடத்தைப் புகட்டுகிறார்.

அதற்கென கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட் கூறியுள்ள விளக்கம் இத்தகையவர்களது கண்களைத் திறக்க வேண்டும் என விரும்புகிறோம். இதோ ராகுல் டிராவிட் பேசுகிறார்:



"என் மனைவி ஒரு மருத்துவர், அவர் அந்த பட்டம் பெற எண்ணற்ற, இரவுகளை தூக்கமில்லாமலும், பல பகல்களை ஓய்வின்றியும் கழித்தார். என் அம்மா ஒரு கலைப் பேராசிரியை. விடா முயற்சியுடன் பட்டப் படிப்புக்காக அவர் நீண்ட ஐம்பது வருடங்கள் காத்திருந்தார்.

நான் கிரிக்கெட் விளையாடுவதற்கு கடினமாக உழைத்தேன், ஆனால் நான் அவ்வளவு படிக்கவில்லை. நான் எப்படி இந்த பட்டத்தை ஏற்றுக்கொள்வேன்?

ஐன்ஸ்டீனுக்கு 1952ல் இஸ்ரேலிய அரசாங்கம் பிரதமர் பதவியை வழங்க முன்வந்தது. ஐன்ஸ்டீன் பணிவாக, 'நான் இயற்பியலில் அனுபவமில்லாத மாணவன். ஒரு மாநிலத்தின் நிர்வாகம் மற்றும் பரிபாலனம் பற்றி எனக்கு என்ன தெரியும்?' என்று அதனை ஏற்க மறுத்தார்.

2006ம் ஆண்டில் உலகப் புகழ்பெற்ற ரஷ்ய கணிதவியலாளரான கிரிகோரி பெரல்மேன், தமது கணிதத் துறை புலமைக்காக, நோபல் பரிசுக்கு நிகரான ஒரு பெரிய தொகையை வழங்கியபோது, அதனை ஏற்க மறுத்து அவர் கூறினார், 'எங்கள் குடும்பத்தில் ஏழ்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைப் பருவம் இருந்தது. அம்மாவின் சம்பாத்தியத்தை சேமிக்க நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு, கணக்கீட்டை நிர்வகிக்க வேண்டியிருந்தது. சிறுவயதிலிருந்தே என்னால் கணிதத்தில் கொஞ்சம் திறமையை வளர்த்துக் கொள்ள முடிந்ததற்கு அதுவே காரணமாக இருக்கலாம். அந்த வறுமைக் கட்டம் என் வாழ்வில் இப்போது இல்லை என்பதால், இவ்வளவு பணத்தை வைத்து நான் என்ன செய்வது?"

இவர்களின் அடக்கத்தைப் பார்த்து நாம் மிக மரியாதையாக தலை குனிய வேண்டியிருக்கிறது. தாழ்மையுடன் இருப்பதன் மூலம் சமூகத்தின் பார்வையில் ஒருவர் கண்ணியம் குறைந்தவராக இருப்பார் என்பது அர்த்தமல்ல, மாறாக அது அவர்களின் வாழ்க்கையை மிகப்பெரியதாக சித்தரிக்கிறது, அவர்களது மதிப்பினை அதிகரிக்கிறது என்பதை இவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறார்கள். 'மனிதாபிமானத்துக்கு வானமே எல்லை, அதே வேளை அவசியமாயின் நீ அடிமட்டத்துக்கு இறங்கி வருவதற்கும் தடையே இல்லை' என்பது பழமொழி.

இராகுல் டிராவிட்டின் இந்த அருமையான வார்த்தைகள் எம் அனைவரதும் கண்களையும் திறக்குமாக!

## நலமேவாழ்வோம்

### மகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் ஹார்மோன்கள்!

ஒரு மனிதனின் மகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் நான்கு ஹார்மோன்கள் உள்ளன அவை 1. எண்டோர்பின்கள் (Endorphins), 2. டோபமைன் (Dopamine), 3. செரோடோனின் (Serotonin), 4. ஆக்ஸிடாசின் (Oxytocin). நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இவை அவசியம். இவற்றை நாம் புரிந்துகொள்வது முக்கியம்.

முதல் ஹார்மோன் 'எண்டோர்பின்'. உடற்பயிற்சி செய்யும் போது, உடல் எண்டோர்பின்களை வெளியிடுகிறது. இந்த ஹார்மோன் உடற்பயிற்சியின் போது ஏற்படும் வலியை உடல் சமாளிக்க உதவுகிறது. இந்த எண்டோர்பின்கள் நம்மை மகிழ்விக்கும் என்பதால் நாம் உடற்பயிற்சி செய்யும்போது மகிழ்கிறோம்.

சிரிப்பு என்பது எண்டோர்பின்களை உருவாக்கும் மற்றொரு சிறந்த வழியாகும். எண்டோர்பின்களின் தினசரி அளவைப் பெற, ஒவ்வொரு நாளும் 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும், படிக்க வேண்டும் அல்லது வேடிக்கையான விடயங்களைப் பார்க்க வேண்டும்.

இரண்டாவதுஹார்மோன்'டோபமைன்'.அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ நாம் செய்யும் பணிக்காக நாம் பாராட்டப்படும்போது, நாம் சாதித்ததாகவும் நல்லதாகவும் உணர்கிறோம். அது டோபமைனின் வெளிப்பாடாகும். பெரும்பாலானோர் தமது பணிகளுக்காக பாராட்டப்படாமல் இருப்பதால்தான் வாழ்வில் 'சந்தோஷம் இல்லை' என்று புலம்புகின்றனர்.

நாம் பிறருக்கு நன்மை செய்யும் வகையில் செயல்படும்போது மூன்றாவது ஹார்மோன் செரோடோனின் வெளியாகிறது. நாம் மற்றவர்களுக்கு அல்லது இயற்கைக்கு அல்லது சமுதாயத்துக்கு நன்மைகளை செய்யும்போது, செரோடோன் வெளியாகி மகிழ்வை ஏற்படுத்துகிறது. இணையத்தில் நல்ல தகவல்களை பகிர்தல், முகநூலில் நல்ல பதிவுகளை செய்தல், நல்லவற்றுக்கு உற்சாகமூட்டுதல், நல் வாழ்த்துக்களை தெரிவித்தல், பிரார்த்தனை புரிதல் போன்றவற்றால் செரோடோனின் உருவாக்கம் இடம் பெறுகிறது.

ஐந்தாவது ஹார்மோன் ஆக்ஸிடாசின். நாம் மற்ற மனிதர்களுடன் நெருக்கமாக செயல்படும் போது வெளியிடப்படுகிறது. நண்பர்களை அல்லது குடும்பத்தினரை கட்டிப்பிடிக்கும்போது, கைகுலுக்கும்போது, தோள்களில் ஆதரவாக கைகளை போடும்போது★ பல்வேறு அளவுகளில் ஆக்ஸிடாசின் வெளியாகிறது.

மனிதன் மகிழ்ச்சியாக வாழ உதவும் இவ் ஹார்மோன்களை பெற்றுக்கொள்வது எளிதானது. எண்டோர்பின்களைப் பெற தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். நாம் பாராட்டுக்களை வழங்கி, டோபமைன் பெறச் செய்வோம். செரோடோனின் பெற மற்றவர்களிடம் நல்லவராக இருபோம். அன்போடு, ஆதரவோடு கட்டிப்பிடிப்பதான் மூலம் ஆக்ஸிடாஸின் பெறுவோம்.

இந்த நடைமுறைகளை பின்பற்றி, இந்த நல்ல ஹார்மோன்களை சரியாகச் சுரக்கச் செய்து மகிழ்ச்சியாக வாழ்வோம்.

## தகவல் களஞ்சியம்

குழந்தைகளுக்கு வீட்டுப் பாடங்கள் வழங்கத் தடை

சீனாவில் குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரையிலானோருக்கு மன ஆரோக்கியத்தை பாதிக்கும் வகையிலான செயல்பாடுகளை அந்நாட்டு அரசு தடை செய்து வருகிறது.

இதனடிப்படையில், பாடசாலை குழந்தைகளின் மன அழுத்தத்தைக் குறைக்கவும், மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் அவர்களுக்கு வீட்டுப்பாடங்கள் வழங்குவது, விசேட வகுப்புகள் நடத்துவது உள்ளிட்ட நடைமுறையை தடை செய்வதற்கான சட்டவரைவை சீனா தயாரித்துள்ளது.

மேலும், குழந்தைகள் இணையத்தில் அதிக நேரம் செலவழிப்பதைத் தடுக்கவும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் அதிக நேரம் செலவழிப்பதிலும், அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதிலும் கவனம் செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சட்டவரைவு தயாரிப்புப் பணி முழுமையடைய உள்ள நிலையில், 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இது நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பேசும் படம்



**காலுக்கு செருப்பில்லையே என்றழுதேன்
காலே இல்லாதவனைக் காணும்வரை!**

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 02ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 ஜனவரி 2 ஞாயிற்றுக்கிழமை



பிரபல அறிவிப்பாளரும்
எழுத்தாளருமான
நாகபூஷணி கருப்பையா


# கடற்கரையை காணவில்லை

கிணற்றை காணவில்லை கதையை கேட்டிருக்கிறோம். ஜமைக்காவில் கடற்கரையையே காணவில்லை. சுற்றுலா பயணிகளை கவர்ந்த ஜமைக்காவின் வடக்குத் துருவத்தில் இருக்கும் ட்ரலோனி கடற்கரையில் 2008 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் ஒரு நாள் போயப் பார்த்தால் 0.5 ஹெக்டெர் கடற்கரை காணாமல்போயிருந்தது. அங்கிருக்கும் இயற்கையான வெள்ளை மணல்களை காணவில்லை. திருடர்கள் ஒட்டுமொத்தமாக அள்ளிச் சென்றுவிட்டார்கள். கிட்டத்தட்ட 500 டிரக் வண்டிகள் அளவு மணல் மாயமாகியிருந்தது. அரசாங்கம் கரிசனை காட்டி தீவிர விசாரணை கூட செய்தது. ஆனால் இன்றுவரை கடற்கரை காணாமல்போனதற்கு எந்த துப்பும் கிடைக்கவில்லை.



பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

## ஒரு போட்டியில் 149 ஓன் கோல்கள்



கால்பந்து போட்டி ஒன்றில் மடகஸ்கர் அணி ஒன்று 149 ஓன் கோல்களை போட்டு கின்னஸ் சாதனை படைத்திருக்கிறது. ஒன்று, இரண்டு ஓன் கோல் சென்றால் தவறுதலாக என்று கூறலாம் ஆனால் நூறுக்கும் அதிக கோல்களை தனது வலைக்குள்ளேயே போட்டுக் கொள்வது என்றால் அது தற்செயலல்ல.

ஏ.எஸ். அடெமா மற்றும் சோ இமிர்னே என்ற அணிகளுக்கு இடையே 2002 ஒக்டோபர் 31 ஆம் திகதி நடைபெற்ற அந்தப் போட்டியில் இமிர்னே அணி வீரர்கள் அசாதாரணமாக ஆட ஆரம்பித்தார்கள். தனக்குக் கிடைத்த பந்துகளை அந்த வீரர்கள் தமது வலைக்குள்ளேயே போட எதிரணிக்கு போட்டியிட வேண்டிய தேவை இருக்கவில்லை. எனவே அவர்கள் நடப்பதை கைகட்டி பார்ப்பதைத் தவிர வேறு வேலை இல்லை.

இப்படியாக போட்டி நேரம் முடியும்போதும் இமிர்னே அணி மொத்தம் 149 ஓன் கோல்கள் போட ஏ.எஸ். அடெமா 149-0 என்று கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் அடெமா அணி மிகப் பெரிய இடைவெளியில் வெற்றி பெற்ற அணியாக 117 ஆண்டு உலக சாதனையை முறியடித்தது.

நடந்தது என்னவென்றால் தேசிய சம்பியன்சிப் தொடரில் முந்தைய போட்டியில் சோ இமிர்னே அணிக்கு எதிராக நடுவர் கடைசி நேரத்தில் வழங்கிய பெனால்டியால் அந்த அணி கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு தவறிவிட்டது. இதற்கு எதிர்ப்பை வெளியிட்ட அந்த அணி இப்படி ஓன் கோலாக போட்டு வலையை நிரப்பியது. கடைசியில் அந்த அணியின் பயிற்சியாளர் மற்றும் பல வீரர்களுக்கு நீண்ட கால போட்டித் தடைக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

## உலகின் நீண்ட திரைப்படம்



இப்போதெல்லாம் இரண்டரை மணி நேர திரைப்படத்தை பார்க்கவே அழுப்புத் தட்டுகிறது. ஆனால் 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட “மொடர்ன் டைம்ஸ் போரெவர்“ என்ற திரைப்படம் 240 மணி நேரம் நீண்டது. பார்த்து முடிப்பதற்கு பத்து நாட்கள் தேவை. நையாண்டிக்கு பெயர்போன டென்மார்க் கலைக் குழு ஒன்றினால் இந்தத் திரைப்படம் எடுக்கப்பட்டது. எடுத்தது மட்டுமட்ட கலை நிகழ்ச்சி ஒன்றில் அந்தத் திரைப்படத்தை தைரியமாக போட்டுக் காட்டியும் இருக்கிறார்கள். ஆனால் பத்து நாட்கள் தொடர்ச்சியாக எத்தனை பேர் அமர்ந்து பார்த்தார்கள் என்பது தெரியவில்லை.

## இன்றும் இருக்கும் பண்டைய கப்பல்

வாசா என்ற சுவீடன் நாட்டு கப்பல் 1626 ஆம் ஆண்டு தொடக்கம் 1628 ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகள் கட்டப்பட்டது. அந்தக் காலத்தில் அது ஒரு பிரமாண்ட கப்பல். ஆனால் இந்தக் கப்பலுக்கும் டைட்டானிக் கதை தான் நடந்தது. தனது முதல் பயணத்திலேயே மூழ்கிவிட்டது. பல நூற்றாண்டுகள் கடந்து 1950களில் பரபரப்பான ஸ்டொக்ஹோம் துறைமுகத்திற்கு அருகே இந்த கப்பல் மூழ்கிய இடம் கண்டுபிடிக்கப்பட்டது.

1961 இல் இந்த கப்பல் முழுமையாக வெளியே கொண்டுவரப்பட்டது. கப்பலுக்கு பெரிய சேதம் ஏற்பட்டிருக்கவில்லை. 1988இல் இந்த கப்பல் ஸ்டொக்ஹோமில் இருக்கும் வாசா அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டது. அதாவது 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முழுமையான கப்பல் ஒன்றாக இன்றுவரை இருக்கும் கப்பல் என்று இதனை குறிப்பிடலாம்.



## இதுவெல்லாம் திரைப்படமா?



“டெய்டர் மீட்ஸ் ஏஸ்“ என்று ஒரு திரைப்படம் 1964 ஆம் ஆண்டும் எடுக்கப்பட்டது. திரைப்படத்தில் கதை, திரைக்கதை, வசனம் இத்யாதி“. இத்யாதி“. எதுவும் இல்லை. 70 நிமிடங்கள் ஓடும் இந்தத் திரைப்படம் முழுவதும் டெய்லர் மீட் என்பவர் நிர்வாணமாக இருக்கும் அவரது பின் பக்கம் மாத்திரம் தான் படமாக்கப்பட்டிருக்கிறது. திரைப்படம் திரையரங்குகளில் ஓடியதா என்பதற்கு வரலாறு இல்லை. ஆனால் இதனையெல்லாம் ஒரு திரைப்படமாக அங்கீகரித்தவர்களின் கலை உணர்வை என்னவென்று செல்ல. இதுவெல்லாம் ஒரு திரைப்படமா? என்று காரித் துப்பியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று தெரியவில்லை.



# அரங்கேற்றம்










நாட்டிய கலா மந்திர் நடனக் கல்லூரி மாணவிகள் செல்வி சுவஸ்திகா சுவீந்திரன், செல்வி துர்க்கா அசோகன் ஆகியோரின் அரங்கேற்றம் அதிபர் திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நெறியாள்கையில் கடந்த 18 ஆம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சட்டமா அதிபர் சஞ்ஜே இராஜரட்னம் (ஜனாதிபதி சட்டத்தரணி) கலந்து கொண்டார். மாணவிகளின் நடனத்தையும், ஆசிரியர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன், மற்றும் பிரதம அதிதி சஞ்ஜே இராஜரட்னம் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.












கலைமாமணி பொன் பத்மநாதனின் பூக்கள் பூக்காத பூந்தோட்டம் என்ற சிறுகதை நூலின் வெளியீட்டு விழா முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் தேசபந்து லயன் ஆர், அசோக்குமார் முன்னிலையில் கொழும்பு கொட்டாஞ்சேனை வைஷ்ணவி விகார் மண்டபத்தில் நடைபெற்றது. தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில் அழகையா சசாங்கன் சர்மா, கலாபூஷணம் கே செல்வராஜ், கலைஞர் ராதாமேதா, கலாபூஷணம் கலைச்செல்வன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே. டி. குருசாமி, கலைஞர் விஜேயராஜா கொழும்பு மா நகர சபை உறுப்பினர்களான பாலசுரேஷ், சுதர்ஷன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# முயற்சியும் பயிற்சியும் இருந்தால் எட்டாக் கனியும் கிட்டும்



## விளையாட்டுத் துறையில் சாதிக்கத் துடிக்கும் இளம் கிரிகெட் வீரர் அஜய்சாந்த்

ஹட்டனைப் பிறப்பிடமாகக் கொண்ட விஜயகுமார் அஜய்சாந்த், கிரிக்கெட்டில் சாதிக்கத் துடிக்கும் துடிப்பு மிக்க இளைஞன். கிரிக்கெட்டை தன் வாழ்க்கைக்கான பாதையாகத் தேர்ந்தடுத்திருக்கும் இவர் தற்போது வசிப்பது வத்தளையில். "அப்பா, அம்மா, அண்ணா , நான் என நால்வரைக் கொண்ட அழகிய தனிக்குடும்பம். நான் தான் வீட்டின் கடைக்குட்டி. ஆரம்பம் முதல் சாதாரண தரம் வரை ம.மா/ஹட் /ஹைலன்ஸ் கல்லூரியிலும் உயர்தரத்தை மேல் / கொ/ விவேகானந்தா கல்லூரியிலும் பூர்த்தி செய்தேன். தற்போது Revocare Solution எனும் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கின்றேன்" என்று தன்னை சுருக்கமாக அறிமுகம் செய்தார், விஜயகுமார் அஜய்சாந்த்.

தனக்கு ஏற்பட்ட கிரிக் கெட் ஆர்வம் பற்றிக் கூறுகையில்

வீட்டில் எல்லோருக்குமே கிரிக் கெட் பிடிக்கும். நாங்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்தே கிரிகெட் பார்ப்போம். அப்பாவோடும் நண்பர்களோடும் சேர்ந்து விளையாடுவது என இருக்கையில் படிப்பை விட கிரிகெட் மீது தீவிர காதல் ஏற்பட்டு தேசிய ரீதியில் நானும் விளையாட வேண்டும் என்ற ஆசை என்னுள் ஏற்பட்டு விட்டது. என விபரிக்கும் விஜயகுமார் அஜய்சாந்த் . Blacks Cricket Club எனும் கிரிக் கெட் கழகத்தைத் ஸ்தாபித்துள்ளார். தனது கிரிக்கெட் கழகம் பற்றிச் சொல்கையில்... Blacks Cricket Club இன் முதல் மூன்று எழுத்துக்கள் தான் BCC. இதனை நானும் எனது நண்பர்களும் சேர்ந்து 2018.05.30 அன்று ஆரம்பித்தோம். பெரும்பாலும் ஆண்களுக்கு பிடித்த நிறம் கறுப்பு தான். அதையே எங்கள் அணிக்கு பெயராகவும் வைத்துக் கொண்டோம். BCC யின் ஆரம்பத்தில் பயிற்சிகளும் நட்பு ரீதியான (Friendship match) போட்டிகளுமே அதிகமாக நடைபெற்றன. தற்போது டிவிஷன் ரீதியில் பதிவு செய்யப்பட்ட கிரிகெட் சங்கமாக அங்கீகாரம் பெற்றுள்ளது. தொடர்ந்தும் BCC. யை அடுத்தக் கட்டத்திற்கு கொண்டு செல்லும் வேலைகளை செய்து வருகின்றோம். திறமையான வீரர்களுக்கு சர்வதேச ரீதியில் இலங்கை அணிக்காக விளையாடும் சந்தர்ப்பத்தை உருவாக்கி கொடுப்பதும் இளம் கிரிகெட் வீரர்களை உருவாக்குவதுமே BCC. யின் நோக்கமாகும் என்கிறார்.

- **கிரிக் கெட்டில் உங்கள் முன்மாதிரி யார்?**

தோனி தான். அவருடைய அணி தலைமைத்துவம் எனக்கு மிகவும் பிடிக்கும். அவருடைய அணித் தலைமைத்துவத்தை அடிப்படையாக வைத்தே பாடசாலை காலத்திலும் தற்போதும் BCC. அணியின் தலைவராகவும் இருக்கின்றேன். தோனியின் Match Finishing ரொம்பவே பிடிக்கும். இப்போது நிறைய கிரிகெட் வீரர்கள் இருந்தாலும் தோனி ஓய்வு பெற்றிருந்தாலும் கூட எப்போதுமே தோனிதான் என்னுடைய முன்மாதிரி.

- **உங்கள் ஜேர்சியான அஜய் 7 {Ajay 7} என்பதற்கு பிறகு ஏதும் இரகசியங்கள் உண்டா?**

இரகசியம் என்று சொல்ல முடியாது. என்னுடைய கிரிகெட் ஜேர்சி மட்டுமல்ல பாடசாலை விளையாட்டு ஜேர்சியோ அல்லது எனக்கு எந்த ஜேர்சி என்றாலும் {Ajay 7} என்று தான் அடிப்பேன். ஏன் என்றால் என்னுடைய கிரிகெட் முன்மாதிரி தோனியின் ஜேர்சி இலக்கம் 7. ஆகவே எனக்கு அது மிகவும் பிடிக்கும். 7 என்பது எனக்கு அதிர்ஷ்டமான இலக்கமும் கூட என்று தான் சொல்ல வேண்டும்.

- **தற்போது எட்டியுள்ள நிலையை அடைய நீங்கள் எதிர்கொண்ட சிரமங்கள் பற்றிய கருத்து?**

பெரிய சிரமங்கள் ஏதும் இருக்கவில்லை. ஏனென்றால் நான் தரம் 06 (2009) படிக்கும் போதிலிருந்தே ஹட்டனில் வன்பந்து பயிற்சியை ஆரம்பித்து விட்டேன். பாடசாலை ரீதியிலான போட்டிகளில் எல்லாம் விளையாடுவது வழக்கம். பெற்றோரின் ஆதரவு எனக்கு முழுமையாகக் கிடைத்தது. எப்போதும் எனக்கு பெற்றோரின் ஆதரவு முழுமையாகவே கிடைக்கின்றது.







கொழும்பிற்கு வந்த ஆரம்பத்தில் எங்கே பயிற்சி பெறுவது என்பது பிரச்சினையாக இருந்தது. அதன் பிறகு இரண்டு வருட இடைவெளியின் பின்னர் பயிற்சியை மீண்டும் ஆரம்பித்தேன்.

- **கிரிகெட் வீரராக வரவேண்டும் என உங்களை ஊக்குவித்தவர்கள் யார்?**

தோனி என்று தான் சொல்லுவேன். அவரை பார்த்தே நிறையக் கற்றுக் கொண்டேன். அடுத்து என் அப்பாவும் அண்ணாவும் பயிற்றுவிப்பாளரும் எனக்கு கிரிகெட் மீதுள்ள ஆர்வத்தைப் புரிந்துக் கொண்டு பயிற்சிகளை வழங்கினார்கள். நீ கிரிகெட் வீரராக வரவேண்டும் என்ற அவர்களின் பேச்சு என்னை மேலும் மேலும் ஊக்கப்படுத்தியதோடு ஆர்வத்தையும் தூண்டியது. ஆரம்பத்தில் நான் துடுப்பாட்டம் மட்டுமே செய்வேன். அதன் பிறகு பயிற்சியினால் பந்துவீச்சு திறமையையும் களதடுப்பு திறமையையும் வளர்த்துக் கொண்டேன். தற்போது என்னுடைய அணியில் பிரதான பந்து வீச்சாளராகவும் ஆரம்ப துடுப்பாட்ட வீரராகவும் விளையாடுகின்றேன்.

- **உங்களுடைய எதிர்கால கனவுகள்.....**

100 வன்பந்து மட்டை வாங்க வேண்டும் என்பது எனது மிகப் பெரிய ஆசை. தற்போது 04 மட்டைகள் வைத்துள்ளேன். அதுமட்டுமல்ல சர்வதேச ரீதியில் இலங்கை அணிக்காக விளையாடுவதும் என்னுடைய எதிர்கால கனவுதான். என்னுடைய வாழ்நாள் முழுவதும் நான் கிரிகெட்டோடு தான் பயணிப்பேன் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.






யதுஷா ரவித்தியாகராஜா
இதழியல் கல்லூரி



என்ன டாக்டர்! என்னை அறுவை சிகிச்சை
பண்ணுவீங்கன்னு பார்த்தா கடி ஜோக்கா
சொல்லிட்டிருக்கீங்க.
இதுதான் அறுவை சிகிச்சை



. என்ன சார் இது. டிரைவிங் கத்துக்
குடுக்கறதா காசு வாங்கிட்டு, காரைத்
தள்ளிக்கிட்டு வரச்சொல்றீங்க?
புரியாம பேசாதேய்யா 'திடீர்னு பெட்ரோல்
தீர்ந்துட்டா என்ன செய்யனும்னு தெரிய
வேண்டாமா?



பேன் ஏன் மேலேயே சுத்துது?
ஏன்? உட்காருவதற்கு அதற்கு
கால் இல்லை அதனால் தான்.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



அந்த ஓட்டல்ல இன்னிக்கு இட்லி சூப்பரா
இருக்கும்னு எப்படி அடிச்சுச் சொல்ற?
பின்ன... நேத்து நான்தானே அங்கே
மாவாட்டினேன்.



ரொம்ப பிரபலமான ஊர்னு சொல்றியே..
யாராவது பெரிய மனுஷங்க உங்க ஊரில்
பிறந்திருக்காங்களா?
"எப்படிங்க பெரிய மனுஷனா
பிறக்க முடியும்? குழந்தைகள்தான்
பிறந்திருக்குங்க...!



நர்ஸ் : நாலாம் நம்பர் பெட் இன்னிக்கு
சாயங்காலம் வரைக்கும் தாங்காது டாக்டர்.
டாக்டர் : அவ்வளவு சீரியஸாவா இருக்காரு?
நர்ஸ் : இல்லை டாக்டர். பெட்டோட கால்
ரொம்ப உடைஞ்சு ஓரேடியா ஆடுது. அதான்
தாங்காதுன்னேன்.



**மனைவி:** பணம் வந்தா கூடவே
கஷ்டமும் வந்துடும்.
**கணவன் :** நான் வரதட்சணை வாங்கி
உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதைத்
தானே சொல்றே?

சாப்பிடறதுக்கு முன்னாடியே
நிறைய ஏப்பம் வருது. என்ன
பண்றது டாக்டர்?
ஏப்பம் வர்றதுக்கு முன்னாடியே
சாப்பிட்டுடுங்க.

குத்தியவுடன் ஏன் ரத்தம்
வருது?
யாரு குத்தினதுன்னு
பார்க்க வருது.



பத்து மணிக்குள்ளே ஆபிஸ்
போகலேன்னா வாசல் கதவை
அடைச்சுடுவார் எங்க மேனேஜர்.
அப்போ லேட்டா போறவங்க கதி!
வராண்டாவிலே தூங்க
வேண்டியதுதான்.

# எமக்கான வாய்ப்புக்களை நாமே உருவாக்க வேண்டும்

# பூர்விகா

**எனது பெயர் பூர்விகா இராசசிங்கம். எனது தந்தையின் பெயர் இராசசிங்கம். தாய் ரஞ்சனா./ நான் 1997.04.28 முள்ளியவளையில் பிறந்தேன் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் உயர் கல்வியை முடித்துக் கொண்டேன். பாடசாலைக் காலங்களில் விவாதம், பேச்சு, நாடகம் ஆகிய போட்டிகளில் கலந்துகொண்டு என்னுடைய திறமையை வளர்த்துக் கொண்டேன்.**

அகில இலங்கை ரீதியாக பல போட்டிகளிலும் நான் வெற்றியீட்டி உள்ளேன். பாடசாலைக் காலங்களில் எனது தமிழாசிரியர் சுலக்சனா எனக்கு ஆரம்ப கட்டத்திலேயே நல்லதொரு முன்னோடியாக இருந்து பெண்கள் துணிந்து செயல்பட வேண்டும் என்ற ஒரு எண்ணத்தை எனக்குள் விதைத்தார். பல ஆசிரியர்கள் இன்றுவரை எனது கலைத்துறை பயணத்திற்கு ஊக்கம் தந்த வண்ணம் உள்ளனர்.

2016 வணிக பிரிவில் எனது உயர் கல்வியை முடித்துக் கொண்ட நான் பின்பு மூன்று வருடங்கள் தனியார் நிதி நிறுவனத்தில் வேலை பார்த்தேன். சிறுவயதில் எனது தந்தை இறந்தார். நான் 13 வயதில் இருந்து தாயின் அரவணைப்பும் இன்றி உறவினர்களின் உதவியுடன் தனித்து விடப்பட்டேன். அந்த நாட்கள், எனக்கு வாழ்க்கையில் வருகின்ற கஷ்ட துன்பங்களை தனித்து நின்று எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்று கற்றுத் தந்தன.

2018 செப்டம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைக்காட்சி ஒன்றின் தொடரில் நடிப்பதற்காக நான் தேர்வானேன். அதன் பின்னர் பாடல்கள் வர்த்தக விளம்பரங்கள், புகைப்படங்கள் என எம்மவர் மத்தியில் பிரபலமானேன். எவ்வளவு பிரபலம் ஆனேனோ அவ்வளவு விமர்சனங்களையும் அவதூறான பேச்சுக்களயும் சந்தித்த வண்ணமே இருந்தேன். ஆரம்பத்தில் சற்று கசக்கத்தான் செய்தன. ஆனால் வாழ்க்கை எனக்கு கற்றுத் தந்த பாடம் ஏதாவது ஒன்றை சாதிக்கும் வரையில் நாம் படுகின்ற கஷ்டங்களையும் துன்பங்களையும் சிரித்தவாறே எதிர்கொள்ள வேண்டும் என்பதாகும். அதன் வழி நான் நடந்தேன்.

சினிமா என்பது நம்மவர்கள் அதிகம் ரசித்து பார்க்கின்ற ஒரு விடயம் மட்டுமல்ல அதிகம் விமர்சிக்கின்ற ஒரு விடயமும் தான். எந்த ஒரு துறையை பொறுத்த வரையிலும் அதில் தவறுகளும் துன்புறுத்தல்களும் பொதுவானவையே அவற்றிலிருந்து விட்டுச் செல்வதும் அவற்றை தடுத்து உடைத்து எறிவதும் எமது திறமை.

ஆனாலும் சினிமா ஊடகம் என்று வரும்பொழுது அவ்வாறான விடயங்கள் விரைவாக விமர்சிப்பதற்குக் காரணம். நாம் பொது வெளியிலேயே அதிகமாக பயணிப்பவர்கள். அனைவருக்கும் அறிமுகம் ஆனவர்கள் என்பதனால்தான்.

ஆரம்பத்தில் ஊர் உறவுகள் என்னை ஒரு நடிகையாக ஏற்றுக் கொள்ளவில்லை. தற்போது அதாவது 2020 என்னுடைய பிறப்பிடமான முல்லைத்தீவில் எம்மவர் மத்தியில் ஒரு குறும்படத்திற்காக எனக்கு கிடைத்த அங்கீகாரம் நாம் முயற்சி செய்தால் எதையும் அடைந்துவிட முடியும் என்ற ஒரு தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் எனக்கு அளித்தது.

என்றும் பெண்கள் அடங்கித்தான் இருக்கவேண்டும் எனும் எண்ணத்தை ஒவ்வொரு பெண்ணும் உடைத்தெறியவேண்டும்/

ஆரம்பத்தில் எதுவாக இருந்தாலும் விமர்சனங்கள் வரத்தான் செய்யும். ஆனால் எம்முடைய எண்ணங்கள் தெளிவாய் இருந்தால் நாம் அதற்காக நேர்மையாக முயற்சி செய்தால் நம்மால் வெற்றிபெற முடியும்.

சினிமா துறையை பொருத்த வரையில் தனி ஒரு நபராக எதையுமே சாதிக்க முடியாது. ஒரு படைப்பை பொறுத்தவரையில் அதில் பல்வேறுபட்ட துறையை சேர்ந்தவர்கள் வேலை பார்த்தே ஆகவேண்டும். அந்தவகையில் முன்னாடி இருப்பவர்கள்தான் புதிதாக வருபவர்களை ஆர்வமுள்ளவர்களை இணைத்துக் கொண்டு அவர்களை சரியாக தெளிவு படுத்திக் கொண்டு அவர்களை வளர்த்து விடவேண்டும்.

ஒரு நடிகையாக நான் எனது துறையை மிகவும் நேசிக்கின்றேன். இரண்டு வருடங்களாக இத்துறையில் பயணிக்கிறேன். சினிமாவில் பல நல்லவை கெட்டவை களை இதுவரையில் நான் கண்டுள்ளேன். இந்தத் துறையைப் பொருத்தவரையில் பெண்களான நாங்கள் எங்களுடைய பாதுகாப்பை நாமாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அது சினிமாவாக இருந்தாலும் சரி வேறு எந்த துறையாக இருந்தாலும் சரி. எமக்கான ஒரு பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சினிமா எனும் ஆசையை காட்டி வருகின்ற இளையோருக்கு தவறான பாதையை காட்டுகின்ற போலிகளும் இருக்கின்றன. எனவே சரியானவை எவை நம்பிக்கைக்கு உரியவை எவை என்று நாம் அடையாளம் கண்டபின் நமக்கான பாதையை வகுத்துக் கொள்ள வேண்டும்.

புதிதாக கலைஞர்கள் தேவைப்படுகின்ற போதும் ஆர்வம் இருந்தும் திறமை இருந்தும் சமூகம் குடும்பம் தன் சுற்றம் என்ன சொல்லும்? குறை சொல்லி விடுமோ என்ற எண்ணம் அவர்களை இன்னும் அவர்களுடைய திறமைகளை மழுங்கடித்து கொண்டே செல்லும். எனவே வரும் கலைஞர்களை ஊக்குவித்து வரவேற்பது சமூகமான எமது கடமையாகும். சரியாக வழிகாட்டி நாமே அவர்களை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணக்கருவை நாம் அமைத்துக் கொடுக்க வேண்டும்

ஒரு வினாடியில், முப்பரிமாணம், வாடி வாடி, வசியக்காரி, நினைவில் நீ, காதல் தந்த தேவதையே, உதிராத பூவே, ராசாத்தி என்று பாடல்கள் கண்ணம்மா, உயிர், கானல், கோதை குறும்படங்களும் மற்றும் இயக்குனர் தயாரிப்பாளர் எழுத்தாளர் என பலராலும் அறியப்பட்ட திருமதி ஈழவாணியின் திரைப்படமான லூசி இடப்பக்க இரை என்னும் முழு நீள திரைப்படத்திலும் தேசிய விருதினை வென்ற இயக்குனரான சுதர்சன் ரட்ணத்தின் இயக்கத்தில் அம்புலு என்னும் ஒரு முழுநீள திரைப்படத்திலும் கதாநாயகியாக நடித்துள்ளேன் இன்னும் ஒரு சில மாதங்களில் அவை இரண்டும் வெளிவர இருக்கின்றன.

எமக்கான வாய்ப்புக்களை நாமே தான் உருவாக்க வேண்டும். எனவே சமகால இடர் சூழலை எதிர்கொள்ள நான் எனக்கான youtube தளத்தினை ( poorvikavlogs ) உருவாக்கி அதில் சிறப்பாக செயல்பட்டும் வருகின்றேன். இதன் வெற்றிக்குக் காரணம் எமது மக்களே அவர்களுடைய அன்பிற்கு என் மனமார்ந்த நன்றிகள்.










கே. ஈஸ்வரலிங்கம்

# என் வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்தது ஒரு போட்டி

## செந்தில்குமரன் சச்சின்



**தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள், குறுந்திரைப்படங்கள் என பல்வேறு கலைவடிவங்கள் மூலம் தனது நடிப்புத் திறனை வெளிக் கொணர்ந்து கலை உலகில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்துக் கொண்டு தொடர்ந்து நடித்து வருபவர் செந்தில்குமரன் சச்சின். இவரை அண்மையில் அணுகி உரையாடியதில் அறிந்து கொண்ட விடயங்களை பகிர்ந்து கொள்கின்றோம்.**

செந்தில்குமரன் சச்சின் உங்களைப் பற்றி கூறுங்களேன்.

அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்.

நான் செந்தில்குமரன் சச்சின்.

S. சச்சின் என்றால் தான் என்னைத் தெரியும். என்னுடைய சொந்த இடம் நாவலப்பிட்டி. கண்டி மாவட்டம். பிறந்து வளர்ந்தது எல்லாமே நாவலப்பிட்டி தான். நான் கதிரேசன் தேசிய கல்லூரியில் கல்வி கற்றேன். முடித்தேன். எனது குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பம்.

எனது நண்பர்கள் என்னுடன் சேர்ந்து என் பாதையில் செல்வதற்கு உதவியாக உள்ளனர்.

நான் பாடசாலை நாட்களில் மேடை நாடகம் செய்து பாராட்டு வாங்கிய அனுபவமும் உண்டு, சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் A சித்தி எடுத்தேன். Bcas பிரைவேட் இன்ஸ்டிட்யூட்டில் ஆங்கில கல்வி நெறி ஒன்றை கற்ற பொழுது அங்கே ஒவ்வொரு வாரமும் நடிப்புக்கான போட்டி நடைபெறும். அதில் ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெற்றேன். என்னுள் மறைந்துள்ள நடிப்பை வெளிக்காட்டும் வகையில் இது அமைந்தது

அங்கே உள்ள ஆசிரியர், என்னோடு படித்த சக நண்பர்கள் சினிமாவில் நடிக்கச் சொல்லி என்னை ஊக்குவித்தனர்.

ஆனால் ஒவ்வொரு நடுத்தர வர்க்கத்தில் பிறந்த அனைவருக்கும் இது ஒரு பேராசை என்பதால் அந்த கனவை ஒரு பக்கம் வைத்து விட்டு எல்லோரும் செல்லும் பாதையில் நானும் சென்றேன்..

அப்போது சிறு குறும்படங்களில் நடித்துக்கொண்டு இருந்தேன்.

2017ல் நடிப்புக்கான ஒரு போட்டி சிரச தொலைக்காட்சியில் Film star என்ற பெயரில் ஒளிபரப்பானது. இவ்விளம்பரத்தைக் கண்டு விண்ணப்பித்தேன். Superstar பாட்டு போட்டி போல இது நடிப்புக்கான போட்டி film star என்ற பெயரில் நடத்தப்பட்டது. ஒவ்வொரு சுற்றிலும் தெரிவாகி ஆண்களுக்கான இறுதி 12 பேர் வரை தெரிவானேன். இப்போட்டியில் நான் மட்டும் ஒரு தமிழ் பேசும் போட்டியாளராக இருந்தேன்..

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது. அது என் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

அடுத்து அந்தப் போட்டி முடிந்தவுடன் தவாஜியின் இயக்கத்தில் ஆட்டம் ஆரம்பம் எனும் முழு நீள திரைப்படத்தில் ஹீரோவாக நடிக்கும் வாய்ப்பு கிடைத்து நடித்தேன். சில காரணங்களால் வெளியீட்டுக்கு தாமதமாகி அடுத்த வருடம் திரையரங்குகளில் திரையிடப்பட காத்திருக்கிறது. உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் உதவியும் எதிர்பார்க்கின்றேன்.

கொழும்பில் நடைபெறும் அனைத்து audition க்கும் சென்றுவிடுவேன். இயக்குனர் ஜியா உல் ஹாசன் அண்ணாவின் "ட்ரிப் டூ ஹெல்" என்ற வெப் சீரிஸீல் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அதை தொடர்ந்து அவரின் இயக்கத்தில் டிஜிட்டல் விளம்பரத்தில் தலைமை கதாபாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இயக்குனர் வகீசாவின் "காஞ்சனா" எனும் சகோதர மொழி வெப் சீரிஸீலும நல்ல ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது.

இயக்குனர் புத்திக்க லொகுஹெட்டிகேயின் இயக்கத்தில் உருவாகி தொலைக்காட்சியில் வெளிவரவுள்ள " பிஹாட்டு" சிங்கள தொடர்கதையில் முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது.

இந்தியாவில் பணியாற்றிய உதவி இயக்குநர் உமர் ரமணன் அண்ணனின் உதவியுடன் இலங்கை தனியார் தொலைக்காட்சியில் மூத்த கெமரா கலைஞர் பாலா அண்ணா, இலங்கை சினிமாவில் நடிகரும் இயக்குநருமான சந்திரஹாசன் அண்ணா ஆகியோரின் நட்பு கிடைத்தது.

அதன் மூலம் பாலா அண்ணா இயக்கத்திலும் கெமரா பதிவிலும் உருவான "அமாயா" தொலைக்காட்சி நாடகத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது.

உடன் பிறவா சகோதரன் தனுஷனின் "நெவர் டிராவல் அலோன்" மற்றும் "அகர்" எனும் இரு குறு திரைப்படங்களிலும், மணிவானன் அண்ணாவின் "ஃபேமிலி பேக்கேஜ்" எனும் குறும்படத்திலும் நடித்ததற்காக பாராட்டுக்கள் வந்தது, இன்னும் சில வெளி வந்த மற்றும் வெளி வராத குறும்படங்களும் உள்ளன.

எனது கலை வாழ்க்கையில் அடுத்த படிக்கு செல்வதற்கு திரைக்கு வெளிவரவுள்ள ஆட்டம் ஆரம்பம் திரைப்படத்திற்காகவும், பிஹாட்டு தொலைக்காட்சித் தொடர்கதைக்காகவும் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்துள்ளேன்.

எனக்கு இந்த கலைக்காக உதவிய, உதவி செய்து கொண்டு இருக்கும் ரமணன் அண்ணா, சந்திரசேகர் ஐயா, பாலா அண்ணா, ஷாந்தா அம்மா, தவா அண்ணா, சந்திரஹாசன் அண்ணா, ஜியா அண்ணா, ராஜ் மனோஜ் அண்ணா, மணிவானன் அண்ணா, இளங்கோ அண்ணா, விக்னேஷ்வரன் அண்ணா, தர்ஷன் தவராஜா, மேனன்,அஜித் மஹாலிங்கம், நிதுஷாலினி,சேன், டிலக்ஷன் தர்சிகா,ரொசான், ஜானி,சுதர்சன் ரவீந்திரன், பிரசாத் மற்றும் என் உயிர் நண்பர்களுக்கும் என் உறவுகளுக்கும் இன்னும் பெயர் குறிப்பிடாத பல நல்ல உள்ளங்களுக்கும் நன்றிகள்.

**கே. ஈஸ்வரலிங்கம்**

















# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்



எம்.எம்.பாருக்.
கல்முனை.

**கேள்வி:தேவர் பிலிம்ஸ் சாண்டோ சின்னப்பா தேவர் தனது தேவர் பிலிம்ஸ் சார்பில் எம்.ஜி.ஆரை மட்டுமே வைத்துப் படங்களை தயாரித்தார். ஏன் சிவாஜி கணேசனை வைத்து அவர் படம் தயாரிக்கவில்லை?**

**பதில்:**அதுதான் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் மீது தேவர் கொண்டிருந்த பக்தி. அதேபோல்தான் எம்.ஜி.ஆரும் தேவர் மீது அதீத மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். அதற்கு காரணமும் இருந்தது. எம்.ஜி.ஆர் காலில் முறிவு ஏற்பட்டு மருத்துவ மனையில் இருந்த போது....இனி அவர் சினிமா வாழ்க்கை முடிந்து விட்டது இனி அவர் படத்தில் நடிக்க முடியாது என்று முடிவு செய்து எந்த தயரிப்பாளரும் அவரை ஒப்பந்தம் செய்ய வரவுமில்லை.

இந்த சமயத்தில்தான் தேவர் மருதுவமனைக்கு வந்து "எங்கப்பன் முருகன் அருளால் எனது அடுத்த படத்தில் நீங்கதான் நடிக்கிறீங்க..... இந்தாங்க புடிங்க எட்வான்ஸ்"என்று மன் பணம் கொடுத்து எம்.ஜி.ஆருக்கு நம்பிக்கை ஊட்டியவர் தேவர் தான். இந்த நன்றியை இறுதிவரை எம்.ஜி.ஆர் மறக்கவே இல்லை.

எல்.ராஜா.
நீர் கொழும்பு.

**கேள்வி: நடிகர் பார்த்தீபனுக்கு அமீரக அரசு 'கோல்டன் விசா' கௌரவம் கிடைத்திருக்கிறதாமே... அது என்ன அது கோல்டன் விசா கௌரவம். கொஞ்சம் சொல்லுங்களேன்?**

**பதில்:** ஐக்கிய அமீரக அரசு பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் சாதனை யாளர்களை கௌரவிக்க 'கோல்டன் விசா'வழங்கி வருகிறது கோல்டன் விசா வைத்திருப்பவர்கள் 10 ஆண்டுகளுக்கு ஐக்கிய அமீரகத்தின் குடிமகன்களாக கருதப்படுவார்கள். இந்திய நடிகர்கள் பலருக்கு இந்த கோல்டன் விசா வழங்கப்பட்டுள்ளது இந்தி நடிகர்களான் சஞ்சய்தத்,ஷாருக்கான் ,மலையாள நடிகர்கள் மம்முட்டி, மோகன்லால், பிருதிவி ராஜ்,துல்கர் சல்மான், நடிகைகள் திரிஷா, மீரா ஜாஸ்மின், ஊர்வசி ரவுடாலா உள்ளிட்டோர் கோல்டன் விசா பெற்றுள்ளனர்

இந்த நிலையில் இப்போது நடிகரும் இயக்குனருமான ஆர். பார்தீபனும் கோல்டன் விசா பெற்றுள்ளார். இது குறித்து பார்த்தீபன் டுவீட்டரில் வெளியிட்டுள்ள பதிவில்"கோல்டன் விசா துபாயில் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த கௌரவத்தை பெறும் முதல் தமிழ் நடிகர் நான் என்பதை அதை பெற்றுத்தர முயற்சி எடுத்தவர்கள் சொன்னார்கள். விசாரித்துப் பார்த்ததில் உண்மை போலவே தோன்றியது!"என்று கூறியுள்ளார்.




எஸ்.ஜீவா.
கொழும்பு 06



**கேள்வி:** சிம்பு வின் 'மாநாடு'வெற்றிப் படமா?

**பதில்:**அப்படித்தான் தெரிகிறது. பார்த்தவர்கள் எல்லோரும் பாராட்டுகிறார்கள்.. பத்திரிகை விமர்சனங்களும் ஆகா... ஓஹோ...பிரமாதம்.. என்ற ரகம்தான்.. எஸ்.ஜே.சூரியாவும் வில்லனாக கலக்கி இருக்கிறார்.சிம்பு "சபாஷ்"வாங்குவதற்கு வில்லன் சூரியா தான் காரணம் என்பதும் பலருடைய கருத்தாக இருக்கிறது. பல வருடங்களுக்குப் பிறகு சிம்புவின் சிறப்பான நடிப்பைப் பார்த்ததில் மகிழ்ச்சி.



எம் மாகிரட்..
எலபடகம.

**கேள்வி: தளபதி விஜய்,'தல' அஜித்,சூர்யா இவர்கள் மூவரில் அதிக பணம் வாங்கும் நடிகர் யார் என்று கூறமுடியுமா?**

**பதில்:**1தளபதி விஜய், 2தள அஜித்.3சூர்யா.

இவர்கள் மூவரையும் விரைவில் பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலாம் இடத்திற்கு சிவகார்த்திகேயன் வந்து விடுவார் என்று கோடம் பாக்கத்து குருவி ஜோசியம் சொல்லி இருக்கிறது!

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# மீண்டும் வெப் தொடரில் சமந்தா

பேமிலி மேன் 2 வெப் தொடரை எடுத்த ராஜ், டிகே ஆகியோர் இன்னொரு புதிய வெப் தொடரை இயக்க உள்ளனர். இந்த தொடரிலும் சமந்தாவை கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளனர்.

தமிழ், தெலுங்கில் முன்னணி



கதாநாயகியாக இருக்கும் சமந்தா 'பேமிலி மேன் 2' வெப் தொடரில் இலங்கை தமிழ் போராளியாக நடித்து உலக அளவில் புகழ் பெற்றார். விருதுகளும் கிடைத்தன. இந்த தொடரில் ஈழ தமிழர் போராட்டத்தை கொச்சைப்படுத்தி இருப்பதாக சமந்தாவுக்கு எதிர்ப்புகளும் கிளம்பின. தொடரில் சில காட்சிகளில் சமந்தா அதிக கவர்ச்சியாக நடித்து இருந்தார். இதனாலேயே அவரது சொந்த வாழ்க்கையில் புயல் வீசி கணவரை விவாகரத்து செய்யும் நிலைமை ஏற்பட்டதாகவும் வலைத்தளங்களில் தகவல் பரவியது.

பேமிலிமேன் 2 தொடரால் சமந்தாவுக்கு இந்தி படங்களில் நடிக்கவும் வாய்ப்புகள் வந்துள்ளன. இந்த நிலையில் பேமிலி மேன் 2 வெப் தொடரை எடுத்த ராஜ், டிகே ஆகியோர் இன்னொரு புதிய வெப் தொடரை இயக்க உள்ளனர். இந்த தொடரிலும் சமந்தாவை கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளனர். நாயகனாக பிரபல இந்தி நடிகர் வருண் தவான் நடிக்கிறார். பெரிய பட்ஜெட்டில் தயாராகிறது. படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது.

# சுல்தான் பாடல் படைத்த புதிய சாதனை

பாக்யராஜ் கண்ணன் இயக்கத்தில் கார்த்தி, ராஷ்மிகா மந்தனா நடிப்பில் வெளியான சுல்தான் படத்தில் இடம் பெற்ற பாடல் ஒன்று சாதனை படைத்துள்ளது.

எஸ்.ஆர்.பிரபு தயாரிப்பில், பாக்யராஜ் கண்ணன் இயக்கத்தில் கார்த்தி நடித்திருந்த படம் சுல்தான். அதிரடி ஆக்ஷன் படமான இதில் ஹீரோயினாக ராஷ்மிகா மந்தனா நடித்திருந்தார். யுவன் சங்கர் ராஜா பின்னணி இசை அமைத்திருந்த இப்படம், ஏப்ரல் 2ந் தேதி தமிழ், தெலுங்கில் வெளியானது.

தமிழகத்தைப் போலவே ஆந்திரா, தெலுங்கானாவிலும் சுல்தான் படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இப்படத்தில் இடம் பெற்ற 'ஜெய் சுல்தான்...' என்ற பாடல் ரசிகர்களிடையே கவனம் பெற்றது. இந்நிலையில் இப்பாடல் யூடியூப் தளத்தில் 75 மில்லியன் பார்வையாளர்களை கடந்து புதிய சாதனை படைத்துள்ளது. இதை கார்த்தி ரசிகர்கள் சமூக வலைத்தளத்தில் கொண்டாடி வருகிறார்கள்.



# 'ஏ கோலி சோடாவே என் கறிக் குழம்பே!

'ஏ கோலி சோடாவே என் கறிக் குழம்பே உன் குட்டி பப்பி நான்' என ஆட்டத்தில் அதகளம் செய்த சாய் பல்லவி வெர்ஷன் டூ போலவே இருக்கும் தங்கை பூஜா கண்ணன் 'சித்திரை செவ்வானம்' படத்தின் மூலம் அறிமுகமாவது குறித்து மனம் திறக்கிறார்...

நீங்க எப்படி சினிமாவுக்கு வந்தீங்க அக்கா சாய் பல்லவி உடன் நான் ஷூட்டிங் போன போது டப்பிங் பேசியிருக்கேன். அவங்க கூடவே இருந்ததால் எனக்கும் நடிப்பு ஆசை வந்துருச்சு. மெடிக்கல் அண்ட் சைக்யாட்ரிக் சோசியல் ஒர்க் படிச்சிருக்கேன். இப்போ டிப்ளோமா இன் சயின்ஸ் கவுன்சிலிங் படிக்கிறேன்.

முதல் படம் அனுபவம் எப்படி இருந்தது.?

திரில்லா, பயமா இருந்தது... அக்கா சாய் பல்லவி இந்த துறையில் இருப்பதால் இரண்டு பேரையும் கொஞ்சம் ஒப்பிடுவாங்க.. என்னால் முடிந்த வரை பெஸ்ட் கொடுத்து இருக்கேன்னு நினைக்கிறேன்

.சமுத்திரக்கனி அப்பாவாக 'சித்திரை செவ்வானம் இவ்ளோ படம் நடித்து இருக்காரே ரீடேக் போனா என்ன ஆகுமோனு முதலில் பயந்தேன். ஆனால், முதல் நாளே 'எப்படிமா இருக்கே'னு அன்பா கேட்டார். எல்லா காட்சிகளும் இயல்பாக எடுத்தாங்க. சினிமா மாதிரியே எனக்கு தெரியலை, சில காட்சிகளில் நிஜ அப்பா, பொண்ணு போல கத்துவோம்.

வசனங்கள் எல்லாம் எப்படி மனப்பாடம் தானா இயக்குனர் சில்வா, சமுத்திரக்கனி எல்லாம் உதவி பண்ணினாங்க. கேமரா முன்னாடி எங்க நிக்கணும், எந்த பக்கம் பாக்கணும்னு இரண்டு பேருமே நிறைய சொல்லி கொடுத்தாங்க. சொந்த குரலில் தான் பேசியிருக்கேன்.

தமிழில் அக்கா நடித்ததில் பிடித்தது பாவக் கதைகள்... அதே மாதிரி துல்கர் சாய்பல்லவி ஜோடியும் பிடிக்கும். அக்கா தவிர ஐஸ்வர்யா ராஜேஷ்,கீர்த்தி சுரேஷ் பிடிக்கும்.

வீட்டில் இரண்டு நடிகைகள் இருப்பதால் வீட்டை பொறுத்தவரை எந்த போட்டியும் இல்லை. அம்மாவை விட அக்கா கிட்ட தான் அதிகம் இருப்பேன். அக்காவுக்கு நான் ஒரு குழந்தை போல். அதனால் எங்களிடம் எந்த போட்டியும் வராது.

உங்க அக்கா எதுவும் டிப்ஸ் கொடுத்தாங்களா?

படப்பிடிப்பில் எப்படி பிறர் கூட பேசுறாங்க, பழகுறாங்க, வேலைன்னு வந்தா எப்படி இருப்பாங்க ஒரு காட்சி எடுக்கும் போது எப்படி தயாராவார்கள்னு கவனிச்சிருக்கேன், இந்த படத்திற்கு என்னுடன் படப்பிடிப்புக்கு வரலை. டப்பிங் பேசி போட்டு காட்டினேன் நல்லா இருக்குனு சொன்னாங்க..

அடுத்த திட்டம் சத்யமா எதுவும் என் மைண்ட்ல இல்லை, இந்த படம் வெளிவந்து மக்கள் என்ன சொல்றாங்க என்று கேட்க வெயிட் பண்றேன். யுனிசெப்'ல சேர்ந்து குழந்தைகளுக்கு சொல்லி தர ஆசை இருக்கு



# எதற்கும் துணிந்தவன் திரைப்படம் அடுத்த வருடம் பிப்ரவரி 4 ஆம் திகதி வெளியாகிறது



இயக்குநர் பாண்டிராஜ் இயக்கத்தில் நடிகர் சூர்யா, நடிகை பிரியங்கா மோகன் இணைந்து நடித்துள்ள திரைப்படம் "எதற்கும் துணிந்தவன்". இந்த திரைப்படம் அடுத்த வருடம் பிப்ரவரி 4 ஆம் தேதி வெளியாகிறது.

முக்கிய கதாபாத்திரத்தில் நடிகர் சத்யராஜ், ராஜ்கிரண், நடிகை ராதிகா உள்ளிட்டவர்கள் நடித்துள்ளார்கள். இமான் இசையமைத்துள்ள, இப்படத்தில் வில்லனாக வினய் நடித்துள்ளார்.

இப்படத்தின், முதல்பாடலான 'வாடா தம்பி' கடந்த டிசம்பர் 16 ஆம் தேதி வெளியான நிலையில், நேற்று மாலை 'உள்ளம் உருகுதய்யா உன்னை உத்து உத்துப் பார்க்கயிலே' என்ற பாடல் வெளியாகியுள்ளது . இப்பாடலை கவிஞர் யுகபாரதி எழுதியுள்ளார்.

'உள்ளம் உருகுதய்யா முருகா' என்ற பாடலையே ரீமிக்ஸ் செய்தது போல் இருக்கும் இப்பாடலை வந்தனா ஸ்ரீனிவாசன், பிருந்தா மாணிக்கவாசகன் போன்றோர் பாடியுள்ளனர். நேற்று மாலை வெளியான இப்பாடல் தற்போது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

# சன்னி லியோனுக்கு மபி மந்திரி எச்சரிக்கை

சன்னி லியோன் நடனம் ஆடிய பாடல் இந்துக்களின் மனதை புண்படுத்துவதாக பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கிருஷ்ணர் ராதையின் காதலை பேசும் 'மதுபான் மெய்ன் ராதிகா நாச்சே' பாடலுக்கு நடிகை சன்னி லியோன் நடனமாடிய வீடியோ ஒன்றை சரிகம நிறுவனம் வெளியிட்டுள்ளது. அந்த நடனம் இந்துக்களின் மனதை புண்படுத்தும் வகையில் ஆபாசமாக அமைந்துள்ளதாக பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில் சன்னி லியோன் அந்த பாடலை 3 நாட்களுக்குள் நீக்கிவிட்டு மன்னிப்பு கேட்கவில்லை என்றால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என மத்திய பிரதேச மந்திரி நரோட்டம் மிஸ்ரா எச்சரித்துள்ளார்.

இதையடுத்து அந்த பாடலை வெளியிட்டுள்ள சரிகம நிறுவனம், மூன்று நாட்களுக்குள் பாடலின் வரிகளும், பெயரும் மாற்றப்படும் என உறுதி அளித்துள்ளது.






22

# சிரேஷ்ட அறிவிப்பாளரும் எழுத்தாளருமான நாகபூஷணி கருப்பையா

**கம்பளையைப் பிறப்பிடமாகவும் நாவலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பெண் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான நாகபூஷணி, கருப்பையா தேசிகர் தம்பதிகளுக்கு நான்காவது பிள்ளையாகப் பிறந்தார்.**

இவர் ஆரம்ப காலத்தில் வானொலியோடு இணைந்து அறிவிப்பாளராகவும் , செய்தி வாசிப்பாளராகவும் பயணித்தார். பின் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக தனது சேவைகளை விஸ்தரித்துக் கொண்டதோடு தொலைக்காட்சி விளம்பரங்களிலும் தோன்றியுள்ளார்.

இவர், நிகழ்ச்சிகளை வடிவமைத்தல் மற்றும் அறிவிப்பாளர்களை கடமைக்காக ஒழுங்குபடுத்துதல் போன்ற இன்னோரன்ன பணிகளுடன் உதவிப்பணிப்பாளர் பொறுப்பினையும் வகிக்கின்றார். ஊடகத்துறை கற்கை நெறிகளுக்கு விரிவுரையாளராக சமுகமளிப்பதுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பயிற்சிப் பிரிவில் அறிவிப்பாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதிலும் தனது பங்களிப்புக்களை செய்து வருகிறார்.

இவர் தற்போது "வசந்தம் தொலைக்காட்சியில் நினைத்தாலே இனிக்கும் " என்ற நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.

இவர் கல்வித்துறை பற்றிக் குறிப்பிடுகையில், கம்பளையில் ஆரம்பக்கல்வியைக் கற்ற இவர், தந்தையின் தொழில் நிமித்தம் நாவலப்பிட்டியில் குடியேறியதால் கதிரேஷன் கனிஷ்ட வித்தியாலயத்தில் தனது கல்வியை தொடர்ந்து பின்னர் சாதாரண தரத்தை "சென் அன்றூஸ் பாலிகா" மகா வித்தியாலயத்தில் கற்றார். அதன் பின்னர் "கதிரேஷன் மத்திய கல்லூரியில் உயர்தரத்தினைப் பூர்த்தி செய்து யாழ் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். அங்கு தமிழ் சிறப்பு கலைமாணி BA(Hon) பட்டம் பெற்றார். பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிராந்திய சேவையான கண்டி மலையக சேவையில் சிறிது காலம் அறிவிப்பாளராக பணியாற்றினார். அதன் பின்னர் கொழும்பில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கல்விச்சேவையில் தயாரிப்பாளராக பணியாற்றினார்.





இந்த சந்தர்ப்பத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் "இதழியல் டிப்ளோமா" கற்கைநெறியினையும் பூர்த்தி செய்துள்ளார்.

ஊடகத்துறையில் மட்டுமன்றி இலக்கியத்துறையிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார். இலக்கியத்துறையில் இவர் ஈடுபடுவதற்கான ஆர்வம் சிறு வயது முதலே வாசிப்பின் மீதான அலாதி பிரியத்தினாலும் தந்தையின் ஊக்கப்படுத்தலினாலும் அண்ணன்மார்கள் புத்தகங்கள் வாங்கித்தருவதில் ஆர்வம் காட்டியதாலும் தனக்கும் எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதாக கூறினார். இந்த வாசிப்பும் ஆர்வமும் தந்தையின் தூண்டுதலும்தான் இவருக்கு இலக்கியத்தின் பால் ஈடுபாட்டினை அதிகரிக்க காரணமாய் அமைந்ததாம். இவர், மெல்லிசைப்பாடல்கள் மற்றும் பக்திப்பாடல்களும் எழுதியதோடு பத்திரிகைகள், சிறு சஞ்சிகைகள், வானொலி என்று எதையும் விட்டுவைக்காமல் ஆக்கங்கள் பல எழுதியுள்ளார். நூல் வெளியீடு பற்றி கேட்கப்பட்டபோது இவ்வாறு பதிலளித்தார்.

இவரின் அன்பு நண்பி அமரர் கலைமகள் ஹிதாயா தனது ஆரம்ப கால கவிதைகளை தொகுத்து வெளியிடுவதில் ஆர்வம் காட்டியது தனக்குள்ளும் ஒரு விருப்பைத் தூண்டி விட்டதால் பத்திரிகைகளில் , சஞ்சிகைகளில் எழுதிய கவிதைகளை, தான் பின்னாட்களில் "நெற்றிக்கண்" என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பாக நூலாக வெளியிட்டிருக்கிறார்.

இவர் பல்கலைக்கழக இறுதி ஆண்டில் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரையை நூலுருவாக்கம் செய்யும் பணியை சகோதரர் திலகர் மேற்கொண்டுள்ளதாகவும் விரைவில் நூலாக வெளிவர இருப்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைவதாகவும் கூறினார்.

இதுவரை தனது திறமைக்கு கிடைத்த விருதுகளாக

**"சிறந்த தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் விருது"**
**"சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் விருது"**
**"சாகித்திய விருது"**
**"சிறந்த வானொலி அறிவிப்பாளர் அரச விருது"**
**"சிறந்த வானொலி செய்தி வாசிப்பாளர் அரச விருது"**

போன்ற விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலக்கியத்துறைப் பயணத்தில் மலேசியா நாட்டிலே கோலாலம்பூரில் நடைபெற்ற "சர்வதேச தீபாவளி பாட்டெழுதும் போட்டியில் 2ம் இடம்" கிடைத்து சான்றிதழும் பெற்றுள்ளார்.

இலக்கியத்துறையில் மட்டுமன்றி ஊடகத்துறையிலும் ஆர்வம் ஏற்பட்ட தனது அனுபவங்களை இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

வானொலி என்பது இவர் குடும்பத்தாரின் விருப்பத்திற்குரிய ஒன்றாக இருந்ததால் அன்றைய காலகட்டத்தில் இலங்கை வானொலி வெளியிடும் சஞ்சிகையைக்கூட இவர் விட்டு வைக்கவில்லை. அதிலிருந்த மலையக ஒலிபரப்பிற்கான விண்ணப்பப் படிவத்தை ஆர்வக்கோளாறில் பூர்த்தி செய்து அனுப்பினார்.

எதிர்பாராத விதமாக தெரிவு செய்யப்பட்டார். கொழும்பில் தலைமைக்காரியாலயத்தில் குரல் தேர்வு , நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் தெரிவாகினார். அங்கு பயிற்சி பெறும்போது மதியழகன் அங்கேயே கடமைபுரியும்படி ஊக்கப்படுத்தினார். அரச. ஐயாத்துரை கல்விச்சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக தெரிவுசெய்தார்.

இப்படி ஆரம்பமானது தான் இவரின் ஊடகப்பயணம். வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கும் இளம் ஊடகவியலாளர்களுக்கும் இவர் கூறுவதாவது, தன்னம்பிக்கையற்றவர்களினதும், தமது திறமையை வளர்த்துக்கொள்ள இயலாதவர்களினதும் தாக்குதல்கள், ஏதோவொரு வடிவில் நம்மை துரத்திக் கொண்டும் தாக்கிக் கொண்டும்தான் இருக்கும். இவற்றில் நமது கவனத்தை சிதற விட்டு விடாமல் நமக்கான கடமைகளை செவ்வனே செய்வோமேயானால் நமது வெற்றிப்பயணத்திற்கு இறைவன் துணையிருப்பான்.

நாம் நேசிக்கின்ற துறையில் அர்ப்பணிப்பு அவசியம். அதுசார்ந்த நமது தேடலையும் கற்றலையும் விசாலப்படுத்த வேண்டும்.

தமிழ் ஊடகத்துறைக்கும் இலக்கியத்திற்கும் அடித்தளம் தமிழ் மொழி. அது பிழைபடாதவாறு பிரயோகிக்கப்படவேண்டும்.

ஆர்வம் இருக்கிறது. களமும் இருக்கிறது என்பதற்காக எதையும் படைக்கலாமென இறங்கி விடக்கூடாது. எதையும் திருந்தச் செய்ய வேண்டும். அத்தகையோரின் பெயரும் புகழும்தான் இன்று வரை நிலைத்திருக்கின்றது.

இல்லாவிடில் காலவெள்ளத்தில் காணாமலாக்கப்பட்டுவிடுவோம்.

ஆர்வத்தோடு நீங்கள் படைப்பவை பாராட்டை மட்டுமே பெற வேண்டுமென நினைக்காதீர்கள். முகநூலில் போலிப் புகழுரைகள் மலிந்து விட்டன. விமர்சனங்கள் வந்தால் சோர்ந்து போகாமல் அதனை வெற்றிக்கு பாதையமைத்து பயணியுங்கள் என வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களையும் இளம் ஊடகவியலாளர்களையும் ஊக்கப்படுத்தும் விதமாக கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் மனம் திறந்து தனது பதில்களை வழங்கியுள்ளார். இலக்கியத்துறையில் மட்டுமன்றி ஊடகத்துறையிலும் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்று பயணித்துக் கொண்டிருக்கிறார்.







**மஜினா உமறு லெவ்வை**
**மாவடிப்பள்ளி.**

# செல்ஃபி உலா



பஸ்யால கவியரசி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா மாவட்ட மட்ட சாகித்திய இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற தருணம்



கோஷினி - வத்தளை



கே. சரவணகுமார் நண்பர்களுடன் ஒரு செல்பி



சாரீக் அமீன்ம - டவள பஸார்



பிரமிளா நிரோஷினி



கிரிதரன் - யாழ்ப்பாணம்



பத்மா சந்திரமோகன்



ராமன் - ஹப்புகஸ்கந்தை நீர்வீழ்ச்சி




அம்பாறை கோயிலில்ய - தீஸ் மற்றும் அருண்



காயத்திரி - வத்தளை

## 4 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்




## சொற்களில் விடுபட்ட இடத்தில் சரியான உயிர் எழுத்தை நிரப்புங்கள்

ஆ உ எ ஏ ஓ ஐ இ அ




1. _ ணி ல்
2. _ ல ம ர ம்
3. _ ஞ் சி
4. _ ண வு
5. _ ரு மை
6. _ ணி
7. _ ந் து
8. _ ட் ட க ம்


## புள்ளிகளை வரிசைப்படி இணைக்கவும்



## வழிகாட்டுங்கள்



## நிறந்தீட்டுங்கள்



# சிரமப்பட்டு வித்தை காட்டினால் தான் எங்களுக்கு சோறு கிடைக்கும்

## குரங்கு வித்தை காட்டும் என்டனீ

**தமது வயிற்றுப் பிழைப்புக்காக குரங்கு வித்தைகளை காட்டி சம்பாதிக்கும் குடும்பங்கள் எமது நாட்டில் இல்லாமலும் இல்லை. பொதுமக்களுக்கு குரங்கு வித்தை காட்டி பணம் சம்பாதிக்கும் இரு பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய என்டனீயை நாத்தாண்டிய, மொரகலே பிரதேசத்தில் " நான் ரொம்ப பிஸி " பகுதிக்காக சந்தித்தேன். மொரகலே பிரதான வீதி ஓரமாக குரங்கு வித்தைகளை காட்டுவதற்கு தயாராகும் நிலையில் சரளமாக தமிழ் பேசும் என்டனீயை சந்தித்தேன்.**

குரங்கு வித்தைகளை காட்டுவோர் இந்தியாவின் தெலுங்குக்காரரர்கள் " என்றே கூறுவர். எனினும் 45 வயதுடைய என்டனீ இலங்கையிலேயே தனது குடும்பத்துடன் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றார். ஊர் தேடி கிராமங்கள் தோறும் அலைந்து திரிந்தே அவர்கள் தமது தொழிலை செய்வர். இரவு தூக்கத்துக்காக மாலையில் கூடாரமிடுவர். அங்கே தங்கி விட்டு பின்னர் காலை மாலை வேளைகளில் குரங்கு வித்தைகளை காட்டி பணம் சம்பாதித்துக் கொள்வார்கள்.

**கேள்வி : குரங்கு வித்தைகளை நீங்கள் யாருக்கு ஆர்வமாக காட்டுவீர்கள் ?**

பதில் : வயதில் சிறியவர்களே இதனை ஆர்வமாக பார்ப்பார்கள். பத்து, பன்னிரண்டு வயதுடைய பிள்ளைகளுக்கே குரங்கு வித்தைகளை நாம் காட்டுவோம். இதனைக் காட்டியே எங்களுடைய பிழைப்பை நடாத்திக் கொண்டு வருகின்றோம். குறித்த வயதுகளுடைய சிறுவர், சிறுமியர் குரங்கு வித்தைகளை மிகவும் ஆர்வமாகவும் ஆசையோடும் பார்த்து மகிழ்வர். இதனை நாம் கண்கூடாக கண்டு வருகின்றோம்.

**கேள்வி : குரங்கு வித்தை காட்டுவது மிகவும் சிரமமான தொழில். உங்களுக்கு இந்தத் தொழிலை யார் பழக்கிக் கொடுத்தார்கள் ?**

பதில் : நான் இந்த தொழிலை எனது அப்பா, அம்மா ஆகிய இருவரிடமே பழகிக் கொண்டேன்.

அப்போது நான் சின்னப் பையன்.

எங்களுடைய வீட்டில் குரங்குகள் ஒன்று அல்லது இரண்டு எப்போதும் தொழிலுக்காக இருந்து கொண்டே இருக்கும். இது எங்களுடைய பரம்பரைத் தொழிலே. வேறு எந்தக் கூட்டமும் இந்த தொழிலை செய்வதில்லை என்றே கூறலாம்.

நான் ரொம்ப பிஸி...

**கேள்வி : குரங்குகளை எவ்வாறு உங்களுடைய தொழிலுக்கு பழக்குவீர்கள் ?**

பதில் : குரங்குகளை நாம் படிப்படியாக வித்தைகளுக்கு ஏற்றவாறு பழக்கி எடுப்போம். மிகவும் சிரமத்துடன் இரவு பகல் பாராது மிகவும் பொறுமையாக பழக்குவோம். இது எங்களுடைய கைவந்த கலை.

**கேள்வி : இந்த தொழிலை நீங்கள் எவ்வளவு காலமாக செய்து கொண்டு வருகின்றீர்கள்?**

பதில் : நான் இந்த தொழிலை 15 வருடங்களாக செய்து கொண்டு வருகின்றேன். பல ஊர்களுக்கும் வித்தைகளை காட்டுவதற்கு சென்றுள்ளேன்.

**கேள்வி : உங்களுடைய சொந்த ஊர் எது ?**

பதில் : தற்போது நான் அநுராதபுரம், தமுத்தேகம பிரதேசத்திலேயே எனது குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். எனக்கு பாடசாலைக்கு செல்லும் இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களை எனது மனைவியே பார்த்து பராமரிப்பு செய்து வருகிறார்.



**கேள்வி : உங்களுடைய மனைவி என்ன செய்கின்றார் ?**

பதில் : என்னுடைய மனைவி சாஸ்திரம் பார்ப்பாள். அவளும் சாஸ்திரம் கூறி ஒரு நாளைக்கு 500 ரூபாய் , அல்லது ஆயிரம் ரூபாய் தேடிக் கொள்வாள்.

**கேள்வி : உங்களுடைய மனைவியும் உங்களுடன் சுற்றித் திரிவாரா ?**

பதில் : பாடசாலை விடுமுறை காலங்களில் பிள்ளைகளோடு சேர்ந்து நானும் எனது மனைவியும் ஊர் ஊராக சுற்றித் திரிந்து தொழிலை செய்வோம். அப்போது மனைவி சாஸ்திரம் கூறுவாள். நான் வித்தை காட்டுவேன்.

**கேள்வி : உங்களுக்கு உதவியாக இங்கு வந்துள்ளவர் யார் ?**

பதில் : இவர் எனது ஊரைச் சேர்ந்தவர். இவரது பெயர் முணியாண்டி. இவரிடம் பாம்பு, குரங்கு ஆகியன உள்ளன. அவரும் வித்தை காட்டியே சம்பாதிப்பார். அவர் எனக்கு உதவியாக இருப்பார்.

**கேள்வி : உங்களுடைய குரங்கு வித்தைகளுக்கு மிகவும் வரவேற்பு கிடைத்து வருகின்ற பிரதேசம் எது என்று உங்களால் கூற முடியுமா?**

பதில் : இலங்கையின் தென் பகுதி மக்களே குரங்கு வித்தைகள் மற்றும் பாம்பு வித்தைகளை பார்ப்பதில் மிகவும் ஆர்வமாக இருப்பார்கள். இதனால் நாம் நீண்ட நாட்கள் அங்கு தொழில் செய்வோம். கூடாரம் அமைத்து தங்கி நின்று நாம் தொழில் செய்வோம். அங்கே எங்களுக்கு நல்ல வருமானமும் கிடைக்கும்.

**கேள்வி : தென் பகுதியில் எந்த ஊரில் உங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்று கூற முடியுமா?**

பதில் : மாத்தறை பிரதேசத்தில் எங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். நீண்ட நாட்கள் அங்கே தங்கி நின்று வித்தைகளை காட்டுவோம். இதேபோன்று காலி பிரதேசத்திலும் நல்ல வருமானம் கிடைக்கும்.

**கேள்வி : நாளந்த வருமானம் உங்களுக்கு கிடைத்து வருகின்றதா ?**

பதில் : நாளாந்த வருமானம் என்று எங்களுக்கு இல்லை. சிரமப்பட்டு வித்தை காட்டினால் தான் எங்களுக்கு சோறு கிடைக்கும். அதனாலேயே கிராமம் கிராமமாக அலைந்து திரிந்து தொழில் செய்து வருகிறேன்.

**கேள்வி : வித்தை காட்டும் குரங்குகள் , பாம்புகள் போன்றவற்றை எவ்வாறு ஊர் ஊராக எடுத்துக் கொண்டு செல்வீர்கள் ?**

பதில் : அவற்றை பாதுகாப்பான முறையில் பெட்டிகளில் அடைத்து பஸ்களிலேயே கொண்டு செல்வோம் . அவைகளும் பெட்டிகளில் அமைதியாக இருக்கும்.

**கேள்வி : உங்களுடைய மனைவி உங்களுடன் சேர்ந்து கொண்டு சுற்றித் திரியும் போது அவருக்கும் வருமானம் ஏதும் கிடைக்குமா ?**

பதில் ; மனைவி சாஸ்திரம் கூறுவாள் . சாஸ்திரமொன்று கூறுவதற்கு மனைவி நூறு ரூபாய் எடுப்பாள் . அதுவும் எங்களுக்கு வருமானம் தானே .

**கேள்வி : கொரோனா வைரஸ் பரவிய காலத்தில் உங்களுடைய தொழில் எப்படியிருந்தது ?**

பதில் : நாங்கள் வீட்டோடு தான் இருந்தோம். தொழில் இல்லை. இதனால் சில இடங்களுக்கு சென்று கூலி வேலையும் செய்தோம் . மிகவும் சிரமத்துடன் காலத்தை கழித்தோம்.

**கேள்வி : குரங்கு வித்தை காட்டும் தொழிலை உங்களுடைய பிள்ளைகளுக்கு பழக்குவீர்களா?**

பதில் : இரண்டு பிள்ளைகளையும் ஒழுங்காக படிப்பிக்க வேண்டும் என்றே நானும் மனைவியும் முழு மூச்சாக கஷ்டப்படுகின்றோம். இந்த தொழிலை அவர்களால் செய்ய முடியுமா? என்று என்னால் கூற முடியாது.

**கேள்வி : குரங்கு வித்தை காட்டுவதால் உங்களுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?**

பதில் ; பாடசாலை விடுமுறையுள்ள காலங்களில் ஒரு நாளைக்கு சுமார் இரண்டாயிரம் ரூபாய் கிடைக்கும் . ஏனைய நாட்களில் ஆயிரம் ரூபாய் அல்லது ஐநூறு ரூபாய் தான் கிடைக்கும் .

**கேள்வி : உங்களுடைய பயணம் பொதிகளை உங்களுடைய கூடாரத்தில் வைத்து விட்டு வருவீர்களா? இல்லாவிட்டால் எடுத்துக் கொண்டு செல்வீர்களா?**

பதில் : மொரகலே பிரதேசத்துக்கு வருவதற்கு முன்னர் நான் குளியாப்பிட்டிய தும்மலசூரிய பகுதியிலுள்ள தோட்டமொன்றில் கூடாரம் அமைத்து அதில் தங்கினேன் . அங்கு தான் என்னுடைய பயணப் பொதிகள் உள்ளன . குரங்கை பாதுகாத்து கொண்டு வரும் பெட்டியை மாத்திரமே குரங்கோடு எடுத்துக் கொண்டு வந்துள்ளேன். பகல் முழுவதும் வித்தை காட்டி விட்டு மாலையில் குரங்கை பெட்டியில் போட்டுக் கொண்டு எடுத்துச் செல்வேன்.

**கேள்வி : நீங்கள் நடை பயணம் செய்தே வித்தை காட்டும் இடத்திற்கு போவீர்கள். இது சிரமமான காரியம் தானே?**

பதில் : நாங்கள் மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தவர்கள். வயிற்றுப் பசியை போக்குவதற்காகவே இவ்வாறாக கஷ்டப்படுகிறோம். எங்களுடைய தொழில் அப்படியானதே.

**( படங்கள் நீர்கொழும்பு தினகரன் நிருபர் ருஸ்மான் )**



தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

## முகத்திற்கு பாதிப்பு தரும் பொருட்கள்

**முக அழகை மேம்படுத்துவதற்கு பெண்கள் அதிக ஆர்வம் காட்டுவதுண்டு. எல்லோருடைய சருமத்திற்கும், எல்லா பொருட்களும் ஒத்துக்கொள்ளாது. சருமத்தின் தன்மையை பொறுத்து பராமரிப்பும் மாறுபடும். அத்தகைய பொருட்கள் குறித்தும், அவற்றை தவிர்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும் பார்ப்போம்.**





# உடலில் உள்ள முடியை அகற்றுவதற்கு வேக்ஸ் பயன்படுத்தப்படுகிறது

# ஆனால் முகத்தில் உள்ள முடியை அகற்றுவதற்கு இதனை பயன்படுத்தக் கூடாது

காலாவதியான சன்ஸ்கிரீன்: நிறைய பேர் கோடை காலத்தில் மட்டும்தான் சன்ஸ்கிரீனை பயன்படுத்துவார்கள். வெப்பத்தின் தாக்கம் குறைய தொடங்கியதும் அடுத்த ஆண்டுக்கு பயன்படுத்துவதற்காக சேமித்து வைப்பார்கள். அப்படி பத்திரப்படுத்தி வைக்கும்போது காலாவதி திகதியை கவனிக்காமல் மீண்டும் பயன்படுத்தினால் ஒவ்வாமை பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும். மேலும் சருமத்திற்கு பொருத்தமான சன்ஸ்கிரீனை தேர்ந்தெடுப்பதும் அவசியமானது.

ஷெம்போ: இது தலைமுடியை சுத்தம் செய்வதற்கு பிரதானமாக பயன்படுத்தப்படுகிறது. அதிகப்படியான எண்ணெய் மற்றும் அழுக்கில் இருந்து விடுபடவும் உதவும். அதேவேளையில் ஷாம்பு கொண்டு முகத்தை சுத்தம் செய்யக்கூடாது. அவை கூந்தல் முடியை சுத்தம் செய்வதற்காக தயாரிக்கப்பட்டவை. சருமத்தின் மென்மையான மூலக்கூறுகளை கையாளுவதற்கு அவை உருவாக்கப்படவில்லை. ஷெம்போ கொண்டு முகத்தை கழுவினால் சருமம் உலர்வடையும். பளபளப்பு தன்மையும் மாறிவிடும்.

எலுமிச்சை சாறு: இதில் வைட்டமின் சி நிறைந்துள்ளது. அது உடலுக்கு ஆரோக்கியமானதாக கருதப்படுகிறது. ஆனால் எலுமிச்சை சாறை அப்படியே சருமத்தில் பூசுவது நல்லதல்ல. மேலும் எலுமிச்சை பழத்தை அடிப்படையாக கொண்ட சரும பராமரிப்பு பொருட்கள் புழக்கத்தில் இருக்கின்றன.

அவை சருமத்தை பளபளப்பாகவும், வெண்மையாகவும் மிளிரச் செய்ய உதவுவதாக நம்பப்படுகிறது. ஆனால் அதில் உள்ளடங்கி இருக்கும் அதிக அளவு சிட்ரிக் அமிலம் சருமத்தை சேதப்படுத்தக்கூடும். சருமத்தில் எரிச்சல், வெடிப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.



பற்பசை: கரும்புள்ளிகள், முகப்பருவை போக்குவதற்கு பற்பசையை உபயோகிக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் முகத்தில் பற்பசையை பயன்படுத்துவது நோய்த்தொற்றுகள், காயங்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கக்கூடும். சருமத்திற்கு எரிச்சலையும் உண்டாக்கும். பற்பசையை பருக்கள் மீது பூசுவது நல்ல பலனைத் தரும் என்று சிலர் பரிந்துரைப்பதுண்டு.

ஆனால் முகத்தில் பற்பசையை பூசும்போது மெலனின் உற்பத்தி அதிகரிக்கக்கூடும். அவை பயன்படுத்தப்பட்ட பகுதிகளில் நிறமாற்றம் அல்லது கரும்புள்ளிகள் உருவாகலாம். பற்பசையில் பயன்படுத்தப்படும் புதினா, சருமத்தை மேலும் எரிச்சலடையச் செய்து கறைகளை ஏற்படுத்தும்



தேங்காய் எண்ணெய்: சரும அழகுக்கு தேங்காய் எண்ணெய் சிறப்பானது என்ற கருத்து நிலவுகிறது. தேங்காய் எண்ணெய்யில் லாரிக் அமிலம் உள்ளது. ஆனால் அது 90 சதவீதம் நிறைவுற்ற கொழுப்பாகும். இது சருமத்தின் துளைகளை அடைத்துவிடும். உடலில் எவ்வளவு வேண்டுமானாலும் தேங்காய் எண்ணெய் உபயோகிக்கலாம். ஆனால் முகத்திற்கு பயன் படுத்தக்கூடாது.

குறிப்பாக எண்ணெய் சருமம் கொண்டவர்கள் தேங்காய் எண்ணெய்யை அறவே தவிர்த்துவிட வேண்டும். முகத்தில் தேங்காய் எண்ணெய்யை பயன்படுத்தும்போது சருமத்தில் உறிஞ்சப்படுவதற்கு அதிக நேரம் எடுக்கும். எண்ணெய் சருமமாக இருந்தால் சரும துளைகளை அடைத்து முகப்பரு பிரச் சினையை உண்டாக்கிவிடும்.

வேக்ஸ்: உடலின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடும்போது முகம் மிகவும் மென்மையாக இருக்கும். உடலில் உள்ள முடியை அகற்றுவதற்கு வேக்ஸ் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் முகத்தில் உள்ள முடியை அகற்றுவதற்கு இதனை பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் முகத்திற்கு வேக்ஸை பயன்படுத்தினால் முடி வளர்வதற்குத்தான் வழிவகுக்கும்.

# இசை மாமனிதரின் குரல் உறங்கியது

**மாணிக்க விநாயகம் எனும் மாமனிதரை தமிழ் திரையுலகம் இன்று இழந்துள்ளது என்றே கூற வேண்டும். இருபது ஆண்டுகாலம் இசைத்துறை சார்ந்து, அயராத உழைப்பினால் பலரின் மனதை கொள்ளை அடித்தவர் இவர். “கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்”; என்பதற்கிணங்க கலைக் குடும்பத்தில் பிறந்து தன் வாழ்வை கலைக்காக அர்ப்பணித்து இன்று ரசிகர்களை விட்டு இறைவனடி சேர்ந்துள்ளார்.**



தமிழ்நாடு நாகப்பட்டினத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் வழூவூர் ராமையாவுக்கு ஞானசௌந்திரம் ஆகியோருக்கு 1943ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி பிராமண மகனாக மாணிக்க விநாயகம் பிறந்தார். மனோகரன், வழூவூர் சாம்ராஜ், பாக்கியலட்சுமி, ஜெயலட்சுமி, குருநாதன் ஆகியோரின் இளைய சகோதரராவார்.

மாணிக்க விநாயகத்தின் தந்தை வழூவூர் ராமையா பிள்ளை பிரபல பரதநாட்டிய கலைஞர் ஆவார். நடனம் மற்றும் இசை போன்ற கலைகளில் சிறந்து விளங்கிய குடும்பப் பின்னணியில் தன்னையும் ஒரு கலைஞனாக நிலைநாட்டி, மாணிக்க விநாயகம் சிறந்த பாடகராகவும்; நடிகராகவும், குணச்சித்திர நடிகராகவும் திரைத்துறையில் மிளிர்ந்தவர் ஆவார்.

தனது மாமாவான சி. எஸ் ஜெயராமனை தன் இசை குருவாக கொண்டதுடன் இசை பயணத்திற்கான முதலடியை எடுத்து வைத்தார. கணீர் குரலால் பலரையும் ஈர்த்தவராக கருதப்படுகின்றார்.

திரைத்துறையில் 2001 ஆம் ஆண்டு பாடகராக காலடி வைத்தவர் தில் திரைப்படத்தில் பாடிய முதல் பாடலே பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் மனதை தொட்டுச் சென்றதாக அமைந்திருந்தது.. இசையமைப்பாளர் வித்யாசாகர் இசையமைப்பில் “கண்ணுக்குள்ள கெளுத்தி வச்சிருக்கா ஒருத்தி” எனும் பாடல் மூலம் இவரது கணீர் குரல் அக்காலத்திலேயே பட்டிதொட்டியெல்லாம் ஒலித்தது.

தனது 58வது வயதிலேயே திரைத்துறைக்கு அறிமுகமானார்; அதற்கு முன்னர் பக்தி பாடல்களை பாடி இறைவனுக்குத் தொன்டாற்றினார். தன் வாழ்நாள் முழுவதும் 15,000 பாடல்கள் பாடியுள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம் உட்பட பல மொழிகளில் 800க்கும் மேற்பட்ட திரைப்பாடல்களை இவர் பாடியுள்ளார் மிகவும் தைரியமான கதாபாத்திரங்களுக்கு பொருந்தும் வகையில் இவரது குரலில் கர்வமும் வன்மையும் நிறைந்திருந்தது. மென்மையான குரலினால் பலரையும் ஈர்த்த பாடகர்கள் மத்தியில் தன் வசீகரக் குரலால் ரசிகர்களை கவர்ந்தவர்கள் ஒரு சிலரே. அத்தகையோரின் வரிசையில் மாணிக்க விநாயகம் முதன்மையானவர் ஆவார்.

பின்னணி பாடல்களினால் மட்டுமன்றி நாட்டுப்புற பாடல்களிலும், பக்திப் பாடல்களிலும் அதிகமான ரசிகர்களின் ரசனையை ஈர்த்த பாடகர்களில் இவரும் ஒருவராவார். இந்தியாவின் பல்வேறு ஆலயங்களில் மட்டுமன்றி தமிழர் வாழ்கின்ற உலகின் பல்வேறு பகுதியில் உள்ள ஆலயங்களிலும் மாணிக்க விநாயகத்தின் பக்திப்பாடல்கள் ஒலித்து வருகின்றன.

இளமையில் மிளர்ந்ததை விட முதுமை காலத்திலேயே திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினார். பாடகராக மட்டுமன்றி சிறந்த குணச்சித்திர நடிகராகவும் தன்னை கலைத்துறையில் ஈடுபடுத்திக்கொண்டார். இவரது நடிப்பில் தந்தை கதாபாத்திரமே சிறந்த நடிப்புக்கான சான்றுகளாக திகழ்ந்துள்ளன. கவர்ச்சிகரமான குரலால் மட்டுமன்றி உணர்ச்சி பூர்வமான நடிப்பாலும் ரசிகர்கள் வட்டத்தை விரிவுபடுத்திக் கொண்டார்.

திருடா திருடி, யுத்தம் செய், பேரழகன், கள்வனின் காதலி, போஸ், திமிரு, பலேபாண்டியா, குவாட்டர் கட்டிங், வேட்டைக்காரன் உள்ளிட்ட பல திரைப்படங்களில் சிறந்த குணச்சித்திர நடிகராக தன் திறமையை வெளிக்காட்டியுள்ளார்..

தமிழ் மொழியில் வெளியான தில், தவசி, கன்னத்தில் முத்தமிட்டால், ரன், ரோஜாகூட்டம், ஜெயம், இயற்கை, தூள்; ஒற்றன், பார்த்தீபன் கனவு, நியூ, திருப்பாச்சி, சந்திரமுகி, கனா கண்டேன், தம்பி, வெயில்; பருத்திவீரன்; ஓரம்போ, சேவல், மகிழ்ச்சி, தொப்புள்கொடி, விருகம்பாக்கம் உள்ளிட்ட பல திரைப்படங்களில் பல பாடல்களைப் பாடியுள்ளார்.;

இத்தகைய புகழுக்கு சொந்தமான மாணிக்க விநாயகம் எனும் மாமனிதர் இறையடி அடைந்துவிட்டார்

தமிழ்த்திரை உலகிற்கு மிகப்பெரிய இழப்பாக பாடகரும், குணச்சித்திர நடிகருமான மாணிக்க விநாயகத்தின் மரணம் அமைகின்றது. உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருந்து வந்த இவர் 2021 டிசம்பர் மாதம் 26ஆம் திகதி மாரடைப்பால் உயிர் நீத்தார். தனது 78வது வயதில் தன் இல்லத்தில் இயற்கை எய்தினார்

இறைவனை மகிழ்வடையச் செய்து பக்தி பாடல்களை பாடிய இவர், தன் இறுதி பாடலையும் இறைவன் முன் நின்று பாடியுள்ளார். திருவழுவூர் வீரதீஸ்வர சிவன் கோயிலில் இறைவன் முன் பாடிய இறுதி பாடலோடு இசை மாமனிதர் மாணிக்க விநாயகத்தின் குரலோசை உறக்கம் பெற்றது.



**எஸ்.மங்களதர்ஷினி**
**4ஆம் வருடம்**
**ஊடக கற்கைகள் துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்**

## "செம்மீன்"

இந்திய சினிமா வரலாற்றில் அமோக வெற்றி பெற்ற ஓர் சிறந்த மீனவ சமுதாய மலையாள படமான "செம்மீன்" திரைக்கு வந்து 56 வருடங்கள் நிறைவு காண்கின்றது. பிரபல மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரப்பிள்ளை எழுதிய "செம்மீன் "என்ற நாவல் அதே பெயரில் திரைப்படமானது. மலையாள கனவுக்கன்னி ஷீலா கருத்தம்மா என்ற பாத்திரத்திலும், பஃரீக் குட்டியாக மலையாள ஸ்டார் மதுவும், பழனியாக சத்யனும் நடித்த முக்கோண காதல் கதையே "செம்மீன்". மீனவர்களின் சாதாரண வாழ்க்கையையும், கடலோரத்து எதார்த்த சூழ்நிலைகளையும் அழகாக படம் பிடித்துக் காட்டிய காவியம் இப்படம். மீன்களை மொத்தமாக வாங்கி விற்பனை செய்யும் முஸ்லிம் முதலாளி ஃபரீக் குட்டியும் (மது) கருத்தம்மாவும் (ஷீலா)

ஒருவரையொருவர் தீவிரமாக காதலிக்கின்றனர். வழமை போல் ஜாதி, மத கொள்கைகள் தடை போடவே சூழ்நிலையால் காதலை தியாகம் செய்து விட்டு மீனவனான பழனியை (சத்யன்) மணமுடிக்கிறாள் கருத்தம்மா. ஒரு குழந்தை பிறந்த பின்னும் பழைய காதலை மறக்க முடியாத ஓர் சூழ்நிலையில் கருத்தம்மாவும், ஃபரீக் குட்டியும் கடற்கரையில் தற்கொலை செய்து கொள்கின்றனர். படத்தில் அடிக்கடி இடம் பெறும் "மானச மயினே வரூ" பாடல் மனதை வருடும்படி இயற்கை நிறைந்த கடல் காட்சிகளுடன் ஒன்றிப்போகின்றது. நாவலில் இருந்த சுவாரஸ்யம் இம்மியளவும் குறையாமல் திரைக்கதை அமைத்த விதம் பாராட்டுக்குரியது. படத்தின் ஒளிப்பதிவு மிக ரம்மியம். இயற்கை, எதார்த்தம் இரண்டும் நிறைந்த வகையில் "செம்மீன்" திரைப்படம் உருவான விதம் அக்காலத்தில் இந்திய சினிமா வரலாற்றில் பாரிய புரட்சியை ஏற்படுத்தியது. எட்டு லட்சம் பட்ஜெட்டில் உருவான "செம்மீன் "1965 இல் நாற்பது லட்சம் லாபம் கண்டது. இப்போது இதன் பெறுமானம் பல கோடிகள். திரையிட்ட எல்லா மாநிலங்களிலும் இலங்கை உட்பட அனைத்து நாடுகளிலும் "செம்மீன்"பெரும் வெற்றி கண்ட படம். சிக்காகோ சர்வதேச திரைப்பட விழாவில் இப்படத்திற்கு வெற்றிச் சான்றிதழ் வழங்கப்பட்டது. (Certificate of merit). இந்திய "ஜனாதிபதி தங்கப்பதக்கம் " விருதும் "செம்மீனுக்கு வழங்கப்பட்டது. மலையாள மாநில விருதுகள் பலவற்றை அள்ளிய படம் "செம்மீன்".

நடிகர்கள்:மது,ஷீலா,சத்யன்,
பி.கொட்டக்காரா ஸ்ரீதரன், நாயர் மற்றும் பலர்.
இயக்குனர்: பி.ராமு காரியத்
தயாரிப்பு: பாபு ஸ்மாயில் சையத்,கண்மணி ஃபிலிம்ஸ்
கதை: தகழி சிவசங்கரப்பிள்ளை
திரைக்கதை வசனம்:
எஸ்.எல்.புரம் சதாநந்தன்
இசை: சலீல் சௌத்ரி
பாடல்கள்: வயலார் ராமவர்மா
பின்னணி பாடியோர்கள்: கே.ஜே.ஜேசுதாஸ், மன்னாடே, பி.லீலா,சாந்தா பி.நாயர்.
இடம்பெற்ற பாடல்கள்:
1. கடலினக்கர போனோரே
2. மானச மயினே வரூ
3. பெண்ணாலே பெண்ணாலே
4. புதன் வளக்கறே.

இப்படத்தின் கதையைத் தழுவி பல படங்கள், இதே மீனவ சாயலில் சிறு மாற்றங்களுடன் பின்னாளில் வெளியாகின. உ+ம்,சிவகுமார், ராதா, சிவச்சந்திரன், ரவிக்குமார் நடித்த "ஆனந்தராகம் "இலங்கைத் தயாரிப்பு "வாடைக்காற்று"போன்றவற்றை குறிப்பிடலாம்.

**ஆக்கம்: எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்**
**கம்பளை**

# தேசிய மீலாத் விழாவின் பரிசளிப்பு விழாவில் அதிதிகளுடன் முஸ்லிம் திணைக்கள ஊழியர்கள்



தேசிய மீலாத் விழாவில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதானை ஸாஹிரா கல்லூரியின் கபூர் மண்டபத்தில் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார் தலைமையில் இடம்பெற்ற போது பிரதம அதிதி, கௌரவ அதிதிகளுடன் முஸ்லிம் திணைக்கள ஊழியர்கள் எடுத்துக் கொண்ட படம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.